

## வைக்கம் நூற்றாண்டு விழா

# பெரியார் 1000



## வினா—விடை போட்டித் தேர்வு

பெரியார் மணியம்மை
அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்
(யூஜிசி சட்டம், 1956–பிரிவுன் 3ன் கீழ் இயங்குகிறது)
தேசிய தர மதிப்பீடு பெற்றது
புதிய சிந்தனை • புத்தாக்கம் • புதுஉலகு

மேலும் விவரங்களுக்கு :
https://periyarquiz.pmu.edu/

# அறிமுக உரை

மாணவர்களே,

'வைக்கம் நூற்றாண்டில் பெரியார் 1000' புத்தகம் உங்கள் கைகளில் தவழ்கிறது. 1924 மார்ச் 30 அன்று தொடங்கிய வைக்கம் போராட்டம் 1925 நவம்பர் 29 வெற்றி விழா பொதுக்கூட்டத்துடன் நிறைவு பெறுகிறது.

603 நாட்கள் நடைபெற்ற இப்போராட்டம் தான் இந்தியாவின் முதல் மனித உரிமைப் போராட்டம்.

தீண்டாமையை ஒழித்து சமத்துவம் தழைக்கச் செய்த இந்தப் போராட்டத்தை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும்.

இச்சிறுநூல் நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டத்தை எடுத்துரைக்கிறது.

வினா-விடை முறையில் அமைக்கப் பட்டிருக்கிறது. எளிய நடையில் உருவாக்கப் பட்டிருக்கிறது

பெரியாரியல் பேராசிரியர்களைக் கொண்டு, மாணவர்களுக்குப் புரியும் வகையில் 500 வினா - விடைகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

வரலாற்றில் தேதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன; எனவே இந்நூலில் நிகழ்ச்சிகள் தேதிகளுடன் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

காந்தியடிகள், தந்தை பெரியார், கேரளத் தலைவர்கள், அதிகாரிகள் ஆகியோரின் கருத்துகள் அவர்தம் கூற்றுகளாகவே தரப்பட்டிருக்கின்றன .

ஆதாரங்களின் அடிப்படையில் தெரிவிக்கப் பட்டுள்ள புள்ளி விவரங்கள் நம்பகத்தன்மை மிக்கவை .

நடுநிலையுடன் உருவாக்கப்பட்ட இந்நூல் நாட்டில் சமதர்மத்தை நிலை நிறுத்த உதவும்.

நூறாண்டுகளுக்கு முன் வெளிவந்த பல்வேறு பத்திரிகைகளின் தன்மையை இந்நூலின் மூலம் அறியலாம்; தலைவர்களின் மனநிலை , செயல்பாடுகளை இப்புத்தகம் படம் பிடிக்கின்றது;

ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியை வெளிப் படுத்தும் இந்நூல் வரலாறு மட்டும் அல்ல ; வாழ்க்கைப் பாடம் .

வைக்கம் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் நடைபெறுகின்ற இச்சூழலில், இந்த நூலினை மாணவர்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். வைக்கம் 100 புத்தகம் மாணவர்களுக்கு வரலாற்றை அறிவிக்கும்; பண்பாளர்களாக மாற்றும்; தீண்டாமை எண்ணத்தை ஒழிக்கும்; மனித உரிமையின் மகத்துவத்தை உணர்த்தும்; உள்ளத்தில் சமத்துவம் மலரும்; அதன் மூலம் புதியதோர் சமுதாயம் அமையும் என்ற நம்பிக்கையுடன் மாணவர்களுக்கு வழங்குகின்றோம். ●

வைக்கம் நூற்றாண்டு விழா, 'பெரியார் 1000' வினா—விடை போட்டித் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு இப்புத்தகம் PDF வடிவத்தில் அனுப்பப்பட்டிருக்கின்றன.

வைக்கம் தொடர்பான 500 வினா விடைகளையும், பெரியார் வாழ்க்கை வரலாறு தொடர்பான 1000 வினா விடைகளையும்

ஆக மொத்தம் 1500 வினா விடைகளை மாணவர்கள் கவனமாக வாசித்து,

மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த 1500 வினாக்களில் இருந்துதான் 45 வினாக்கள் போட்டித் தேர்வில் கேள்விகளாக கேட்கப்படும். தேர்வு நேரம் 30 நிமிடம்.



# வைக்கம் போராட்ட நூற்றாண்டும்! தமிழ்நாடு முதல்வர் அறிவிப்பும்!

பெருமை வாய்ந்த வைக்கம் போராட்ட தள நாயகர் தந்தை பெரியாரின் செயற்கரும் செயல்கள் குறித்து ஓராண்டு முழுவதும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் வெகு சிறப்புடன் நிகழ்ச்சிகள் நடத்தும் என்று சட்டப் பேரவையில் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினைப் பிரகடனப்படுத்தினார் சமூக நீதிக்கான சரித்திர நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

வைக்கம் போராட்டம் தொடங்கிய மார்ச் 30ஆம் நாளில், வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசு தொடங்கவுள்ளது. வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நிகழ்ச்சிகள், 2023ஆம் ஆண்டு, மார்ச் 30ஆம் நாள் தொடங்கி, ஓராண்டு முழுவதும் நடத்தப்படும் போராட்டத்தின் வரலாற்றையும் பொதுமக்களும் மாணவர்களும் தெரிந்துகொள்ளும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகள் செய்யப்படும்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா, பின்வரும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

1. வரும் ஏப்ரல் 1, 2023 அன்று, கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள “வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா” நிகழ்ச்சியில், மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களோடு நானும் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்கிறேன். வைக்கம் போராட்டம் நடைபெற்ற இடத்தில் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட நினைவுத்தூணுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

2. தமிழ்நாட்டில் மிக முக்கியமான ஆய்வாளர்களில் ஒருவரான பழ.அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” என்ற தமிழ் நூலின் மலையாள மொழிபெயர்ப்பு வெளியிடப்படுகிறது.

3. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் கேரளாவில் உள்ள டி.சி. பதிப்பகம் ஆகியவற்றின் கூட்டு வெளியீடாக இது வெளியிடப்படவுள்ளது. இந்த நூலின் தெலுங்கு, கன்னடம், ஆங்கிலப் பதிப்புகளும் விரைவில் வெளியிடப்படும்.

4. இந்த ஆண்டு நவம்பர் 29 அன்று, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநில முதலமைச்சர்கள் மற்றும் பல்வேறு ஆளுமைகள் பங்கேற்கக் கூடிய வகையில், வெகு சிறப்பான நிகழ்ச்சி ஒன்று தமிழ்நாடு அரசால் நடத்தப்படும்.



5. எல்லை கடந்து சென்று வைக்கத்தில் போராடிய பெரியார் அவர்களை நினைவுகூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் “வைக்கம் விருது” சமூகநீதி நாளான செப்டம்பர் 17ஆம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படும்.

6. கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீன முறையில் மறுசீரமைக்கவும், பெரியார் தொடர்பான நினைவுப் பொருள்கள் கூடுதலாக இடம்பெறுவதற்கும் 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

7. தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன்முதலாக சிறை வைக்கப்பட்டிருந்த ‘அருவிக் குட்டி’ கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்று புதிதாக உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

8. வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நினைவாக சிறப்பு நினைவு அஞ்சல் தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

9. தமிழ்நாட்டின் முக்கிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் வைக்கம் போராட்டம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் வினாடி -வினா உள்ளிட்ட போட்டிகளை நடத்திப் பரிசுகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த விழிப்புணர்வை மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கக்கூடிய வகையில் 64 பக்க நூல் ஒன்று கொண்டுவரப்படும். அது தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் மூலமாக வெளியிடப்பட்டு விற்பனை செய்யப்படும். இந்த நூல், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒலிப் புத்தகமாகவும் வெளியிடப்படும்.

11. வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகள் பலவற்றை பல்வேறு அறிஞர்களிடமிருந்து பெற்று தொகுத்து வைக்கம் போராட்ட நூற்றாண்டு மலர் ஒன்று ‘தமிழரசு’ பத்திரிகை மூலம் கொண்டு வரப்படும்.

இவை அனைத்தும் வரும் ஓராண்டு காலத்திற்கும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

**(தமிழ்நாடு சட்டப்பேரவையில் 30.3.2023 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்த அடுக்கடுக்கான திட்டங்கள்)**

# முகப்பு

வரலாற்றில் அழியாத புகழ்பெற்ற வைக்கம் போராட்டம் 1924ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் தேதி தொடங்கியது. கேரள மாநிலம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் வைக்கத்தில் உள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் ஒடுக்கப்பட்ட மக்கள் (ஈழவர், புலையர், தீயர்) நடமாடுவதற்குத் தடை இருந்தது. அதனை எதிர்த்து வெகுண்டெழுந்த போராட்டம் தான் வைக்கம் போராட்டம். இந்தியாவில் நடைபெற்ற முதல் மனித உரிமைப் போராட்டம் என்று பாராட்டப்படுகின்ற வைக்கம் போராட்டம் நடைபெற்று 99 ஆண்டுகள் நிறைவு பெற்று, இப்போது நூற்றாண்டு தொடங்குகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 30.03.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110 கீழ் வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் குறித்து விடுத்த அறிக்கை நாடெங்கும் நல் வரவேற்பைப் பெற்றது.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா 2023 மார்ச் 30 தொடங்கி ஓராண்டு முழுவதும் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார். தமிழ்நாட்டின் முக்கிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் வைக்கம் போராட்டம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படும் என்றும், பள்ளி - கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் வினாடி-வினா உள்ளிட்ட போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

தமிழ்நாடு அரசின் மகத்தான இப்பணியில், பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்) நிறுவனம் தம்மை இணைத்துக் கொள்கிறது. ‘பெரியார் 1000’ என்னும் தலைப்பில் தயாரித்திருக்கின்ற வினா-விடைகளில் வைக்கம் தொடர்பான 500 தகவல்களை மாணவர்களின் சிந்தனைக்கு விருந்தாகத் தந்திருக்கின்றோம். இந்தப் புத்தகத்தினை வாசிப்பதன் மூலம் மாணவர்களின் நெஞ்சங்களில் சமத்துவம் ஓங்கும்; விசாலப் பார்வை கிட்டும்; நல்ல குடிமக்களாக வளர்வார்கள்.

## வைக்கம் போராட்ட வரலாறு

மாதவன் என்ற வழக்கறிஞர் ஒரு வழக்கு தொடர்பாக நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நீதிமன்றம் அரண்மனையில் ஒரு பகுதியாக இருந்தது. அரசரின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக அரண்மனையைச் சுற்றிலும் பந்தல் அமைக்கப்பட்டது. நீதிமன்றமும் பந்தலுக்குள் அடங்கிவிட்டது . அப்போது முறை ஜெபம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் மாதவன் அவர்களைக், கீழ் ஜாதியைச் சார்ந்தவர் என்று கூறி, நீதிமன்றத்திற்குச் செல்ல அனுமதி மறுத்தார்கள்.இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண விரும்பிய திருவனந்தபுரத்து ஈழவ சமுதாயத் தலைவர்கள் சத்தியாகிரகம் தொடங்க முடிவு செய்தார்கள். டி.கே. மாதவன், கேரள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.பி. கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் முதலியோர் போராட்டத்தைத்

தொடங்கினார்கள். போராட்டம் தொடங்கிய பத்து நாட்களுக்குள் டி.கே. மாதவன், பாரிஸ்டர் கே.பி. கேசவமேனன், ஜார்ஜ் ஜோசப் முதலிய தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். வழி நடத்த தலைவர்கள் இல்லாததால் போராட்டம் நின்றுவிடும் சூழல் ஏற்பட்டது. கே.பி.கேசவ மேனனும் பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப்பும் போராட்டத்தைத் தலைமையேற்று வழி நடத்த தந்தை பெரியாரைக் கடிதம் எழுதி அழைக்கிறார்கள். தந்தி மூலம் அழைக்கிறார்கள். பெரியாருக்குத் தொடர் அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த தந்தை பெரியார், தான் வரும்வரை தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி ராஜகோபாலாச்சாரியாருக்குக் கடிதம் எழுதி அனுப்பி விட்டு கேரளம் விரைந்தார். திருவனந்தபுரத்தில் பெரியார் பேசுகிறார், "வைக்கம் சத்தியாகிரகம் என்ற போர் அரசாங்கத்துக்கு எதிரானது அல்ல; மதச் சண்டை அல்ல; வகுப்புச் சண்டையும் அல்ல; இது பொது நலனுக்கான செயல்; சமத்துவத்தை நிறுவும் நோக்கம் கொண்டது" என்று போராட்டத்தின் அடிப்படையைத் தெளிவாக்கினார்.

### வைக்கத்தில் பெரியார்

வைக்கம் போராட்டம் 30.03.1924 அன்று தொடங்கியது .போராட்டம் முடிவுக்கு வந்த நாள் 23.11.1925 .வைக்கம் போராட்டம் நடைபெற்ற மொத்த நாட்கள் 603. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள தந்தை பெரியார் ஏழு முறை கேரளம் சென்று இருக்கிறார். அவருடைய முதல் வைக்கம் பயணம் 1924 ஏப்ரல் மாதம் 13ஆம் தேதி நடைபெற்றது. வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் கேரளத்தில் இருந்த நாட்களின் எண்ணிக்கை 141. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்ட தந்தை பெரியார் 74 நாட்கள் சிறையிலும் 67 நாட்கள் சிறைக்கு வெளியே கேரளத்தில் பிரச்சாரமும் செய்து இருக்கிறார். ஆசிரமத் தலைமைப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்; .ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறார்; கேரளத்தில், எல்லா வீதிகளிலும் அனைத்து ஜாதியினரும் நடமாடுவதற்கு உரிமை கேட்டு நடைபெற்ற போராட்டத்திற்குத் தலைமை வகித்திருக்கிறார். ஊர்வலத்திற்குத் தலைமை வகித்திருக்கிறார். தீவிர பிரச்சாரம் மேற்கொண்டிருக்கிறார். போராட்டத்திற்கு நிதி வசூலித்துத் தந்திருக்கிறார். வைக்கம் போராட்டத்திற்கு உயிரூட்டியவர் தந்தை பெரியார் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

தந்தை பெரியாரின் வைக்கம் போராட்டச் செயல்பாடுகளை அரசு ஆவணங்கள் புலப்படுத்துகின்றன. காவல்துறை அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. பத்திரிகைகள் பறைசாற்றுகின்றன. வைக்கத்தில் பெரியார் ஆற்றிய பெருந் தொண்டினைப் - பெற்ற வெற்றியைப் போற்றி 'வைக்கம் வீரர்' என்ற பாராட்டு மொழி வழங்கப்பட்டது. வைக்கம் போராட்டத்தில் பெரியார் மட்டுமல்ல, அவருடைய மனைவி நாகம்மையாரும் தங்கை கண்ணம்மாளும் கலந்து கொண்டனர். தந்தை பெரியாரின் அனல் கக்கும் பேச்சுகளால் வைக்கம் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது; மக்கள் ஆதரவு பெருகியது. பெரியாரின் பேச்சுகள் அமைதியை குலைக்கும் எனக் காரணம் கூறி கோட்டயம் மாவட்டத்தில் பெரியார் நுழைவதற்காக விதிக்கப்பட்டிருந்த தடை கொல்லம் மாவட்டம் வரை நீட்டிக்கப்பட்டது. வைக்கம் போராட்டத்தில் இரண்டு முறை



கைது செய்யப்பட்ட ஒருவர் என்று சொன்னால் அது தந்தை பெரியார் மட்டுமே. முதல் முறை கைது செய்யப்பட்டபோது அருவிக்குட்டிச் சிறையிலும் இரண்டாம் முறை கைது செய்யப்பட்டபோது திருவனந்தபுரம் சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டிருந்தார்.

### சிறைச்சாலையில்

வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட தந்தை பெரியாரை நீதிமன்றத்தில் நிறுத்துகிறார்கள் .தந்தை பெரியார், “இந்த நீதிமன்றம் நியாயம் செய்யும் என்ற நம்பிக்கை தமக்கு இல்லை; விசாரணை வெறும் வேஷம்'' என்று முழங்குகிறார். நீதிமன்றம் கடுங்காவல் தண்டனை விதிக்கிறது. சிறைக்கு அனுப்புகிறது.

திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த பெரியார், குற்றவாளிக்கான சீருடை அணிந்திருந்தார்; கால்களில் விலங்குச் சங்கிலி; தலையில் கைதிகள் அணியும் குல்லாய்; கழுத்தில் கைதி எண் குறிக்கப்பட்ட மரப்பட்டை; கொலைகாரர்களும் கொள்ளைக்காரர்களும் ஒரு நாளைக்கு எவ்வளவு வேலை செய்வார்களோ அதைவிடக் கடுமையான வேலை பெரியாருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அரசியல் கைதியாக பெரியாரை நடத்தவில்லை; அதற்காக பெரியார் வருந்தவும் இல்லை; அது குறித்துப் பெருமையாகப் பேசியதும் இல்லை. திருவிதாங்கூர் அரசர் ராமவர்மா காலமாகிறார்; புதிய யுவராஜா பட்டத்திற்கு வருகிறார்; நான்கு மாதங்கள் சிறையில் இருக்கவேண்டிய பெரியார், நல்லெண்ண நடவடிக்கையாக 43 ஆம் நாளில் விடுதலை செய்யப்படுகிறார்.

### தலைவர்களுடன் பெரியார்

வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்ட தந்தை பெரியார், கேரளத் தலைவர்கள் கே.பி. கேசவ மேனன், டி.கே. மாதவன் , ஜார்ஜ் ஜோசப், குரூர் நீலகண்டன் நம்பூதிரி முதலியவர்களுடன் இணைந்து போராடினார். ஈழவரும் சட்டமன்ற உறுப்பினருமான என். குமாரன் சஞ்சார உரிமைக்கான தீர்மானத்தை முன்மொழிந்திருந்தார். 1924 அக்டோபர்

24 அன்று தரப்பட்ட தீர்மானம் நீண்ட காலம் கழித்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பின் 1925 பிப்ரவரி 7 அன்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சஞ்சார உரிமையைத் தடுப்பதற்கு ஆதரவாக 22 வாக்குகளும், அவர்களை நடக்க அனுமதிக்கலாம் என்பதற்கு ஆதரவாக 21 வாக்குகளும் பதிவாயின. ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் நீதி தோற்றது; ஆனாலும் சமத்துவத்துக்கு ஆதரவாக மக்கள் கருத்தை உருவாக்கி விட்டால் அரசும் நீதிமன்றமும் அதை பின் தொடரத்தான் வேண்டும் என்பதற்கு ஏற்ப பெரியார், காந்தி மற்றும் கேரளத் தலைவர்கள் மக்களிடத்தில் எழுச்சியை உருவாக்கினார்கள். காந்தியடிகள் வைக்கத்திற்கு வந்தபோது பெரியார் அவருடன் இணைந்து போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர கலந்துரையாடினார்.

## வைக்கம் வெற்றி விழா

மக்கள் எழுச்சியின் காரணமாக வைக்கம் வீதிகளில் அனைத்து ஜாதியினரும் நடக்கலாம் என்று அரசாங்கம் உத்தரவிட்டது. நான்கு வீதிகளில் மூன்று வீதிகளில் மட்டும் நடப்பதற்கான அனுமதி கிடைத்த போது முழு வெற்றியை அடைய முடியாவிட்டாலும் தீண்டாமையை ஒரு மூலையிலாவது ஒதுக்கி வைக்க முடிந்ததே என்று சத்தியாகிரகிகளும் சமாதானம் அடைந்தனர்.

வைக்கம் வெற்றி விழாக் கொண்டாட்டம் சத்தியாகிரக ஆசிரமத்தின் செயலாளர் கேளப்பன் ஏற்பாட்டில் 29.11.1925 அன்று வைக்கத்தில் நடைபெற்றது. வெற்றி விழா கொண்டாட்டத்திற்கு வெளி மாநிலத்திலிருந்து அழைக்கப்பட்டவர் தந்தை பெரியார் மட்டுமே. விழாத் தலைமைப் பொறுப்பு தந்தை பெரியார் அவர்களுக்கே வழங்கப்பட்டது. விழாவில் அன்னை நாகம்மையாரும் கலந்து கொண்டார். மன்னத்து பத்மநாப பிள்ளை, டி.கே. மாதவன் ஆகியோர் பங்கேற்றனர். வெற்றி விழாக் கூட்டத்தில் பேசிய தந்தை பெரியார், ‘சத்தியாகிரகத்தின் உத்தேசம் தெருவில் நாம் நடக்க வேண்டும் என்பதல்ல; மனிதனுக்கு மனிதன் பொது வாழ்வில் வித்தியாசம் இருக்கக் கூடாது என்பதுதான். அந்தத் தத்துவம் இந்த தெருவில் நடப்பதோடு முடிந்துவிடவில்லை. ஆகையால் தெருவில் நிரூபித்த சுதந்திரத்தைக் கோயிலுக்குள்ளும் நிரூபிக்க வேண்டியது மனிதர் கடமை என்றார்.

பெரியாரின் இலக்கு 12 ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேறியது . திருவிதாங்கூர் சமஸ்தானம் அனைவருக்கும் கோயில்களைத் திறந்துவிட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில் நுழைவுப் பிரகடனம் 1936 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. சமத்துவம் நிலைநிறுத்தப்பட்டது.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா வைக்கத்தில் நடைபெற்ற போது, கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் , “ ஒரே போராட்டப் பாரம்பரியத்தைக் கொண்ட பெருமையினைப் பகிர்ந்து கொள்ளும் சகோதர மாநிலங்களாக தமிழ்நாடும் கேரளமும் உள்ளன” என்று குறிப்பிட்டார்.

சமத்துவத்தை நிலை நிறுத்தும் வைக்கம் போராட்டத்தை மாணவர்கள் தம் உள்ளங்களில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். ‘அனைவரும் சமம் – எல்லோருக்கும் எல்லாமும் என்ற தத்துவத்தை நெஞ்சில் நிறுத்துங்கள். பேதமில்லாப் புதிய உலகம் படைப்போம்!’ ●

# வைக்கம் போராட்ட வரலாறு



**6 பிப்ரவரி 1924**

கொல்லம், சுயராஜ்ய ஆசிரமத்தில் தீண்டாமை விலக்குக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. சுதந்திர நடமாட்டத்துக்கும் கோயில் நுழைவுக்கும் ஆதரவாகத் தீவிர பிரச்சாரம் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**29 பிப்ரவரி 1924**

தீண்டாமை விலக்குக் குழு சார்பில் காங்கிரஸ் வைக்கத்தில் பொதுக்கூட்டம் நடத்தியது.



**30 மார்ச் 1924**

வைக்கம் போராட்டம் தொடங்கியது. குன்னப்பி (புலையர்), பாஹுலேயன் (தீயர்), கோவிந்த பணிக்கர் (நாயர்) கொண்ட குழுவினர், மாலை அணிவிக்கப்பட்டு முன்னோக்கிச் சென்றனர். அம்மூவரும் காவல்துறையால் கைது செய்யப்பட்டனர். இன்று ஞாயிறு, தொடங்கிய நாள் தவிர, மற்ற ஞாயிற்றுகிழமைகளில் சத்தியாகிரகம் நடைபெறவில்லை.

**31 மார்ச் 1924**

ஒரு நாயர், இரண்டு ஈழவர் கொண்ட மூவர் குழுவினர் தடைப்பகுதியை அணுகினர். கைது செய்யப்பட்டு திருவனந்தபுரம் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

**1 ஏப்ரல் 1924**


கே.பி. கேசவ மேனன் அனுப்பியிருந்த சத்தியாகிரகத் தொடக்கம் பற்றிய செய்திகள் அடங்கிய தந்தியை காந்தி பெறுகிறார். சத்தியாகிரகிகள் இன்னும் சிறிது காலம் பிரச்சாரம் செய்யவும் சமாதானப் பேச்சுக்குத் தயார் செய்து கொள்ளவும் ஏதுவாகச் சிறிதுகாலம் போராட்டத்தைத் தள்ளி வைக்கலாம் என காந்தி யோசனை அளித்தார்.

# வைக்கம் போராட்ட வரலாறு



**7 ஏப்ரல்**

இரண்டு நாட்கள் நடந்து பின்னர் ஆறு நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்ட போராட்டம் இன்று மீண்டும் துவங்கியது. கே.பி. கேசவ மேனன், டி.கே. மாதவன் தடைப்பகுதியை நோக்கி நடந்து சென்று கைதாகினர். ஆறுமாத சிறைத்தண்டனை பெற்றனர்.



**9 ஏப்ரல்**

ஏ.கே. பின்ளை, கே. வேலாயுத மேனன், கே. கேளப்பன் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை பெற்றனர்.

**10 ஏப்ரல்**

இன்று முதல் சத்தியாகிரகிகளைக் கைது செய்வதில்லை. என்று காவல்துறை முடிவு செய்தது. சத்தியாகிரகிகள் உண்ணாவிரதம் தொடங்கினர்,



**11 ஏப்ரல்**

ஜார்ஜ் ஜோசப், கே.ஜி. நாயர், செபாஸ்டியன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை பெற்றனர்.

**13 ஏப்ரல்**

பெரியார் வைக்கம் வந்தார்.



**14 ஏப்ரல்**


உண்ணாவிரதத்தை நிறுத்துங்கள் என்ற காந்தியின் செய்தி சத்தியாகிரகிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. கோயிலின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நடந்த போராட்டத்துக்குப் பெரியார் தலைமை வகித்தார். வரதராஜுலு நாயுடு தன் ஆதரவைத் தந்தி மூலம் தெரிவித்தார்.

# வைக்கம் போராட்ட வரலாறு

**15 ஏப்ரல்**
அய்யாமுத்து வருகை

**17 ஏப்ரல்**
எஸ். சீனிவாச ஐயங்கார் வைக்கத்தில் குறிப்பிட்ட வீதிகளைச் சுற்றிப்பார்த்தார்.

**21 ஏப்ரல்**
டி.ஆர். கிருஷ்ணசாமி ஐயர் கைது.



**29 ஏப்ரல்**
நாராயண குருவிற்குச் சொந்தமான இடத்திற்குச் சத்தியாகிரகிகள் குடிபெயர்ந்தனர், காந்தி, வெளியாட்கள் போராட்டத்தில் கலந்துகொள்ள தடைவிதித்தார்.


**3 மே**
இலவச உணவு அளிக்க அகாலியர் வைக்கம் வருகை.

**8 மே**
சிரத்தானந்தர் சத்தியாகிரகத் தலைவர்களுடன் சந்திப்பு.

**13 மே**
கோட்டயம் மாவட்டத்தில் நுழைய பெரியாருக்குத் தடை

**22 மே**
பெரியார் முதன்முறை கைது.

**26 மே**
இராஜாஜி வைக்கம் வருகை



# வைக்கம் போராட்ட வரலாறு

**21 ஜூன்**

சத்தியாகிரகிகளின் ராட்டினங்களைக் காவல்துறை கைப்பற்றியது. பெரியார் அருவிக்குட்டி சிறையிலிருந்து விடுதலை

**ஜூன் - ஆகஸ்ட்**

மழை பெய்து வைக்கம் வெள்ளத்தால் நிரம்பியது. சத்தியாகிரகிகள் கழுத்தளவு நீரில் நின்று போராடினர். காவல்துறையினர் படகுகளில் காவலிருந்தனர். சத்தியாகிரகத்திற்கு ஆதரவாய் மக்கள் திரண்டனர்.





**13 ஜூலை**


நாகம்மையார் போராட்டத்தில் கலந்துகொள்ளல்

**18 ஜூலை**

பெரியார் இரண்டாம் முறை கைது.

**7 ஆகஸ்ட்**

மகாராஜா காலமானார், துக்கம் அனுசரித்து போராட்டம் மூன்று நாளைக்கு நிறுத்திவைக்கப்பட்டது.



**31 ஆகஸ்ட்**

பெரியார். கேபி. கேசவ மேனன் உள்ளிட்ட சத்தியாகிரகிகள் திருவனந்தபுரம் மத்திய சிறையிலிருந்து விடுதலை.

**1 செப்டம்பர்**

சேதுலட்சுமி பாய் பொறுப்பு அரசியாக (Maharani Regent) பதவி ஏற்றார். இன்று சத்தியாகிரகம் இல்லை.


www.pmu.edu/periyarquiz

# வைக்கம் போராட்ட வரலாறு

**28 செப்டம்பர்**

நாராயண குரு சத்தியாகிரக ஆசிரமத்திற்கு வருகை.

**2 அக்டோபர்**

ஈழவர் தலைவரும் திருவாங்கூர் சட்டசபை நியமன உறுப்பினருமான என். குமாரன் வைக்கம் கோயில் தெருக்களை எல்லாச் சாதியினருக்கும் திறந்துவிடவேண்டும் எனச் சட்டசபையில் தீர்மானம் கொண்டுவந்தார்.

**1 நவம்பர்**

கோயில் தெருக்களில் தீண்டாதாரை அனுமதிப்பதற்குத் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவிப்பதோடு அதற்கு அரசு அனுமதியளிக்கக் கோரும் நோக்கத்துடன் உயர்சாதியினர் ஒரு பேரணிக்கு ஏற்பாடு செய்தனர். சத்தியாகிரகிகளுக்கு ஆதரவான சவர்ணர்களின் இந்த ஊர்வலம் வைக்கத்திலிருந்து சமஸ்தான தலைநகரான திருவனந்தபுரத்திற்குப் புறப்பட்டது. மன்னத்து பத்மநாபன் இதன் தலைவர். திருவனந்தபுரத்தின் தெற்குப் பகுதியிலிருந்து இன்னொரு இத்தகைய ஊர்வலம் சுசீந்திரத்திலிருந்து புறப்பட்டு தலைநகரம் நோக்கி வந்தது. இதன் தலைவர் எம்பெருமாள் நாயுடு– இன்று சத்தியாகிரகம் இல்லை.

**11 நவம்பர்**

உயர்சாதியினரின் பேரணிகள் திருவனந்தபுரத்தை அடைந்தன.

**12 நவம்பர்**

மகாராணி ரீஜண்டிடம், 12 பேர் அடங்கிய குழுவினர் பெரிய மகஜரை அளித்தனர். கோயில் தெருக்களை அனைவருக்கும் திறந்துவிட ஆதரவு தெரிவித்து 25,000 சாதிஇந்துக்கள் அதில் கையொப்பம் இட்டிருந்தனர். மாலை திருவனந்தபுரம் கடற்கரையில் பெரும் பொதுக்கூட்டம். இன்றும் சத்தியாகிரகம் இல்லை.

# வைக்கம் போராட்ட வரலாறு

**7 பிப்ரவரி 1925**


சுதந்திர நடமாட்டத்திற்கென சட்டசபையில் 2 அக்டோபர் 1924இல் கொண்டு வரப்பட்ட தீர்மானம் விவாதத்திற்குப் பிறகு இன்று வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. 22 – 21 என்ற வாக்குகள் வித்தியாசத்தில் அது தோற்றது. அரசாங்கம் இதன் பின்னணியில் இருந்தது எனச் சந்தேகிக்கப்பட்டது

**9 மார்ச்**

காந்தி வைக்கம் வந்தார்.

**10 மார்ச்**

காந்தி சத்தியாகிரக ஆசிரமத்தில் சத்தியாகிரகிகளைச் சந்தித்துப் பேசினார், மதியம் 2:30 மணிக்கு உயர்சாதியினரைச் சென்று சந்தித்தார், மூன்று திட்டங்களை முன்னுரைத்தார். உயர்சாதிக்குழு அவற்றை நிராகரித்தது.



**12 மார்ச்**

காந்தி மகாராணி ரீஜண்டை வர்க்கலையில் சந்தித்தார். பிறகு நாராயண குருவையும் காந்தி சந்தித்தார். குருவுடனான சந்திப்பின்போது பெரியார், ராஜாஜி, வ.வே.சு. ஐயர் உடன் இருந்தனர்.

**13 மார்ச்**

காந்தி ராஜமாதாவைத் திருவனந்தபுரத்தில் சந்தித்தார். அப்போது பெரியார் திருவனந்தபுரத்தில் இருந்ததாக உறுதிப்படுத்த இயலாத தகவல் உண்டு.

**17 மார்ச்**

காந்தியை உயர்சாதிக்குழு சந்தித்து, சங்கர ஸ்மிருதியை ஆதாரமாகத் தந்தது. காந்தி வள்ளத்தோல் சந்திப்பு வைக்கத்தில் நிகழ்ந்தது.

# வைக்கம் போராட்ட வரலாறு

**18 மார்ச்**

காந்தி வைக்கத்திலிருந்து புறப்பட்டார். அரசு விருந்தினராக காந்தி திருவாங்கூரில் சுற்றுப்பயணம் செய்தபோது உடனிருந்தவர் காவல்துறை ஆணையாளர் பிட் ஆவார். அவரிடம் நடத்திய பேச்சுவார்த்தை அடிப்படையில் வைக்கம் கோயில் பாதையில் மார்ச் 1924 முதல் ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகளை நீக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது.
ஏப்ரல்: திருவாங்கூர் அரசாங்கம் 1924 மார்ச் 24ஆம் தேதி பிறப்பித்த தடை உத்தரவைத் திரும்பப் பெற்றது.



**24 ஜூன்**

சத்தியாகிரக செயலாளர் கே. கேளப்பன் அறிக்கை.

**17 நவம்பர்**

தீண்டாமை விலக்குக் குழு தீர்மானம்

**23 நவம்பர்**

பல மாதங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளையடுத்து அரசாங்கம் கோயிலைச் சுற்றியிருந்த மூன்று பாதைகளை அனைவருக்குமெனத் திறந்துவிட்டது. ஒரு துணைப் பாதையையும் உருவாக்கிக்கொண்டது. இது தீர்வு எனப்பட்டது (தேதி ஆதாரம்: மேரி எலிசபெத் நூல்)



**29 நவம்பர்**

பெரியார் தலைமையில் கேளப்பன் ஏற்பாட்டில் வைக்கத்தில் வெற்றி விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.




கால வரிசைப்படி ஆக்கம்:
Dravidian Stock

# வைக்கம் நூற்றாண்டில் பெரியார் ஆயிரம்

## வினா–விடை

1. **வைக்கம் என்னும் ஊர் எந்த மாநிலத்தில் உள்ளது?**

   *கேரளம்*

2. **'வைக்கம் வீரர்' என்று போற்றப்படுபவர் யார்?**

   *தந்தை பெரியார்*

3. **தந்தை பெரியாருக்கு 'வைக்கம் வீரர்' என்று பட்டம் சூட்டியவர் யார்?**

   *திரு.வி.கலியாணசுந்தரனார்*

4. **வைக்கம் போராட்டம் நடைபெறக் காரணம்?**

   *கோயிலைச் சுற்றி இருந்த தெருக்களிலே தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்டவர்கள் நடக்க உரிமை கோருதல்..*

5. **வைக்கம் போராட்டம் தொடங்கக் காரணமாக இருந்த வழக்கறிஞரின் பெயர் என்ன?**

   *பி.என். மாதவன்*

6. **'வைக்கம் போராட்டத்தில் இரண்டு முறை சிறை சென்றவர் இவர் ஒருவரே' என்று ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுபவரின் பெயர் என்ன?**

   *ஈ.வெ. ராமசாமி*

7. **வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் நடமாடத் தடுக்கப்பட்டிருந்த ஈழவரையும், புலையரையும், அத்தெருக்களில் தடையை மீறி அழைத்துச் செல்லப் போவதாக 1924 மார்ச் முதல் தேதி அறிவித்த கேரளா காங்கிரஸ் கமிட்டி செயலாளரின் பெயர் என்ன?**

   *கே.பி. கேசவ மேனன்*

8. **வைக்கம் போராட்டத்தில், சிறையில், அரசியல் கைதி போல நடத்தப்பட்டவரின் பெயர்?**

   *கே.பி. கேசவ மேனன்*

9. **வைக்கம் போராட்டம் தொடங்கிய நாள்**

   *30.03.1924*

10. **வைக்கம் போராட்டம் முடிவுக்கு வந்த நாள்**

    *23.11.1925*

11. **வைக்கம் போராட்டம் நடைபெற்ற மொத்த நாள்கள்**

    *603*

12. **வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள தந்தை பெரியார் எத்தனை முறை கேரளம் சென்றார்?**

    *7 முறை*

13. **வைக்கம் போராட்டம் தொடங்கி எத்தனை நாள்களுக்குப் பிறகு பெரியார் வைக்கம் சென்று அடைகிறார்?**

    *14 நாள்கள்*

14. **வைக்கம் போராட்டத்தில் கலந்துகொள்ள தந்தை பெரியார், முதல் முறையாக வைக்கம் சென்ற நாள்**

    *13.04.1924*

15. **வைக்கம் போராட்டத்தின்போது தந்தை பெரியார் கேரளத்தில் இருந்த நாள்களின் எண்ணிக்கை**

    *141*

16. **வைக்கம் போராட்டத்தில் கலந்துகொண்ட தந்தை பெரியார் சிறையில் இருந்த நாள்கள்**

    *74*

17. **வைக்கம் போராட்டத்தின்போது தந்தை பெரியார் கேரளத்தில் பிரச்சாரம் செய்த நாள்களின் எண்ணிக்கை**

    *67*

18. **வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்ட பெரியார், முதல் முறையாகக் கைது செய்யப்பட்ட நாள்**

    *22.05.1924*

19. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டு, முதல் முறை கைதாகி (1924 மே மாதம் 22) அருவிக் குட்டி சிறையில் அடைக்கப்பட்ட பெரியார் விடுதலையான நாள்

*21.06.1924*

20. வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு, முதல் முறை கைதான பெரியார், எந்தச் சிறையில் அடைக்கப்பட்டார்?

*அருவிக் குட்டி*

21. வைக்கம் போராட்டத்தில் முதல் முறை கைது செய்யப்பட்ட பெரியார், அருவிக் குட்டி சிறையில் இருந்த நாட்கள்

*30*

22. வைக்கம் போராட்டத்தில் இரண்டாம் முறை கைது செய்யப்பட்ட பெரியார் திருவாங்கூர் சிறையில் அடைக்கப்பட்ட நாள்

*19.07.1924*

23. வைக்கம் போராட்டத்தில் முதல் முறை கைது செய்யப்பட்டு விடுதலையான பெரியார் எத்தனை நாட்களுக்குப் பிறகு மீண்டும் இரண்டாம் முறை கைதாகிறார்?

*27*

24. வைக்கம் போராட்டத்தில் இரண்டாம் முறை கைது செய்யப்பட்ட பெரியார் எந்த ஊர்ச் சிறையில் அடைக்கப்பட்டார்?

*திருவாங்கூர்*

25. வைக்கம் போராட்டத்தில் இரண்டாம் முறை கைது செய்யப்பட்ட பெரியார், திருவாங்கூர் சிறையில் இருந்த நாட்கள்

*43*

26. எந்த ஊரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு, வைக்கம் போராட்ட வெற்றிக்காக, பெரியாருக்குப் பாராட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியது?

*காஞ்சிபுரம்*

27. வைக்கம் போராட்ட வெற்றிக்காக, பெரியாருக்குப் பாராட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றிய காங்கிரஸ் மாநாடு, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற நாள்

*1925 நவம்பர் 21&22*

28. வைக்கம் போராட்டத்தின் போது, 'நீங்கள் வந்துதான் போராட்டத்திற்குப் புத்துயிர் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை' என்று பெரியாருக்குக் கடிதம் எழுதியவர்

*கேசவ மேனனும், ஜார்ஜ் ஜோசப்பும்*

29. 'போராட்டத்திற்குப் புத்துயிர் கொடுக்க வருக' என்று பெரியாரை அழைக்கும் வைக்கம் கடிதம், ஈரோட்டிற்குச் சென்று, அங்கிருந்து ரீடைரக்ட் செய்யப்பட்டு--------------------த்தில் முகாமிட்டிருந்த பெரியாருக்குக் கிடைக்கின்றது.

*பண்ணைபுர*

30. வைக்கம் போராட்டத்தில் கலந்துகொள்ள கேரளம் புறப்பட்ட பெரியார், 'நான் வரும் வரை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று யாருக்குக் கடிதம் எழுதினார்?

*ராஜகோபாலாச்சாரியாருக்கு*

31. வைக்கம் போராட்டம் குறித்து, முனைவர் பட்டத்திற்குக் கேரள ஆய்வாளர் டி.கே. ரவீந்திரன் மேற்கொண்ட தலைப்பு

*Vaikkam Satyagraha and Gandhi*

32. கேரளப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் டி.கே.ரவீந்திரன் வைக்கம் போராட்டம் குறித்த தம் முனைவர் பட்ட ஆய்வேட்டை நூலாக வெளியிட்டார்; ஒவ்வொரு பதிப்பின்போதும் தலைப்பை மாற்றி மூன்று தலைப்புகளில் வெளியிட்டார். அதில் ஒரு தலைப்பு

*Hundred Yards to Freedom*

33. வைக்கம் போராட்டம் குறித்து டி.கே. ரவீந்திரன் எழுதிய முனைவர் பட்ட ஆய்வேடு ---------------------------------------- தலைப்பில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது.

*Eight Furlongs of Freedom*

34. வைக்கம், கேரள மாநிலம் -------------------------------- மாவட்டத்தில் உள்ளது.

*கோட்டயம்*

35. வைக்கம் போராட்டத்தில் தொண்டர்களாகச் சேர விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொண்ட கே.பி.கேசவ

மேனன் ----------- வயதைக் கடந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம் என்று நிபந்தனை விதித்தார்.

*18*

36. வைக்கம் போராட்டத்தில் தினமும் மூன்று பேர் சத்தியாகிரகம் செய்வது என்ற அடிப்படையில் முதல் நாள் (30.03.1924) தடுக்கப்பட்ட பகுதியைத் தாண்டிச் சென்ற பட்டியலினப் போராளியின் பெயர்?

*குஞ்சப்பா*

37. வைக்கம் போராட்டத்தில் தினமும் மூன்று பேர் சத்தியாகிரகம் செய்வது என்ற அடிப்படையில் முதல் நாள் (30.3.1924) தடுக்கப்பட்ட பகுதியைத் தாண்டிச் சென்ற ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்தவரின் பெயர்?

*அ) பாஹுலேயன்*

38. வைக்கம் போராட்டத்தில் தினமும் மூன்று பேர் சத்தியாகிரகம் செய்வது என்ற அடிப்படையில் முதல் நாள் (30.03.1924) பட்டியலின, ஈழவ சமுதாயத்தைச் சார்ந்தவர்களை அழைத்துக் கொண்டு தடுக்கப்பட்ட பகுதியைத் தாண்டி சென்றவர்

*கோவிந்த பணிக்கர்*

39. 'வைக்கம் போராட்டம் தொடங்கிய ஒரு வாரத்திற்குள், 'நிறுத்தி வைக்கும்படி யோசனை கூறுகின்றேன்' என்று சொன்னவர்

*காந்தியடிகள்*

40. --------------------- கோயிலுக்கு வந்த நாளில் சத்தியாகிரகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

*இளையராணி*

41. இளைய ராணி கோயிலுக்கு வந்த நாளில் சத்தியாகிரகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதற்கு ஜார்ஜ் ஜோசப் கூறிய காரணம்

*பெண்களுக்கு மரியாதை - காங்கிரசின் சிறந்த அடையாளம்*

42. 'இளைய ராணி கோயிலுக்கு வந்த நாளில் சத்தியாகிரகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது; 'மகாராஜா கோயிலுக்கு வந்திருப்பாரானால் எங்கள் போராட்டத்தை நாங்கள் நிறுத்தி இருக்க மாட்டோம்' என்று கூறிய ஜார்ஜ் ஜோசப், அதற்குக் கூறிய காரணம்

*அவர் இந்தப் போராட்டத்தைப் பார்க்கவும் புரிந்து கொள்ளவும் வேண்டியவர்*

43. வைக்கம் போராட்டத்தை நடத்தி வந்த கே.பி. கேசவ மேனன் அவர்களுக்கு, 'தைரியமாகத் தாங்கள் மேற்போட்டு கொண்ட வேலையை நடத்திக் கொண்டு போங்கள்' என்று வாழ்த்துத் தந்தி அனுப்பிய சென்னை ஆதிதிராவிட மகாஜன சபையின் கவுரவச் செயலாளர் பெயர்

*ராவ் பகதூர் எம்.சி. ராஜா*

44. வைக்கம் போராட்டத்தில் கே.பி.கேசவ மேனனும், டி.கே. மாதவனும் 07.04.1924 அன்று கைது செய்யப்பட்டபோது, மாஜிஸ்ட்ரேட் விதித்த நன்னடத்தை பிணைத் தொகை ரூபாய் ----- ------------------ கட்ட மறுத்து ஆறு மாதச் சிறைத் தண்டனை ஏற்றனர்.

*500*

45. வைக்கம் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்ற கே.பி. கேசவ மேனன், டி.கே. மாதவன் இருவருக்கும் மும்பையில் இருந்து வாழ்த்துத் தந்தி அனுப்பி, 'வெற்றி பெறும் வரை போராட்டம் நடத்தப்படும்' என்று அறிவித்தவர்

*காந்தியடிகள்*

46. தலைவர்களைக் கைது செய்வதன் மூலம் வைக்கம் போராட்டத்தை ஒடுக்கலாம் என்று கருதிய திருவாங்கூர் அரசாங்கம் 1924 ஏப்ரல் 9ஆம் தேதி ஏ.கே.பிள்ளை, கேளப்பன்நாயர், வேலாயுத மேனன் மூவரையும் கைது செய்த இடம்

*காங்கிரஸ் அலுவலகம்*

47. 'வைக்கம் தெருவில் நடப்பதற்குச் சிலருக்கு உரிமை இல்லை என்று கூறுவது தருக்கத்திற்கும், நியாயத்திற்கும் பொருந்தாது' என்று --------- ------------------ (11.04.1924) பத்திரிகை எழுதியது.

*நவசக்தி*

48. வைக்கம் போராட்டம் தொடங்கி 10 நாள்களுக்குப் பிறகு அரசாங்கம் எடுத்த முடிவு?

*போராட்டக்காரர்களைக் கைது செய்யாமல், பலவந்தமாய்த் தடுத்து நிறுத்துவது*

49. வைக்கம் போராட்டத்தில் காவல்துறையினரால் தடுக்கப்பட்ட சத்தியாகிரகிகள் செய்தது என்ன?

*சாலையின் குறுக்கே அமர்ந்து பட்டினி கிடந்தார்கள்*

50. வைக்கம் போராட்டத்தின்போது பொதுக்கூட்ட அறிவிப்பு செய்து கொண்டிருந்த நாகர்கோயில் முத்துச்சாமிக்கு நேர்ந்த கதி என்ன?

*அடித்து, அவர் வைத்திருந்த தண்டோராவை கிழித்தனர்*

51. 11.04.1924 அன்று காங்கிரஸ் அலுவலகத்தில் கைது செய்யப்பட்ட ஜார்ஜ் ஜோசப், 'கைது செய்யப்பட்டு விட்டேன்; சத்தியாகிரகம் நடந்தாக வேண்டும்; பொது ஜன ஆதரவுக்குக் குறைவில்லை; தொண்டர்களும் வேண்டியவரை இருக்கிறார்கள்; தலைவர்கள்தான் தேவை' என்று யாருக்குத் தந்தி அனுப்பினார்?

*காந்தியடிகளுக்கு*

52. ஜார்ஜ் ஜோசப், வைக்கம் போராட்டத்திற்குத் தலைவர்களை அனுப்பும்படி காந்தியடிகளுக்குத் தந்தியின் மூலம் வேண்டுகோள் விடுத்தார். ஜார்ஜ் ஜோசப் குறிப்பிட்ட இரண்டு தலைவர்களின் பெயர்கள்?

*தேவதாஸ் அல்லது மஹாதேவ தேசாய்*

53. வைக்கம் போராட்டத்தில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் மயங்கி விழுந்தவர் பெயர்

*சாத்துகுட்டி நாயர்*

54. வைக்கம் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தத் தலைவர்கள் தேவை' என்ற ஜார்ஜ் ஜோசப்பின் கோரிக்கைக்கு, 'பல மாகாணங்களிலுள்ள தலைவர்கள் ஓர் ஊரில், ஓர் இயக்கத்தில் தங்கள் கவனத்தை முழுவதும் செலுத்துவதென்பது அசாத்தியமில்லாவிட்டாலும் சிரம சாத்தியமானது' என்று கூறி வைக்கம் போராட்டத்தை அனைத்திந்திய இயக்கமாக மாற்றாதவர் என்று ஆய்வாளர்கள் இவரைச் சுட்டுகின்றனர்.

*காந்தியடிகள்*

55. 'தலைவர்களால் வழிகாட்டப்படாத காரணத்தினால் இயக்கம் (வைக்க போராட்டம்) இறந்து போகாமல்-------------------- தலைவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்' என்று சொன்னவர் காந்தியடிகள்.

*சென்னை மாகாணத்*

56. 'ஈ.வெ.இராமசாமி நாயக்கர் நாளை (ஏப்ரல் 13) காலை மெயிலில் வைக்கத்திற்குப் புறப்படுவதாகத் தந்தி கொடுத்திருக்கிறார்' என்ற செய்தி ------- ------------------------------- (12.04.1924) இதழில் வெளியாகியிருக்கிறது.

*சுதேசமித்திரன்*

57. வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டும் என்று கூறியவர்

*காந்தியடிகள்*

58. 'உடனே புறப்பட்டு வைக்கம் வருக' என்று 04.04.1924 அன்று தந்தை பெரியாருக்குத் தந்தி அனுப்பியவர்

*குரூர் நீலகண்டன் நம்பூதிரி*

59. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள வருமாறு குரூர் நீலகண்டன் நம்பூதிரி தந்தி (04.04.1924) அனுப்பியபோது தந்தை பெரியார் கூறிய பதில்

*குளித்தலை மாநாட்டுக்குச் செல்ல வேண்டி இருப்பதால் கட்டாயம் நான் அங்கு வந்து தான் தீர வேண்டுமா?*

60. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள வருமாறு (1924 ஏப்ரல் ஆறாம் தேதி) ஜார்ஜ் ஜோசப் எழுதிய கடிதத்திற்குப் பெரியார் அளித்த பதில்

*கட்டாயம் வரத்தான் வேண்டுமா?*

61. 'வைக்கம் வருக' என்று 04.04.1924 அன்று தந்தி அனுப்பியவருக்கு, குளித்தலை மாநாடு இருக்கிறது; வந்துதான் தீர வேண்டுமா?' என்று பெரியார் பதில் அனுப்ப, மீண்டும், 12.04.1924 அன்று, 'வந்து தான் தீரவேண்டும்' என்று பதில் தந்தி அனுப்பியவர் பெயர்.

*குரூர் நீலகண்டன் நம்பூதிரி*

62. 'ஜார்ஜ் ஜோசப் கைதாகி விட்டார்; நீங்கள் இங்கு இருக்க வேண்டியது அவசியமாகிவிட்டது' என்று பெரியாருக்குத் தந்தி அனுப்பி அழைத்தவர்

*டி.ஆர். கிருஷ்ணசாமி அய்யர்*

63. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள இன்று (13.04.1924) மெயிலில் புறப்படுவதாகக் கூறி ----------------------------- வந்து சந்திக்கும்படி குரூர் நீலகண்டன் நம்பூதிரிக்குப் பெரியார் தந்தி அனுப்பியிருந்தார்.

*திருச்சூரில்*

64. வைக்கம் போராட்டத்தில் பெரியார் கலந்து கொள்ளக் காரணம்

*வைக்கத்திலிருந்து வந்த தொடர் அழைப்புகள்*

65. வைக்கம் போராட்டத்திற்குப் புறப்படும் முன், பெரியார் விடுத்த அறிக்கையில், (சுதேசமித்திரன் 15.4.1924) காணப்படும் செய்திகள்

*அ) தமிழ்நாட்டில் தான் செய்ய வேண்டிய வேலை அதிக மிருக்கிறது*

*ஆ) வைக்கத்தில் பல கஷ்டங்கள் இருக்கும் என்று தனக்குத் தெரியும்; இருந்தாலும் கேரளத்தி லிருந்து வந்த கட்டளையை மீறி நடக்க விரும்பவில்லை*

*இ) நெருக்கடி உருவாகிவிட்டது; அடக்குமுறை ஓங்கி இருக்கிறது; ஜார்ஜ் ஜோசப் உள்பட பலர் கைதாகி விட்டனர்; அதனால்தான் புறப்பட்டு விட்டேன்; நானும் கைது செய்யப்படலாம்; அது ஒரு பெரிய காரியமல்ல*

*ஈ) இவை யாவும்*

66. 'தமிழ்நாட்டுத் தலைவர்களும் தொண்டர்களும் வைக்கத்திற்கு வாருங்கள்; உன்னத லட்சியத்திற்கு உழைக்க வாருங்கள்' என்று அழைப்பு விடுத்தவர்

*தந்தை பெரியார்*

67. காங்கிரஸ்காரர்களுடன் இணைந்து வைக்கம் இயக்கத்தைப் பலமாக்குவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் (13.4.1924 இரவு) நடைபெற்ற இடம்

*கொச்சி*

68. 'வைக்கத்திற்குத் தலைவர்களை அனுப்பி வையுங்கள்' என்று ஜார்ஜ் ஜோசப் எழுதிய கடிதத்திற்கு, 'ஊழியர்களைத் திருவாங்கூர் சத்தியாகிரக இயக்கத்திற்குத் தள்ளிவிட வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்ள முடியாது' என்று பதில் எழுதியவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

69. 'வைக்கம் ரஸ்தாவில் உங்களுடைய இயக்கம் வெற்றி அடைவதன் பலனாகத், தாழ்ந்த வகுப்பினர் செல்ல அனுமதிக்கப்படுவதால், தீண்டாமைப் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று நான் நினைக்கவில்லை' என்று ஜார்ஜ் ஜோசப் அவர்களுக்குக் கடிதத்தில் எழுதியவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

70. வைக்கம் போராட்டத்தில், 'காங்கிரஸ்காரர்கள் இந்த விஷயமாக சமஸ்தான அரசர்களுக்கு ஒரு விதமான இடைஞ்சலும் செய்யக்கூடாது என நான் கண்டிப்பாகச் சொல்லுவேன்' என்றவர்

*காந்தியடிகள்*

71. வைக்கம் போராட்டத்தில், 'எனக்குக் கிடைத்திருக்கும் யதாஸ்திலிருந்து பார்த்தால் சென்னை ராஜதானி இதர மாகாணங்களுக்கு வழிகாட்டும் என்று தான் புலப்படுகிறது' என்று கூறியவர்

*காந்தியடிகள்*

72. 'தமிழ்நாட்டுத் தலைவரான ஈ.வெ.ராமசாமி நாயக்கர் வைக்கத்திற்குச் சென்று இருக்கிறார்; நாயக்கர் கர்ம வீரர்; எதையும் செய்கையில் காட்டும் ஆற்றல் பெற்ற பெரியார்; ஆதலின் அவர் சத்தியாகிரகப் போர்க்களத்தின் பாசறையில் இது காலை சேனாதிபதிகளுடன் யோசித்து வருகிறார்' என்று 18.04.1924 'நவசக்தி' இதழில் எழுதியவர்

*திரு.வி.கலியாணசுந்தரனார்*

73. வைக்கம் போராட்டத்தைக் கேரளத்தவர்கள் தொடங்கி இருந்தாலும், தமிழ்நாட்டவர்களின் பெரும் பங்களிப்பாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவது

*அ) போராட்டம் தளர்ந்திருந்த தருணத்தில் தலைமையேற்று நிமிர்த்தியது, போராட்டத்தில் பங்கேற்று சிறைப்பட்டது*

*ஆ) சத்தியாகிரக ஆசிரமத்தை நிர்வகித்தது, நலிவுற்ற சத்தியா கிரகிகளுக்கு மருத்துவம் புரிந்தது*

இ) கேரளத்தின் பல ஊர்களில் பிரச்சாரம் மூலம் மக்கள் ஆதரவைத் திரட்டியது, நிதி வசூலித்தது

ஈ) இவை யாவும்

74. வைக்கம் போராட்டத்தில் (21.04.1924 அன்று) தொடங்கப்பட்ட பெண்கள் பிரிவு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?

அ) பெரியாரின் மனைவி

ஆ) கோவிந்தன் மனைவி

இ) மாதவன் மனைவி

ஈ) இவர்கள் யாவரும்

75. ஆகஸ்ட் 7, 1925 திருவாங்கூர் அரண்மனைக் கடிதம் (5774/ 7) இவர்களின் மீதான தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கிறது.

அ) எம்பெருமாள் நாயுடு, சகோதரன் ஐயப்பன்

ஆ) எம். மாதுன்னி, சங்கர ஐயர், செங்கரத்துக் குஞ்ஞன் பிள்ளை

இ) அய்யா முத்து, பெரியார்

ஈ) இவர்கள் அனைவரும்

76. "வைக்கம் ஆலயத்தைச் சுற்றி உள்ள ரஸ்தாக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் செல்லத் தடை செய்ய எவ்வித நியாயமும் இல்லை; பிராமணர்களும் சில நாயர்களும் ஆட்சேபிக்கிறார்கள்; பிராமணர்கள் கோயிலை அண்டி ஜீவிப்பவர்களானபடியால் அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு மதிப்பு வைப்பதற்கில்லை. பொதுஜனங்கள் நடமாடுவதற்கு உரிமை ஏற்படுவதற்காக அந்த ஸ்தலமானது பொது ஜனங்களுக்காவது, ராஜாங்கத்திற்காவது சொந்தமாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை" என்று (22.04.1924 சுதேசமித்திரன்) அறிக்கை விடுத்தவர்.

எஸ்.சீனிவாச ஐயங்கார்

77. 'உள்ளூர் பிரச்சனையில் வெளியாளுக்கு என்ன வேலை?' என்று பொறுப்பு திவான் (வீரராகவ அய்யங்கார்) கேட்டபோது, நான் ஒரு இந்தியன்; தீண்டாத சகோதரர்களுக்கு உதவி புரிய வந்தேன்; இந்த ராட்சஸத்தனமான வழக்கத்தை ஒழிக்கவே வந்தேன்; நான் இந்துவாகையால், இந்து மதத்தின் பெயரால் அதர்மங்கள் நடவாதபடி காப்பது என் கடமை' என்று சொன்னவர்

கோவை அய்யாமுத்து

78. "தடுக்கப்பட்ட சாலைகள் தனிப்பட்டவர்களின் பாதை; மகாராஜாவிடம் தூது போய் அல்லது சட்டசபை மூலமாகப் பிரச்சினையைத் தெரிவித்து இக்குறைக்குத் தீர்வு மேற்கொண்டிருக்க வேண்டும்; அவசரப்பட்டு சத்தியாகிரகம் ஆரம்பித்து அதை அகில இந்தியப் பிரச்சனையாகவும் ஆக்கிவிட்டனர்; ஆலயப் பிரவேச உரிமைக்கு மாதவன் போராடியதன் பலனாகவே இந்த இயக்கம் ஏற்பட்டிருக்கிறது" என்று உள்நோக்கம் கற்பித்த பொறுப்பு திவானின் பெயர்.

வீரராகவ அய்யங்கார்

79. வைக்கம் போராட்டத்தின்போது தீண்டாதவர் சகாய நிதிக்கு ரூபாய். 500 அனுப்பி வைத்தவர் (22.04.1924 சுதேசமித்திரன்)

ராஜகோபாலாச்சாரியார்

80. 'அகில இந்தியாவிலும் பிரபலமாகிவிட்ட வைக்கம் சத்தியாகிரகத்தில், சத்தியாகிரகிகள் உண்மையாகவும், பணிவாகவும், சாத்வீகமாகவும் போராட்டத்தை நடத்திக் கொண்டு போக வேண்டும்' என்று (22.04.1924 சுதேசமித்திரன்) அறிக்கை வெளியிட்டவர்

காந்தியடிகள்

81. வைக்கம் போராட்டத்தில் கைதான ஜார்ஜ் ஜோசப், காந்தியடிகளுக்கு முன் -------------------- ---------------- பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர்

யங் இந்தியா

82. வைக்கம் போராட்டத்தில், 'வைதிக இந்துக்கள் பிடிவாதமாக இருக்கும் பட்சத்தில் இது முடிவு பெறாது' என்று கூறியவர்

காந்தியடிகள்

83. 'வைக்கம் போராட்டத்தில் சென்னையில் உள்ளவர்களே அதற்கு இணங்கி காரியம் செய்து வருவதால் வெளியில் உள்ளவர் உதவிக்குச் செல்ல வேண்டுவதைப் பற்றி இப்போது யோசிக்க

வேண்டியதே இல்லை' என்று கூறியவர்

*காந்தியடிகள்*

84. வைக்கம் போராட்டத்தை எதிர்த்து எழுதிய கே.நடராஜன் என்பவர் ------------------------------------ பத்திரிகையின் ஆசிரியர்

*சோஷியல் ரிபார்மர்*

85. யாழ்ப்பாணப் பத்திரிகை ஆசிரியர் ---------------------------------------- வைக்கம் போராட்டத்தை ஆதரித்து எழுதியதோடு, அவசியப் பட்டால் தன் கணவருடன் வைக்கம் வருவதாக எழுதியிருந்தார்.

*மங்களாம்பாள்*

86. தீண்டாதவர்களிடம் காங்கிரஸ்காரர்கள் உண்மையான சகோதரத்துவ உணர்ச்சியும், அன்பும் காட்டுவதைத் தாம் பாராட்டுவதாயும், ஆயினும் பொது ஜன அமைதியை முன்னிட்டு வைக்கம் இயக்கத்தை அடக்காமல் இருக்க முடியாதென்றும் குறிப்பிட்டவர்

*மாவட்ட மாஜிஸ்டிரேட்*

87. "எதிர்க்கட்சியார் வர வர இம்சையில் இறங்கி வருகிறார்கள்; இனியும் இம்சை நடக்கக்கூடும்; வேலியைத் தாண்டலாமா? பட்டினியிருக்கலாமா?' என்பது குறித்து கருத்துத் தெரிவிக்குமாறு குரூர் நீலகண்டன் நம்பூதிரி எழுதிய கடிதத்திற்குக் காந்தி எழுதிய பதில்

*பட்டினி இருக்கக் கூடாது; வேலியேறிக் குதிக்கவும் கூடாது*

88. வைக்கம் காவல்துறை உதவி கண்காணிப்பாளர் பெயர்

*பிச்சு ஐயங்கார்*

89. 'உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும்' என்று கூறிய காவல்துறை உதவி கண்காணிப்பாளர் பிச்சு ஐயங்காருக்கு, வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட காந்தி தாசன் முத்துசாமி உரைத்த பதில்

*கவலை இல்லை*

90. மாலையில் பொதுக்கூட்டம் நடக்கவிருப்பதாகத் தம்பட்டம் அடித்துச் சென்ற காந்திதாசன் முத்துசாமியை இரண்டு நாயர்கள் வழிமறித்தார்கள்; தம்பட்டத்தைப் பிடுங்கிக் கொண்டார்கள்; அதன் பிறகு முத்துசாமி செய்த செயல் என்ன?

*வாயால் அறிவித்துக் கொண்டே போனார்*

91. வைக்கம் போராட்டம் (30.03.1930) தொடங்கிய கிழமை

*ஞாயிறு*

92. வைக்கம் போராட்டம் வாரத்தில் ஒரு நாள் ------------------------ கிழமைகளில் நடைபெறவில்லை

*ஞாயிற்றுக்*

93. வைக்கம் போராட்டத்தை எதிர்த்து எழுதிய இதழ்கள்

*அ) தி லீடர்*
*ஆ) சுதர்ஸனம், சோஷியல் ரிபார்மர்*
*இ) திருவனந்தபுரம் டெய்லி நியூஸ்*
*ஈ) இவையாவும்*

94. வைக்கம் போராட்டத்தை ஆதரித்த இதழ்கள்

*அ) சுதேசமித்திரன்*
*ஆ) நவசக்தி*
*இ) தமிழ்நாடு*
*ஈ) இவை யாவும்*

95. 'தெருவில் நிரூபித்த சுதந்திரத்தைக் கோயிலுக்குள்ளும் நிரூபித்துக் காட்ட வேண்டியது மனிதர் கடமை' என்று 29.11.1925 வைக்கத்தில் நடைபெற்ற வெற்றி விழா கூட்டத்தில் உரைத்தவர்

*பெரியார்*

96. 'வைக்கம் சத்தியாகிரகத்துக்கு விரோதியாய் இருந்தவர்கள் பிராமணர்களே ஒழிய, அரசாங்கத்தார் அல்ல என்பதை அரசாங்கத்தார் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்'. இது யாருடைய கூற்று?

*பெரியார்*

97. 'வைக்கம் சத்தியாகிரகம் என்ற போர் அரசாங்கத்துக்கு எதிரானதல்ல; மதச் சண்டை அல்ல; வகுப்புச் சண்டையும் அல்ல; இது பொது நலனுக்கான செயல்; சமத்துவத்தை நிறுவும் நோக்கம் கொண்டது' - இது தந்தை பெரியார் (01.05.1924 அன்று) பேசியது. பேசிய இடம்?

*திருவனந்தபுரம்*

98. இது தீண்டாமைக்கு எதிரான பெரியாரின் வாதம் இடது கையைத் தொடும்போதெல்லாம் வலது கை குளித்து முழுகவேண்டும் என்று நினைக்கிறதா?

99. "இறந்த கால்நடைகளை அறுக்கும் பறையர் தீண்டத்தகாதவர் எனில் மனித உடலை அறுக்கும் பிராமண டாக்டர்களிலும், நாயர் டாக்டர்களிலும் எவ்வளவு அதிகமான தீண்டத்தகாதவர் உள்ளனர்?'' - இது யாருடைய கூற்று?

தந்தை பெரியார்

100. "கள்ளை இறக்குவதால் தீயர் தாழ்ந்த ஜாதியினர் எனப்படுகிறார்கள். அதைக் குடிப்பவர் எந்த அளவு மோசமானவர்? கள்ளை இறக்க மரங்களை வாடிக்கை விடுபவர் இவர்களை விட எந்த அளவு கூடுதல் மோசமானவர்? கள்ளிலிருந்து வருவாயை அதிகரிக்கும் அரசாங்கம் இவர்களை எல்லாம்விட கூடுதல் மோசமானதல்லவா?'' இப்படிப் பேசியவர்

தந்தை பெரியார்

101. "தம்மை உயர்ந்தோர் என்று கருதிக் கொள்பவரிடம் சம அந்தஸ்து கோருவோர் முதலில் தம்மைவிட 'கீழ் உள்ளோர்' என வகைப்படுத்தப்பட்டவருடன் ------------------------------------------ --- என்று கருத வேண்டும்.

சமம்

102. எந்த ஷத்திரியன், பிராமணனுடன் சமத்துவம் கோர உரிமையுள்ளவன் என்று பெரியார் கூறுகிறார்?

வைசியன், சூத்திரன் தனக்குச் சமமானவன் என்று கருதும் ஷத்திரியன்.

103. 'சிறிய வன்முறை கூட நமது போராட்டத்துக்கு முழுத் தோல்வியைக் கொண்டு வந்து விடும்' என்று திருவனந்தபுரத்தில் (01.05.1924) எச்சரிக்கை விடுத்தவர்

தந்தை பெரியார்

104. திருவனந்தபுரத்தில் 1924ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாளில் கே.சி. குஞ்சுகிருஷ்ண பிள்ளை தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பெரியார் பேசிய பேச்சை அறிக்கையாக எழுதி அனுப்பிய காவல் ஆய்வாளர்.

சி.எஸ்.ராமச்சந்திர ஐயர்

105. "இந்த திவான், 'இது உன் சொந்த ஊரா? ஏன் இங்கு வந்து பிரச்சனை செய்கிறாய், என்கிறார். காலில் காயம்பட்டால், கை, ரத்தம் துடைக்க நீளுவதில்லையா? தலை, குனிந்து அதைப் பார்ப்பதில்லையா? அவை கால்களின் பகுதி இல்லையே என்று நாம் கேட்கிறோமா?" என்று 1924 மே 1 ஆம் தேதி அன்று திருவனந்தபுரத்தில் பேசிய கோவைக்காரர்

அய்யாமுத்து

106. 'காந்தி வைக்கம் இயக்கத்தை ஆதரிக்காவிடில், வெளியாருடைய உதவியைத் தடுக்காமலாவது இருக்கலாம்' என்று சொன்னவர்

ஆரிய சமாஜத் தலைவர் சிரத்தானந்தர்

107. வைக்கம் போராட்டத்தில் கோட்டயம் மாவட்டத்தின் எந்த ஒரு பகுதியிலும் வருகை தரவோ, தங்கவோ செய்யக்கூடாது என்று தந்தை பெரியாருக்குத் தடை விதித்த திவான் பேஷ்கார் - கோட்டயம் மாவட்ட மாஜிஸ்டிரேட் பெயர்

எம்.வி. சுப்பிரமணிய அய்யர்

108. "கிறிஸ்தவரும் முகமதியரும் வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்வதில் தவறு இல்லை" என்று கூறியவர்

பெரியார்

109. வைக்கம் கோயில் சாலையில் தீண்டாதவர் நடப்பது பற்றிய போராட்டம் தீண்டாதவருக்கும், ஜாதி இந்துக்களுக்கும் என இந்து மதத்திற்குள் இருக்கும் இரு பிரிவினருக்குமான இந்து மதப் பிரச்சனை என்பதால் கிறித்தவரோ, முகமதியரோ, அகாலியரோ இதில் ஈடுபடக் கூடாது என்பது --- ------------------------------------ கருத்து.

காந்தியடிகள்

110. "தீண்டாமை இந்துப் பிரச்சனையானால் கிலாபத் முஸ்லிம் பிரச்சனை. அதில் இந்துக்களைக் காந்தி ஏன் தொடர்புபடுத்தினார்? அகாலிகள் போராட்டம், சீக்கிய சமூகத்தின் உரிமை மற்றும் சீர்திருத்தம் மட்டுமே கொண்டது. ஆனால் அது இந்திய இயக்கமாக மாறிவிட்டது'' என்ற கட்டுரை 17.05.1924 ---------------------------- இதழில் வெளியானது.

இந்து

111. வைக்கம் போராட்டத்திற்கு "இந்துக்கள் அல்லாதவர்களிடமிருந்தும், வெளிமாகாணங்களிலுள்ள இந்துக்களிடமிருந்தும் எவ்வித உதவியும் பெறக்கூடாது" என்று கூறியவர்

காந்தியடிகள்

112. வைக்கம் போராட்டத்தில் (14.04.1924) வடக்குக் கோபுர வாயிலுக்கும் கிழக்குக் கோபுர வாயிலுக்கும் சென்ற தொண்டர்களை வழி நடத்திச் சென்றவர்.

தந்தை பெரியார்

113. வைக்கம் சென்றிருந்த டி.எஸ்.சொக்கலிங்கம், சுதேசமித்திரன் (19.04.1924) இதழில், வைக்கம் கள நிலவரத்தை எழுதும்போது, தந்தை பெரியாரின் பணியாகக் குறிப்பிடுவது.

சுற்றுப் பக்கத்து கிராமங்களில் உருக்கமான பிரசங்கங்கள் செய்து வருகிறார்

114. தமிழ்நாட்டுத் தொண்டர்களை ஒருங்கிணைத்து வைக்கத்துக்கு அனுப்பும் பணியை மேற்கொண்டவர் ----------------------. அதற்காக அவரது சேலம் பங்களா திறந்திருந்தது.

வரதராஜுலு நாயுடு

115. கேரளத்தில் தந்தை பெரியார் பிரச்சாரம் செய்த ஊர்

வைக்கம், சேர்த்தலை, ஆலப்புழை, திருவனந்தபுரம்

116. வைக்கம் போராட்டத்தில், சத்தியாகிரக ஆசிரமம் ---------------------------- சொந்தமான வெல்லூர் மடத்தில் இயங்கி வந்தது.

நாராயண குருவுக்குச்

117. வைக்கத்தில் சத்தியாகிரக ஊர்வலத்தை நடத்திய தலைவர்களில் முக்கியமானவர் என்று சுதேசமித்திரன் குறிப்பிடுவது?

பெரியார்

118. வைக்கம் போராட்டத்தில் காந்தியின் ஆலோசனையைக் கேட்டுக் கடிதம் எழுதியவர்

அ) டி.கே.மாதவன்

ஆ) கே.பி.கேசவ மேனன்

இ ஜார்ஜ் ஜோசப், குரூர் நீலகண்டன் நம்பூதிரி, டி.ஆர்.கிருஷ்ணசாமி ஐயர்

ஈ) இவர்கள் அனைவரும்

119. காங்கிரஸ் தீண்டாமை விலக்குக் குழுவின் கூட்டத்தில் பெரியார் தமிழில் பேச, மலையாளத்தில் மொழி பெயர்த்தவர்?

சாத்துக்குட்டி நாயர், சுவாமி சத்தியவிரதன்

120. 'ராமசாமி நாயக்கர், அய்யாமுத்து கவுண்டர், டாக்டர் எம்பெருமாள் நாயுடு முதலியோர் இச்சமஸ்தானத்தில் அடுத்த 15 தினங்களுக்கு யாதொரு பிரசங்கமும் செய்யக்கூடாது' என்று திருவாங்கூர் அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கக் கூறிய காரணம்

அ) பற்பல வகுப்பினருக்குள்ளும் துவேஷம் ஏற்படும்

ஆ) பொதுமக்கள் அமைதிக்கும் பங்கம் ஏற்பட்டு விடும்

இ) அதிகாரிகளை அவமதிக்கத் தூண்டுவது போலிருக்கும்

ஈ) இவையாவும்

121. தந்தை பெரியார் கோட்டயம் மாவட்டத்தில் எந்த ஒரு பகுதியிலும் வருகை தரவோ, தங்கவோ கூடாது என்று மாவட்ட மாஜிஸ்டிரேட் ------------------ ----------------- (03.05.1924) தடை விதித்தார்

எம்.வி. சுப்பிரமணிய அய்யர்

122. தடையை மீறியதற்காகப் பெரியார் கைது செய்யப்பட்டார்; விசாரணையின் போது (21.05.1924) நாகம்மையார் உடன் இருந்தார்; காவல்துறை அதிகாரிகள் பிச்சு ஐயங்கார், நாராயணப் பிள்ளை ஆகியோர் அரசு சார்பில் விசாரிக்கப்பட்டனர். நீதிமன்றத்தில் பெரியார் கூறியது என்ன?

அ) இந்த நீதிமன்றம் நியாயம் செய்யும் என்ற நம்பிக்கை தமக்கு இல்லை

ஆ) விசாரணை வெறும் வேஷம்

இ) நீதிமன்றத்துடன் ஒத்துழைக்க முடியாது

ஈ) இவை யாவும்

123. வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் மனைவி நாகம்மையார், தடுக்கப்பட்ட சாலைக்கு எவரை அழைத்துக் கொண்டு சென்றார்?

கோவிந்தன் சாணாரின் மனைவி

124. சத்தியாகிரகம் (வைக்கம் போராட்டம்) தோல்வியுற்றால் ------------------------முழுமைக்கும் அது அவமானத்தை உண்டுபண்ணுவதாகும் என்றார் பெரியார்

இந்தியா

125. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டு முதல் முறையாக - 1924 மே 22 அன்று கைதான பெரியார், 28ஆம் தேதி அருவிக் குட்டி சிறையில் அடைக்கப்படும் வரை எந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தார்?

வைக்கம் காவல் நிலையம்

126. வைக்கம் போராட்டத்தில் இது காந்தியடிகளின் கருத்து

அ) மகாராஜாவை நிர்ப்பந்தப்படுத்துவது சத்தியாகிரகம் ஆகாது
ஆ) இந்து சமூக ஊழல்களைப் போக்குவது இந்துக்களின் கடமை; வெளியாரின் உதவியை அதற்கு வேண்டக்கூடாது
இ) அன்பினால் வைதீகர்களை வசப்படுத்தலாமே அன்றி வெளியாருடைய உதவியைக் கொண்டு பயமுறுத்தி பணியச் செய்யப் பார்ப்பது சரியல்ல
ஈ) இவை யாவும்

127. வைக்கத்தில் ராஜகோபாலாச்சாரியார், பெரியாரைச் சந்தித்த இடம்

காவல் நிலையம்

128. வைக்கத்தில் சீக்கியர்கள் இலவச போஜன சாலையை ஏற்படுத்தி இருந்தனர்; 'நான் அதில் போஜனம் உட்கொள்வதைவிட பட்டினி கிடப்பதையே உசிதம் என்று கருதுவேன்' என்று கூறியவர்.

காந்தியடிகள்

129. பணம் இல்லாததால், சென்னையிலிருந்து கால்நடையாகவே வைக்கம் சென்ற இருவர் பெயரை, 28.05.1924 சுதேசமித்திரன் இதழ் குறிப்பிடுகிறது. அவர்களின் பெயர்

வி.என். ஐயங்கார், ஜி.கந்தசாமி ராஜுலு

130. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்ட தந்தை பெரியார் சிறை சென்றதையடுத்து, வைக்கத்திற்கு வருகை புரிந்தவர்

அ) வரதராஜுலு, ராஜகோபாலாச்சாரியார்
ஆ) க. சந்தானம், தங்கப்பெருமாள்
இ) ராமநாதன்
ஈ) இவர்கள் அனைவரும்

131. கோயிலுக்குள் செல்ல நாகம்மையார் தடுக்கப்பட்டார் (15.06.1924) தடுக்கப்பட்டதற்குக் கூறிய காரணம்

அவர்ணத் தொண்டர்களின் பக்கமாக வந்ததனால் அவர்கள் அசுத்தமாகிவிட்டார்கள்

132. தொண்டர்களுக்காக இலவச வைத்தியசாலை அமைத்தவர்

சுவாமி கோவிந்தானந்தர்

133. வைக்கம் போராட்டத்தில் நாராயண குருவின் கருத்து.

சாலைகளில் மாத்திரமின்றி வைக்கம் கோயில் உள்பட எல்லாக் கோயில்களிலும் பிரவேசிக்கவேண்டும்.

134. ''ஆலயங்களில் பிரவேசிப்பதோடு நின்று விடாமல் மற்றவர்களோடு சேர்ந்து சாப்பிடுவதற்கும் உட்கார்ந்து விட வேண்டும்; அதற்கு மடப்பள்ளியில் பிரவேசிக்க வேண்டும்'' என்று கூறியவர்

நாராயண குரு

135. "தடுக்கப்பட்ட சாலைகள் வழியாகத் தொண்டர்கள் தாராளமாக நடந்து சென்று, அதன் மூலமாக அடியோ அவமானமோ, எதையும் சகித்துக் கொள்ள வேண்டும்; வேலி போட்டிருந்தால் கூட ஏறிக் குதிக்க வேண்டும்" என்று சொன்னவர்

நாராயண குரு

136. "முந்தியே அப்போராட்டம் முடிந்திருக்கும்; ஆனால் மகாத்மா காந்தி குறுக்கிட்டு விட்டார். தொண்டர்கள் பட்டினி இருக்க விடப்பட்டிருந்தால் எதிர்பார்த்த பலன் ஏற்பட்டு இருக்கும். ஆனால் பட்டினி கிடக்கக் கூடாது என்று மகாத்மா காந்தி உத்தரவு செய்தார். உடனே வைக்கம் சத்தியாகிரகம் வலிமை இழக்க ஆரம்பித்தது. காங்கிரசின் பெருமை இதன் பலனாகக் குறைந்தது. இன்னும் கொஞ்சம் காலத்துக்கு கேரளத்திலும் தொண்டர்கள் வேண்டிய அளவு அகப்பட மாட்டார்கள்" என்று டெல்லியில் கூறியவர்

*சுவாமி சிரத்தானந்தர்*

137. வைக்கத்தில் போராட்ட வீரர்களுக்கு உணவளித்த அகாலியர், காந்தியடிகளின் கோரிக்கையை ஏற்று ஊர் திரும்பினர். உணவருந்தியவர்களின் எண்ணிக்கை

*30,000*

138. வைக்கம் போராட்டத்தில் (09.06.1924) ஈடுபட்ட பெண் தொண்டர்கள்

*பெரியாரின் மனைவி நாகம்மையார், காந்திதாசன் முத்துசாமி மனைவி, சாணாரின் புத்திரி*

139. "சமூகக் கட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காகவே வைக்கம் சத்தியாகிரகம் நிகழ்ந்து வருவதால் சீக்கியர்களாவது, முகமதியர்களாவது, கிறித்தவர்களாவது இதில் கலந்து கொள்ளக் கூடாது என்று மகாத்மா காந்தி சொல்லுவதையும் நான் அங்கீகரிக்க முடியாது" என்று கூறியவர்

*எஸ்.சீனிவாச ஐயங்கார்*

140. எதிரிகள் நாசமாய்விட வேண்டுமென பிராமணர்களும், நாயர்களும் செய்த யாகத்தின் பெயர்

*சத்ரு சம்ஹார யாகம்*

141. ''ராட்டினத்தைச் சுற்றிக்கொண்டு, தேச பக்திப் பாடல்களை பாடுவதை அநேக தினங்களாக காவல்துறையினர் தடுக்கவில்லையே'' என்று ஆசிரமத்து ஊழியர் வினவ, 'இந்தப் போலீஸ்காரர்களின் தாட்சண்யம்தான் இத்துணை உபத்திரவத்துக்கும் காரணம்' என்று பதில் சொன்ன உதவிக் காவல் கண்காணிப்பாளர் பெயர்

*பிச்சு ஐயங்கார்*

142. வைக்கம் போராட்டத்திற்கு முத்துரங்க முதலியார் வழங்கிய நன்கொடை ரூபாய் ---------------

*25*

143. வைக்கம் போராட்டத்தை எதிர்த்து, சத்தியா கிரகிகள்மீது நடவடிக்கை எடுக்காத அரசைக் கண்டித்து, தீண்டாமையை ஆதரித்து எதிர்ப் பிரச்சாரம் செய்தவர்கள்

*அ) நீலகண்டன் நம்பியாத்ரி, பி.சி.கிருஷ்ணப்பிள்ளை*
*ஆ) வக்கீல் வேங்கட ராமய்யர்*
*இ) எம்.கே.ராமன் பிள்ளை, கோவிந்தன் பிள்ளை*
*ஈ) இவர்கள் அனைவரும்*

144. வைக்கம் போராட்டத்தில் கிழக்கு வாயில் சென்ற --------------------------- என்ற தொண்டரின் கண்களில் சுண்ணாம்பு அப்பினார் நாயர் ஒருவர்.

*ராமன் இளையாத்து*

145. வைக்கம் போராட்டத்தை எதிர்ப்பவர்களில் முக்கியமானவர் என்று அய்யா முத்து குறிப்பிடுபவர்

*இந்தன்துருத்தில் நம்பூதிரிபாடு*

146. வைக்கம் போராட்டத்தில் இரண்டாவது முறை கைது செய்யப்பட்ட தந்தை பெரியாருக்கு நீதிபதி விதித்த தண்டனை

*4 மாதக் கடுங்காவல்*

147. வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாருக்குக் கடும் தண்டனை விதிப்பதற்கு நீதிபதி கூறிய காரணம் யாது?

*அ) வேண்டுமென்றே பிடிவாதமாகச் சட்டத்தை மீறுகிறார்*
*ஆ) தடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது*
*இ) முன்பு உபாயமான தண்டனை விதித்து நடத்தையைத் திருத்தப் பார்த்தும் பிரயோஜனமில்லை*
*ஈ) இவை அனைத்தும்*

148. தந்தை பெரியார் வைக்கம் போராட்டத்தில் இரண்டாம் முறை கைது செய்யப்பட்ட போது, ''நமது தலைவரும் தமிழ்நாட்டினரின் மதிப்பையும் அபிமானத்தையும் பெற்றவருமான ஈ.வி. ராமசுவாமி நாயக்கர் மறுபடியும் சிறை சென்று விட்டார்''

என்று எழுதியவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

149. வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் கைது செய்யப்பட்ட போது, "ஒரு மகத்தான சமூக அநியாயத்தை நிவர்த்தி செய்வதற்காகத் தூய்மையான எண்ணங்களுடன் சாத்வீக எதிர்ப்புச் செய்ய முன்வருபவருக்குக் கொடுமையான தண்டனைகள் விதித்து வரும் அதிகாரிகளும் தங்களுடைய பிசகை உணர்வார்கள் என்று நம்புவோம்" என்று எழுதியவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

150. வைக்கம் சத்தியாகிரகத்தில் சத்தியாகிரகிகளைத் தண்டிப்பதில் கடுமை காட்டிய உதவிக் காவல் கண்காணிப்பாளர்

*பிச்சு ஐயங்கார்*

151. தமக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அதிகாரம் தரக் கோரிய உதவிக் காவல் கண்காணிப்பாளர் பெயர்

*பிச்சு ஐயங்கார்*

152. வைக்கம் போராட்ட வீரர்களை எவரும் உபத்திரவம் செய்யாமல் கவனிக்க அனுப்பப்பட்ட ரகசிய ஆய்வாளர் பெயர்

*ராமன் பிள்ளை*

153. வைக்கம் போராட்டத்திற்கு எதிராக வைதிகர்கள் களத்தில் இறங்கினார்கள்; வைக்கம் சத்தியாகிரகிகளுக்கு காந்தியின் அறிவுரை

*பொறுமை காக்கவும்*

154. பெரியார், கோட்டயம் மாவட்டத்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; அதனைத் தொடர்ந்து வைக்கத்துக்கு அண்டை மாவட்டமான ---------------------------------- மாவட்டத்தில் நுழையவும் பெரியாருக்குத் தடை விதிக்கப்பட்டது.

*கொல்லம்*

155. நாகம்மை குறித்து, ''வீட்டின் ஒரு மூலையில் பேடெனப் பதுங்கிக் கிடந்த நம் அம்மையார், தீண்டாமை எனும் பேயை வெட்டி வீழ்த்துவான் வேண்டி, வைக்கம் சத்தியாக்கிரகப் போரிற் புகுந்து, சிறை சென்று, அரசாங்கத்தை நடுங்கச் செய்ததுடன் அமையாது, வாகை மாலையும் சூட்டினார்'' எழுதியவர்

*திரு.வி. கலியாணசுந்தரனார்*

156. ''தடுக்கப்பட்ட மேலண்டை வாசலில் ஸ்ரீமதிகளான கல்யாணி அம்மாள், பார்வதியம்மாள், கருப்பியம்மாள், கருத்த குஞ்சம்மாள், ராமசாமி நாயக்கரின் பந்துக்களான லட்சுமியம்மாள், மாரக்காயம்மாள் இவர்கள் நின்று சத்தியாகிரகம் செய்தது கல் மனத்தையும் கரையச் செய்ய வல்லது'' என்று 25.07.1924 சுதேசமித்திரன் இதழில் எழுதியவர்.

*சங்கரலிங்க நாடார்*

157. வைக்கம் போராட்டத்தில் இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டு, திருவாங்கூர் சிறையில், தண்டனைக் காலம் நான்கு மாதங்கள் என்று அடைக்கப்பட்டிருந்த பெரியார், 43ஆம் நாளில் விடுதலை செய்யப்பட காரணம்.

*புதிய யுவராஜா பட்டத்திற்கு வந்ததையடுத்து செய்யப்பட்ட நல்லெண்ண நடவடிக்கை*

158. வைக்கம் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, தந்தை பெரியார் சிறையில் இருந்தபோது, இறந்துபோன திருவாங்கூர் மகாராஜாவின் பெயர்

*மூலம் திருநாள் ராமவர்மா*

159. வைக்கம் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு, பெரியார் சிறையில் இருந்த போது, 67 வயதான திருவாங்கூர் மகாராஜா மூலம் திருநாள் ராமவர்மா இறந்துவிடுகிறார். மகாராஜா மறைந்த நாள்

*07.08.1924*

160. வைக்கம் போராட்டத்தில் இரண்டாவது முறை கைது செய்யப்பட்ட பெரியார், கோட்டயத்திலிருந்து திருவனந்தபுரம் சிறைக்கு (102 கல்) நடந்து கடக்க உத்தேசித்திருக்கிறார் என்ற குறிப்பு 08.08.1924 -------------------------- இதழில் காணப்படுகிறது.

*நவசக்தி*

161. ''தற்போது திருவனந்தபுரம் மத்திய சிறையில்

சத்தியாகிரக கைதியாய் இருக்கும் இ.வி. ராமசாமி நாயக்கர் உணவு, தங்குமிடம் போன்ற விஷயங்களில் சாதாரண தண்டனைக் கைதியாக நடத்தப்படுவதாக நம்பகமான தகவல்கள் எனக்கு வருகின்றன; சிறை உடையை அவர் அணிகிறார்; இரும்பு விலங்குகள் போடப்பட்டிருக்கிறார்'' என்று அறிக்கையில் எழுதியவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

162. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்ற தந்தை பெரியார் குறித்து, "அவருடன் நன்றாகப் பழகியிருக்கிறேன்; அவருடன் பல காலம் சேர்ந்து வாழ்ந்திருக்கிறேன்; எனக்கு அவரைத் தெரியும்; அவர் ஒரு தளர்வுறாத ஆன்மா. செல்வ வளத்தின் மகிழ்ச்சிகளையும் பதவிகளையும் வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டு கடினமான இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்து வந்துள்ளார்" என்று எழுதியவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

163. ''சிறையிலிருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தைரியமிக்க தலைவருக்கு என் பாராட்டுகள்'' என்று வைக்கம் போராட்டத்தில் சிறையில் இருந்த பெரியாருக்குப் பாராட்டுரை (தி இந்து, 27.08.1924) வழங்கியவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

164. வைக்கம் போராட்டத்தில் கைதான தந்தை பெரியார், காங்கிரஸ் தலைவர் கே.பி.கேசவ மேனன், மற்றும் வேறு இருவரையும் சிறப்புக் கைதிகளாக வைக்க வேண்டும் என்று திருவிதாங்கூர் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் வைத்தவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

165. ''பெரியார் எந்தக் கஷ்டத்தையும் சகிக்கும் சக்தி வாய்ந்தவர் என்பது நமக்குத் தெரியும்; ஆனால் திருவாங்கூர் அரசாங்கம் ஒரு சத்தியாகிரகியை இவ்வாறு துன்புறுத்துவது தர்மமோ?'' என்று கேட்டவர்

*திரு.வி.கலியாணசுந்தரனார்*

166. வைக்கம் போராட்டத்தில் சிறைபிடிக்கப்பட்டு 30.08.1924 அன்று விடுதலையானபோது, ''வைக்கம் உட்பட எல்லா இடங்களிலும் பொது ரஸ்தாக்களில் எல்லோரும் நடமாடலாம் என்று அரசாங்கத்தார் அனுமதிப்பதற்கு அறிகுறியாகவே எங்கள் விடுதலையைக் கொள்ள நாங்கள் ஆவலாய் இருக்கிறோம். அப்படி இல்லாவிடில் வைக்கம் போராட்டத்தை இனியும் நடத்துவோம்'' என்று கூட்டாக அறிக்கை விடுத்தவர்கள்

*தந்தை பெரியார், கே.பி.கேசவ மேனன்*

167. வைக்கம் போராட்ட நிதியாக ஆலப்புழையில் நாகம்மையார் பெற்ற தொகை ---------------- என்று 03.09.1924 சுதேசமித்திரன் இதழ் குறிப்பிடுகிறது.

*101 ரூபாய்*

168. ''பெரிய வலிமையான பிரிட்டிஷ் அரசாங்கம் (தீண்டாமை) பார்ப்பதில்லை. அப்படியிருக்க, சாதாரண அதன் கீழ்ப்படிந்த திருவாங்கூர் போன்ற அரசாங்கங்கள் ஏன் இத்தகைய பழக்கத்தைக் கொண்டிருக்கின்றன என்று புரியவில்லை'' என்று பேசியவர்

*தந்தை பெரியார் (5.9.1924)*

169. வைக்கம் போராட்டத்தில் கவலை அளித்ததாகப் பெரியார் குறிப்பிடுவது

*விடுதலை தான்*

170. வைக்கம் போராட்டத்தில் இரண்டாம் முறை கைது செய்யப்பட்ட தந்தை பெரியார் 30.08.1924 அன்று விடுதலை செய்யப்பட்டார். கேரளத்தில் பிரச்சாரம் செய்துவிட்டு 09.09.1924 அன்று ஈரோடு சென்றார். 11ஆம் தேதி பெரியார் கைது செய்யப்படுகிறார். காரணம் என்ன?

*அரசாங்கத்திற்கு விரோதமாய் (1924 மார்ச்) பிரச்சாரம் செய்ததற்காக*

171. வைக்கம் போராட்டத்தில் விடுதலையான தந்தை பெரியார் ஈரோடு வந்தபோது சென்னை அரசாங்கம் அவரைக் கைது செய்தது. கைதுக்கான காரணமாகக் 'குடிஅரசு' இதழ் குறிப்பிடுவது

*மறுபடியும் வைக்கம் போகாமலிருப் பதற்காக*

172. வைக்கம் போராட்டத்தில் கைதாகி விடுதலையான

தந்தை பெரியார், தமிழ்நாடு திரும்பினார். பெரியார் மீண்டும் வைக்கத்திற்குள் வந்துவிடக் கூடாது என்பதற்காக நடைபெற்ற காரியம் யாது?

*ஒரு பிராமண மெம்பரையும் ஒரு பிராமண அட்வகேட் ஜெனரலையும் கொண்ட கவர்மெண்ட் 1924 மார்ச்சில் பெரியார் பேசிய பழைய குப்பை களை ஆதாரமாக வைத்து ராஜத் துரோகம் முதலிய கேஸ் எடுத்து அதன் மூலமாக கைதியாக்கிக் கொண்டு போனார்கள்*

173. இரண்டு வருஷத்திற்குக் குறைவில்லாத காலம் தண்டனை கிடைக்கக்கூடிய பாக்கியம் தமக்கு கிடைத்திருப்பதாகச் சொல்லி என்னிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டார்" என்று யார் யாரிடம் சொன்னது?

*பெரியார் நாகம்மையாரிடம்*

174. தந்தை பெரியார், ''இரண்டு வருஷத்திற்குக் குறைவில்லாத காலம் தண்டனை கிடைக்ககூடிய பாக்கியம் தமக்குக் கிடைத்திருப்பதாக" நாகம்மையாரிடம் சொல்லி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். எப்போது?

*சென்னையில் அரசாங்கத்திற்கு விரோதமாய்ப் பிரச்சாரம் செய்தார் என்று ஈரோட்டில் கைது செய்யப்பட்டபோது*

175. பெரியார் சிறை சென்றபோது, "அவர் திரும்பத் திரும்ப தேச ஊழியத்தின் பொருட்டு சிறைக்குப் போகும் பாக்கியம் பெற வேண்டும் என்றும், அதற்காக அவருக்கு ஆயுள் வளர வேண்டும் என்றும், கடவுளையும் மகாத்மா காந்தியையும் பிரார்த்திக்கின்றேன்" என்று சொன்னவர்

*நாகம்மையார்*

176. சென்னை அரசாங்கத்திற்கு விரோதமாய்ப் பிரச்சாரம் செய்தார் என்று ராஜத் துரோக வழக்கில் பெரியார் கைது செய்யப்பட்டபோது, "அவர் பாக்கியில் வைத்து விட்டுப் போனதாக நினைத்துக் கொண்டு போகிற வைக்கம் சத்தியாகிரக விஷயத்தில் வேண்டிய முயற்சிகள் எடுத்து அதைச் சரிவர அகிம்சா தர்மத்துடன் நடத்தி அனுகூலமான முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாய் என் கணவரிடம் அபிமானமும் அன்பும் உள்ள தலைவர்களையும் தொண்டர்களையும் பக்தியோடு பிரார்த்தித்துக் கொள்கிறேன்" என்று நாகம்மை யாரின் அறிக்கையைப் பிரசுரித்த பத்திரிகை?

*நாடார்குல மித்திரன் (2.9.1924)*

177. வைக்கம் போராட்டம் குறித்து, 'Eight Furlongs of Freedom' எனும் தலைப்பில் புத்தகம் எழுதியவர்

*டி.கே. ரவீந்திரன்*

178. வைக்கம் போராட்டம் குறித்து, 'பந்தனத்தில் நின்னு' ('Bandhanathil ninnu') எனும் தலைப்பில் புத்தகம் எழுதியவர்

*கே.பி. கேசவ மேனன்*

179. ''தீண்டாமையை ஒழிக்கப் பெருந்தியாகம் செய்து திரும்பி வந்த தமிழ்நாட்டுத் தலைவர் ஈ.வி. இராமசாமி நாயக்கரை இம்மாநாடு மிக்க அன்புடன் வரவேற்கிறது. தேசத்தொண்டு செய்ய அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கும் படி கடவுளைப் பிரார்த்திக்கிறது'' என்ற தீர்மானத்தை 14, 15 செப்டம்பர் 1924இல் ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் சோழவந்தானில் நடைபெற்ற ---------------------------------- தாலுகா மாநாடு தீர்மானம் நிறைவேற்றியது.

*நிலக்கோட்டை*

180. ''ஸ்ரீமான் நாயக்கர் உள்ளும் புறமும் ஒத்த உண்மையாளர்; உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதவர்; தீண்டாமை முதலிய தீமைகளை அகற்றி நாட்டைச் சமரச சன்மார்க்கத்தில் நிறுத்தத் தமிழ்நாட்டில் முயல்வாருள் தலையாயர் ஸ்ரீமான் நாயக்கராவர். வைக்கத்தில் அவராற்றிய கடமைகள் என்றும் நின்றும் பயன் தருவனவல்லவா?'' என்று 21.11.1924 அன்று தலையங்கம் எழுதிய பத்திரிகை

*நவசக்தி*

181. ''தீண்டாமைக்காகக் காங்கிரஸ்காரர் செய்யும் முயற்சி பலனளிக்கவில்லை. அதற்கென ஒதுக்கி வைக்கப்பட்ட பொருள் மாத்திரம் செலவழிகிறது. தீண்டாமையை ஒழித்தாலன்றி நாடு சுதந்திரம் பெறாது என்று உணர்ந்து அதைப் போக்க

மனங்கொள்ளாதிருப்பதற்குக் காரணம் நீண்ட நாள் பழக்கம் என்று சிலர் சொல்லுகின்றனர். நீண்ட நாள் பழக்கம் என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். அப்பழக்கத்தைத் தவிர்க்க முயற்சியாவது செய்யக்கூடாதா என்று ---------------------------- கேட்கிறேன்'' என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் 30 ஆவது மாநாட்டில் பெரியார் பேசினார்.

*வைதிகர்களை*

182. ''காங்கிரஸ்காரர்கள் செய்யும் தீண்டாமை ஒழிப்பு முயற்சிக்குத் துணை நிற்க விரும்பாவிடினும் அம்முயற்சிக்குக் கேடு சூழாமலிருக்கலாம் அன்றோ'' என்று பெரியார் குறிப்பிடுவது

*வைதிகர்களை*

183. ''வைக்கத்தில் தீண்டாமையை ஒழிக்க எடுத்த சத்தியாகிரகத்தைத் தடுக்க வைதிகர்கள் என்ன பாடுபட்டார்கள்? காங்கிரஸ் எழுச்சி குன்ற அங்கே வைதிகப் பிராமணர்கள் யாகமும் செய்தார்கள். இந்த யாகங்கள் எல்லாம் சத்தியாகிரகத்தை என் செய்யும்? தமிழ்நாட்டில் தீண்டாமையை முன்னிட்டு எங்காவது சத்தியாகிரக எழுச்சி கிளம்பினால் தமிழ்நாட்டு வைதிகர்கள் சும்மா இருப்பார்களா? ஒரு நாளும் இருக்க மாட்டார்கள்'' என்று பெரியார் பேசிய இடம்

*தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் 30 ஆவது மாநாடு*

184. திருவாங்கூர் மத்திய சிறையில் இருந்து விடுதலையாகி தமிழ்நாடு வந்த பெரியார், மீண்டும் வைக்கம் சென்றுவிடக் கூடாது என்று, 11.9.1924 அன்று, பிரிட்டிஷ் இந்திய அரசால் கைது செய்யப்பட்டார். வழக்கு பற்றிய விவரத்தை நவசக்தி (17.10.1924) வெளியிட்டது. அதற்குக் கொடுத்த தலைப்பு

*வைக்கம் வீரர் வழக்கு*

185. ''நமது தேசத்தின் அமைதிக்கும் முன்னேற்றத் திற்கும் பெருந்தடையாகவும் இந்து மதத்திற்கு அவமானமாகவும் இருக்கும் தீண்டாமை என்னும் கொடிய நோயை ஒழிப்பதற்காக வைக்கத்தில் நடந்து வரும் போராட்டத்தை இம்மாநாடு ஆதரிப்பதுடன் அதற்கு வேண்டிய பொருளுதவியை தமிழ்நாட்டார் செய்ய வேண்டுமென்று மிகவும் கேட்டுக்கொள்கிறோம்'' என்று 15,16 நவம்பர் 1924 தேதிகளில் ----------------------------யில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் 30ஆவது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*திருவண்ணாமலை*

186. ''கேரளத்தில் நடக்கும் வைக்கம் சத்தியாகிரகப் போரைத் தொடங்கியவர்கள் கேரள காங்கிரஸ் கமிட்டியாரானாலும் அப்போரின் பின் நிகழ்ச்சிகளில் தமிழ்நாட்டாரே பெரும் பங்கு எடுத்துக் கொண்டார்கள்'' என்று தெரிவிப்பது

*தமிழ்நாடு காங்கிரஸ் 30 ஆவது மாநாடு*

187. ''வைக்கம் போராட்டத்தை நடத்த இக்கமிட்டியின் தலைவர் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அங்கு சென்றார்; திருவாங்கூர் சமஸ்தானத்தின் பல இடங்களுக்குச் சென்று பிரசங்க வாயிலாகச் சத்தியாகிரகத்தின் உண்மையை விளக்கிக் காட்டி, சந்தேகங்களை ஒழித்து இவ்வியக்கத்திற்கு வலிமையையும் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றதும் தவிர, அதற்காக அவர் இருமுறை சிறைவாசம் செய்யவும் நேரிட்டது. அவருடன் சென்றிருந்த அவர் மனைவியாரும் அக்காலம் அங்கிருந்து அரிய வேலைகள் செய்து கொண்டு வந்தார்'' என்று தீர்மானத்தில் பாராட்டுவது

*திருவண்ணாமலையில் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் 30 ஆவது மாநாடு*

188. ஈழவரின் சஞ்சார சுதந்திரம் குறித்த தீர்மானம் திருவாங்கூர் சட்டசபையில் பிப்ரவரி 1925இல் தோல்வியுற்ற போது காந்தியடிகள் கூறிய தமிழ்ப் பழமொழி

*திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை*

189. காந்தியடிகள் - திருவாங்கூர் மகாராணி சந்திப்பு நிகழ்ந்த இடம்

*வர்க்கலை*

190. காந்தியடிகள் - திருவாங்கூர் மகாராணி சந்திப்பு நிகழ்ந்த நாள்

*12.03.1925*

191. காந்தியடிகள் - திருவாங்கூர் மகாராணி உரையாடலின் போது உடன் இருந்தவர்

*பெரிய கோயில் தம்பிரான்*

192. காந்தியடிகள் - நாராயண குரு சந்திப்பு நடைபெற்ற இடம்

*சிவகிரி*

193. காந்தியடிகள் - நாராயண குரு சந்திப்பு நடைபெற்ற நாள்

*12.03.1925*

194. காந்தியடிகள் - நாராயண குரு சந்திப்பு நடைபெற்ற போது உடன் இருந்தவர்கள்

*பெரியார், ராஜகோபாலாச்சாரியார்*

195. காந்தியடிகள் - இளையராணி சந்திப்பு நடைபெற்ற இடம்

*திருவனந்தபுரம்*

196. காந்தியடிகள் - இளையராணி சந்திப்பு நடைபெற்ற நாள்

*13.03.1925*

197. காந்தியடிகளிடம், "நாங்கள் சாலைகளைத் திறந்து கொடுக்கின்றோம்; ஆனால் அடுத்ததாகக் கோயிலுக்குள் நுழைவதாக ஈ.வெ.ராமசாமி நாயக்கர் பேசிக் கொண்டிருக்கிறார்; அவர் அதைச் செய்யக்கூடாது; கோயில் நுழைவைப் பற்றி கிளர்ச்சி செய்ய மாட்டார்கள் என்றால் இப்பொழுதே தடையை நீக்கி விடுகிறேன்" என்றவர்

*இளையராணி*

198. காந்தியடிகள் - இளையராணி சந்திப்பின்போது தந்தை பெரியார் எங்கு இருந்தார்?

*பயணியர் விடுதியில்*

199. கோயில் நுழைவு கூடாது என்று இளையராணி நிபந்தனை விதித்த போது காந்தியடிகள் யாரிடம் உறுதி பெற்றார்?

*தந்தை பெரியாரிடம்*

200. கோயில் நுழைவை வலியுறுத்தக் கூடாது என்று இளையராணி நிபந்தனை விதித்த போது, என்ன பதில் சொல்வது என்று பெரியாரிடம் கேட்கிறார்கள். "இதைக் கொண்டு கோயிலைத் திறந்து விடும்படி கேட்க மாட்டோம் என்று நான் எப்படி உறுதி அளிப்பது? கோயில் பிரவேசம் என்பது காங்கிரஸின் லட்சியமாக இல்லாவிட்டாலும் - எனது லட்சியம் அதுதானே - அதை விட்டுக் கொடுக்க எப்படி முடியும்? வேண்டுமானால் ராணிக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள். இப்போதைக்கு அது மாதிரி கிளர்ச்சி எதுவுமிருக்காது. கொஞ்ச நாள் அது பற்றி மக்களுக்கு விளங்கும்படி பிரசாரம் செய்து கலவரத்திற்கு இடமிருக்காது என்று கண்டால்தான் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படலாம் என்று சொல்லுங்கள்" என்று பெரியார் பதில் உரைத்தார். இளையராணியின் நிபந்தனை குறித்து பெரியாரிடம் கேட்டவர்?

*காந்தியடிகள்*

201. "திருவாங்கூர் கவர்ன்மெண்டார் குரூர் நீலகண்டன் நம்பூதிரியைச் சிறையினின்று விடுவித்து விட்டார்கள் என்பதையும் ஈ.வி. ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார்கள் என்பதையும் கேட்க வாசகர்கள் சந்தோஷம் அடைவார்கள்'' என்று எழுதியவர்.

*காந்தியடிகள்*

202. "திருவாங்கூர் கவர்ன்மெண்டார் குரூர் நீலகண்டன் நம்பூதிரியைச் சிறையினின்று விடுவித்து விட்டார்கள் என்பதையும் ஈ.வெ.ராமசாமி நாயக்கருக்கு விரோதமாகப் பிறப்பித்த தடை உத்தரவை வாபஸ் வாங்கிக்கொண்டு விட்டார்கள் என்பதையும் கேட்க வாசகர்கள் சந்தோசம் அடைவார்கள்'' என்று காந்தியடிகள் ---------------- பத்திரிகையில் எழுதினார்.

*யங் இந்தியா 23.04.1925*

203. 'வைக்கம் வீதிகளில் ஜாதி மத வித்தியாசம் இல்லாமல் எல்லாப் பிரஜைகளும் உபயோகப்படுத்திக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டியது என்று யான் அபிப்பிராயப்படுகிறேன்' என்று மகாராணியிடம் கருத்துக் கூறிய திவான்

*கிருஷ்ணப்பிள்ளை*

204. 'வைக்கம் வீதிகளை எல்லாப் பிரஜைகளும் உபயோகப்படுத்துவதை சமஸ்தான அரசாங்கத்தார்

எப்பொழுதுமே எதிர்க்கவில்லை. இந்த உரிமையை சிலர் பலாத்காரத்தினால் அடைய முயற்சி செய்தால் கலகம் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சியே அரசாங்கத்தார் தடை உத்தரவு போட்டனர்' என்று மகாராணியிடம் எடுத்துரைத்த திவானின் பெயர்.

*கிருஷ்ணப்பிள்ளை*

205. வைக்கம் வீதிகளில் எல்லோரும் நடக்கலாம் என்ற முறையான அறிவிப்பு வரும் வரை நம்முடைய முயற்சிகளை விட்டு விடக்கூடாது என்று பெரியார் கூறக் காரணம்

*இரண்டு கட்சியாரையும் சமாதானப் படுத்தவேண்டும் என நினைத்து அரை குறையான அறிக்கை வெளியாகலாம்*

206. இரண்டு கட்சியாரையும் சமாதானப்படுத்த வேண்டும் என நினைத்து அரைகுறையான அறிக்கை வெளியாகலாம் என நினைத்த பெரியார் அதற்குக் கூறிய உவமை

*திருடருக்கும் திருட்டுக் கொடுத்த வருக்கும் நல்லவர்களாக வேண்டும் என நினைத்து*

207. பூரண வெற்றி பெறும் வரை தளரக்கூடாது என்று கூறிய பெரியார், ஒருவேளை பூரண வெற்றி கிடைத்துவிடினும் எதனை நினைக்கக் கூடாது என்கிறார்?

*உலக அக்கிரமங்கள் அனைத்தும் ஒழிந்து விட்டன என்று நினைக்கக் கூடாது*

208. வைக்கம் போராட்டம் வெற்றி பெற்ற பிறகு என்ன செய்ய வேண்டும் என்கிறார் பெரியார்?

*எங்கு எங்கு இவ்விதக் கொடுமை கள் உள்ளனவோ ஆங்காங்குச் சென்று இக்கொடிய வழக்கத்தை ஒழிக்கப் பாடுபடுதல் வேண்டும்*

209. வைக்கத்தில் மூன்று வீதிகளில் மட்டும் தீண்டாதார் செல்வதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படப் போவதாகத் தகவல் பரவியபோது பெரியார் கூறியது

*பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் மற்ற சமஸ்தாதானங்களுக்கும் வழிகாட்டி யாய் இருக்கும் பெருமை திருவாங்கூர் சமஸ்தானத்துக்குக் கிடைக்காமலே போய்விடுமோ என ஐயுறுகிறோம்*

210. திருவாங்கூர் அரசாங்கம், நான்கு வீதிகளில் மூன்று வீதிகளில் மட்டும் பிரஜைகள் யாவரும் வித்தியாசம் இன்றி நடக்க அனுமதி அளித்து போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர முயற்சித்த போது, 'திருவாங்கூர் பெண்ணரசியார் பெருமையைப் பெறுவதற்கில்லாமல் போய்விடுமோ என்று அஞ்சுகிறோம்' என்று எழுதியவர்

*தந்தை பெரியார்*

211. வைக்கம் கோயிலின் மதிற்சுவர்களைச் சுற்றிலுமுள்ள நான்கு வீதிகளிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகிய ஈழவர் முதலானோர் செல்லுதல் கூடாது என்றிருந்த கொடிய சமூக வழக்கத்தை ஒழித்து மக்கள் யாவருக்கும் பொதுவான பாதைகளில் எல்லா ஜாதியினரும் சமயத்தினரும் செல்லும் உரிமையை நிலைநாட்ட எழுந்தது

*வைக்கம் போராட்டம்*

212. வைக்கம் கோயிலைச் சுற்றிலுமுள்ள நான்கு வீதிகளில் கீழ் வீதி ஒன்றினைத் தவிர மற்ற மூன்று வீதிகளிலும் தாழ்ந்த வகுப்பினர் எவ்விதத் தடையுமின்றிச் செல்லலாம் என்று திருவாங்கூர் அரசினர் உத்தரவு செய்திருப்பதாக அறிந்த பெரியார் கூறியது

*ஒரு சிறிதும் மகிழ்ச்சியுறவில்லை*

213. வைக்கம் கோயிலைச் சுற்றிலும் உள்ள நான்கு வீதிகளில், மூன்று வீதிகளில் யாவரும் நடக்கலாம் என்று அரசினர் உத்தரவு செய்திருப்பது வெற்றி என்று எவர் கூறுவர்?

*சத்தியாகிரகத்தின் உண்மையினை அறியாதார்*

214. வைக்கம் போராட்டத்தின் போது, 'உண்மை எக்காலத்தும் வெற்றி உறும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று' என்று (28.6.1925 'குடிஅரசு) எழுதியவர்.

*தந்தை பெரியார்*

215. 'சத்தியாகிரகம் அவர்தம் உள்ளத்தைக் கரையச் செய்து விட்டது என்பதைக் காட்டுகிறதே அன்றி,

சத்தியாகிரகம் வெற்றி பெற்றது என்பதை ஒரு சிறிதும் குறிக்கவில்லை' எதனைக் குறித்துப் பெரியார் இப்படிச் சொன்னார்?

*பிரஜைகள் யாவரும் மூன்று வீதிகளில் செல்லலாம் என்று அரசாங்கம் உத்தரவு செய்திருந்தபோது*

216. சேரன்மாதேவி குருகுலப் போராட்டத்தையும் வைக்கம் போராட்டத்தையும் இணைத்து 05.07.1925 'குடிஅரசு' இதழில் எழுதிய கட்டுரைக்குத் தந்தை பெரியார் கொடுத்த தலைப்பு

*தமிழர் கதி*

217. தந்தை பெரியார் இரண்டு போராட்டங்களைக் குறிப்பிட்டு, 'தமிழ் மக்களுக்குத் தங்கள் நாட்டில் தங்களுக்கு ஏதாவது சுயமரியாதை உண்டா என்பதைப் பற்றியும், இந்து மதத்தில் தங்களுக்கு ஏதாவது இடம் உண்டா என்பதைப் பற்றியும் தீர்ப்பளிக்கப் போகிறது' என்கிறார். அந்த இரண்டு போராட்டங்கள் யாவை?

*சேரன்மாதேவி குருகுலப் போராட்டம், வைக்கம் போராட்டம்*

218. "சேரன்மாதேவி குருகுலப் போராட்டமும் வைக்கம் போராட்டமும் தமிழருக்கு ------------------ காலமாகும்" என்கிறார் பெரியார்.

*பரீட்சை*

219. சேரன்மாதேவி குருகுலப் போராட்டம், வைக்கம் போராட்டம் இவற்றின் தத்துவமாகப் பெரியார் குறிப்பிடுவது

*மனித உடல் தரித்திருக்கும் ஒரு ஜீவன் அதை எப்படி சகித்துக் கொண்டிருப்பது?*

220. கேரளாவில் 29 நவம்பர் 1925 அன்று வைக்கம் சத்தியாகிரகத்தின் வெற்றி விழாக் கொண்டாட்டம் நடைபெற்ற இடம்.

*வைக்கம்*

221. வைக்கத்தில் 29 நவம்பர் 1925 ஞாயிறு அன்று நடைபெற்ற வைக்கம் சத்தியாகிரகத்தின் வெற்றி விழா கூட்டத்தின் தலைவர்.

*தந்தை பெரியார்*

222. வைக்கத்தில் தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்ற (29.11.1925) வெற்றி விழா கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்

*அ) கேளப்பன்*

*ஆ) மன்னத்து பத்மநாபன்*

*இ) டி.கே. மாதவன்*

*ஈ) இவர்கள் அனைவரும்*

223. கேரள காங்கிரஸ் தீண்டாமை விலக்குக் குழு, கோழிக்கோடு என்ற முகவரியிட்ட தாளில், அதன் செயலாளர் கே.கேளப்பன், திருவாங்கூர் திவானுக்கு எழுதிய கடிதத்தில் பெரியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் (1925 நவம்பர்) கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ------------- என்று குறிப்பிடுகிறார்.

*4000*

224. வைக்கம் போராட்டத்திற்கு வசூலாகி, செலவாகி யிருக்கும் தொகை ------------- என்று வெற்றி விழாப் பொதுக்கூட்டத்தில் வரவேற்புரை நிகழ்த்திய கேளப்பன் குறிப்பிடுகிறார்.

*25,000*

225. "வைக்கம் போராட்டத்தின் தொடக்கத்தில் பிராமணர்கள் கட்சியில் இருந்த அரசாங்கத்தார் இப்போது பிராமணர்களுக்கு விரோதமாகவே தீண்டாதார் என்போரைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு சர்க்கார் செல்லுவதை நாம் பார்க்கிறபோது நமக்கே சத்தியாகிரகத்தின் தன்மையைப் பற்றி ஆச்சரியப்படத்தக்கதாய் இருக்கிறது" என்று பெரியார் எங்கு பேசினார்?

*வைக்கம் போராட்ட வெற்றி விழா கூட்டத்தில்*

226. வைக்கம் போராட்டம் நடத்துவதற்கான காரணமாகப் பெரியார் குறிப்பிடுவது

*மனிதனுக்கு மனிதன் பொது வாழ்வில் வித்தியாசம் இருக்கக் கூடாது என்பதுதான்*

227. வைக்கம் போராட்ட வெற்றி விழா கூட்டத்தில் (29.11.1925) தந்தை பெரியார் தெரிவித்த கருத்து இது

*தெருவில் நிரூபித்த சுதந்திரத்தைக் கோயிலுக்குள்ளும் நிரூபிக்க வேண்டியது மனிதக் கடமை*

228. **பெரியாரை வைக்கத்திற்கு அழைத்தது**

*அ) குரூர் நீலகண்டன் நம்பூதிரி*
*ஆ) ஜார்ஜ் ஜோசப்*
*இ) டி.ஆர். கிருஷ்ணசாமி ஐயர்*
*ஈ) இவர்கள் அனைவரும்*

229. **கேரள அழைப்பை ஏற்று பெரியார் வைக்கம் சென்றதற்குக் காரணம்**

*அ) தீண்டாமை ஒழிப்பு நோக்கம்தான்*
*ஆ) அவருக்கே உரிய போராட்ட குணம்*
*இ) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்த அவர் யார் உத்தரவுக்கும் காத்திருக்காமல் புறப்பட முடிந்தது*
*ஈ) இவை அனைத்தும்*

230. **வைக்கம் போராட்டத்தைத் தந்தை பெரியார்**

*தாழ்த்தப்பட்டவர்களுக்கு உழைக்கக் கிடைத்த வாய்ப்பு என்றே கருதினார்*

231. **வைக்கம் போராட்டம் வெற்றி பெற பெரியார் வைக்கம், சேர்த்தலை, ஆலப்புழை, திருவனந்தபுரம், நாகர்கோயில், தக்கலை, கொல்லம், செங்கணாச்சேரி முதலிய இடங்களில் சொற்பொழிவாற்றினார் என்பதற்கான ஆதாரங்களைத் தருவது.**

*அ) பத்திரிகை*
*ஆ) அரசு ஆவணங்கள்*
*இ) காவல்துறை அறிக்கைகள்*
*ஈ) இவை அனைத்தும்*

232. **வைக்கம் போராட்டத்திற்கு ரூபாய் 300 பெறுமானம் உள்ள அரிசியைப் பெரியார் எந்த ஊர் வியாபாரியிடம் இருந்து பெற்று வந்தார்?**

*கொச்சி*

233. **வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் பணி**

*அ) ஆசிரமத் தலைமைப் பொறுப்பு, ஆலோசனை*
*ஆ) பிரச்சாரம்*
*இ) போராட்ட ஊர்வலத் தலைமை, பண வசூல்*
*ஈ) இவை அனைத்தும்*

234. **வைக்கம் போராட்டத்தில் கலந்து கொண்ட தந்தை பெரியாரின் முதல் கைது எப்போது? விடுதலை செய்யப்பட்ட நாள்? சிறையில் இருந்த நாட்கள் எத்தனை?**

*கைதானது 22.05.1924 - விடுதலை யானது 21.06.1924. சிறையில் இருந்த நாள்கள் 31*

235. **வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் இரண்டாவது முறையாக கைது செய்யப்பட்ட போது ---------------------- மாதம் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.**

*நான்கு*

236. **வைக்கம் போராட்டத்தில் இரண்டாவது முறை கைது செய்யப்பட்ட தந்தை பெரியாருக்கு நான்கு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் --------------ஆம் நாளில் விடுதலை செய்யப்பட்டார்.**

*43*

237. **வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் இரண்டாவது முறை கைதுசெய்யப்பட்ட நாள்? விடுதலையான நாள்? சிறையில் இருந்த நாள்களின் எண்ணிக்கை?**

*19.07.1924 - விடுதலையான நாள் 30.08.1924. சிறையில் இருந்த நாள்கள் 43*

238. **வைக்கம் போராட்டத்தில் முதல் முறை கைதான பெரியார் அருவி குட்டி சிறையில் வைக்கப்பட்டார். இரண்டாம் முறை கைது செய்யப்பட்ட போது பெரியார் எந்தச் சிறையில் அடைக்கப்பட்டார்?**

*திருவனந்தபுரம்*

239. **1925 மார்ச் 10 முதல் 18 வரை திருவாங்கூர் வந்திருந்தார் காந்தி. அப்போது அவர் யாரைச் சந்தித்தார்?**

அ) சத்தியாகிரகிகள், வைதிகர்கள்

ஆ) மகாராணிகள், நாராயணகுரு

இ) திவான், காவல்துறை ஆணையாளர்

ஈ) இவர்கள் அனைவரும்

240. 1925ஆம் ஆண்டு காந்தியடிகள் திருவனந்தபுரம் வந்தபோது, அவருடன் தந்தை பெரியார் சென்ற இடம்

அ) சிவகிரி

ஆ) திருவனந்தபுரம்

இ) வர்க்கலை

ஈ) இவை யாவும்

241. வைக்கம் போராட்டம் தொடர்பாக தந்தை பெரியார் ஏழாவது முறை வைக்கம் செல்லக் காரணம்?

வைக்கம் போராட்ட வெற்றி விழாப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க

242. வைக்கம் போராட்ட வெற்றி விழாவில் கேரளத்துக்கு வெளியிலிருந்து அழைக்கப்பட்டவர் ----------- மட்டுமே.

பெரியார்

243. வைக்கம் போராட்ட வெற்றி விழாவில் தந்தை பெரியாருடன் சென்று கலந்து கொண்டவர்

நாகம்மையார்

244. தீண்டாதார் மற்றும் ஏழைகளுக்காகக் கல்வி கற்பிக்கச் -------------------------- ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ தியாகராய நிலையத்தின் முன்னரே திட்டமிடப்பட்ட திறப்பு விழாவைத் தள்ளி வைத்துவிட்டு வெற்றி விழாவிற்குப் பெரியார் சென்றார்.

சேலத்தில்

245. வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் திருவாங்கூரில், சிறைக்கு வெளியே போராட்டக் களத்தில் ----------- நாள்களும், சிறையில் ---------------- நாள்களும், ஆக மொத்தம் ---------------------- நாள்கள் தங்கி இருந்தார்.

*67 + 74 = 141*

246. டி.கே.மாதவனை அகில இந்தியத் தலைவர்களிடம் அறிமுகப்படுத்தி, போராட்டம் தொடங்குவதற்கு முன்னிருந்தே அதில் ஈடுபட்டிருந்தவர் ----------------- பின்னர் அவர் பஞ்சாபில் காங்கிரஸ் வேலையைக் கவனிக்கும்படி ஆயிற்று.

கே.எம்.பணிக்கர்

247. வைக்கம் போராட்டத்தில் கே.பி.கேசவ மேனன் சிறையில் இருந்து வெளிவந்த பின்,

சொந்தத் தொழில் செய்ய இந்தியா விலிருந்து வெளியேறிவிட்டார்

248. வைக்கம் போராட்டத்தில் இறுதிவரை களத்தில் இருந்த தலைவர்கள்

அ) டி.கே. மாதவன், கேளப்பன்

ஆ) சத்தியவிரத சுவாமிகள், குரூர் நீலகண்டன் நம்பூதிரி

இ) கோவிந்தன் சாணார், மன்னத்து பத்மநாபன்

ஈ) இவர்கள் அனைவரும்

249. அயலிலிருந்து சென்று திருவாங்கூர் அரசாங்கத் திற்குச் சிம்ம சொப்பனமாக இருந்தோர்

பெரியார், அய்யா முத்து, எம்பெருமாள் நாயுடு

250. வைக்கம் போராட்டத்தில் 'தாக்குதலுக்கு உள்ளான' தமிழ்த்தொண்டரின் பெயர்

சிவசைலம்

251. வைக்கம் போராட்ட நிகழ்வில் "----------------------------- ஒரு dangerous man" என்று அரசுக் குறிப்பு உள்ளது.

அய்யா முத்து

252. காந்தி வைக்கத்திற்கு வந்தபோது அவர் ------------------

அரசு விருந்தினர்

253. காந்தியடிகளை அரசு விருந்தினராக நடத்தலாமா என்று திருவாங்கூர் அரசாங்கம் யாரிடம் அனுமதி கோரியது?

பிரிட்டிஷ் ஸ்தானிகரிடம்

254. **வைக்கம் போராட்டத்திற்கு வெளியிலிருந்து அழைக்கப்பட்டவர்கள்?**

*பெரியார், வரதராஜுலு நாயுடு, ராஜகோபாலாச்சாரியார்*

255. **சத்தியாகிரக ஆசிரமப் பொறுப்பை வெளியிலிருந்து சென்று நடத்தியோர்?**

*பெரியார், நாகர்கோயில் எம்பெருமாள் நாயுடு, எஸ்.ராமநாதன்*

256. **வைக்கம் போராட்டத்தில் அயல் மாநிலத்திலிருந்து வந்து கைதானவர்கள், பிரவேசத்தடை பெற்றோர்?**

*பெரியார், அய்யாமுத்து, எம்பெருமாள் நாயுடு, சங்கர அய்யர், காந்தி ராமன், சக்கரவர்த்தி அய்யங்கார்*

257. **வைக்கம் போராட்டத்திற்குத் தமிழ்நாட்டிலிருந்து பத்திரிகை நிருபராகச் சென்றவர்?**

*டி.எஸ்.சொக்கலிங்கம்*

258. **வைக்கம் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் மூன்று மட்டும் கிடைத்திருக் கின்றன. அவை?**

*தன்னார்வலர்களின் குழுப் படம், இலவச சாப்பாடு வழங்கிய குழுவினரின் படம், ஊர்வலம் சென்ற படம்*

259. **வைக்கம் போராட்டத்தில் குடும்பத்தோடு சென்று உழைத்தவர்கள்?**

*பெரியார் - நாகம்மையார், எம்பெருமாள் நாயுடு - திருமலைஅம்மாள், தாணுமாலயப் பெருமாள் - பாக்கியம், சங்கர ஐயர் - மீனாட்சி*

260. **வைக்கம் போராட்டத்தில் காமராஜர் பார்வையாளராகக் கலந்து கொண்டார் என்று கூறுபவர்?**

*டி.எஸ்.சொக்கலிங்கம்*

261. **வைக்கம் போராட்டத்தில் தமிழ்நாட்டின் எந்த மாவட்டங்களில் இருந்து அதிகம் பேர் கலந்து கொண்டனர்?**

*நாகர்கோயில், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், சென்னை*

262. **வைக்கம் போராட்டத்தில் பலரும் பங்கேற்கக் காரணம்?**

*அ) தந்தை பெரியாரின் வேண்டுகோள்*
*ஆ) தேசப்பற்று*
*இ) ஜாதி இழிவு துடைத்தல்*
*ஈ) இவை யாவும்*

263. **வைக்கம் போராட்டத்தில் வைதிகர்களின் பக்கம் நியாயமும், மக்கள் ஆதரவும் இல்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தியவர் என்று இவர் குறிக்கப்படுகிறார்**

*எஸ்.சீனிவாச ஐயங்கார்*

264. **வைக்கம் போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்று ---------------------------- தன்னைக் கேட்டுக் கொண்டதாகப் பெரியார் பின்னாளில் குறிப்பிட்டுள்ளார்.**

*எஸ். சீனிவாச ஐயங்கார்*

265. **அகில இந்தியாவுக்கும் வைக்கத்தை அறிமுகப்படுத்த ------------------------- பயணம் உதவியது.**

*சி.எப்.ஆண்ட்ரூஸ்*

266. **வினோபா பாவே வைக்கம் சென்றதைத் தன் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டிருக்கிறார். வருவார் வருவார் என்று சொல்லப்பட்டு வராமலே போனவர்?**

*பண்டித மதன் மோகன் மாளவியா*

267. **வைக்கத்தில் போராடியவர்களில் யார் யாருடைய சிலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன?**

*டி.கே.மாதவன், மன்னத்து பத்மநாபன், பெரியார்*

268. **வைக்கம் போராட்டத்தில், 'வைதிகர்களும் வெட்கப்படும்படியான சமயம் வரும்' (02.07.1924) என்று கூறியவர்**

*அ) காந்தியடிகள்*

269. **வைக்கம் போராட்டத்தில், 'காலிக் கூட்டங்களின் கையில் சத்தியாகிரகிகளைத் திருவாங்கூர் அதிகாரிகள் ஒப்படைத்து விட்டார்கள்' என்று**

கூறியவர்

*காந்தியடிகள்*

270. "ஆசார சீர்திருத்த விரோதிகளான வைதிகர்களால் அமர்த்தப்பட்டவர்களிடம் சத்தியாகிரகிகள் அடிபடுகிறார்கள். கண்ணில் சுண்ணாம்பு தீட்டுவதும், கதர் சட்டைகளைக் கிழிப்பதும் எரிப்பதும் அங்கு சகஜமாய் இருக்கின்றனவாம்' என்று கூறியவர்

*காந்தியடிகள்*

271. வைக்கம் போராட்டம் தொடங்கி முதல் மூன்று மாதங்களில் காவல்துறையால் கைப்பற்றப்பட்ட ராட்டினங்களின் எண்ணிக்கை

*14*

272. தன் கருத்து பத்திரிகையில் தவறாகப் பிரசுரிக்கப்பட்ட போது, 'தீண்டாமையை ஒழிக்க வேண்டியது சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு இன்றியமையாததாகும்' என்று விளக்கம் அளித்தவர்

*நாராயண குரு*

273. -------------------------- நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் வைக்கம் பற்றிய பின்வரும் தீர்மானம் நிறைவேறியது. "தீண்டாதவர்களின் சார்பாக வேலை செய்து வரும் வைக்கம் சத்தியாகிரகிகளை அவர்களுடைய எதிரிகளான வைதிகர்கள் குண்டர்களைக் கொண்டு இரக்கம் இல்லாமல் அடித்து இம்சிப்பதாக வெளியாகிற சமாச்சாரங்களைக் கேட்டு காரியக் கமிட்டி வருந்துகிறது."

*அகமதாபாத்தில்*

274. வைக்கம் ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் பந்தலில் நடைபெற்ற கூட்டத்தில் (12.07.1924) கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை

*3,000*

275. 13.07.1924 அன்று வைக்கம் போராட்டத்தில் கிருஷ்ணன் நம்பூதிரிபாடு, சாத்துக்குட்டி பி.எஸ்.பாலகிருஷ்ண பிள்ளை, நாகம்மையார், கண்ணம்மாள், பெரியாரின் சித்தி, பி.கே. கல்யாணி அம்மாள், பி.எம். பார்வதி அம்மாள், கே.கறுத்தகுஞ்சு முதலான தொண்டர்கள் கலந்து கொண்டனர். சாலையில் வழிமறித்து நின்ற காவலர்களிடம், 'வழி விடுங்கள், நாங்கள் போகவேண்டும்' என்றார் நாகம்மையார். காவலர்கள் 'போகக்கூடாது' என்றனர். 'ஏன் போகக்கூடாது' என்றார் நாகம்மையார். அதற்குக் காவலர் கூறிய பதில்?

*பாம்புக் குஞ்சுகள் உண்டு, போனால் கடிக்கும்*

276. வைக்கம் போராட்ட வீரர்களுக்கு எஸ்.என். டி.பி. யோகம் ------------------------------ ஏற்படுத்தியிருப்பதாக சுதேசமித்திரன் (22.07.1924), தி இந்து (21.07.1924) இதழ்கள் தெரிவிக்கின்றன.

*இலவச உணவுச் சாலை*

277. திருவாங்கூர் சமஸ்தான மகாராஜா சர் மூலம் திருநாள் ராமவர்மாவின் காலம்

*25.09.1857 - 07.08.1924*

278. திருவாங்கூர் சமஸ்தான மகாராஜா சர் ராமவர்மா எத்தனை ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்?

*39*

279. நிலப்பரப்பை வைத்துப் பார்த்தால் (1924இல்) திருவாங்கூர், இந்தியாவின் ------------ ஆவது பெரிய சமஸ்தானம்.

*17*

280. இந்தியாவின் மக்கள் தொகையில் திருவாங்கூர் (1924இல்) ------------------இடத்தில் இருந்தது.

*மூன்றாம்*

281. இந்திய அளவில் வருமானத்தில் திருவாங்கூர் (1924இல்) ----------------------- இடத்தில் இருந்தது.

*நான்காம்*

282. இந்திய அளவில் கல்வியில் திருவாங்கூர் (1924இல்) --------------------இடத்தில் இருந்தது.

*இரண்டாம்*

283. 'வைக்கம் சத்தியாகிரகம் நீடித்திருப்பதற்குக்

காரணம் வைதிக கோஷ்டியின் பிடிவாதமேயன்றி, மகாராஜாவின் குரோத புத்தியன்று' என்று எழுதிய இதழ்

*சுதேசமித்திரன்*

284. வைக்கத்தில் கடுமையான மழை பெய்து, வெள்ளம் சூழ்ந்தபோது, வீடு வாசல் இழந்து தவித்த ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு உணவு வழங்கிய இடம்?

*சத்தியாகிரக விடுதி*

285. வைக்கம் சத்தியாகிரகம் மூன்று நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது ஏன்?

*திருவாங்கூர் மன்னர் காலமானதை யொட்டி*

286. திருவாங்கூர் மூத்த மகாராணியின் பெயர் என்ன?

*ராணி சேதுலட்சுமிபாய்*

287. “இந்தியாவில் நடைபெற்று வரும் (வைக்கம்) போராட்டம் மிகச் சிறப்பாக இருக்கிறது. ஏனெனில் அமெரிக்காவில் இத்தகைய போராட்டத்தில் மத விஷயம் கலக்கவில்லை. இந்தியாவில் மத விஷயமும் கலந்திருக்கிறது'' என்று அமெரிக்கப் பத்திரிகை -------------------------- எழுதியதைச் சுதேசமித்திரன் (4.9.1924) மாடர்ன் ரெவியூ இதழிலிருந்து எடுத்துக் காட்டியது.

*Nation*

288. நெடுங்கண்டா என்னும் ஊரில் (04.09.1924 அன்று) நடந்த பொதுக் கூட்டத்திற்கு கேரள கவுமுதி ஆசிரியர் சி.வி.குஞ்ஞிராமன் தலைமை வகித்தார். கூட்டத்தில் பெரியார் பேசிய தமிழ்ப் பேச்சினை மலையாளத்தில் மொழி பெயர்த்தவர்

*சத்திய விரதன்*

289. நெடுங்கண்டா என்னும் ஊரில் நடைபெற்ற (04.09.1924) பொதுக்கூட்டத்தில், ‘தங்கள் உண்மையான நோக்கம் கோயில் நுழைவு; அமைப்பு ரீதியாகத் திரண்டு இந்த நாட்டில் உள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் நுழைய வேண்டும்' என்று பேசியவர்

*சத்திய விரத சுவாமிகள்*

290. கே.பி.கேசவ மேனன், ராஜகோபாலாச்சாரியார், திரு. வி.க. போன்றோர் தந்தை பெரியாரின் வைக்கம் போராட்டச் சிறை வாழ்க்கையைக் கண்ணீரோடு வெளிப்படுத்தினார்கள். சிறை வாழ்க்கை குறித்து தந்தை பெரியார் கூறியது?

*தன்னைக் கடுமையாக நடத்தியதாக மக்கள் நினைக்கக் கூடாது*

291. வைக்கம் போராட்டத்தில் சிறை சென்ற பெரியார், சிறை வாழ்க்கை பற்றிக் கூறியது என்ன?

*எந்த ஆதங்கமும் இல்லாமல் அமைதியான வாழ்க்கை*

292. வைக்கம் போராட்டத்தில் கைதாகி சிறையில் இருந்து விடுதலையான தந்தை பெரியார், 09.09.1924 அன்று ஈரோடு வந்தார். 11ஆம் தேதி ரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டார். 1924 மார்ச் மாதம் சென்னையில் அரசாங்கத்திற்கு விரோதமான பிரசங்கம் செய்தார் என்று காரணம் காட்டப்பட்டது. எந்தப் பிரிவின் கீழ் பெரியார் கைது செய்யப்பட்டார்?

*இபிகோ 124*

293. பெரியார், ராஜத் துரோக குற்றத்திற்காக 11.09.1924 அன்று கைது செய்யப்பட்டபோது, எத்தனை ஆண்டுகள் தமக்கு தண்டனை கிடைக்கும் என்று மனைவி நாகம்மையாரிடம் தெரிவித்தார்?

*இரண்டு வருஷத்திற்குக் குறை வில்லாத காலம்*

294. பெரியார் கைது செய்யப்பட்டபோது மனைவி நாகம்மையார் எழுதியது என்ன?

*திரும்பத் திரும்ப தேச ஊழியத்தின் பொருட்டு சிறைக்குப் போகும் பாக்கியம் பெற வேண்டும்*

295. ‘பெரியாருக்கு ஆயுள் வளர வேண்டும் என்று கடவுளையும் மகாத்மா காந்தியையும் பிரார்த்திக்கின்றேன் 'என்று எழுதியவர்

*நாகம்மையார்*

296. ‘தீண்டாமை இந்து மதத்திற்குச் சொத்து அல்ல; அது பெரிய அடி என்பதை மகாராணி ரீஜண்ட் நம்புவார் என்று கருதுகிறேன்' என்று கூறியவர்

*காந்தியடிகள்*

297. 'வைக்கம் இயக்கத்தை மகாத்மா பூராவாக ஒப்புக்கொள்கிறாரா என்ற விஷயமாய் பொது ஜனங்களும் முக்கியமாக ஈழவர்களும் சந்தேகப்படுவதாக' டில்லி சென்று காந்தியடிகளிடம் தெரிவித்தவர்

*டி.கே. மாதவன்*

298. 'வைக்கம் இயக்கத்தை மகாத்மா பூராவாக ஒப்புக்கொள்கிறாரா என்ற விஷயமாய் பொது ஜனங்களும் முக்கியமாக ஈழவர்களும் சந்தேகப்படுவதாக' டி.கே. மாதவன் தெரிவித்த போது காந்தியடிகளின் நிலை என்ன?

*சந்தேகம் ஏற்பட நேர்ந்ததைக் குறித்து வருத்தப்பட்டார்*

299. நாராயண குரு வைக்கம் போராட்ட நிதிக்கு ரூபாய் -------------------------- வழங்கியதுடன் அவசியப்பட்டால் தானே சத்தியாகிரகத்தில் பங்கேற்பதாகவும் கூறினார்.

*1,000*

300. வைக்கம் போராட்டம் தொடர்பான சந்தேகங்களை, காந்தியடிகளிடம் கேட்டு விளக்கம் பெற (1924 செப்டம்பர்) டில்லி சென்ற இருவர்?

*அ) டி.கே. மாதவன், ஜார்ஜ் ஜோசப்*

301. வைக்கம் போராட்டம் தொடர்பான சந்தேகங்களை, காந்தியடிகளிடம் கேட்டு விளக்கம் பெற (1924 ஏப்ரல்) மும்பை சென்ற இருவர்?

*அ) நீலகண்டன் நம்பூதிரி, மாதவன் நாயர்*

302. வைக்கம் பிரச்சினையில் சத்தியாகிரகிகள் - வைதிகர்கள் - அரசாங்கம் இவர்களிடையே பஞ்சாயத்து பேசி சமாதானத்தைக் கொண்டுவர எவரை அனுப்ப காந்தியடிகள் தீர்மானித்தார்?

*பண்டித மதன் மோகன் மாளவியா*

303. வைக்கம் போராட்டம் தொடர்பான சந்தேகங்களைக் காந்தியடிகளிடம் கேட்டு விளக்கம் பெற (1924 செப்டம்பர் 18) டில்லி சென்ற டி.கே.மாதவன், ஜார்ஜ் ஜோசப் இருவரும் காந்தியடிகளைச் சந்தித்த நேரம்?

*இரவு 11:30 மணி*

304. 'வைக்கம் சத்தியாகிரகத்திற்குப் பொருளுதவி செய்யும்படி அகில இந்தியக் காரியக் கமிட்டி கேட்டுக்கொள்ளப்பட்டது. இது ஒரு குறிப்பிட்ட ஸ்தலத்தில் நடக்கும் சத்தியாகிரகம் ஆகையால் அதற்கு இந்திய நிதியிலிருந்து உதவி செய்ய முடியாது என்றும், ஸ்தலத்திலேயே நிதி வசூலித்துக் கொள்ள வேண்டும் என்று மகாத்மா அபிப்பிராயப்படுவதாகவும் எனக்கு அறிவிக்கப்பட்டது' என்று கூறியவர்

*ராஜகோபாலாச்சாரியார்*

305. வைக்கம் போராட்டத்திற்கு ஆதரவாக வைக்கத்தி லிருந்து திருவனந்தபுரத்திற்குக் கால்நடையாகவே பேரணி நடைபெற்றது. பேரணியின் முகப்பில் கொண்டு செல்லப்பட்ட கொடியில் எழுதப்பட்டிருந்த வாசகம் என்ன?

*தர்மம், உரிமை பாதுகாப்பதற்கான பேரணி*

306. வைக்கத்திலிருந்து திருவனந்தபுரத்திற்குப் பேரணி சென்றபோது கருணாகப்பள்ளி அருகே பேரணியின் கூட்டம் ------------------ மக்களுக்குக் குறையாமல் இருந்தது.

*பதினாயிரம்*

307. வைக்கம் போராட்ட வீரர்கள் பேரணியாக வந்து திருவாங்கூர் மகாராணியைச் சேதால்மண்டு அரண்மனையில் சந்தித்து மகஜரை அளித்த நாள்

*12.11.1924*

308. வைக்கம் போராட்ட வீரர்கள் பேரணியாக வந்து திருவாங்கூர் மகாராணியை சேதால்மண்டு அரண்மனையில் சந்தித்து அளித்த மகஜரில் கையொப்பமிட்டிருந்தவர்களின் எண்ணிக்கை

*25,000*

309. வைக்கம் போராட்ட வீரர்கள், "ஜாதி, மத வித்தியாசம் இல்லாமல் எல்லா விதமான சாலைகளையும் பொது நிறுவனங்களையும் சகல பிரஜைகளும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்" என்று உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மகஜர் கொடுத்த போது மகாராணியார் அளித்த பதில் என்ன?

*இம்முக்கியமான விஷயத்தில் திடீரென்று பதில் அளிப்பது சாத்திய மில்லை; மகஜரில் கண்ட விஷயங் களும் தக்கபடி கவனிக்கப்படும்*

310. நவம்பர் முதல் நாள் (1924) வைக்கத்திலிருந்து கால்நடையாகப் புறப்பட்ட வடக்குப் பேரணி வைக்கம், கோட்டயம், செங்கணாச்சேரி, திருவள்ளா, செங்கான்னூர், மாவேலிக்கரா, கண்ணமங்கலம், கருணாகப்பள்ளி, சாவாரா, பெரிநாடு, நெடுங்கண்டா, ஆற்றுக்கல், வயநாடு, பரவூர், வர்க்கலா வழியாகத் திருவனந்தபுரத்தை 12ஆம் தேதி அடைந்தது. பேரணிக்குத் தலைமை வகித்தவர் பெயர்?

*பத்மநாப பிள்ளை*

311. நவம்பர் ஏழாம் நாள் (1924) கோட்டாறிலிருந்து கால்நடையாகப் புறப்பட்ட தெற்குப் பேரணி கோட்டாறு, நாகர்கோயில், புளியக்குறிச்சி, மார்த்தாண்டம், களியக்காவிளை, நெய்யாற்றிங்கரா வழியாகத் திருவனந்தபுரத்தை 12.11.1924 அன்று சென்றடைந்தது. பேரணிக்குத் தலைமை வகித்தவர் பெயர்?

*எம்பெருமாள் நாயுடு*

312. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வைக்கம் போராட்டத்திற்கு ரூபாய் ஆயிரம் நிதி உதவி செய்ததாகத் தெரிவிக்கும் பத்திரிகை

*நாடார்குலமித்திரன்*

313. "திருவாங்கூர் சட்டசபைத் தேர்தல் சமீபத்தில் நடக்கவிருப்பதால் ஸ்தானம் பெற விரும்புவோர் ஒருவரும் வைக்கம் போராட்டத்திற்குத் தடைக்கல்லாக இருக்க மாட்டார்கள்" என்று கருத்து தெரிவித்தவர்

*இந்துஸ்தான் டைம்ஸ் ஆசிரியர் கே.எம்.பணிக்கர்*

314. "ஜாதி இந்துக்கள் கடக்கக்கூடிய தெருக்கள் வழியாகத் தீண்டாதவர்களும் நடக்க உரிமை உண்டு" என்பதை வற்புறுத்துவதற்காக வைக்கத்தில் சத்தியாகிரகம் செய்து வருவோரின் தைரியத்தையும், பொறுமையையும், உணர்வையும் காங்கிரஸ் பாராட்டுகின்றது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மாநாடு

*பெல்காம்*

315. "முற்போக்கான சமஸ்தானம் என்று சொல்லப்படு கின்ற திருவாங்கூர் சமஸ்தான அதிகாரிகள் வைக்கம் சத்தியாகிரகிகளின் நியாயமான கோரிக்கையைத் துரிதமாகப் பூர்த்தி செய்து வைப்பார்கள் என்று காங்கிரஸ் நம்புகின்றது" என்ற தீர்மானத்தை 1924ஆம் ஆண்டில் பெல்காமில் நடைபெற்ற மாநாட்டு விஷயாலோசனைக் கூட்டத்தில் முன்மொழிந்தவர்

*காந்தியடிகள்*

316. 1925ஆம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில் வைக்கம் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட சுதந்திரப் போராட்ட வீரரும் காந்திக்கு மிகவும் நெருக்கமானவருமான ---------------------------------------- வைக்கம் சத்தியாகிரகிகள் கட்டுப்பாடாக வேலை செய்வதையும், வைதீகம் கடும் தீண்டாமையை அனுசரிப்பதையும் வெளிப்படுத்தினார்.

*சி.எஃப். ஆண்ட்ரூஸ்*

317. வைக்கம் சென்று திரும்பிய அனுபவத்தை, 'யங் இந்தியா' இதழில் எழுதிய காந்தியின் நண்பர்

*சி.எஃப். ஆண்ட்ரூஸ்*

318. வைக்கம் மக்கள் சத்தியாகிரகிகளுக்கு ஆதரவாக இருப்பதாக, 'யங் இந்தியா' இதழில் எழுதிய காந்தியின் நண்பர் பெயர்?

*சி.எஃப். ஆண்ட்ரூஸ்*

319. 'வைக்கம் போராட்டத்தை எதிர்ப்பவர்களில் பெரும்பாலோர் நம்பூதிரி பிராமணர்களாக இருக்கின்றனர்' என்று 'யங் இந்தியா' இதழில் எழுதிய காந்தியின் நண்பர் பெயர்?

*சி.எஃப். ஆண்ட்ரூஸ்*

320. 'ஈழவர்கள் சாலைக்குள்ளாக வந்தால் கோயிலுக்குத் தீட்டு ஏற்பட்டுவிடும்' என்று

சொன்ன நம்பூதிரி பிராமணர்களுக்கு சி.எஃப். ஆண்ட்ரூஸ் தொடுத்த கேள்வி என்ன?

*'கடவுளால் படைக்கப்பட்ட மானிடரில் எவராவது அவர் அருகில் சென்றால் அவருக்குத் தீட்டு ஏற்பட்டு விடுமா?'*

321. "தென்னாப்பிரிக்காவில் நடந்தது வெள்ளைக் காரர்கள் ஏற்படுத்தியிருக்கும் தீண்டாமைக்கு எதிரான போராட்டம்; வைக்கத்தில் உயர்ந்த வகுப்பார்கள் எனப்படுவோர் ஏற்படுத்தியிருக்கும் தீண்டாமைக்கு எதிராகப் போராட்டம் நடந்து வருகிறது'' என்று வைக்கம் நம்பூதிரி பிராமணர்களிடம் தெரிவித்தவர்

*சி.எஃப். ஆண்ட்ரூஸ்*

322. "வைக்கம் போராட்டத்தின் போது, தோள் அளவு வெள்ளம் சூழ்ந்த போதும், போராட்ட வீரர்கள் இடத்தை விட்டு அகலாது உறுதியுடன் போராடினார்கள்; இதனை போலீஸாரே எனக்கு எடுத்துரைத்தார்கள்'' என்று 'யங் இந்தியா' இதழில் எழுதியவர்

*சி.எஃப். ஆண்ட்ரூஸ்*

323. 'வைக்கம் முதலிய இடங்களிலுள்ள சாலைகளைப் பொதுச்சாலைகளாகக் கருதி எல்லோரையும் விட வேண்டும்' என்று 03.02.1925 அன்று கேரள சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வந்தவர் பெயர்?

*குமரன்*

324. 'வைக்கத்துப் பாதைகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் நடமாடுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்' என்று கேரளா சட்டசபையில் (07.02.1925) தீர்மானத்திற்கு ஆதரவாகப் பேசியவர்?

*கிருஷ்ண ஐயங்கார்*

325. 'கேரள சட்டசபையில், வைக்கம் முதலிய இடங்களிலுள்ள சாலைகளைப் பொதுச்சாலை களாகக் கருதி எல்லோரையும் விட வேண்டும்' என்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் என்னவாயிற்று?

*ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது*

326. 'கேரளா சட்டசபையில் வைக்கம் முதலிய இடங்களிலுள்ள சாலைகளைப் பொதுச்சாலை களாகக் கருதி எல்லோரையும் விடவேண்டும்' என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாகக் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை

*21*

327. 'கேரளா சட்டசபையில் வைக்கம் முதலிய இடங்களிலுள்ள சாலைகளைப் பொதுச் சாலைகளாகக் கருதி எல்லோரையும் விட வேண்டும்' என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு எதிராகக் கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை?

*22*

328. 'கேரளா சட்ட சபையில் வைக்கம் முதலிய இடங்களிலுள்ள சாலைகளைப் பொதுச்சாலை களாகக் கருதி எல்லோரையும் விட வேண்டும்' என்று கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு எதிராகக் கிடைத்த 22 வாக்குகளில் அரசாங்க அதிகாரிகளின் வாக்குகளின் எண்ணிக்கை?

*15*

329. கேரள சட்டசபையில் 'சஞ்சார சுதந்திரம் தீர்மானம்' தோல்வியுற்ற நிலையில் சத்தியாகிரகி ஒருவர், 'அரசாங்கத்தார் நேராகத் தங்களது செல்வாக்கைச் சட்டசபை அங்கத்தினர்கள் விஷயத்தில் உபயோகப்படுத்தினர்' என்று காந்திக்கு கடிதம் எழுதினார். காந்தியடிகளின் பதில்?

*நான் திருவாங்கூர் கவர்ன்மெண்ட்டைப் பாராட்ட முடியாது.*

330. கேரள சட்டசபையில் சஞ்சார சுதந்திரம் தீர்மானம் தோல்வியுற்ற நிலையில் காந்தி கூறிய தமிழ்ப் பழமொழி?

*திக்கற்றவருக்குத் தெய்வமே துணை*

331. "வைக்கம் சத்தியாகிரகிகளுக்குக் காங்கிரஸ் கமிட்டி உதவி செய்யாமல் இருக்கலாம்; பண உதவி கிடைக்காமல் அவர்கள் பட்டினி கிடக்க நேரிடலாம்; இந்தக் கொடிய சோதனைகளில் எல்லாம் சத்யாகிரகிகள் தங்களது நம்பிக்கையின் பலத்தை ஆதாரமாகக் கொண்டு வெற்றி பெற்று வர வேண்டும்'' என்று உபதேசித்தவர்?

*காந்தி*

332. "எப்படி சத்தியாகிரகிகள் எல்லோரும் யோக்கிய மானவர்கள் இல்லையோ அப்படியே அவர்களது எதிரிகளில் எல்லோரும் அயோக்கியர்கள் இல்லை" என்று கூறியவர்?

*காந்தியடிகள்*

333. வைக்கம் சத்தியாகிரகத்தை எதிர்ப்பவர்கள் பற்றி காந்தியார் கருத்து?

*சத்தியாகிரகத்தை எதிர்ப்போர் அதைத் தங்களது மதத்தில் ஏற்படும் ஆக்கிரமிப்பு என்று திரிகரண சுத்தியுடன் நம்பியே எதிர்க்கின்றனர்*

334. சத்தியாகிரக ஆசிரமத்திலேயே வைசூரி பரவ ஆரம்பித்து விட்டது என்ற தகவல் தெரிவிக்கப்பட்ட போது காந்தி கூறிய பதில்?

*குண்டு பட்டு இறப்பவர்களைவிட வியாதியால் இறக்கும் சிப்பாய்களே அதிகம்*

335. 'எங்களுக்குப் பண கஷ்டம் அதிகமாக இருக்கிறது' என்று வைக்கம் சத்தியாகிரகி ஒருவர் எழுதிய கடிதத்திற்குக் காந்தி அளித்த பதில்?

*பணமில்லாமையால் எந்த நல்ல காரியமும் கெட்டுப் போனதாக எனக்குத் தெரியவில்லை*

336. கேரள சட்டசபையில் சஞ்சார சுதந்திரம் தீர்மானம் தோல்வியுற்ற பின்னர், 'சத்தியாகிரகிகள் மீது கற்கள் எறியப்படுகின்றன; அவர்கள் வசைமொழிகளால் அலங்கரிக்கப்படுகிறார்கள்; இழிவுரை பல்லவி பாடப்படுகின்றன' என்று ------------------------------- நாயர் இந்து பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

*கேளப்பன்*

337. வைக்கம் போராட்டத்திற்கு எதிராகத் திருவாங்கூர் அரசாங்கம் வேலை செய்தபோது, "முற்போக்கை அடைந்ததாகச் சொல்லப்படும் ஒரு ராஜ்யம், உன்னதமான கருத்துக்கு விரோதமாக வேலை செய்கிறதென்று கேட்கும்போது அதன் மேன்மை விளங்கவில்லை" என்று கருத்து தெரிவித்தவர்?

*காந்தியடிகள்*

338. சத்தியாகிரகிகள் தளர்ச்சி அடைகிறார்கள் என்ற செய்தி கேட்டு காந்தி கூறியது என்ன?

*மிக்க துன்பத்தைத் தருகிறது*

339. 'வெற்றி அவர்களுக்கு நிச்சயம் என்று நான் உறுதி கூற முடியும்' இது காந்தியின் வாக்குமூலம். அவர்களுக்கு என்பது யாரைக் குறிக்கிறது?

*வைக்கம் சத்தியாகிரகிகளை*

340. வைக்கம் சத்தியாகிரகத்தின் வெற்றி நிச்சயம் என்பதற்குக் காந்தி கூறும் காரணம் ..............

*அவர்களுடைய கட்சியும் நியாய மானது; வழியும் அகிம்சா தர்மத்துடன் கூடியது*

341. "போராட்டம் நடைபெறுவதற்கு முன் வைக்கம் என்ற இடத்தை எவர் அறிந்திருந்தார்?" என்று வினா எழுப்புபவர்

*காந்தியடிகள்*

342. வைதிகக் கட்சியினரைத் துன்பப்படுத்தும் வழியில் இறங்கக்கூடாது என்பதற்குக் காந்தி கூறிய காரணம்?

*அவர்கள் மீது அனுதாபம் ஏற்பட்டு விடும்*

343. பீகார், ஒரியா, ஆந்திரம் முதலிய பல இடங்களுக்கும் காந்தியை அழைக்க, அவர் வைக்கம் சென்றார். வைக்கம் செல்ல அவர் கூறிய காரணம்?

*அங்கே அதிக உபயோகமாக இருப்பேன்*

344. 'வைக்கத்தில் உள்ள தீர புருஷர்களான சத்தியாகிரகிகளிடம் நான் இப்போது இருக்க வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறது' என்று 1925 மார்ச் மாதம் அறிவித்தவர்

*காந்தியடிகள்*

345. 'சத்தியாகிரகக் கொள்கைகளை அப்படியே உள்ளபடி முழு விவரத்துடன் அனுசரிப்பதற்காக அவர்கள் முயற்சி செய்கிறார்கள்' என்று பாராட்டியவர்

*காந்தியடிகள்*

346. வைக்கம் சத்தியாகிரகிகள், 'பலமான எதிர்க் கட்சியுடன் போராடி வருகிறார்கள்' என்று கூறியவர்

*காந்தியடிகள்*

347. 'நான் அங்குச் சென்று அவர்களுக்குத் துணை நின்று அவர்களுக்கு இனிவரக்கூடிய நிலைமை களில் அவர்கள் தைரியமடையுமாறு செய்ய வேண்டும்' என்று 1925 மார்ச் மாதம் அறிவித்தவர்

*காந்தியடிகள்*

348. காந்தி வைக்கம் வருகிறார் என்ற அறிவிப்பு 1925 மார்ச் மாதம் வெளியானது; மகிழ்ந்து வரவேற்று எழுதிய பத்திரிகைகள்

*நவசக்தி, நாடார் குல மித்திரன்*

349. வைக்கம் செல்லும் வழியில் சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில் காந்தி கூறியது

*அ) நான் போகும் காரியம் வெற்றி பெறக் கடவுளைப் பிரார்த்தி யுங்கள் போகிறேன்*

*ஆ) சத்தியாகிரகிகளுக்கு நேரில் என் அனுதாபத்தையும் உதவியையும் செலுத்தப் போகிறேன்*

*இ) வைதிகர் கட்சிகளை அறிந்து கொள்ள, மகாராணி, திவான், உத்தியோகஸ்தர்களை நேரில் காண!*

*ஈ) இவை அனைத்தும்*

350. தீண்டாதவர்கள் அல்லாத ஜாதியினர் தங்களைப் பரிசுத்தம் செய்து கொள்வதற்கும் தாங்கள் செய்த குற்றங்களுக்குப் பரிகாரமாய் இருப்பதற்கும் இவ்விஷயத்தை (தீண்டாமையை ஒழித்து வீதிகளில் நடக்கும் உரிமை வழங்குவது) ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கூறியவர்

*காந்தியடிகள்*

351. காந்தி சென்னையிலிருந்து 07.03.1925 அன்று ரயிலில் வைக்கத்திற்குப் புறப்பட்டார். உடன் சென்றவர்கள்

*ராஜகோபாலாச்சாரியார், மகாதேவ தேசாய், ராமதாஸ் காந்தி*

352. காந்தி சென்னையிலிருந்து வைக்கம் செல்லும் வழியில் ஈரோட்டிற்கு வந்தபோது (08.03.1925) ரயில் நிலையத்தில் வரவேற்றவர்கள்

*பெரியார், தங்கப் பெருமாள் பிள்ளை, என்.எஸ். ராமசாமி அய்யங்கார்*

353. கொச்சி கடற்கரையில் நடந்த பொதுக்கூட்டத்தில் காந்தி பேசுகையில் --------------------------------- ஆகிய இரண்டும் பொல்லாத வழக்கங்கள் என்றார்.

*தீண்டாமை, தொடாமை*

354. ----------------------- அன்று காந்தி எர்ணாகுளத்தில் இருந்து தனி மோட்டார் படகில் ஏறி மாலை 6:00 மணிக்கு வைக்கம் வந்து சேர்ந்தார்.

*09.03.1925*

355. காந்தி - மகாராணி சந்திப்பு நடைபெற்ற இடம், நாள்

*வர்க்கலை (12.03.1925)*

356. வைக்கம் வந்த காந்தி (09.03.1925) ------------------------------ தலைமையில் வரவேற்கப்பட்டார்.

*கேளப்பன் நாயர்*

357. 09.03.1925 அன்று வைக்கம் வந்த காந்தி சென்னைக்குப் புறப்பட்ட நாள்

*20.03.1925*

358. காந்தியின் வைக்கம் பயணத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வு

*அ) சவர்ணர்களுடனான கருத்தியல் சந்திப்பு*

*ஆ) வர்க்கலையிலும் திருவனந்த புரத்திலும் இரு மகாராணி களுடன் நிகழ்ந்த அரசியல் சந்திப்புகள்*

*இ) சிவகிரி நாராயண குருவுடன் நிகழ்ந்த சமய, சமூக ரீதியிலான*

*சந்திப்பு*

ஈ) *இவை அனைத்தும்*

359. வைக்கம் சத்தியாகிரகத்திற்கு எதிராக இருக்கும் இந்தன்துருத்தில் தேவன் நீலகண்டன் நம்பியாத்ரி, வெங்கட்ராம அய்யர், கிருஷ்ணபிள்ளை ஆகியோர் அடங்கிய குழு காந்தியைச் சந்தித்து விவாதித்தது எப்போது?

*1925 மார்ச் மதியம் 2:30 மணிமுதல் 5:10 மணிவரை*

360. இப்போராட்டமானது ஆரம்பம் முதற்கொண்டு எனது அனுதாபத்தைப் பெற்றிருக்கின்றது; ஆதி முதற்கொண்டே இதனை நான் வியந்து பாராட்டி வந்திருக்கின்றேன்'' என்று 10.03.1925 அன்று வைக்கம் கூட்டத்தில் தெரிவித்தவர்

*காந்தி*

361. வைக்கம் போராட்டம் -------------------------------------------- ஆதாரமாகக் கொண்டுள்ளது என்றார் காந்தி.

*ஜீவ காருண்யத்தையே*

362. வைக்கம் போராட்டக் கோரிக்கை பற்றி காந்தியின் கருத்து

*இயற்கையானது, நியாயமானது*

363. 'சாஸ்திரங்களது அனுமதி ஒரு புறம் இருக்க, இந்து மதமானது மற்ற மதங்களைப் போன்று உலக நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்' என்று கூறியவர்.

*காந்தியடிகள்*

364. "பரந்த ஞானமும் கல்வியும் பிற மத தத்துவங்களைப் பற்றிய ஞானமும் ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் பண்டைய சாஸ்திரங்களின் கட்டுப்பாடுகள் உத்தரவுகள் இவற்றிற்கிணங்கவே நடப்பது என்ற சித்தாந்தத்தைக் கொண்ட எந்த மதமும் இறுதியில் தோல்வி அடையும் என்பது எனது அபிப்பிராயம்'' என்று கூறியவர்

*காந்தியடிகள்*

365. "தீண்டாமையானது மானிட வர்க்கத்திற்கு ஏற்பட்ட களங்கம். அதனால் அது இந்து மதத்திற்கும் ஏற்பட்ட களங்கம் ஆகும். அதற்கு ஆதாரமாக எவ்வித நியாயமும் காட்ட முடியாது. இந்து மதத்தின் முக்கிய கோட்பாடுகளுக்கு அது முரண்பட்டிருக்கிறது'' என்று வைக்கத்தில் பேசியவர்.

*காந்தியடிகள்*

366. இது காந்தி சொன்னது.

*நான் சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் நிலைநிறுத்த இங்கு வந்தேனேயன்றி சச்சரவை அதிகப் படுத்த வரவில்லை*

367. வைக்கம் சத்தியாகிரகிகளின் கோரிக்கை எப்படி இருப்பதாகக் காந்தி கூறுகிறார்?

*கேட்டவுடன் கொடுத்து விடும்படியாக அவ்வளவு நியாயமாக இருக்கிறது*

368. "வைக்கம் போராட்டத்தை எதிர்க்கும் வைதிக பிராமணர்களும், பிராமணரல்லாதார்களும் இதனை சகல வழிகளிலும் ஆராய்ந்து பார்த்து நியாயமாகவும் ஜீவகாருண்யமாகவும் இருக்கும் கட்சியை ஆதரித்து நிற்கும்படி கேட்கிறேன்'' என்று காந்தியடிகள் எந்தக் கூட்டத்தில் பேசினார்?

*வைக்கம் பொதுக்கூட்டம் (10.03.1925)*

369. "வைக்கத்திலும் வெளியிடங்களிலும் உள்ள பொது ஜன அபிப்பிராயமானது சத்தியாகிரகிகளின் சார்பாகவே இருக்கிறது; உலகிலும் அவர்களுக்குச் சாதகமாக அபிப்பிராயம் அதிகரித்து வருகிறது'' இதனை காந்தி எப்போது கூறினார்?

*வைக்கம் பொதுக்கூட்டம் (10.03.1925)*

370. சத்துருக்களிடத்தில் பிரியம் ஏற்பட வேண்டும் என்று கூறும் காந்திக்கு எப்போது அது சாத்தியமில்லாதிருந்ததாகக் கூறுகிறார்?

*வைதிகர்களுடன் பேசிய போது*

371. 'அவர்கள் சுயநலம் பாராட்டிப் பேசியதாக நான் உணர்ந்தேன்' என்று காந்தி யாரைக் குறிப்பிடுகின்றார்?

*வைக்கத்து வைதிகர்களை*

372. "வைதிகர்கள் தீண்டாத வகுப்பினருக்கு

ரஸ்தாக்களைத் திறக்க விரும்பவில்லை; இதற்குக் காரணம் அறியாமையோ அல்லது சுயநலமோ எதுவாக இருந்த போதிலும் அது அவர்களுடைய உண்மை உணர்ச்சியாகும்" என்று கூறிய காந்தி, நம்முடைய கடமையாகத் தெரிவிப்பது

*அவர்களுடைய இந்த எண்ணம் தவறானது என்பதை உணர்த்துவ தாகும்*

373. காந்தியிடம் ராணி சொன்னது

*அ) தனிப்பட்ட முறையில் அவர்ண மக்களின்மீது ஆழ்ந்த அனுதாபம் எனக்கு உண்டு*

*ஆ) சமத்துவமற்ற நிலையைப் போக்க உங்கள் அறிவுரைப் படி செயல்படுகின்ற சத்தியா கிரக இயக்கத்தில் வன்முறை எதுவும் இடம்பெறாததை எண்ணி மகிழ்ச்சி அடைகின் றேன்.*

*இ) வைக்கம் சாலையையும் அதைப் போல், பிற அனைத்துச் சாலை களையும் திறந்து கொடுக்கத் தனிப்பட்ட முறையில் விருப்பம் இருந்தபோதிலும் ராணி என்ற நிலையில் பொதுமக்கள் கருத்தை அறிய வேண்டியதிருக்கின்றது. இரு பிரிவினரும் ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு திட்டத்தை நீங்கள் சொன்னால் அதற் கிணங்க செயல்பட விரும்பு கிறேன்*

*ஈ) இவை அனைத்தும்*

374. வைக்கம் சத்தியாகிரகிகளுக்குக் காந்தி சொன்னது

*அ) சிறப்பாகச் செய்தார்கள்*

*ஆ) என் மதிப்பைப் பெற்று விட்டார்கள்*

*இ) உழைப்பின் பரிசான புகழை அளிக்கிறேன்*

*ஈ) இவை அனைத்தும்*

375. திருவனந்தபுரத்தில் காந்தி, அரசியாரைச் சந்திப்பதற்கு முன்னும் பின்னும் யாரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்?

*பெரியார்*

376. காந்தி, வர்க்கலையில் மகாராணியையும், ------------------------இளையராணி யையும் சந்தித்துப் பேசினார்.

*திருவனந்தபுரத்தில்*

377. திருவனந்தபுரத்தில் இளையராணியிடம் காந்தி உத்தரவாதம் தருவதற்கு வசதியாக, 'கோயில் நுழைவு பற்றி இப்பொழுது அழுத்தம் கொடுக்கப் போவதில்லை' என்று காந்தியிடம் உறுதி தந்தவர்

*தந்தை பெரியார்*

378. தீண்டாமை, நெருங்காமை குறித்து காந்தியின் கருத்து?

*அ) மனிதாபிமானமற்றது*

*ஆ) அறமற்றது*

*இ) சரியற்றது*

*ஈ) இவை அனைத்தும்*

379. இந்து மதத்தின் பிரிக்க முடியாத பாகமாகத் தீண்டாமை இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் --------------------------- என்றார் காந்தி.

*மதத்தை விட்டு விலகுவேன்*

380. இந்தன் துருத்தில் நம்பூதிரி, திவான் பேஷ்கார் இல்லத்தில் காந்தியைச் சந்தித்து ஒப்படைத்த பொருள்

*தீண்டாமைக்கு தாங்கள் ஆதார மாகக் கருதும் சங்கர ஸ்மிருதி*

381. மகாகவி வள்ளத்தோல் - காந்தி சந்திப்பு நடைபெற்ற நாள் - இடம்

*17.03.1925 வைக்கம் சத்தியாகிரக ஆசிரமம்*

382. சங்கர ஸ்மிருதி பற்றி வள்ளத்தோல், காந்தியிடம் கூறியது

*நம்பூதிரிகளால் போலியாக எழுதி உருவாக்கப்பட்டது*

383. காந்தி மார்ச் மாதத்திற்காக ரூபாய் ------------------ சத்தியாகிரகத்திற்குக் கொடுத்தார்.

*1000*

384. வைக்கத்தில் வைதிகர்களுடன் காந்தி மேற்கொண்ட சமாதானம் தோல்வி அடைந்தபோது, 'அறிவுல கத்தை விட்டு வைதிகர்கள் நெடுந்தூரம் விலகி விட்டனர்; நியாயத்திற்காவது சமாதானத்திற்காவது இவர்கள் கட்டுப்பட மாட்டார்கள்' என்று எழுதிய பத்திரிகை

*குமரன்*

385. "சட்டசபைத் தீர்மானத்தின் தோல்வியால் தளர்ச்சி உற்றிருந்தது சத்தியாகிரகம். காந்தியின் வருகையால் மக்கள், சத்தியாகிரகிகள், அரசாங்கம் ஆகியோரிடம் புதிய உணர்ச்சி ஏற்பட்டதால் வாடியிருந்த சத்தியாகிரகம் மலர்ச்சி பெற்று முடிவை நோக்கி நகர்ந்தது" என்று எழுதிய ஆய்வாளர்

*பழ. அதியமான்*

386. ராகவையாவிற்குப் பதிலாக நியமிக்கப்பட்ட புதிய திவான்

*மாரிஸ் வாட்ஸ்*

387. வைதிகர் ஒத்து வந்தாலும் வராவிட்டாலும் அரசே குறிப்பிட்ட ஏதாவது ஒரு வழியில் காரியங்களை முன் நகர்த்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டவர்

*காந்தியடிகள்*

388. வைக்கம் சத்தியாகிரகம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்படி மகாராணி கேட்டதற்கு ஆக்டிங் திவான் ஆர். கிருஷ்ணபிள்ளை அளித்த கருத்து

*அ) சாலைகளை எல்லோரும் பயன்படுத்தும்படி திறந்துவிட வேண்டும்; மனித உரிமையை மறுப்பது நியாயமில்லை*

*ஆ) சாலைகளைத் திறந்து விடுவதற்கு அரசாங்கம் தொடக்கம் முதலே எதிர்க்கவில்லை*

*இ) கலவரம் ஏற்படும் என்று அஞ்சியே அரசாங்கத்தார் தடை உத்தரவைப் பிறப்பித்தார்கள்; ஒரு ராஜ விளம்பரத்தின் மூலம் சமத்துவமின்மையைப் போக்க வேண்டியது அவசியம்*

*ஈ) இவை அனைத்தும்*

389. இந்து கவர்ன்மென்ட், இந்து மதத்திற்குச் செய்யவேண்டிய கடமையாகக் காந்தி கூறுவது என்ன?

*இந்து மதத்தில் புகுந்துள்ள ஜீவகாருண்யமற்ற மூடநம்பிக்கையைச் சற்றும் ஆதரிக்கக் கூடாது*

390. வைக்கம் போராட்டம் தொடங்கி 15 ஆவது மாதம், வைக்கத்தில் நான்கில் மூன்று வீதிகளில் தீண்டாதார் செல்ல அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. இது குறித்து வைக்கம் சத்தியாகிரக ஆசிரமச் செயலாளர் கேளப்பன் கூறிய கருத்து?

*அதிக வலி நிறைந்த அவமானம்*

391. வைக்கத்தில் வெற்றிக் கொண்டாட்டம் நடைபெற்ற நாள்

*29.11.1925*

392. 'இருபது மாதச் சத்தியாகிரகத்தில் பல ஆயிரம் வருஷங்களாய் ஏற்பட்ட கொடுமைகள் அழிந்து போய்விட்டன' என்று பேசியவர்.

*மன்னத்து பத்மநாப பிள்ளை*

393. 'திருவாங்கூர் ராஜ்ஜியத்திலுள்ள ------------------------------------ சத்தியாகிரகத்துக்கு அனுகூலமாய் இருந்தார்கள்' என்று மன்னத்து பத்மநாப பிள்ளை கூறுகிறார்.

*நாயர்கள்*

394. வைக்கம் வெற்றி விழா கூட்டத்தில் மன்னத்து பத்மநாப பிள்ளை கூறிய கருத்து

*இனி எல்லா வகுப்பாரும் கோயிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கும்படி சத்தியாகிரகம் செய்ய வேண்டும்*

395. வைக்கம் வெற்றி விழா கூட்டத்தில் டி.கே.மாதவன் கூறிய கருத்து

*கோயில் பிரவேசச் சத்தியாகிரகம் ஆரம்பித்தால்தான் வெற்றியானது நிலைக்கும். இல்லாவிட்டால் வஞ்சகப் பட்டர்கள் இதையும் பிடுங்கிக் கொள்வார்கள்*

**396. வைக்கம் வெற்றி விழா கூட்டத்தில் பெரியார் கூறிய கருத்து**

*சத்தியாகிரக இயக்கத்தின் வெற்றியைப் பற்றியும் தோல்வியைப் பற்றியும் பேசுவதற்கு அதற்குள் காலம் வந்துவிடவில்லை*

**397. வைக்கம் வெற்றி விழா பொதுக்கூட்டம் 29.11.1925 அன்று வைக்கத்தில் பெரியார் தலைமையில் நடைபெற்றது. 4000 பேர் கலந்து கொண்டனர். நிறைவேற்றப்பட்ட தீர்மானம்?**

*ஜாதி வேறுபாடு பார்க்காமல் எல்லா இந்துக்களையும் கோயில்களுக்குள் விடவேண்டும் என்ற போராட்டத்தை இனி ஆரம்பிப்பது*

**398. தீண்டாமை விலக்குக் குழு வெளியிட்ட பத்திரிகைச் செய்தியில், துரத்தப்பட்ட தீண்டாமை எங்கு ஒதுங்கியிருப்பதாகச் சுட்டியது?**

*கோயிலின் மூலையில்*

**399. பெரியார் தலைமையில் நடைபெற்ற வைக்கம் வெற்றி விழா பொதுக்கூட்டத்தில், 'ஜாதி வேறுபாடு பார்க்காமல் எல்லா இந்துக்களையும் கோயில்களுக்குள் விட வேண்டும் என்ற போராட்டத்தை இனி ஆரம்பிப்பது' என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றி தேவஸ்வம் ஆணையாளர் பதவி வகித்த ஆர்.கிருஷ்ணப் பிள்ளை திவானுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :**

*முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்..*

**400. வைக்கம் வெற்றி விழா பொதுக்கூட்டத்தில், 'ஜாதி வேறுபாடு பார்க்காமல் எல்லா இந்துக்களையும் கோயில்களுக்குள் விட வேண்டும் என்ற போராட்டத்தை இனி ஆரம்பிப்பது' என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றி தேவஸ்வம் ஆணையாளர் பதவி வகித்த ஆர். கிருஷ்ணப் பிள்ளை திவானுக்கு எழுதிய கடிதத்தில் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அதற்கு திவான் எழுதிய குறிப்பு?**

*Quite So (ஆம், அப்படித்தான்)*

**401. வைக்கம் வெற்றிக்குப் பிறகு தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தையும் செயல்பாட்டையும் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார் டி.கே. மாதவன். இத்தொண்டுக்காக ரூபாய் 10,000 வழங்கியவர்**

*லாலா லஜபதிராய்*

**402. தன் காச நோயையும் பணச் சிரமத்தையும் சமாளித்துக் கொண்டு, தீண்டாமை ஒழிப்பது தொடர்பாக டி.கே. மாதவன் 24.09.1922 அன்று காந்தியைச் சந்தித்துப் பேசினார். சந்திப்பு நடைபெற்ற ஊர்?**

*திருநெல்வேலி*

**403. தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாகப் போராடிய டி.கே. மாதவன் நடத்திய பத்திரிகையின் பெயர்.**

*தேசாபிமானி*

**404. 'மகாராஜாவுக்குக்கூட கோயில்களில் முழுமையான வழிபாட்டுரிமை இல்லை' என்று டி.கே. மாதவனிடம் கூறிய திருவாங்கூர் டிவிஷன் பேஷ்கார் பெயர்**

*கிருஷ்ணய்யங்கார்*

**405. 1922ஆம் ஆண்டு திருநெல்வேலியில் தம்மைச் சந்தித்த டி.கே. மாதவனிடம்,'கோயில் நுழைவுப் போராட்டத்தை நிறுத்திவிட்டு நீங்கள் பொது கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுப்பதற்கான போராட்டத்தை நடத்த வேண்டும்' என்று அறிவுரை கூறியவர்**

*காந்தி*

**406. கோயில் நுழைவு உரிமை கேட்டு டி.கே. மாதவன் 1920ஆம் ஆண்டு சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்ததைப் போல 1921ஆம் ஆண்டும் தீர்மானம் கொண்டு வந்தார். சட்டசபை விதிப்படி**

மத சம்பந்தமான விஷயத்தைச் சட்டசபையில் விவாதிக்க முடியாது என்று திவான் மறுத்தார். இதே சட்டங்கள் நடைமுறையில் இருந்தும் கிருஷ்ண நாயர் திவானாக இருந்த போது இரண்டு முறை கோயில் நுழைவு பற்றிய தீர்மானத்தைக் கொண்டு வர அனுமதித்ததைக் குறிப்பிட்டபோது 'கிருஷ்ணன் நாயர் தவறு செய்துவிட்டார்' என்று கூறி தீர்மானத்தை மறுத்த திவான் பெயர்

*ராகவையா*

407. கோயில் நுழைவு உரிமை தீர்மானத்தைச் சட்டசபையில் டி.கே. மாதவன் கொண்டுவர முயன்றபோது, 'மத சம்பந்தமான விஷயத்தைச் சட்டசபையில் விவாதிக்க முடியாது' என்று அனுமதி மறுத்த திவான் பெயர்

*ராகவையா*

408. கோயில் நுழைவு உரிமை தொடர்பாகச் சட்டசபையில் விண்ணப்பம் செய்ய அனுமதி மறுக்கிறீர்கள்; மகாராஜாவைச் சந்திப்பதற்கும் அனுமதி மறுக்கிறீர்கள்; நாங்கள் என்ன செய்வது? திருவிதாங்கூரை விட்டு வெளியேறித்தான் ஆக வேண்டும் என்ற நிலை உருவாகும் அல்லவா என்று மாதவன் கேட்டபோது திவான் ராகவையா கூறிய பதில்?

*ஆம் ....... உங்கள் கவலைகள் தீர திருவிதாங்கூருக்கு வெளியே போய் விடுங்கள்*

409. 'இந்து மதம் உங்கள் கோயில் நுழைவைத் தடுக்கின்றது என்று சொல்வது அபத்தமாகும். நீங்கள் கோயிலுக்குள் புகவேண்டும். கூட்டமாக நுழையக்கூடாது. ஒவ்வொருவராகச் செல்ல வேண்டும். சிறை செல்லத் தயாராக இருக்க வேண்டும்' என்று காந்தி, யாரிடம் கூறினார்?

*டி.கே. மாதவன்*

410. முறை ஜெபம் நடத்துவது யார்?

*திருவிதாங்கூர் அரச குடும்பத்தினர்*

411. முறை ஜெபம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்?

*ஆறு*

412. முறை ஜெபம் எத்தனை நாள்கள் நடைபெறும்?

*60*

413. வைக்கம் சத்தியாகிரகத்தின் தொடக்கமும் முடிவும்

*30.03.1924 – 29.11.1925*

414. வைக்கம் போராட்டத்தின் மூலவர் என்று போற்றப்படுபவர்

*டி.கே. மாதவன்*

415. வைக்கம் கோயில் நுழைவுக்குக் காந்தியின் ஆதரவைத் திருநெல்வேலியில் எழுத்துப் பூர்வமாகப் பெற்றவர்?

*டி.கே.மாதவன்*

416. 'வைக்கத்தில் சத்தியாகிரகத்தை மேற்கொள்ளலாம்' என்று தீண்டாமைக்கு எதிரான குழு எப்போது எங்கு முடிவு செய்தது?

*06.02.1924 கொல்லம்*

417. வைக்கம் சத்தியாகிரக ஏற்பாடுகள் குறித்து 13.03.1924 அன்று காந்திக்குக் கடிதம் எழுதி, ஆசீர்வாதத்தை வேண்டிய கேரளா காங்கிரஸ் தலைவர் பெயர் என்ன?

*கே.பி.கேசவ மேனன்*

418. வைக்கம் போராட்டத்தைத் தொடக்கத்திலேயே நிறுத்தி விட வைதிகர்கள், இருவரை காந்தியிடம் தூது அனுப்பினார்கள். காந்தியைச் சந்தித்த அந்த இருவர் பெயர்

*சிவராம ஐய்யர், வாஞ்சேசுவர ஐய்யர்*

419. காந்தியுடன், வைதிகர்கள் சார்பாக சிவராம ஐய்யர், வாஞ்சேசுவர ஐயர் சந்திப்பால் ஏற்பட்ட விளைவு யாது?

*வைக்கம் போராட்டத்தை நிறுத்தி வைக்க கே.பி.கேசவ மேனனுக்கு காந்தி ஆலோசனை வழங்கினார்*

420. வைக்கம் நீங்கலாக மற்ற இடங்களில் சத்தியா கிரகம் செய்வதை ராஜகோபாலாச்சாரியார் விரும்ப வில்லை என்ற தகவலை வெளியிட்ட இதழ்

*சுதேசமித்திரன் - 03.09.1924*

**421. வைக்கம் போராட்டம் தொடங்கிய 10 நாள்களில் சத்தியாகிரகத்தை நிறுத்தி விடுவதாக அறிவிப்பதோடு அதை நிறுத்தி வைக்கும்படி உங்களுக்கு யோசனை கூறுகின்றேன் என்று காந்தி யாருக்குக் கடிதம் எழுதினார்?**

*கே.பி. கேசவ மேனன்*

**422. வைக்கம் போராட்டத்தை நிறுத்தி வைக்கும்படி காந்தி கூறிய யோசனை ...............................**

*ஏற்றுக்கொள்ளப்படவில்லை*

**423. வைக்கம் போராட்டத்தில் காந்தி**

*அ) நேரடியாகக் கலந்து கொள்ளவில்லை*

*ஆ) ஆசீர்வதித்தார்*

*இ) ஆலோசனை சொல்லி வழி நடத்தினார்*

*ஈ) இவை அனைத்தும்*

**424. வைக்கம் போராட்டம் 1924 மார்ச் 30 தொடங்கியது. இரண்டு நாள்கள் நடைபெற்றது. அதன்பின் நிறுத்தி வைக்கப்பட்ட நாள்கள் எத்தனை?**

*6*

**425. வைக்கம் போராட்டத்தில் தொண்டர்கள் அல்லாமல் தலைவர்களே கலந்துகொண்டு சிறை செல்வது என்ற முறையில் (07.04.1924) முதலில் சிறை சென்றவர்கள்**

*கேசவ மேனன், டி.கே.மாதவன்*

**426. 30.03.1924 தொடங்கிய வைக்கம் போராட்டத்தை நிறுத்தி விடுகின்ற அறிவிப்பும், கேசவ மேனனுக்கு நிறுத்தி வைக்கும்படி யோசனையையும் ஏப்ரல் முதல் தேதி அறிவித்தவர் யார்?**

*காந்தி*

**427. வைக்கம் போராட்டத்தை நிறுத்தி வைக்கும்படி ஏப்ரல் 1ஆம் தேதி வேண்டுகோள் விடுத்த காந்தி, 07.04.1924 அன்று வைக்கம் போராட்டத்தில் கைது செய்யப்பட்ட கே.பி.கேசவ மேனனுக்கும், டி.கே.மாதவனுக்கும் ----------------------**

*வாழ்த்து தெரிவித்தார்*

**428. வைக்கம் போராட்டத்தை நிறுத்தி வைக்கும்படி ஏப்ரல் 1ஆம் தேதி வேண்டுகோள் விடுத்த காந்தி, 07.04.1924 அன்று ------------------------- --- என்று உறுதி கூறினார்.**

*வெற்றி பெறும் வரை போராட்டம் நடத்தப்படும்*

**429. வைக்கம் போராட்டத்தில் இந்து அல்லாத ஜார்ஜ் ஜோசப், செபாஸ்டியன், குருவில்லா மேத்யூ, அப்துல் கரீம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்து அல்லாதவர்கள் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று காந்தி கூறியதை சத்தியாகிரகிகள் விரும்பவில்லை. போராட்டக்காரர்கள் வைத்த வாதம்**

*அ) பெண்ணுரிமைக்கான போராட்டத்தில் ஆண்கள் கலந்து கொள்ளக் கூடாதா?*

*ஆ) தீண்டாமை ஒழிப்பில் முன்னேறிய வகுப்பினர் ஈடுபடக் கூடாதா?*

*இ) மனித உரிமை அனைவருக்கும் பொது இல்லையா?*

*ஈ) இவை யாவும்*

**430. வைக்கம் போராட்டத்தில் இந்துக்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும் என்று காங்கிரஸ் முடிவு செய்தது. இதில் ஜார்ஜ் ஜோசப் கருத்து**

*அ) மாறுபடுகிறேன்; ஆனால் காங்கிரஸ் முடிவை மதித்து கீழ்ப்படிகிறேன்*

**431. வைக்கம் போராட்டத்தின் மூளையாகத் திகழ்ந்த ஜார்ஜ் ஜோசப் இயக்கத்தில் இருந்து விலகக் காரணம்**

*காந்தியடிகள்*

**432. வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு 10.4.1924இல் கைதாகி 30.8.1924இல் விடுதலையான இவர், காந்தியின் அறிவுறுத்தலினால் மீண்டும் போராட்டக் களத்திற்கு வரவில்லை. அவர் பெயர்?**

*ஜார்ஜ் ஜோசப்*

433. “கோயில் நுழைவு என்பது ஒரு சமய உரிமை. அதனால் அச்சமயம் சாராத ஒருவரின் கோயில் நுழைவைச் சத்தியாகிரகம் என கூற முடியாது. வைக்கம் சத்தியாகிரகத்தில் ஜார்ஜ் ஜோசப் சத்தியாகிரகம் செய்து சிறை சென்றிருந்தபோது அவர் செய்தது தவறு என்று செய்தி அனுப்பினேன். அவர் அதை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டுக் கொண்டார்'' என்று 'யங் இந்தியா' இதழில் 1932ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் தேதி காந்தி எழுதினார். இதற்கு ஜார்ஜ் ஜோசப் அளித்த பதில்

*அ) ஜார்ஜ் ஜோசப் மன்னிப்புக் கேட்கவில்லை*

*ஆ) ஜார்ஜ் ஜோசப் கோயில் நுழைவு பற்றிப் பேசவில்லை*

*இ) வைக்கம் சத்தியாகிரகத்திற்கும் கோயில் நுழைவிற்கும் சம்பந்த மில்லை.*

*ஈ) இவை யாவும்*

434. “சமூகக் கட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காகவே வைக்கம் சத்தியாகிரகம் நிகழ்ந்து வருவதால் சீக்கியர்களாவது முகமதியர்களாவது கிறிஸ்தவர்களாவது இதில் கலந்து கொள்ளக் கூடாது என்று மகாத்மா காந்தி சொல்லுவதை நான் அங்கீகரிக்க முடியாது'' என்றவர்

*எஸ். சீனிவாச ஐயங்கார்*

435. வைக்கத்தில் 1924 மார்ச் 30 தொடங்கிய கைது நடவடிக்கையை அரசாங்கம் எப்போது நிறுத்தியது?

*1924 ஏப்ரல் 10*

436. ‘சத்தியாகிரகிகள் வைக்கத்தின் வீதிகளில் அமர்ந்து பட்டினி கிடக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். இம்முறையில் மாறுதல் செய்ய வேண்டுமானால் உடனே தெரிவியுங்கள்' என்று ஜார்ஜ் ஜோசப் கேட்க, காந்தி தந்தியில் கூறிய பதில்

*விரதம் இருப்பதை விட்டு விடுங்கள்*

437. வைக்கம் போராட்டத்தின் போது ஜார்ஜ் ஜோசப் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் காந்தி குறிப்பிட்டிருப்பதாவது :

*அ) மகாராஜா அவர்களையோ திவானையோ பேட்டி காணலாம்*

*ஆ) உங்கள் இயக்கத்தில் அனுதாப முள்ள வைதிக இந்துக்கள் பலர் கையெழுத்து வாங்கி மகஜர் தயாரிக்கலாம்*

*இ) பதற்றத்தினால் இம்சை வழியில் இறங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.*

*ஈ) இவை அனைத்தும்*

438. திருவாங்கூர் அரசாங்கத்திற்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கக் கூடாது என்பதற்குக் காந்தி கூறிய காரணம்?

*கொடுமையாக நடந்துகொள்ளும் ஒருவருக்கு எதிராக உண்ணாவிரதம் அனுஷ்டிக்க முடியாது.*

439. வைக்கம் போராட்டம் தொடங்கி நான்கு மாதங்கள் ஆகியும் அது நீடிப்பதற்குக் காரணமாக சிரத்தானந்தர் குறிப்பிடுவது?

*காந்தியின் தவறான ஆலோசனைகள்*

440. வைக்கம் சத்தியாகிரகம் வலிமை இழக்க காந்தியின் உண்ணாவிரதத் தடுப்பே காரணம் என்று குற்றம் சுமத்தியவர்

*சிரத்தானந்தர்*

441. மார்ச் 30ஆம் தேதி தொடங்கிய போராட்டத்தில் ஏப்ரல் 11 தேதிக்குள் அநேகமாகக் கேரளத் தலைவர்கள் அனைவரும் ........................

*கைதாகி விட்டனர்*

442. வைக்கம் போராட்டக் குழுவினர் வெளியிலிருந்து தலைவர்களைப் பெற யாரிடம் வேண்டினார்கள்?

*காந்தி*

443. காங்கிரசால் போராட்டம் வழிநடத்தப்பட்டாலும் கடைசி வரை வைக்கம் அகில இந்திய இயக்கமாக மாறவில்லை. மாறவும் --------------------- அனுமதிக்கவில்லை.

*காந்தி*

**444. உள்ளூர் பிரச்சனையை உள்ளூர் மக்களேதான் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது சத்தியாகிரகம் பற்றியதான பொதுவான அபிப்பிராயம் என்று கூறிய காந்தி, திருவாங்கூர் மட்டுமல்லாமல் கேரளத்தையும், கேரளம் மட்டுமல்லாமல் சென்னை மாகாணத்தையும் சேர்த்துக் கொள்ள காந்தி கூறிய காரணம்**

*எந்த விரிவாக்கமும் சூழலுக்கு ஏற்ற அம்சம்தான்*

**445. வைக்கம் போராட்டத்திற்கு கேரளத்துக்கு வெளியில் உள்ளவர்களின் வருகையைத் தவிர்க்க விரும்பிய காந்தி**

*அ) அயல் மதத்தவரிடமிருந்து பண உதவி பெறுவதை அனுமதிக்க வில்லை*

*ஆ) அயல் மதத்தவரிடமிருந்து உணவு பெறுவதை அனுமதிக்கவில்லை*

*இ) அயல்வாழ் இந்துக்களின் பணம், உணவு உதவிகளை அனுமதிக்கவில்லை*

*ஈ) இவை அனைத்தும்*

**446. வைக்கம் போராட்டத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு வெளியிலிருந்து பெறவேண்டிய உதவி என்று காந்தி குறிப்பிடுவது யாது?**

*அனுதாபம்*

**447. வைக்கம் போராட்டத்தில், 'காந்தி இந்த இயக்கத்தை ஆதரிக்காவிடில் வெளியாருடைய உதவியைத் தடுக்காமலாவது இருக்கலாம்' என்று கூறியவர்**

*சிரத்தானந்தர்*

**448. வெளியில் உள்ள இந்துக்களிடமிருந்து உதவி கோருவது குறித்து காந்தியின் கருத்து**

*இங்குள்ள இந்துக்கள் சீர்திருத் தத்திற்குத் தயாராக இல்லை என்று பொருள்.*

**449. வைக்கத்தில் ஜாதி இந்துக்கள் எதிர்ப்புப் போராட்டம் நடத்தியபோது காந்தி கூறியது.**

*அ) திருவாங்கூர் அதிகாரிகள் சத்தியாகிரகிகளைக் காலிக் கூட்டங்களின் கையில் ஒப்படைத்து விட்டார்கள்*

*ஆ) ஆசார சீர்திருத்த விரோதி களான வைதிகர்களால் அமர்த்தபட்டவர்களிடம் சத்தியாகிரகிகள் அடிபடு கிறார்கள்.*

*இ) வைதிகர்களும் வெட்கப்படு படியான சமயம் வரும்*

*ஈ) இவை அனைத்தும்*

**450. வைக்கம் போராட்டம் முழுவதுமே சத்தியாகிரகி களுக்கு காந்தி -------------------- வஞ்சனை காட்டவில்லை என்கிறார் ஆய்வாளர் பழ.அதியமான்.**

*அறிவுரை வழங்குவதில்*

**451. இது காந்தி சொன்னது :**

*வைக்கம் சத்தியாகிரகம் வரம்பு கடந்து நடப்பதாக நான் கருதுகிறேன்*

**452. இது காந்தி சொன்னது :**

*வெகு காலமாக இருந்துவரும் தீய பழக்கங்களை ஒரு நொடியில் போக்கி விடுவது இயலாத காரியம்*

**453. இது காந்தி சொன்னது :**

*உயிருக்குப் பயப்படாமல் வேலை செய்யுங்கள்*

**454. இது காந்தி சொன்னது :**

*அ) பொறுமையோடு இருக்க வேண்டும்*

*ஆ) பொறுப்பை பூரணமாக உணர வேண்டும்*

இ) ஒழுங்கிலிருந்து நூலிழை அளவும் தவறக்கூடாது

ஈ) இவை அனைத்தும்

455. 'Gandian Non - Violent Struggle and untouchability in South India' (2015) என்ற பெருந் தலைப்பும், 'The 1924 - 25 Vykom Satyagraha and the Mechanisms of Change' என்ற துணைத் தலைப்பும் கொண்ட நூலை எழுதிய அமெரிக்க ஆய்வாளர் பெயர்

*மேரி எலிசபெத் கிங்*

456. மேரி எலிசபெத் கிங் என்ற அமெரிக்க ஆய்வாளர், 'Gandian Non - Violent Struggle and untouchability in South India ' என்ற நூலில் பெரியாரைப் பற்றி ---------------- இடங்களில் குறித்துள்ளார்.

*7*

457. பெரியாரின் வைக்கம் பங்களிப்பு குறித்து கேரளப் பதிவுகள்

அ) 'Eight Furlongs of Freedom - டி.கே. ரவீந்திரன்; டி.கே. மாதவன் வாழ்க்கை - பி.கே. மாதவன்

ஆ) பந்தனத்தில் நின்னு - கே.பி. கேசவ மேனன்; Proceedings of Travancore Legislative Council 1924 - 1925

இ) க்ஷேத்ர பிரவேசனம் - டி.கே. மாதவன்; Office Note Regarding the Vykom Satyagraha 1924

ஈ) இவை யாவும்

458. கேரளத் தலைவர்கள், வைக்கம் போராட்டத்திற்குத் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி பெரியாரை வேண்டினர்; அதற்குக் காரணம் 'தீண்டாமைக்கு எதிராகவும், மூடநம்பிக்கைக்கு எதிராகவும் அவரது கடுமையான செயல்பாட்டால் அகில இந்தியாவிற்கும் அறியப்பட்டவராய் இருந்தார்' என்று அமெரிக்க ஆய்வாளருக்குப் பேட்டி அளித்த கேரள வரலாற்றுப் பேராசிரியர்

*கே.கே. குஷ்மான்*

459. 'வைக்கம் வீரர்' என்று பெரியாரை திரு.வி.க. அழைக்கத் தொடங்கிய காலம்?

*1924 ஏப்ரல்*

460. வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் பாராட்டுதலைப் பெற்ற காவல் ஆணையரின் (பிரிட்டிஷ் அதிகாரி) பெயர்.

*பிட்*

461. வைக்கம் சத்தியாகிரகத்திற்காகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி பெரியாரிடம் ரூபாய் 1000 வழங்கியது. செலவு விவரம் :

*வைக்கம் சத்தியாகிரக காரியதரிசியிடம் 700 ரூபாய், பாலக்காடு சவுரி ஆசிரமத்துக்கு கதருக்குப் பஞ்சு வாங்கி அனுப்பியதும்,கோட்டாறு சத்தியாகிரகத்திற்குக் கொடுக்கப் பட்டதும் 300 ரூபாய்.*

462. இது தந்தை பெரியாரின் கருத்து :

அ) வைக்கம் சத்தியாகிரகத்திற்கும் காந்தியாருக்கும் சம்பந்தமில்லை

ஆ) வைக்கம் சத்தியாகிரகத்தைத் தொடங்கியவர்கள் ஈழவ சமூகச் சீர்திருத்தத் தலைவர்கள் டி.கே.மாதவன், கே. ஐயப்பன்

இ) காந்தியார், ராஜகோபாலாச்சாரியார், பூரண அனுமதி அளிக்காமல் சில ஆட்சேபணைகள் கிளப்பினார்கள்

ஈ) இவை யாவும்

463. வைக்கம் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டிருந்த பெரியாரை, 'நீ ஏன் நம் நாட்டை விட்டு விட்டு இன்னொரு நாட்டிலே போய் ரகளை செய்கிறாய்? அது சரியல்ல; அதை விட்டு விட்டு நீ இங்கு வந்து, நீ விட்டுச் சென்ற வேலைகளைக் கவனி' என்று கடிதம் மூலம் கேட்டுக் கொண்டவர்?

*ராஜகோபாலாச்சாரியார்*

464. வைக்கம் சத்தியாகிரக ஆசிரமக் கொட்டகை 300 x 20 பரப்பளவு கொண்டது; எப்போதும்

-------------பேருக்குக் குறையாமல் ஆண், பெண் தொண்டர்கள் இருந்து வந்தார்கள்.

*300*

465. திருவாங்கூர் ராணியின் பெயர்

*சேதுலட்சுமி பாய்*

466. காவாளம் மாதவன் பணிக்கர் வைக்கம் சத்தியாகிரகத்தில் கலந்து கொள்ள ஆர்வமாய் இருந்தார்; கலந்து கொள்ள முடியாமல் போனதற்குக் காரணம்?

*அமிர்தசரஸ் பணியைக் கவனிக்குமாறு காந்தியின் வலியுறுத்தல்*

467. 'கோயில் சாலைகள் பொதுச்சாலைகளே தவிர மன்னரின் தாத்தா வீட்டுச் சொத்தல்ல' என்று பேசியவர்

*பெரியார்*

468. திருவாங்கூர் மன்னர் இறந்தவுடன் ரீஜண்டாகப் பொறுப்பேற்ற மகாராணி, திவான் உள்பட எவரும் எதிர்பாராவண்ணம், 56 கைதிகளை விடுவிக்கச் சொன்னார்; அதில் சத்தியாகிரகக் கைதிகளின் எண்ணிக்கை?

*19*

469. திருவாங்கூர் மகாராணியின் பாராட்டத்தக்க செயல்பாடுகளாக ஆய்வாளர்கள் சுட்டுவது

*அ) மன்னர் இறந்தவுடன் கைதிகளை விடுவித்தது*
*ஆ) பேரணித் தலைவர்கள் 12 பேரைச் சந்தித்தது*
*இ) இங்கே ஒரு மகாத்மா வசிக்கிறார் என்று நாராயண குருவைப் போற்றியது*
*ஈ) இவை யாவும்*

470. வைக்கம் சத்தியாகிரகத்தின் விளைவு

*மூன்று வீதிகளில் சஞ்சார சுதந்திரம் கிடைத்தது*

471. காந்தியடிகளின் வைக்கம் வருகையை, Day-to-Day with Gandhi (1970) எனும் நூலில் பதிவு செய்தவர்

*மகாதேவ தேசாய்*

472. "ஜாதி இந்துக்களும் தங்கள் சகோதரர்களின் சாதாரண மனித உரிமைகளை மறுக்க மாட்டார்கள் என்றும் நம்புகிறேன்" என்று சொன்னவர்

*பண்டித ஜவஹர்லால் நேரு*

473. வைக்கம் போராட்டத்தைத் தொடங்கும்முன் செய்த முயற்சிகள்

*அ) கோரிக்கை வைத்தனர், மக்களிடம் கையொப்பம் பெற்று மனு அளித்தனர், 1924 பிப்ரவரியில் கொல்லம் சுயராஜ்ய ஆசிரமத்தில் கூடிய காங்கிரசின் தீண்டாமை விலக்குக் குழு இரண்டு மாத காலம் தொடர்ந்து மக்களிடம் பிரச்சாரம் செய்தது*
*ஆ) பிராமணர், நாயர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்தனர்*
*இ) அரசு நிர்வாகத்தைத் திவான் மூலமாக அணுகினர், சட்டமன்றத்தில் தீர்மானங்கள் கொண்டுவந்தனர்*
*ஈ) இவை யாவும்*

474. வைக்கம் வீதிகளில் நடக்கும் உரிமை கேட்டு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தவர்

*அ) டி.கே. மாதவன்*
*ஆ) குமாரன் ஆசான்*
*இ) என். குமாரன்*
*ஈ) இவர்கள் அனைவரும்*

475. வைக்கம் போராட்டம் காந்தியடிகளுக்கு?

*சத்தியாகிரகத்தைச் சோதனை செய்யும் ஒரு களம்*

476. வைக்கம் போராட்டம் பெரியாருக்கு,

*சமத்துவத்திற்குப் போராடும் ஒரு வாய்ப்பு*

477. வைக்கம் கோயிலைச் சுற்றியுள்ள, அரசாங்கம் பராமரிக்கும் தெருவில், அதன் குடிகளுக்கு

இருக்கும் சிவில் உரிமையாக சஞ்சாரக் கோரிக்கை பார்க்கப்பட்டிருந்தால்

அ) மதப்பிரச்சனையாகி இருக்காது
ஆ) ஈழவர் - வைதிகர் உறவு கசந்திருக்காது
இ) போராட்டம் நீண்டிருக்காது
ஈ) இவை அனைத்தும்

478. பந்தனத்தில் நின்னு, க்ஷேத்ர பிரவேசனம், கழிஞ்ச காலம் முதலிய நூல்களின் ஆசிரியர்

கே.பி.கேசவ மேனன்

479. வைக்கம் போராட்டத்திற்கு வலுவான அடித்தளம் இட்டவர்களுள் முக்கியமானவர்; மோதிலால் நேருவின் 'இன்டிபென்டண்ட்,' காந்தியின் 'யங் இந்தியா' ஆகியவற்றில் ஆசிரியராக சில காலம் இருந்தவர்; நேருவுடன் சிறைவாசம் அனுபவித்தவர்; குற்றப் பரம்பரைச் சட்டத்தை நீக்கப் பாடுபட்டவர்; மதுரையில் காலமானவர்

ஜார்ஜ் ஜோசப்

480. வைக்கம் போராட்டத்தில் முதலிலிருந்து கடைசி வரை நின்று போராடியவர்; சத்தியாகிரக ஆசிரமத்தின் செயலாளராகப் பணியாற்றியவர்; வைக்கம் வெற்றி விழாவிற்குப் பெரியாரை அழைத்தவர்; 1924லேயே நாயர் என்ற ஜாதிப் பட்டத்தைத் துறந்தவர்

கே.கேளப்பன்

481. வைக்கம் போராட்டத்திற்குத் தலைமை தாங்க வருமாறு பெரியாருக்குத் தந்தி அனுப்பி (1924 ஏப்ரல் மாதம் 4ஆம் தேதியும் 12ஆம் தேதியும்) அழைத்தவர்

குரூர் நீலகண்டன் நம்பூதிரி

482. காந்தியடிகள் - வைதிகர் உரையாடல் இந்தன்துருத்தில் தேவன் நீலகண்டன் நம்பியாத்ரி இல்லத்தில் (10.03.1925) அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் காந்தியடிகள் சொன்ன தீர்வு?

அ) சங்கராச்சாரியாரின் சான்றாதாரத்தைக் காட்டுதல் - உண்மைத் தன்மையை பண்டிதர்களைக் கொண்டு ஆராய்தல்
ஆ) பொது வாக்கெடுப்பு நடத்துதல்
இ) இரு தரப்பு விசாரணை - ஒவ்வொரு தரப்பிலும் ஒரு பண்டிதர், திவான் நடுவர்
ஈ) இவை யாவும்

483. 'திருச்சூர் நகர சபை, எல்லாச் சாலைகளிலும் சந்துகளிலும் ஜாதி, மத வித்தியாசமின்றி மக்கள் அனைவரும் செல்லலாம் என்று தீர்மானம் இயற்றியது' என்ற செய்தி 25.4.1924 நாளிதழில் வெளியானது. நாளிதழின் பெயர்?

நவசக்தி

484. திருவாங்கூர் மகாராணியைச் சந்தித்து மகஜர் அளித்த ஜாதி இந்துக் குழுவில் 12 பேர் இருந்தனர். அதில் இடம்பெற்ற இரண்டு தமிழர்கள்

சிவதாணு பிள்ளை, எம்பெருமாள் நாயுடு

485. 1919ஆம் ஆண்டு கேரளாவில் கோயில் நுழைவு பற்றித் தலையங்கம் எழுதிய கேரளப் பத்திரிகை

தேசாபிமானி

486. தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டத்தைப் பாராட்டி டாக்டர் அம்பேத்கர் எழுதிய பத்திரிகை

பகிஷ்கிரீத் பாரத்

487. தனஞ்செய்கீர் எழுதிய __________ அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் அவர் நடத்திய பொதுக்குளத்தில் நீர் எடுப்பு சத்தியா கிரகத்திற்கு தந்தை பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம்தான் அவருக்கு உந்துசக்தியாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

டாக்டர் அம்பேத்கர்

488. 1922 ஆம் ஆண்டு திருப்பூரில் வாசுதேவ அய்யர் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தந்தை பெரியார் கொண்டு வந்த கோவில் நுழைவுத் தீர்மானத்தை எதிர்த்தவர்

கிருஷ்ண ஐயங்கார், வைத்தியநாத ஐயர்

489. வைக்கம் போராட்ட வெற்றிக்குப் பின் அதேபோல் வீதியில் நடக்கும் உரிமைக்காகப் போராட்டம் நடைபெற்ற இடங்கள்?

*கல்பாத்தி, சுசீந்திரம்*

490. 1927 ஆம் ஆண்டு திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயிலில் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தியவர்

*ஜே.எஸ்.கண்ணப்பர்*

491. 1919 ஆம் சென்னை மாகாணத்தில் பொது இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரவேசிக்கத் தடை செய்வதை சட்டவிரோதமாகக் வேண்டும் என்று தீர்மானத்தைக் கொடுத்தவர்

*பித்தாபுரம் மகாராஜா*

492. அரசாங்கத்தின் பொது இடங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் நடப்பதற்கு உள்ள உரிமையை யாரும் தடுக்க முடியாது என்று அரசாணை வெளியிட்ட நீதிக்கட்சி ஆட்சியின் முதலமைச்சர்

*பானகல் அரசர்*

493. ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோயிலில் கோயில் நுழைவு செய்த சுயமரியாதை இயக்க தோழர்

*குத்தூசி குருசாமி, பூவாளூர் பொன்னம்பலனார், மாயவரம் சி. நடராஜன்*

494. ஈரோட்டில் சுயமரியாதை இயக்கத் தொண்டர்களுடன் கோயில் நுழைவில் பங்கேற்ற ஆதிதிராவிடத் தோழர்கள்

*ஈரோடு ஈஸ்வரன், கருப்பன், பசுபதி*

495. 1933 ஆம் ஆண்டு ஆலயப் பிரவேச உரிமை மசோதாவை முன்மொழிந்தவர்

*பி.சுப்ராயன்*

496. கோவில் அமைந்துள்ள தெருக்களில் நடக்கும் உரிமை, கோயிலில் நுழையும் உரிமை இவற்றைத் தொடர்ந்து ஜாதி தீண்டாமை ஒழிப்புக்குத் தந்தை பெரியார் அறிவித்த அடுத்த கட்டப் போராட்டம்

*அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமைப் போராட்டம்*

497. முதன் முதலாக இந்துக் கோயில்களில் பூஜையிலும் தொழுகையிலும் எல்லா வகுப்பினருக்கும் சம உரிமை உண்டு என்று தீர்மானம் நிறைவேற்றிய மாநாடு

*1926 மதுரை பார்ப்பனர் அல்லாதார் மாநாடு*

498. 1928 ஆம் ஆண்டு திருச்சி மலைக்கோட்டைக் கோயிலில் கோயில் நுழைவு போராட்டம் நடத்தியவர்

*ஜே. என். ராமநாதன், ஜே.எஸ். கண்ணப்பர், தண்டபாணிப் பிள்ளை*

499. 1938 ஆம் ஆண்டு மாகாண சட்டமன்றத்தில் கோயில் நுழைவு மசோதாவைத் தாக்கல் செய்தவர்

*எம்.சி. ராஜா*

500. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக இரண்டு முறை சட்டம் இயற்றிய முதல் அமைச்சர்

*டாக்டர் கலைஞர்*

❒❒❒

# தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

1879 **செப்டம்பர் 17** ஈரோட்டில் வெங்கட்ட (நாயக்கர்) சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாகத் தோன்றினார். தமையனார்: ஈ.வெ.கிருஷ்ணசாமி தங்கைகள்: பொன்னுத்தாயி, கண்ணம்மாள்

1885 **வயது** 6 திண்ணைப்பள்ளியில் பயின்றார்.

1889 **வயது** 10 ஈரோடு நகராட்சித் தொடக்கப்பள்ளியில் நாலாம் வகுப்புவரை பயின்றபின் பள்ளிப்படிப்பு நிறுத்தப்பட்டது.

1891 **வயது** 12 தந்தையாரின் மண்டிக்கடை வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்டார்.

1895 **வயது 16** தனது வீட்டுக்கு வரும் புராணச் சொற்பொழிவாளர்களைக் குறுக்குக் கேள்வி கேட்டுத் திணறவைக்கும் சிந்தனை வளம் மிக்க குறும்புக்காரராக இளம் வயதிலேயே விளங்கினார்.

1898 **வயது** 19 பதின்மூன்று வயது நாகம்மையைத் திருமணம் புரிந்தார்.

1900 **வயது** 21 ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார். ஆனால், அக்குழந்தை அய்ந்து மாதங்களிலேயே இறந்தது. பின்னர் குழந்தையே இல்லை.

1901 **வயது** 22 மண்டிக்கடையில் ஈட்டிய லாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுத்து. முன் மாதிரியாக விளங்கினார்.

1902 **வயது** 23 அனைத்து ஜாதி மதத்தினருடன் சமபந்தி போஜனம் நடத்தினார். வேளாள வகுப்புப் பெண்ணுக்கும் நாயுடு வகுப்பு ஆணுக்கும் ஜாதிமறுப்புத் திருமணம் செய்வித்தார்.

1904 **வயது** 25 தந்தையார் கண்டிப்புக்கு அஞ்சி, வீட்டைவிட்டு வெளியேறி, துறவுக் கோலம் பூண்டு, விஜயவாடா, காசி, கல்கத்தா முதலிய இடங்களில் சுற்றித்திரிந்து பரந்த அனுபவம் பெற்றார். புரோகிதப் பார்ப்பனர்களின் சுய நலம், கயமை, வைதிகத்தின் பொய்ம்மை ஆகியவற்றை நேரில் கண்டுணர்ந்து தெளிவு பெற்றார். தந்தையாரால் அழைத்து வரப்பட்டு, ஈ.வெ.ராமசாமி நாயக்கர் மண்டி என்று தன் பெயரிலேயே வாணிபம் நடத்தினார்.

1905-1908 **வயது** 26-29 பொது வாழ்வில் விருப்பங்கொண்டு மக்கள் நலப்பணி ஆற்றினார். ஈரோட்டில் பிளேக் நோய் பரவிய போது மீட்புப்பணி ஆற்றியதுடன், இறந்த சடலங்களை உறவினர்களே கைவிட்டுச் சென்ற போதும், தன் தோள்மீது சுமந்து சென்று அப்புறப்படுத்தி அரும்பணி ஆற்றினார். காங்கிரஸ் இயக்கத்தில் நாட்டங்கொண்டார்.

1909 **வயது** 30 இளம் விதவையான தனது தங்கையின் மகளுக்கு எதிர்ப்புக்கிடையில் விதவைத்திருமணம் செய்வித்தார்.

1911 **வயது** 32 தந்தையாரை இழந்தார்.

1914-1918 **வயது** 35-39 காங்கிரஸ் மாநாடுகளை முன்னின்று நடத்தினார். ஈரோடு நகர்மன்றத் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றியதுடன், குடிநீர்த்திட்டம், சுகாதார வசதி போன்ற பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றினார். ஏறத்தாழ 28 மதிப்புறு பதவிகளை ஏற்றுப் பணியாற்றினார். ஈரோட்டில் பெருவணிகராகத் திகழ்ந்தார்.

1919 சமுதாயப்பணி ஆற்றவும், வகுப்புரிமைக் கொள்கையை நிறைவேற்றிக் கொள்ளவும் ஒரு வாய்ப்பாகக் கருதி, காங்கிரசில் உறுப்பினரானார். நகர் மன்றப் பதவியை விட்டு விலகினார். திருச்சி காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

1920 தான் வகித்துவந்த மதிப்புறு பதவிகள் அனைத்தினின்றும் தானே விலகினார். வாணிபத்தைத் துறந்து, காங்கிரசின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்தார். திருநெல்வேலி காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். மாநாட்டுத் தலைவரால் அனுமதி மறுக்கப்பட்டது.

1921 காந்தியாரின் நிர்மாணத் திட்டத்தை ஏற்று எளிய வாழ்வை மேற்கொண்டதுடன், ஆடம்பர ஆடையைத்துறந்து கதர் ஆடையை உடுத்தினார். தன் அன்னையார் உட்பட குடும்பத்தினர் அனைவரையும் கதராடை அணியச் செய்தார். கதர் மூட்டையைத் தோளில் சுமந்து, ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்தார்.

ஈரோடு கள்ளுக்கடை மறியலில், தங்கை கண்ணம்மாள், மனைவி நாகம்மாள் ஆகியோருடன் பங்கேற்றுச் சிறைசென்றார். கள் உற்பத்திக்குக் காரணமாய் அமைந்தவை என்பதால், தனது தோப்பில் இருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.

ஒத்துழையாமை இயக்கத்தின் நீதிமன்றப் புறக்கணிப்புக் கொள்கையின் அடிப்படையில் தன் குடும்பத்துக்கு வரவேண்டிய பெருந் தொகையை நீதிமன்றத்தின் மூலம் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இழந்தார். தஞ்சை காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன் மொழிந்தார். எனினும் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படாமல் தந்திரமாகத் தடுக்கப்பட்டது.

1922 கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு, கோவைச் சிறையில் இருந்தபோது 'குடி அரசு' எனும் இதழைத் தொடங்கத் திட்டமிட்டார். திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். ஆதிதிராவிடர்களைக் கோவிலுக்குள் வழிபாடுசெய்ய அனுமதிக்க வேண்டும் என்னும் தீர்மானத்தையும் முன்மொழிந்தார். தீர்மானங்கள் ஏற்கப்படவில்லை. சினமுற்ற பெரியார் மனுதர்ம சாஸ்திரத்தையும் இராமாயணத்தையும் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று முழங்கினார்.

1923 சேலம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடுகளில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். நிறைவேற்ற இயலவில்லை.

1924 கேரளத்தில் வைக்கம் கோவில் வீதியில் தாழ்த்தப்பட்டோர் நடக்க உரிமை கோரி, தீண்டாமையொழிப்புப் போர் நடத்தி இருமுறை சிறை சென்ற பெரியார் இறுதியில் வெற்றி பெற்று 'வைக்கம் வீரர்' என்று புகழப்பட்டார். வ.வே.சு. அய்யரால் நிறுவப்பட்ட சேரன்மாதேவி குருகுலத்தில் நிலவிய ஜாதி வேறுபாட்டை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, அக்குருகுலம் தானே ஒழியும்படி செய்தார். திருவண்ணாமலை காங்கிரஸ் மாநாட்டில், தானே தலைவராயிருந்து வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் தோல்வியுற்றது. நீதிக் கட்சி ஆட்சியின் இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்.

1925 'குடிஅரசு' வார இதழை ஈரோட்டில் 02.05.1925 இல் தொடங்கினார். 'குடிஅரசு' பத்திரிகாலயத்தை திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் திறந்து வைத்தார். காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானம் ஏற்கப்படாததால் மாநாட்டை விட்டு வெளியேறினார். பார்ப்பனரல்லாதாருக்குச் சுயமரியாதை ஏற்படுத்த ஓர் இயக்கம் காண வேண்டும் என்ற எண்ணங்கொண்டார். நீதிக்கட்சித் தலைவர் சர். பிட்டி. தியாகராயர் மறைவுக்கு வருந்தினார்.

1926 சுசீந்திரத்தில் தீண்டப்படாதார் கோவில் நுழைவுக் கிளர்ச்சியை ஆதரித்துக் குரல் கொடுத்தார். இந்தி புகுத்தப்படுவதால் வரக்கூடிய கேட்டினை அறிந்து முன்கூட்டியே எச்சரித்தார். நாடெங்கும் சுயமரியாதைச் சங்கங்களை நிறுவினார். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் கூட்டிய மதுரை பார்ப்பனர் அல்லாதார் மாநாட்டில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்தார். சுயமரியாதை இயக்கம் முகிழ்த்தது.

1927 காந்தியாரைப் பெங்களூரில் சந்தித்து உரையாடியபின், கொள்கை மாறுபாடு காரணமாக காந்தியாரிடம் கொண்டிருந்த நம்பிக்கையை விட்டொழித்தார். சைமன் கமிஷனை வரவேற்றார். 'திராவிடன்' தினசரியில் சிலகாலம் ஆசிரியராக இருந்தார். திருக்குறள், புத்தர், கொள்கைகளைப் பரப்பினார். நாயக்கர் பட்டத்தைத் துறந்தார்.

1928 நாகை இரயில்வே தொழிலாளர் கிளர்ச்சியில் சிறை ஏகினார். நீதிக்கட்சியின் தலைவர் பனகால் அரசர் மறைவுக்குக் கவலையுற்றார். 'ரிவோல்ட்' ஆங்கில வார ஏட்டைத் தொடங்கினார். வகுப்புரிமையை நிலை நிறுத்திய அமைச்சர். எஸ்.முத்தையா முதலியாரைப் பாராட்டினார்.

1929 செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். மலேயாவில், நாகம்மையாருடன் சுற்றுப் பயணம் மேற்கொண்டு சுயமரியாதைக் கொள்கையைப் பரப்பினார்.

1930 மலேயாவிலிருந்து திரும்பும் போது கப்பலில் தாடி வளர்க்க நேர்ந்தது. ஈரோட்டில் இரண்டாவது சுயமரியாதை மாநாட்டை நடத்தினார். 'குடும்பக் கட்டுப்பாட்டை' விளக்கும் வகையில் 'கர்ப்ப ஆட்சி' என்ற நூலை வெளியிட்டார். 'மார்க்ஸ் ஏங்கல்ஸ்' அறிக்கையையும், 'லெனினும் மதமும்' என்ற நூலையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். தேவதாசி ஒழிப்பு மசோதாவை ஆதரித்து, அது சட்டமாக நிறைவேறக் காரணமானார்.

1931 விருதுநகரில் மூன்றாவது சுயமரியாதை மாநாட்டை நடத்தினார். கதர்த்திட்டத்தின்

பொருந்தாத் தன்மையை விளக்கிப் பிரச்சாரம் செய்தார். அய்ரோப்பிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். கொழும்பு, ஏடன், சூயஸ் கால்வாய், போர்ட் சைட் ஆகிய இடங்களுக்குச் சென்றார்.

1932 எகிப்து, கிரீஸ், துருக்கி, ரஷ்யா, இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்பெயின், ஜெர்மனி, போர்ச்சுக்கல், இத்தாலி, பிரான்ஸ் முதலிய நாடுகளில் 11 மாதம் பயணம் செய்து, கொழும்பு வழியாக நாடு திரும்பினார்.

1933 நாகம்மையார் 11.05.1933 இல் இயற்கை எய்தினார். 'புரட்சி' வார ஏட்டைத் துவக்கினார். சமதர்மப்பிரச்சாரத்தை தீவிரமாக மேற்கொள்ள எண்ணித் திட்டம் தீட்டினார். ஈரோடு சமதர்மத்திட்டம் என்று இது அழைக்கப்பெற்றது. திருச்சியில் கிறிஸ்துவ கலப்புத் திருமணத்தைத் தடையை மீறி நடத்தி வைத்தமைக்காகவும், 'திராவிடன்' இதழ்க் கடன் தொடர்பாகவும், "இன்றைய ஆட்சி ஒழிய வேண்டும் ஏன்?"என்று "குடிஅரசில்" தலையங்கம் எழுதியதற்காகவும் கைது செய்யப்பட்டுச் சிறை ஏகினார்.

1934 'பகுத்தறிவு' வார ஏட்டைத் துவக்கினார். பகுத்தறிவு தினசரி இதழைச் சில காலம் நடத்தினார். 'பகுத்தறிவு' வார ஏட்டில் முதன் முதலாகத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைப் புகுத்தினார். ஜெயப்பிரகாஷ் நாராயண் பெரியாரை ஈரோட்டில் சந்தித்து உரையாடினார்.

1935 ஈ.வெ.ரா. வேலைத்திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டதால், பெரியார் நீதிக்கட்சியைத் தீவிரமாக ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். 'பகுத்தறிவு' வார ஏடு நிறுத்தப்பட்டு, மாத ஏடாக வெளிவந்தது. 'விடுதலை' இதழ் வாரம் இருமுறை ஏடாக வெளிவரத் துவங்கியது. 'குடிஅரசு' மீண்டும் வார ஏடாக வரத் தொடங்கியது.

1936 பெரியாரின் அன்னையார் சின்னத்தாய் அம்மையார் 28.07.1936இல் இயற்கை எய்தினார். நீதிக்கட்சியை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரம் செய்தார்

1937 டாக்டர்.சி.நடேசனார் 18.02.1937 இல் மறைவுற்றதற்குப் பெரிதும் வருந்திக் 'குடிஅரசி'ல் இரங்கலுரை தீட்டினார். தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியுற்றுக் காங்கிரஸ் வெற்றிபெற்றது. எனினும் உடனடியாகப் பதவி ஏற்க காங்கிரஸ் முன்வராததால், கவர்னரின் வேண்டுகோளின்படி ஜஸ்டிஸ் கட்சியினரின் இடைக்கால ஆட்சி சிறிது காலம் நடைபெற்றது. பின்னர் காங்கிரஸ் அமைச்சரவை அமைக்க முன்வந்தது. ராஜாஜி, காங்கிரஸ் முதலமைச்சராகப் பதவி ஏற்று இந்தித் திணிப்பு , கல்வி ஒழிப்பு போன்ற தமிழர் விரோத ஆட்சியை நடத்தினார். இந்தித் திணிப்பை எதிர்த்து திருச்சியில் நடைபெற்ற தமிழர் மாநாட்டில் பெரியார் எழுச்சியுரை ஆற்றினார்.

1938 இந்தித்திணிப்பை எதிர்த்துப் பெரும்போர் மூண்டது. இந்தியை எதிர்த்துத் தமிழர்பெரும் படை சென்னை நோக்கி அணிவகுத்துச் சென்று திருவல்லிக் கேணி கடற்கரையை அடைந்தது. கடற்கரையில் கூடிய பெருங்கூட்டத்தில் "தமிழ்நாடு தமிழருக்கே!" என்று பெரியார் முழங்கினார். சென்னையில் கூடிய தமிழ் நாட்டுப் பெண்கள் மாநாட்டில் 13.11.1938 இல் 'பெரியார்' என்ற சிறப்புப் பட்டம் அளிக்கப்பட்டது. இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் பல்லாயிரவர் கைதாகிச் சிறை ஏகினர். பெரியார் 2 ஆண்டுச் சிறைத்தண்டனை பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும் போதே நீதிக்கட்சித் தலைவராகப் பெரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1939 இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் சிறைச்சென்ற பெரியார் விடுதலையானார். சிறை மீண்டதும் "திராவிட நாடு திராவிடருக்கே!" என்று குரலெழுப்பினார்.

1940 நீதிக்கட்சியின் செயலாளர் சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் மறைவுக்குப் பெரிதும் துயரடைந்தார். வட இந்தியப் பயணத்தை மேற்கொண்ட பெரியார் பம்பாயில் ஜின்னாவைச் சந்தித்து உரையாடினார். அம்பேத்கரும் உடனிருந்தார். காங்கிரஸ் அமைச்சரவை பதவி விலகிய நிலையில் மாற்று அமைச்சரவை அமைக்குமாறு கவர்னர் வேண்டியும், பதவி ஏற்கப் பெரியார் மறுத்துவிட்டார்.

1941 எம்.என். ராய் சென்னையில் பெரியாரைச் சந்தித்து உரையாடினார். பெரியார், முயற்சியால் தென்னிந்திய ரயில்வே உணவு விடுதிகளில் 'பிராமணாள்' 'இதராள்'என்று ஜாதி பேதம் காட்டுவது ஒழிந்தது.

1942 தம் குழுவினருடன் ஸ்டாபோர்டு கிரிப்சை 30.03.1942 இல் சந்தித்து தனி நாடு கோரிக்கையை வலியுறுத்தினார். இரண்டாம் முறையாக கவர்னர் வேண்டியும் அமைச்சரவை அமைக்க மறுத்துவிட்டார்.

1943 பெரியார் அவர்களை அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டின் பிரதிநிதி, சர். வில்லியம்ஸ் பிலிப்ஸ் சந்தித்து உரையாடினார். சோதனைக் குழாயில் எதிர்காலத்தில் குழந்தை உருவாக்கப்படும் என்று சுயசிந்தனையில் தோன்றிய தன் கருத்தை உலகுக்கு அறிவித்தார். உலகில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் பற்றிய பெரியாரின் சிந்தனைகளை விளக்கும் “இனி வரும் உலகம்” எனும் நூல் வெளியிடப்பட்டது. தமிழிசை இயக்கத்தை ஆதரித்துக் குரல் கொடுத்தார்.

1944 சேலம் மாநாட்டில் தென்னிந்தியர் நல உரிமைச்சங்கம் என்ற பெயர், பெரியார் அவர்களால் ‘திராவிடர் கழகம்’ என்று மாற்றப்பட்டது. இந்து மகாசபைத் தலைவர் மூஞ்சேயைச் சந்தித்து உரையாடினார். கல்கத்தாவில் எம்.என்.ராய் அவர்களின் ‘ராடிகல் டெமாக்ரடிக் கட்சி’ மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். கான்பூரில் பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

1945 திருச்சியில் திராவிடர் கழக மாகாண மாநாட்டை நடத்தினார். கருஞ்சட்டைத் தொண்டர்படை என்ற அமைப்பை ஏற்படுத்தினார். ஈரோட்டில் ‘ஜஸ்டிசைட்’ என்ற ஆங்கில இதழைத் துவக்கினார்.

1946 திராவிடர் கழகக் கொடி உருவாக்கப்பட்டு, பெரியாரால் அங்கீகரிக்கப்பட்டது. மதுரையில் நடைபெற்ற கருஞ்சட்டைப் படை மாநாட்டுப்பந்தல் பார்ப்பனர் தூண்டுதலால் எரிக்கப்பட்டுக் கலவரம் மூண்டது. இந்திய அரசியல் நிர்ணயசபை உருவாக்கப்பட்ட முறையைப் பெரியார் எதிர்த்தார்.

1947 ஆகஸ்ட் 15 ‘சுதந்திர நாள்’ அன்று; துக்கநாளே என்று அறிவித்தார். ஜூலை 1-ஆம் நாள் நாடெங்கும் ‘திராவிட நாடு பிரிவினை நாள்’ கொண்டாடச் செய்தார். கடலூரில் திராவிட நாடு பிரிவினை மாநாடு கூட்டினார்.

1948 கருஞ்சட்டைப்படை தடைசெய்யப்பட்டு அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. இந்தி மீண்டும் திணிக்கப்பட்டதால் இரண்டாம் இந்தி எதிர்ப்புப் போர் துவங்கியது. கவர்னர் ஜெனரல் சி. ராஜகோபாலாச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டியதால், கழகத் தோழர்களுடன் கைது செய்யப்பட்டார்.

ஈரோட்டில் பெரியார் கூட்டிய திராவிடர் கழக ஸ்பெஷல் மாநாட்டில் ‘திராவிட நாடு’ படத்தைத் திறந்து வைத்து திரு.வி.க விடுதலை முழக்கமிட்டார். தூத்துக்குடியில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திராவிடர் கழக மாநாட்டினை நடத்தினார்.

1949 திருக்குறள் மாநாடு நடத்திப் பாமரரும் அந்நூலை அறியும் வண்ணம் பரப்பினார். திருவண்ணாமலையில் கவர்னர் ஜெனரல் சி.ராஜகோபாலாச்சாரியாரைச் சந்தித்து உரையாடினார். மணியம்மையாரை 09.07.1949 இல் திருமணம் புரிந்து கொண்டார். உடுமலைப்பேட்டையில் தடை உத்தரவை மீறிக் கைதானார். இந்திய அரசமைப்புச்சட்டம் 26.11.1949 இல் நிறைவேற்றப்பட்டதைக் கண்டித்தார். அறிஞர் அண்ணா திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக்கழகம் எனும் தனி அமைப்பை ஏற்படுத்தினார்.

1950 ‘பொன்மொழிகள்’ என்ற நூலுக்காகச் சிறை ஏகினார். ஜனவரி 26 ‘குடிஅரசு’ நாளைத் துக்க நாளாகக் கடைப்பிடிக்கக் கோரினார். அரசியல் சட்டம் ஒழிக! என்று முழங்கினார். வடநாட்டவர் துணிக்கடை, உணவுக்கடைமுன் மறியல் செய்தார். வகுப்புரிமை செல்லாது என்ற நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, திருச்சியில் வகுப்புரிமை மாநாடு நடத்தினார். மத்திய அமைச்சர்களுக்கு எதிராகக் கறுப்புக்கொடி பிடித்து எதிர்ப்பைக் காட்டும்படி அறிவுறுத்தினார். பெரியாரின் தமையனார் ஈ.வெ.கிருஷ்ணசாமி 04.02.1950இல் இயற்கை எய்தினார்.

1951 பெரியாரின் வகுப்புரிமைப் போர் வெற்றிபெற்று, வகுப்புரிமை வழங்கும் வகையில் இந்திய அரசியல் அமைப்பில் திருத்தம் செய்யப்பட்டது. கம்யூனிஸ்ட் தலைவர் எஸ்.ஏ. டாங்கே திருச்சியில் பெரியாரைச் சந்தித்து உரையாடினார்

1952 கொல்லைப்புற வழியில் முதலமைச்சரான ஆச்சாரியார் குலக் கல்வித் திட்டத்தினைக் கொண்டுவந்தார். பெரியார் வெகுண்டெழுந்தார். திருச்சி ரயில் நிலையத்தில் இந்திப் பெயர்ப்பலகையை தார் கொண்டு அழித்தார். சுயமரியாதைப் பிரச்சார ஸ்தாபனத்தைப் பதிவு செய்தார். திராவிடர் விவசாய தொழிலாளர் சங்கங்கள், தென்பகுதி ரயில்வே தொழிலாளர் யூனியன் போன்றவற்றைத் துவக்கினார்.

1953 சென்னை தமிழ்நாட்டுக்கே சொந்தமானது என்று முழங்கினார். நாடெங்கும் கணபதி உருவப் பொம்மையை, புத்தர் விழாக் கொண்டாடி, பொதுக்கூட்டத்தில்

உடைக்கும்படி வேண்டினார். தமிழகமெங்கும் பல்லாயிரக்கணக்கான பிள்ளையார் பொம்மைகள் உடைந்து நொறுங்கின. சுயமரியாதைத் திருமணம் செல்லாது என்ற நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டு வெகுண்டெழுந்தார்

இரண்டாம் முறையாக ஆகஸ்ட் 1 ஆம் நாளில் ரயில்நிலையங்களில் இந்திப் பெயர்ப்பலகையை தார்கொண்டு அழிக்கும் கிளர்ச்சியை நடத்தினார். ஈரோடு சண்முகவேலாயுதத்தின் "ஈரோட்டுப்பாதை" எனும் வார இதழைத் துவக்கிவைத்தார்.

1954 மூன்றாம் முறையாக ரயில் நிலையங்களில் உள்ள பெயர்ப் பலகையில் இந்தி எழுத்துக்களை அழிக்கும் கிளர்ச்சியை நடத்தினார். ஈரோட்டில் புத்தர் கொள்கை மாநாடு; குலக்கல்வித்திட்ட எதிர்ப்பு மாநாடு ஆகியவற்றை நடத்தினார். நாகையில் திராவிடர் கழக மாநாட்டில் குலக்கல்வி ஒழிப்பு பிரச்சாரப்படை அமைக்கப்பட்டுப் பயணம் தொடங்கியது.

குலக்கல்வித் திட்டத்திற்கு நாடெங்கும் எழுந்த எதிர்ப்பினால் ராஜாஜி பதவி விலகியபின், காமராசர் முதலமைச்சர் ஆனார். குலக்கல்வித் திட்டத்தை காமராசர் ஒழித்தார். காமராசர் ஆட்சியைப் பெரியார் ஆதரித்தார். பர்மாவில் நடைபெற்ற உலக பவுத்தர் மாநாட்டில் கலந்து கொண்ட பெரியார் , அங்கு அம்பேத்கர், இலங்கை புத்தமத அறிஞர் மல்லல சேகரா ஆகியோரைச் சந்தித்து உரையாடினார். இரண்டாம் முறையாக மலேயா சுற்றுப்பயணம் மேற்கொண்டார். நாடெங்கும் இராமாயண எதிர்ப்புப் பிரச்சாரம் நடத்தினார். நடிகவேள். எம்.ஆர்.ராதா "இராமாயணம்" நாடகம் நடத்தி இராமனின் இழிசெயலை அம்பலப்படுத்தினார். இராமாயண நாடகத்தின் விளைவாக அரசினரால் நாடகத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1955 இந்தித் திணிப்பை எதிர்த்து, தேசியக் கொடியை எரிக்கும் கிளர்ச்சியை நடத்தப் போவதாக அறிவித்தார். காமராசர் உறுதிமொழியை ஏற்று, அக்கிளர்ச்சியை ஒத்திவைத்தார்.

1956 தட்சிணப்பிரதேசம் எனும் கேடான அமைப்பைக் கைவிடுமாறு காமராசர், நேரு ஆகியோரைத் தந்தி மூலம் கேட்டுக் கொண்டார். காமராசர் தட்சிணப் பிரதேச அமைப்பை நிராகரித்தார். இராமன் பட எரிப்புக் கிளர்ச்சி தொடர்பாகப் பெரியார் கைது செய்யப்பட்டார். மொழிவாரிப் பிரிவினைக்குப்பின் தனித் தமிழ்நாடு பிரிவினைக் கொள்கையை வலியுறுத்தினார்.

1957 திருச்சியில் வினோபா பாவேயைச் சந்தித்து உரையாடினார். திருச்சி கலெக்டர் மலையப்பன் மீது பார்ப்பன நீதிபதிகள் அளித்த தீர்ப்புக்கு எதிராகப் பேசியதாக கோர்ட் அவமதிப்புக் குற்றம் சுமத்தப்பட்டு, பெரியார் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்குத் தொடர்பாக நீதிமன்றத்தில் பெரியார், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஸ்டேட்மெண்டை தாக்கல் செய்தார். தஞ்சையில் 03.11.1957 இல் நடைபெற்ற ஜாதி ஒழிப்பு மாநாட்டில் பெரியாருக்கு எடைக்கு எடை வெள்ளி ரூபாய் நாணயங்கள் அளிக்கப்பட்டன. அம்மாநாட்டில் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப்பிரிவைக் கொளுத்தும் கிளர்ச்சியை அறிவித்தார். அக்கிளர்ச்சியில் பல்லாயிரம் பேர் கலந்து கொண்டனர். சில ஆயிரம் பேர் சிறைபிடிக்கப்பட்டனர். சிறையில் இருவரும், விடுதலையானவுடன் உடல்நலிவுற்று இருபதுபேரும் மாண்டனர். பார்ப்பனருக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வகையில் பேசியதாகக் குற்றம் சுமத்தி நீதிமன்றத்தால் ஆறுமாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையேகினார்.

1958 சோசலிச இயக்கத் தலைவர் டாக்டர் ராம் மனோகர் லோகியா பெரியாரைக் கண்டு உரையாடினார். பல மாதங்களாக சென்னை முரளி கபே முன் நடைபெற்ற பிராமணாள் பெயர் அழிப்புக் கிளர்ச்சி வெற்றிபெற்றது.

திராவிடர் கழகத்தின் சார்பில் பல மாவட்டங்களில் நடைபெற்ற சுதந்திரத் தமிழ்நாடு மாநாடுகளில் பெரியாரும் 'நாம் தமிழர்' இயக்கத் தலைவர் சி.பா. ஆதித்தனாரும் கலந்து கொண்டனர். திருச்சி பெரியார் மாளிகையில் தோழர் கி. வீரமணி மோகனா வாழ்க்கை ஒப்பந்தத்தை 7.12.58இல் பெரியார் நடத்தி வைத்தார். புரட்சிக் கவிஞர் வாழ்த்துக் கவிதை வழங்கிச் சிறப்பித்தார்.

1959 வடநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு லக்னோ, டில்லி, கான்பூர், பம்பாய் முதலிய இடங்களுக்குச் சென்று பகுத்தறிவு சுயமரியாதைக் கொள்கைப் பிரச்சாரம் செய்தார். முத்தமிழ்க் காவலர் கி. ஆ.பெ. விசுவநாதம் நடத்திய 'ஆகாஷ்வாணி' பெயர் ஒழிப்புக் கிளர்ச்சிக்கு ஆதரவு நல்கினார்.

1960 தமிழ்நாட்டுப் பிரிவினையை வலியுறுத்தி, தமிழ்நாடு நீங்கிய தேசப்படத்தை எரிக்கும் கிளர்ச்சியை நடத்திச் சிறை ஏகினார்.

பல்லாயிரவர், தேசப்படத்தைக் கொளுத்திச் சிறை சென்றார்கள்.

1961 பொதுத் தேர்தலில் காமராசரை ஆதரிக்க வேண்டும் என்று பொது மக்களைக் கேட்டுக் கொண்டார்.

சென்சஸ் கணக்கெடுப்பின் போது "நாத்திகர்" என்று கூறும்படி திராவிடர்கழகத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

1962 பொதுத்தேர்தலில், உடல்நலம் குன்றிய நிலையிலும், கடுமையாக உழைத்து, காமராசருக்கு ஆதரவு திரட்டி வெற்றியைத் தேடித் தந்தார். சென்னையில் 'வாக்காளர்' மாநாட்டை நடத்தினார். தோழர் கி. வீரமணி அவர்கள் திராவிடர் கழகத்துக்கு முழுநேரத் தொண்டராக வர இசைந்தமையறிந்து மகிழ்ந்து, பெரியார் அவரைப் பாராட்டி ஆகஸ்ட் 10ஆம் நாள் 'விடுதலை'யில் "வரவேற்கிறேன்" என்று தலையங்கம் தீட்டினார்.

1963 கட்சிப்பணிக்காக, முதலமைச்சர் பொறுப்பை விட்டு விலகத் தீர்மானித்த காமராசருக்கு பெரியார் தனது எதிர்ப்பைத் தெரிவித்து, அவர் விலகுவது, 'தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் , காமராசருக்கும் தற்கொலையாக முடியும்' என்று முன் கூட்டியே தந்தி மூலம் அறிவித்தார். பெரியார் திடலில் 'ராதா மன்றம்' திறப்பு விழாவை நடத்தினார்.

1964 நில உச்சவரம்புச் சட்டம் செல்லாது என உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து நாடெங்கும் சுப்ரீம் கோர்ட் கண்டன நாள் கடைப்பிடிக்க அறிவுறுத்தினார். புரட்சிக்கவிஞர் 21.04.1964இல் மறைவுக்குப் பெரிதும் வருந்தினார்.

1965 பெரியார் வேண்டுகோளின்படி திராவிடர் கழகத்தினரால் நாடெங்கும் 'இராமாயணம்' கொளுத்தப்பட்டது. பார்ப்பனர், பத்திரிகைகாரர்கள் தூண்டுதலின் பேரில் இந்தி எதிர்ப்புப் போரில் நிகழ்ந்த வன்முறையைக் கண்டித்தார். பெரியார் அளித்த நன்கொடையால் கட்டப்பட்ட திருச்சி ஈ.வெ.ரா. அரசினர் கலைக் கல்லூரியை முதலமைச்சர் பக்தவத்சலம் திறந்து வைத்தார்.

1966 சங்கராச்சாரியாரை பகிஷ்கரிக்க அவர் சென்ற இடமெல்லாம் கருப்புக்கொடி காட்டச் செய்தார். 'பசுவதை' என்ற பெயரால் டில்லியில் காமராசர் வீட்டுக்குத் தீ வைக்க முயன்ற பார்ப்பனக் கூட்டத்தைக் கண்டித்து, காமராசர் கொலை முயற்சிக் கண்டன நாள் கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தினார்.

1967 பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது.

அறிஞர் அண்ணா, முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பார்ப்பனச் சூழ்ச்சிக்கு ஆட்படாமல், ஆட்சியை பெரியாருக்குக் காணிக்கையாக்கினார். பெரியார் ஆதரவு நல்கினார். பெரியார் மகிழும்வண்ணம், சுயமரியாதைத் திருமணச் சட்ட முன்மொழிவு, தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம், இந்தியை ஒழிக்கும் வகையில் இரு மொழித்திட்டம் ஆகிய முப்பெருஞ் சாதனைகளை அண்ணாவின் ஆட்சி நிகழ்த்தியது.

தஞ்சை மாவட்டம் விடயபுரத்தில் 24,25.05.1967 நாட்களில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில், பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்டு உலகுக்கு அளிக்கப்பட்ட புகழ்பெற்ற கடவுள் மறுப்பு வாசகம் வருமாறு;

"கடவுள் இல்லை, கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை.

கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்;

கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்;

கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி"

திருச்சியில் பெரியார் சிலையை காமராசர் திறந்தார்.

1968 சுயமரியாதைத் திருமணச்சட்டம் ஜனவரி 17இல் நடைமுறைக்கு வந்தது கண்டு மகிழ்ந்தார். தமிழ் நாடெங்கும் டில்லி ஆதிக்கக் கண்டன நாள் கடைப் பிடிக்கச் செய்தார். வடநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு லக்னோவில் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மாநாட்டில் உரையாற்றினார்.

1969 தமிழ்நாடு பெயர் மாற்றம் 14.01.1969 முதல் நடைமுறைக்கு வந்தது குறித்து மகிழ்ந்தார். அறிஞர் அண்ணா மறைவுக்குப் பெரிதும் வருந்தி இரங்கலுரை பகன்றார். நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. இது 4 கோடி மக்களையும் பொறுத்த பரிகாரம் காண முடியாத துக்க சம்பவமாகும் என்று குறிப்பிட்டார். ஜாதி இழிவை ஒழிக்கக் கோவில் கருவறை நுழைவுக் கிளர்ச்சியை அறிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற அண்ணா மறைவு இரங்கல் கூட்டத்தில் பெரியார், இந்திராகாந்தி, ராஜாஜி ஆகியோர் ஒரே மேடையில் உரையாற்றினர்.

1970 'உண்மை' எனும் பகுத்தறிவு இதழைத் துவக்கினார். முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோளுக்கு இணங்கி, கோவில் கருவறை நுழைவுப் போராட்டத்தை ஒத்திவைத்தார்.

சட்டநாதன் தலைமையிலான பிற்பட்டோர் நலக் குழுவினர் பெரியாரைச் சந்தித்து அரிய ஆலோசனைகளைப் பெற்றனர். உலகநாடுகள் அவையைச் சேர்ந்த கல்வி , அறிவியல் பண்பாட்டுக் கழக மன்றம் (UNESCO) 27.06.1970 இல் பெரியார் அவர்களுக்கு 'விருது' வழங்கிச் சிறப்பித்தது.

விருது வாசகம் வருமாறு: "பெரியார்-புது உலகின் தொலை நோக்காளர்; தென் கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்; சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை; அறியாமை, மூடநம்பிக்கை, பொருளற்ற பழக்கவழக்கங்கள், இழிவான நடவடிக்கைகள் ஆகியவற்றின் கடும் எதிரி ".

தமிழ்நாடெங்கும், சிந்தனையாளர் கழகங்கள், பகுத்தறிவாளர் கழகங்களைத் தொடங்கினார். பம்பாயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தார். டாக்டர் எஸ்.சந்திரசேகர் பெரியாரைக் கண்டு குடும்பநலத் திட்டம் பற்றி உரையாடினார்.

1971 "கலைஞர் ஆட்சியில்" அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் எனும் சட்டம் நிறைவேறியது.

பெரியாரின் தங்கை 'குடிஅரசு' பதிப்பாசிரியரான கண்ணம்மாள் 25.02.1971 இல் மறைந்தார்.

சேலத்தில் பெரியார் கூட்டிய மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் இராமன் உருவப் பொம்மை செருப்பால் அடிக்கப்பட்டது. பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பெருவெற்றி பெற்று, கலைஞர், மீண்டும் முதலமைச்சர் ஆனார். பெரியார் மகிழ்ந்தார். **"மாடர்ன் ரேஷனலிஸ்ட்"** என்னும் ஆங்கில இதழைத் துவக்கினார்.

1972 22.02.1972 இல் ஈழத் தந்தை செல்வநாயகம் பெரியார் திடலுக்கு வந்து பெரியாரை சந்தித்து உரையாடினார். டில்லி அரசின் தாமிர பத்திர விருதை இந்திரா காந்தி வழங்க, அதனை கலைஞர் வாயிலாக பெற்றார். தமிழ்நாடு அர்ச்சகர் சட்டம் செல்லாது என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பைக் கண்டு பெரியார் வெகுண்டெழுந்தார்.

1973 பெரியார் பிறந்தநாளில் எம்.ஜி.ஆர் பெரியார் திடலுக்கு வந்து பெரியாரைச் சந்தித்து நேரில் வாழ்த்தியதுடன் ரூ 5000/- பணமுடிப்பும் அளித்தார். மதுரையில் கருஞ்சட்டைப்படை மாநாடு நடத்தினார். கடும் குளிரில் தமிழகமெங்கும் பிரச்சாரத் தொடர்பயணம் மேற்கொண்டார். சென்னையில் நடத்திய இழிவு ஒழிப்பு மாநாட்டில் கோவில் கருவறை நுழைவுக் கிளர்ச்சியை 24.01.1974 இல் நடத்தப்போவதாக அறிவித்தார்.

சென்னை தியாகராயர் நகர் சிந்தனையாளர் மன்றத்தின் சார்பில் 19.12.1973 இல் நடைபெற்ற கூட்டத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இறுதிப் பேருரையை நிகழ்த்தினார்.

உடல் நலம் குன்றி, சென்னை பொது மருத்துவமனையிலும், பின்னர் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டார். கவலைக்கிடமான நிலையை அடைந்து 24.12.1973 அன்று காலை 7.40 மணிக்கு இயற்கை எய்தினார்.

பெரியார் மறைவுக்கு மாநில அரசே துயரத்தைக் கடைப்பிடிக்கும் என்று முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அறிவித்தார். அரசுப்பதிவு இதழிலும் (Gazette) பெரியார் மறைவுச் செய்தியை தமிழக அரசு வெளியிட்டுத் தனிச் சிறப்புச் செய்தது. பெரியார் இயற்கை எய்திய நாளை அரசு விடுமுறை நாளாக அறிவித்தது.

இலட்சக்கணக்கானோர் தாங்கொணாத் துயரத்துடன் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள அந்தத் துயரக் கடலின் ஊடே பல்லாயிரக்கணக்கான கருஞ்சட்டைத் தொண்டர்கள் பெரியார் வாழ்க! பெரியார் வாழ்க! என்று எழுப்பிய முழக்கம் சோகக் கடலின் உணர்ச்சி வெள்ளம். வீரவணக்கமாக மாற்றப்பட்டது. அரசு மரியாதையுடன் 25.12.1973 மாலை 5.05 மணிக்கு சென்னை பெரியார் திடலில் அன்னாரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

பெரியார் மறைவுக்குப்பின் தலைவராகப் பொறுப்பேற்று அன்னை ஈ.வெ.ரா மணியம்மையார் அவர்கள், அரியபணியாற்றினார். அதன்பின் "விடுதலை" ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமைப் பொறுப்பேற்று, அய்யா பெரியாரின் அடியொற்றி அருந்தொண்டாற்றி வருகிறார்.

❐

# பெரியார் 1000

## வினா - விடை

### 1. தந்தை பெரியார் வாழ்க்கை வரலாற்றுத் தகவல்கள்

1. பெரியார் பிறந்த நாள் - மாதம் - ஆண்டு **விடை:17.9.1879**

2. தந்தை பெரியார் எத்தனை ஆண்டுகள் பள்ளியில் படித்தார்? **விடை: 5 ஆண்டுகள்**

3. தந்தை பெரியாரின் ஊர்? **விடை: ஈரோடு**

4. பால்ய பருவத்தில் பெரியாரைச் சுவீகாரம் பெற்றவர் யார்? **விடை: பெரியாரின் தகப்பனாருக்குச் சிறிய தகப்பனாரின் மனைவி**

5. சிறுவயதிலேயே ஜாதி வேற்றுமை கருதாமல் எல்லோரிடமும் பழகிய பெரியாருக்கு பெற்றோர் கொடுத்த தண்டனை? **விடை: கால்களில் விலங்கு பூட்டப்பட்டது.**

6. தந்தை பெரியாருக்குத் திருமணம் நடைபெற்றபோது வயது **விடை:19**

7. தந்தை பெரியாரின் மனைவி பெயர் **விடை: நாகம்மையார்**

8. தந்தை பெரியார் - நாகம்மையார் இல்வாழ்க்கை நடைபெற்ற ஆண்டுகள் **விடை: 35**

9. பெரியாருக்குப் பிறந்த பெண் குழந்தை எத்தனை மாதங்களில் இறந்தது? **விடை: அய்ந்து மாதங்களில்**

10. பெரியார் கேழ்வரகுக் களி சாப்பிட்டுத் தலையணையில்லாமல், வெறும் பாயில் படுத்துப் பழகி வந்தார். ஏன்? **விடை: சிறை வாழ்க்கைக்கு ஒத்திகை பார்க்க**

11. “குடிஅரசு” இதழ் எந்த ஊரிலிருந்து வெளிவந்தது? **விடை: ஈரோடு**

12. பெரியார் துறவுக்கோலம் பூண்டது எந்த ஊரில்? **விடை: காசி**

13. தந்தை பெரியார் துறவுக் கோலத்தில் காசியில் தங்கிய ஆண்டு? **விடை: 1905**

14. ’ரிவோல்ட்’ இதழின் ஆசிரியர், பதிப்பாளர், மற்றும் வெளியீட்டாளர், துணை ஆசிரியர் யார்? **விடை: ஈ.வெ.ராமசாமி, எஸ்.இராமநாதன், ஸ்ரீமதி நாகம்மாள், குத்தூசி குருசாமி**

15. விதவை மணத்தை வலியுறுத்திய பெரியார் தமது குடும்பத்தில் 1909ஆம் ஆண்டிலேயே யாருக்கு விதவைத் திருமணத்தை நடத்தி வைத்தார்? **விடை: தங்கை பொன்னுத்தாயி அம்மாளின் மகள் அம்மாயி அம்மாளுக்கு**

16. கோயிலுக்குப் போகும் தம் மனைவியின் மனப் போக்கை மாற்றிடப் பெரியார் கையாண்ட வழிமுறை யாது? **விடை: ரவுடிகளை விட்டு மிரட்டுவதுபோல் நடிக்க வைத்தார்**

17. தேவஸ்தான கமிட்டித் தலைவராக இருந்து கோயில்களில் பல சீர்திருத்தங்களைச் செய்தவர் யார்? **விடை: பெரியார்**

18. பெரியாரின் தந்தை இறந்த ஆண்டு எது? **விடை:1911**

19. ஈரோட்டில் பெரியார் வகித்த பதவி **விடை: நகராட்சித் தலைவர்**

20. தந்தை பெரியார் ஈரோடு நகரசபைத் தலைவராகப் பணியாற்றிய காலம் **விடை: 1916-1919**

21. ஈரோட்டில் பிளேக் நோய் பரவியபோது பெரியார் செய்த பணி யாது? **விடை: பிளேக் நோயினால் இறந்தவர்களைத் தோளில் சுமந்து அடக்கம் செய்தார்.**

22. தந்தை பெரியாரின் அண்ணன் பெயர்? **விடை: ஈ.வெ.கிருஷ்ணசாமி**

23. ஈ.வெ.கிருஷ்ணசாமி தன் சகோதரர் பெரியாரை எப்படி அழைப்பார்? **விடை: தம்பி ராமு**

24. பெரியார் தன் தமக்கையின் பெண்ணுக்குச் சூட்டிய பெயர்? **விடை: காந்தி**

25. பெரியாரின் ஈரோட்டு இல்லத்திற்கு வந்த நேரு குடும்ப உறுப்பினர்? **விடை: மோதிலால் நேரு**

26. ...................... என மூன்று தளங்களிலும் இயங்கியவர் பெரியார். **விடை: கருத்தாளர் - பிரச்சாரகர் - களப்பணி வீரர்**

27. ஈரோட்டில் சிதம்பரனார் பூங்கா அருகில் 30 ஏக்கர் நிலத்தை 3000 ரூபாய்க்கு பெரியார் வாங்கினார். செல்வக் குமார முதலியாரிடம் கடன் வாங்கிப் பெற்ற இடத்தை யாருடைய பெயரில் சாசனம் செய்தார்? **விடை: பெரியார் தம் தந்தை பெயரில்**

28. 'பெரியார்' எனும் அடைமொழி முதன் முதலில் எப்போது பயன்படுத்தப்பட்டது? **விடை: 20.7.1928 சென்னை திருவல்லிக்கேணியில் பெரியார் படத்தைத் திறந்து வைத்து டி.கே. சிதம்பரநாதமுதலியார் பேசும்போது**

29. தந்தை பெரியார் 1925ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் கலந்து கொண்ட மாநாடு எது? **விடை: இசை வேளாளர் மாநாடு**

30. "எனது சரித்திரத்தில் எனக்குத் தலைவனே இருந்ததில்லை" யார் கூறியது? **விடை: பெரியார்**

31. 10.2.1960 'விடுதலை'யில் 'தோழர்களுக்கு வணக்கமான விண்ணப்பம்' என்று தலைப்பிட்டு எழுதிய பெரியார் திருமண விழாவில் கலந்து கொள்ள கேட்ட தொகை எவ்வளவு? **விடை: ரூபாய் 150**

32. வலியையும், நோயையும், மூத்திரப் பையையும் சுமந்து கொண்டு மக்களுக்காகப் போராடிய ஈடிணையற்ற போராளி? **விடை: பெரியார்**

33. லெனினுடன் பணியாற்றிய எம்.என்.ராய் - தந்தை பெரியாருடன் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்திய ஆண்டு? **விடை: 1941**

34. தொடக்கத்தில் பெரியாரின் சென்னை முகவரி? **விடை: 1, மீரான் சாயபு தெரு, சென்னை**

35. தந்தை பெரியாரால் வாங்கப்பட்ட திருச்சி பெரியார் மாளிகை பத்திரப் பதிவு நடைபெற்ற நாள்? **விடை: 14.7.1950**

36. ஜெயிலிலே 'சி கிளாஸ்' கைதியாக மண் சட்டியிலே கஞ்சியும் சோற்று மொத்தையும் வாங்கி கல்லையும் புழுவையும் பொறுக்கி எடுத்துவிட்டுச் சாப்பிட்டவர் யார்? **விடை: பெரியார்**

37. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றம் சாட்டப் பெற்ற தந்தை பெரியார் நீதிமன்றத்தில் கொடுத்த அறிக்கை எத்தனை பக்கங்கள் உடையது? **விடை: 30**

38. 15.1.1940 அன்று பம்பாயில் பெரியாருக்கு விருந்து வைத்து உபசரித்தார் அம்பேத்கர். விருந்தில் கலந்து கொண்ட பத்திரிகையாளர்? **விடை: 'டைம்ஸ் ஆப் இந்தியா' சீப் ரிப்போர்ட்டர்**

39. திருவண்ணாமலைக்கருகில் மங்கலம் கிராமத்தில் 30.7.1947 அன்று திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் யாருடைய தலைமையில் நடைபெற்றது? **விடை: அருணாசல அய்யர்**

40. பெரியாரின் வழிகாட்டுதலோடு தேவதாசி முறை ஒழிப்புச் சட்டத்தை முன்மொழிந்து பெரியாரின் பாராட்டுதலைப் பெற்ற பெண்மணி யார்? **விடை: டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி**

41. '55 கோடி மக்கள் மீது 6 கோடி மக்கள் போர் தொடுத்திடவா?' என்று எந்தக் கூட்டத்தில் பெரியார் முழங்கினார்? **விடை: 5.12.1971, பாக்கிஸ்தான் கண்டனக் கூட்டம்**

42. காந்தியடிகள் மறைந்தபோது வானொலியில் பெரியார் வலியுறுத்திய கருத்து யாது? **விடை: அமைதி, சகிப்புத் தன்மை**

43. கிளர்ச்சி செய்த காவல்துறையினர்க்கு ஆதரவாக முதல் குரல் கொடுத்தவர்? **விடை: பெரியார்**

44. ‘எனக்குப் பெண்டு பிள்ளை இல்லை, நான் செத்துப் போனால் எனக்காக, அழுகின்ற நண்பர் பெரியாராகத்தான் இருக்க முடியும்’ என்று சொன்னவர்? **விடை: திரு.வி.க**.

45. பெரியார் கும்பகோணத்தில் நள்ளிரவு 2:15 மணிக்குக் கைதுசெய்யப்பட்டு திருச்சிக்குக் கொண்டு சென்று, மீண்டும் தஞ்சைக்கு வந்து, பின்னர் அய்யம்பேட்டை ரயில் நிலையத்தில் இறக்கி, சென்னை செல்லும் ரயிலில் ஏற்றி அலைக்கழிக்கப்பட்டது எப்போது? **விடை: 1948, டிசம்பர் 18**

46. சமதர்மம், பொதுவுடைமை பற்றிப் பெரியார் பேசியதைக் கேட்ட ஒருவர் **நான் உங்கள் மனைவி நாகம்மையைத் திருமணம் செய்ய விரும்புகிறேன்.** நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டபோது பெரியாரின் பதில்? **விடை: இக்கேள்வி நாகம்மையாரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி**

47. வருமானவரித் துறைக்குக் கடிதம் எழுதி பெரியாரின் சொத்துகளுக்கு வரி விதிக்கச் சொன்ன இருவர்? **விடை: குருசாமி, தி.பொ. வேதாசலம்**

48. பெரியார் மறைந்த நாள்? **விடை: 24.12.1973 காலை 7:22 மணி**

49. பெரியார் உடல் எங்கு புதைக்கப்பட்டது? **விடை: சென்னை பெரியார் திடலில்**

50. பெரியார் கலந்துகொண்ட கடைசி மாநாட்டின் பெயர் என்ன? **விடை: தமிழர் சமுதாய இன இழிவு ஒழிப்பு மாநாடு**

51. பெரியார் கடைசியாக எந்தக் கூட்டத்தில் பேசினார்? **விடை: 19.12.1973 தியாகராயர்நகர்**

52. காமராசர் முதலமைச்சராகப் பதவி ஏற்றவுடன் யாரைச் சந்தித்து மரியாதை செய்தார்? **விடை: தந்தை பெரியாரைச் சந்தித்து வணங்கி மாலை சூட்டினார்**

53. அண்ணா வெற்றி பெற்று தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன் 02.03.1967 அன்று தந்தை பெரியாரை திருச்சியில் சந்தித்தார் உடனிருந்தவர்கள் யார்? **விடை: பெரியார், மணியம்மை, அண்ணா, நாவலர், கலைஞர், அன்பில் தருமலிங்கம்**

54. 18 ஆண்டுகள் பிரிவுக்குப் பின்னர் தந்தை பெரியாரைச் சந்திக்க அண்ணா திருச்சிக்கு வருகிறார். அண்ணா மாப்பிள்ளை போல் வந்தார் என்று கூறும் பெரியார், தாம் எப்படி இருந்ததாகத் தெரிவிக்கிறார்? **விடை: வெட்கப்பட்ட மணப்பெண் மாதிரி**

55. பெரியார் அருங்காட்சியகம் எந்த ஊரில் அமைக்கப்பட்டு உள்ளது? **விடை: சென்னை**

56. தந்தை பெரியார் பயன்படுத்திய பொருட்கள் அவர் வாழ்ந்த இல்லங்களில் வைக்கப்பட்டுள்ளன. எங்கு மிகுதியாக உள்ளன? **விடை: ஈரோடு**

57. அனைத்திந்திய இந்து மகா சபைத் தலைவர் டாக்டர் மூஞ்சே - பெரியார் சந்திப்பு 1944இல் எவ்வூரில் நடைபெற்றது? **விடை: திருச்சி**

58. நாகம்மையார் குழந்தைகள் காப்பகத்தில் வளரும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு என்ன முன்னெழுத்து பயன்படுத்தப்படுகிறது? **விடை:** EVRM

59. ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்காகத் திருச்சியில் காப்பகத்தை உருவாக்கிய பெரியார் சூட்டிய பெயர்? **விடை: நாகம்மையார் அனாதை குழந்தைகள் காப்பகம்**

60. யாத்திரை ஸ்தலம் என்றால் பெரியார் கூறும் விளக்கம்? **விடை: நல்ல வியாபார ஸ்தலம்**

61. பட்டுக்கோட்டை அழகிரிசாமி மறைந்தபின் அவருடைய குடும்பத்திற்கு கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனைக் கொண்டு பெரியார் வழங்கச் செய்த நிதி? **விடை: ரூபாய் 6000**

62. பெரியாரின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்ட குடியரசுத் தலைவர் யார்? **விடை: கியானி ஜெயில் சிங்**

63. தந்தை பெரியாரின் 78ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய இந்தியத் துணை ஜனாதிபதி

யார்? **விடை: டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன்**

64. பெரியார் - ஆச்சாரிய வினோபாபாவே சந்திப்பு எப்போது? எங்கு நடைபெற்றது? **விடை: 18.1.1957 திருச்சி**

65. 1970ஆம் ஆண்டு வானொலியில் ஒலிபரப்ப தந்தை பெரியாரைப் பேட்டி எடுத்த மத்திய சுகாதாரத் துறை ராஜாங்க அமைச்சர் பெயர் என்ன? **விடை: டாக்டர் எஸ்.சந்திரசேகரன்**

66. பெரியார் - சர் சி.வி.ராமன் கலந்து கொண்ட நிகழ்ச்சி எங்கு எவ்வாண்டில் நடைபெற்றது? **விடை: 1965, கோவை**

67. 23.1.1954 அன்று ஈரோட்டில் பெரியார் நடத்திய புத்தர் மாநாட்டின் தலைவர் யார்? **விடை: டாக்டர் ஜி.டி. மல்லலசேகரா**

68. 23.1.1954 அன்று ஈரோட்டில் பெரியார் நடத்திய புத்தர் மாநாட்டின் திறப்பாளர் யார்? **விடை: பி.என்.ராஜ்போஜ்**

69. "ஈரோடு முனிசிபல் கவுன்சில் அதிகார எல்லைக்குட்பட்ட ஸ்தாபனங்களில் பெண்களுக்கு உத்தியோகம் வழங்கப்படவேண்டுமென இந்தக் கவுன்சில் தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானத்தை ஈரோடு முனிசிபல் கவுன்சிலுக்கு அனுப்பிய கவுன்சிலர் யார்? **விடை: எஸ்.ஆர். கண்ணம்மாள்**

70. "பவுத்த மதத்தில் சேர முடிவு செய்துவிட்டேன். நீங்களும் பவுத்த மதத்தில் சேர்ந்து விடுங்கள்" என்று பெரியாரை அழைத்தவர்? **விடை: அம்பேத்கர்**

71. தமிழ்நாடு அரசு நடத்திய புத்தரின் 2500ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவின் சிறப்பு விருந்தினர் யார்? **விடை: பெரியார்**

72. அண்ணா தந்தை பெரியாரை முதன்முதலில் சந்தித்த ஆண்டு? **விடை: 1934**

73. திராவிடர் கழகத்திலிருந்து பிரிவதற்கு முன் கோவையில் தந்தை பெரியாரும் அண்ணாவும் கலந்து கொண்ட மாநாட்டின் பெயர் என்ன? **விடை: முத்தமிழ் மாநாடு**

74. பெரியாருக்கும் அண்ணாவுக்கும் கருத்து வேறுபாடு; பேசிக் கொள்வதில்லை. இருவரும் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுகிறார்கள். பெரியார் தம்மை அழைக்க வந்த வேனில் அண்ணாவை ஏற்றிக் கொள்கின்றார். இச்சம்பவம் எந்த ஊர்ச் சிறை வாசலில் நடைபெற்றது? **விடை: திருச்சி மத்திய சிறை**

75. "சென்னை மருத்துவமனையிலும், விமான நிலையத்திலும் தாங்கள் கவலையுடனும், கலக்கத்துடனும் இருந்த தோற்றம் இப்போதும் என் முன் தோன்றியபடி இருக்கிறது" தந்தை பெரியாரின் தோற்றம் குறித்து எழுதியவர்? **விடை: அண்ணா**

76. "நாக்கில் தழும்பு ஏறும் வரை உங்களுக்காகப் பேசுவேன். கை சாய்ந்து கீழே தொங்கும் வரை உங்களுக்காக எழுதுவேன். கால்கள் துவளும் வரை உங்கள் பட்டி தொட்டிகளில் எல்லாம் நடப்பேன்" கூறியவர்? **விடை: பெரியார்**

77. "எனக்கு உங்கள் வரவேற்பு தேவையில்லை. என் வீட்டு மாட்டுக் கொட்டகையில் 2000, 3000த்துக்கு மேற்பட்ட வரவேற்புப் பத்திரங்கள் குவியலாகக் கிடக்கின்றன. உங்கள் பணமோ ஓட்டோ எனக்குத் தேவையில்லை' என்று கூறியவர்? **விடை: பெரியார்**

78. "இன்றைய மந்திரிகள் போன்றவர்களைவிட எவ்வளவோ மேலானவன்; உலகம் சுற்றியவன்; பூரண பகுத்தறிவுவாதி. சொத்து சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லாதவன்; சொந்தத்திற்கும் பணம் சேர்க்க வேண்டிய தேவையில்லாதவன்; ஜாதி உணர்ச்சி ஜாதிப் பற்று இல்லாதவன்; என்ன செய்தாவது ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பவன்" இப்படி தன்னைப் பற்றி எழுதியவர் யார்? **விடை: பெரியார்**

79. 16.1.1946 அன்று பெரியார் பேசும்போது எதிரிகள் கல்மழை பொழிய தலையில் துண்டைக் கட்டிக் கொண்டு ஒரு மணி நேரம் பெரியார் உரை நிகழ்த்திய ஊர் எது? **விடை: சின்னாளப்பட்டி**

80. ஈரோட்டுக்கு அருகில் உள்ள ஈங்கூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் பெரியாருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் விரோதமாகச் செய்யப்பட்ட செயல்? **விடை: சாம்பல் வீச்சு**

81. 'என்னைப் பெற்ற ஏழைகள்' என்னும் கட்டுரையை பெரியார் எழுதிய ஆண்டு என்ன? **விடை: 1936**

82. 'ஈ.வெ.ரா.வுக்குத் தோன்றியது...' என்று தலைப்பிட்டு பெரியார் எழுதிய இலக்கிய வடிவம் எது? **விடை: சுயசரிதை**

83. பெரியாரும் அண்ணாவும் ஒரே நாளில் 18.9.1950 அன்று திருச்சி சிறையில் அடைக்கப்பட்டு ஒரே நாளில் 28.10.1950 அன்று விடுதலை செய்யப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட காரணம் என்ன? **விடை: பெரியாரின் 'பொன்மொழிகள்' அண்ணாவின் 'ஆரிய மாயை' நூல்கள் வகுப்பு துவேஷத்தை உண்டு பண்ணுவதாக குற்றம் சுமத்தியது அரசு.**

84. பெரியார் "பொன்மொழிகள்" நூலுக்கான தடை நீக்கப்பட்டது எப்போது? **விடை: 1979ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.இ.அ.தி.மு.க அரசு காலத்தில்**

85. அன்னை மணியம்மையார் எழுதிய எந்த நூலுக்கு தந்தை பெரியார் முன்னுரை எழுதியுள்ளார்? **விடை: கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே**

86. 'பெரியாரைப் பேண சில பெண்கள் முன் வரவேண்டும்' குடிஅரசு இதழில் வேலூர் அ.மணி எழுதுவது என்கிற பெயரில் பெரியார் எப்போது எழுதினார்? **விடை: 23.10.1943**

87. பெரியார் - மணியம்மையார் திருமணம் என்கிற ஏற்பாடு நடைபெற்ற நாள் எது? **விடை: 9.7.1949**

88. 70 வயதில் பெரியார் அவர்கள் அன்னை மணியம்மையார் அவர்களை மணம் செய்து கொண்டதற்கான காரணம்? **விடை: சொத்தையும் இயக்கத்தையும் பாதுகாக்கச் சட்டப்படி செய்த ஏற்பாடு**

89. பெரியார் அவர்களை அவருடைய தள்ளாத வயதிலும் குழந்தையைப் போல் போற்றிப் பாதுகாத்து 95 ஆண்டுகள் வாழ வைத்த பெண் யார்? **விடை: மணியம்மையார்**

90. தந்தை பெரியார் வாழ்ந்த ஈரோடு இல்லம் தற்போது எப்படி அழைக்கப்படுகிறது? **விடை: பெரியார் அண்ணா நினைவகம்**

91. ஈரோட்டில் உள்ள தந்தை பெரியார் வாழ்ந்த இல்லத்தைத் தமிழக அரசிடம் ஒப்படைத்தவர் யார்? **விடை: மணியம்மையார்**

92. சென்னை ராஜதானிக்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்ட முதல் குரல் கொடுத்தவர் யார்? **விடை: பெரியார்**

93. 1953இல் ஆந்திரம் மாநிலம் பிரிந்தபிறகு 'மீதியுள்ள சென்னை ராஜ்யம்' என்று குறிப்பிடுவது மகா மகாக் கேவலம் என்று கூறிய பெரியார், தமிழ்நாடு என்று அழைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய நாள்? **விடை: 2.1.1953**

94. இது பெரியாரின் புனைபெயர்? **விடை: நாடோடி**

95. பெரியாரின் புனைப் பெயர்களுள் இதுவும் ஒன்று. எது? **விடை: பழைய கருப்பன்**

96. பெரியார் தம் சொற்பொழிவில் அடிக்கடிப் பயன்படுத்தும் சொல்? **விடை: வெங்காயம்**

97. பெரியார் தம் எழுத்தில் அடிக்கடி பயன்படுத்தும் தொடர்? **விடை: 'கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்து கொள்வது போல'**

98. செயற்கைப் பல் நாவில் உரசி உரசி புண்ணானபோது பெரியார் எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்? **விடை: 16.3.1945 முதல் சென்னை பொது மருத்துவமனையில் பத்து நாள் தங்கிச் சிகிச்சை பெற்றார்.**

99. பெரியாருக்கு நாக்கிலே புண் வந்தபோது எந்த மருத்துவரிடம் மருத்துவம் பார்த்தார்? **விடை: டாக்டர் சுந்தரவதனம்.**

100. பெரியார் உயிரைக் காப்பாற்ற விடிய விடிய போராடிய மருத்துவர்கள்? **விடை: டாக்டர்**

**இராமச்சந்திரா, டாக்டர் பட், டாக்டர் ஜான்சன்**

101. தந்தை பெரியாரின் மருத்துவர்கள் ராமச்சந்திரா, பட், ஜான்சன் ஆகிய மூவருக்கும் 18.8.1973இல் எந்த ஊரில் பாராட்டு விழா நடந்தது? **விடை: தஞ்சாவூர்**

102. பெரியாரின் இறப்பு நிகழ்ந்த மருத்துவமனை? விடை: **வேலூர், சி.எம்.சி.**

103. பொதுமக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டு பெரியாருக்குப் பிரச்சார வேன் எத்தனை முறை வழங்கப்பட்டிருக்கிறது? **விடை: மூன்று முறை**

104. உளுந்தூர்பேட்டையில் கார் பழுதாகி விட்டதால் சென்னை செல்ல பெரியார் எந்த வாகனத்தில் ஏறினார்? **விடை: லாரி**

105. பெரியாரின் கார் எண் என்ன? பறிமுதல் செய்யப்பட்டது எப்போது? ஏலத் தொகை எவ்வளவு? **விடை: எம்.டி.எஸ். 401, ஆண்டு 1950, ஏலத்தொகை 835 ரூபாய்**

106. தந்தை பெரியார் 25 ஆண்டு காலத்தில் (1934 முதல் 1959 வரை) தாம் ஒப்புக்கொண்ட ஒரே ஒரு நிகழ்ச்சிக்கு மட்டும் போக முடியாமல் போனதற்குக் காரணம்? **விடை: கடுமையான வெள்ளத்தில் கார் சிக்கி ஓட முடியாமல் பழுதானதால்**

107. பெரியார் தம் வாழ்வில் நடந்த ‘முதல் தவறு’ என்று எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: கார் பழுதாகி 29.11.1959 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் போனதை**

108. தந்தை பெரியாருக்கு அரசு மரியாதை அளித்து அடக்கம் செய்த முதலமைச்சர் யார்? **விடை: கலைஞர் கருணாநிதி**

109. மத்திய அரசு பெரியாருக்கு அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு? **விடை: 1978**

110. தந்தை பெரியாருக்கு இந்திய அரசு சிறப்பு அஞ்சல் உறை வெளியிட்டது எப்போது? **விடை: 125ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவின்போது 17.9.2003**

111. ‘தமிழர் தலைவர்’ என்னும் பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதிய தமிழறிஞர் யார்? **விடை: சாமி.சிதம்பரனார்**

112. ‘தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு’ என்னும் நூலை எழுதிய கவிஞர் பெயர்? **விடை: கருணானந்தம்**

113. பெரியாரின் வாழ்க்கை வரலாறு எழுதிய சாமி.சிதம்பரனார், ‘தமிழர் தலைவர்’ என்று பெயர் சூட்டினார். பெரியார் வாழ்க்கை வரலாறு எழுதிய கி.வீரமணி சூட்டிய பெயர் யாது? **விடை: உலகத் தலைவர் பெரியார்.**

114. தந்தையின் கட்டளையை ஏற்று தேவஸ்தானக் குழுவில் இடம் பெற்ற பெரியார் செய்தது யாது? **விடை: கோயில் சொத்துகள் கொள்ளை போகாமல் தடுத்தார்.**

115. பெரியார் பகுத்தறிவாளர் கழகத்தை எப்போது தொடங்கினார்? **விடை: 6.9.1970**

116. கடும் புயலால் பாதிக்கப்பட்ட தனுஷ்கோடியை பெரியார் பார்வையிட்ட நாள்? உடன் சென்றவர்கள்? **விடை: 29.12.1964, பெரியார், மணியம்மை, சிதம்பரம், ரெங்கம்மாள் சிதம்பரம்**

117. தனுஷ்கோடி புயலால் பாதிக்கப்பட்டபோது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பெரியார் அனுப்பிய பொருள்? **விடை: பெட்ஷீட்**

118. உடல், பொருள், ஆவி அனைத்தையும் அளித்திட பெரியார் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது எப்போது? **விடை: சீனப் போரின் போது**

119. தந்தை பெரியார் 10,000 ரூபாயை எடுத்துக் கொண்டு சிறைச் சாலைக்கே சென்று வழக்கு நடத்த வைத்துக் கொள்ளுங்கள் என்று யாரிடம் கூறினார்? **விடை: என்.எஸ்.கிருஷ்ணன்**

120. ‘முதலமைச்சர் திரட்டும் தேசப் பாதுகாப்பு நிதிக்கு எல்லோரும் தாராளமாக உதவுங்கள்’ என்று கூறியவர் யார்? **விடை: பெரியார்**

121. திருச்சியில் கல்லூரி நிறுவ பெரியார் வழங்கிய நன்கொடை தொகை எவ்வளவு? **விடை: ரூ. 3.5 லட்சம்**

122. பெரியார் நிதி-நில உதவி கொண்டு திருச்சியில் நிறுவப்பட்ட தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அரசுக் கல்லூரியைத் திறந்து வைத்த முதலமைச்சர் யார்? **விடை: பக்தவத்சலம்**

123. திருச்சி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி தொடக்க விழாவில் நடந்த விசித்திரம் யாது? **விடை: பெரியாரைப் பேசச் சொல்லவில்லை**

124. தந்தை பெரியார் அளித்த நன்கொடையால் கட்டப்பட்டதுதான் திருச்சி அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள ஈ.வெ.ரா. மணியம்மையார் குழந்தைகள் பிரிவு. அளிக்கப்பட்ட நன்கொடை தொகை எவ்வளவு? **விடை: ஒரு லட்சம்**

125. அண்ணா உடல் நலம் குன்றியபோது மருத்துவச் செலவுக்காக பெரியார் அளிக்க முன்வந்த தொகை எவ்வளவு? **விடை: 25,000**

126. பத்திரிகை என் கருத்துகளை வெளியிடுவதே இல்லை ............... அதிபர் கஸ்தூரி சீனிவாசன் பி.டி.அய் செய்தி நிறுவனத்தை ஆரம்பித்தபோது அதில் என்னையும் பணம்போட சொன்னார் போட்டேன்? **விடை: இந்து**

127. அறிஞர் அண்ணா தந்தை பெரியாரை முதன்முதலில் எவ்வூரில் சந்தித்தார்? **விடை: திருப்பூர்**

128. எந்த ஊரை தந்தை பெரியார் தம் தாய் வீடு என்கின்றார்? **விடை: சேலம்**

129. பெரியார் அடிக்கடி செல்லும் மூன்று ஊர்கள்? **விடை: ஈரோடு, திருச்சி, நாகரசம்பட்டி**

130. பெரியார் அதிக நேரம் பேசிய பொதுக்கூட்டம் நடைபெற்ற ஊர் மயிலாடுதுறை. எவ்வளவு நேரம் பேசினார்? **விடை: நான்கு மணி நேரம் முப்பது நிமிடம்**

131. நான்கு மணி நேரம் முப்பது நிமிடம் பெரியார் தொடர்ந்து உரை நிகழ்த்திய பொதுக் கூட்டம் நடைபெற்ற ஊர் எது? **விடை: மயிலாடுதுறை**

132. பெரியார்மீது பாம்பு வீசப்பட்டது எந்த ஊரில்? **விடை: கடலூர்**

133. தந்தை பெரியார் அமர்ந்து கொண்டே பேசும் வழக்கத்தினை முதன்முதலில் எப்போது? எந்த ஊரில் மேற்கொண்டார்? **விடை: 21.10.1950, செம்பனார்கோவில்**

134. வெளியில் வீசப்பட்ட எச்சில் இலையில் இருந்த சோற்றை எடுத்து பெரியார் உண்டது எந்த ஊரில்? **விடை: காசியில்**

135. ‘திப்பு சுல்தான் நாள்’ விழாவில் பெரியார் கலந்து கொண்டது எப்போது? எங்கு? **விடை: 16.11.1946 - சென்னையில்**

136. வடலூர் ஞான சபையைப் பார்க்கவேண்டும் என்று சென்ற பெரியார்; ‘கொலை புலை தவிர்த்தவர்கள் மட்டுமே உள்ளே வரவும்’ என்ற வாசகத்தைக் கண்டு உள்ளே வர மறுத்துவிட்டார் என்று கூறியவர் யார்? **விடை: தவத்திரு ஊரன் அடிகள்**

137. பெரியாருக்கு துலாபார மாதம் என்று எதனைக் குறிப்பிடுவர்? **விடை: 1965, ஜூலை**

138. பெரியாருக்கு 76 வயதில் 76 பவுன் தங்கம் வழங்கிய ஊர்? **விடை: நாகப்பட்டினம்**

139. பெரியாருக்கு எடைக்கு எடை வெள்ளி நாணயம் வழங்கிய ஊர்? **விடை: தஞ்சாவூர்**

140. பெரியாருக்கு வெள்ளிச் சிம்மாசனம் எப்போது எந்த ஊரில் வழங்கப்பட்டது? **விடை: 4.11.1971, சேலம்**

141. தாதகாப்பட்டியில் பெரியாருக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புப் பொருள் யாது? **விடை: வெள்ளிச் சம்மட்டி**

142. இடைப்பாடியில் பெரியாருக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புப் பொருள் யாது? **விடை: வெள்ளித் தடி**

143. மேலக் கற்கண்டார் கோட்டையில் பெரியாருக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பு பொருள் யாது? **விடை: வெள்ளித் தட்டு**

144. பெரியாருக்கு சீமைக் கறவைப் பசுவினை அன்பளிப்பாக வழங்கிய ஊர்? **விடை: தஞ்சாவூர்**

145. 1965 ஜனவரி மாதத்தில் பெரியாருக்கு துலாபாரமாக வழங்கப்பட்ட வித்தியாசமான

பொருள்கள்? **விடை: பெட்ரோல், பிஸ்கட்**

146. பெரியார் தமக்குச் சிலை வைப்பதை வரவேற்றார். காரணம்? **விடை: கொள்கை பரவும்**

147. பெரியாருக்கு சிலை நிறுவ வேண்டும் என 1942ஆம் ஆண்டிலேயே திராவிட நாடு இதழில் எழுதியவர் யார்? **விடை: அண்ணா**

148. தந்தை பெரியாருக்கு முதன் முதலில் முழு உருவச்சிலை எவ்வூரில் அமைக்கப்பட்டது? **விடை: திருச்சியில்**

149. நாகரிகம் என்பதற்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: ஒருவன் தான் விரும்பும் நலன்கள் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம்**

150. தந்தை பெரியாரின் முதல் சிலை எந்த ஊரில் நிறுவப்பட்டது? திறப்பாளர் யார்? **விடை: 1967, திருச்சி, காமராசர்**

151. 95ஆம் ஆண்டு பிறந்த நாளில் பெரியாரைச் சந்தித்து எம்.ஜி.ஆர். வைத்த கோரிக்கை யாது? **விடை: பெரியாருக்கு சிலை வைக்க அனுமதி**

152. உலகத் தலைவர் பெரியார் அவர்களுக்கு 49 நாடுகளின் நாத்திகத் தலைவர்கள் ஒன்றாகக் கலந்து கொண்டு திறந்து வைக்கப்பட்ட சிலை எங்குள்ளது? **விடை: வல்லம் [தஞ்சை]**

153. நாகையில் பெரியார் திறந்து வைத்த உருவச் சிலை யாருடையது? **விடை: காயாரோகணம் பிள்ளை**

154. தாயார் இறந்தபோது பெரியார் எந்த ஊர் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தார்? **விடை: ஜோலார்பேட்டை**

155. அன்னை நாகம்மையார் உடல்நிலை அபாயக் கட்டத்தில் இருந்த போதும் பெரியார் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்ற ஊர் எது? **விடை: திருப்பத்தூர்**

156. நாகம்மையார் மறைந்த அன்றே தம் சுற்றுப்பயணத்தை தொடங்கி 144 தடை உத்தரவை மீறி ஒரு கிறித்துவத் திருமணத்தை நடத்தி வைத்துக் கைதான ஊர் எது? **விடை: திருச்சி**

157. மனைவி நாகம்மையார் இறந்தபோது பெரியார் எடுத்த முடிவு? **விடை: இனிமேல் இன்னும் தீவிரமாகப் பொதுப்பணி செய்யும் வாய்ப்பு கிடைத்துள்ளது.**

158. மனைவி இறந்தபோது 'சுதந்திரம் ஏற்பட்டதுடன் குடும்பத் தொல்லை ஒழிந்தது' என்று எழுதியவர் யார்? **விடை: பெரியார்**

159. நாகம்மையாரின் மறைவால் கிட்டிய உயர் பதவி என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: குடும்பத்தொல்லை ஒழிந்தது**

160. ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு 1942இல் பெரியாரிடம் வற்புறுத்திய இருவர் யார்? **விடை: வைசிராய், கவர்னர்**

161. மாகாணப் பிரதமர் பதவியை ஏற்கும்படி பெரியாரிடம் வற்புறுத்திய சென்னை மாகாண கவர்னர் பெயர்? **விடை: சர். ஆர்தர் ஹோப்**

162. 11.11.1940 அன்று பெரியாரைச் சந்தித்து சென்னை மாகாண ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்படி வலியுறுத்தியவர் யார்? **விடை: ராஜகோபாலாச்சாரியார்**

163. மாகாணப் பிரதமர் பதவி தேடி வந்தபோது ஏற்க மறுத்தவர் யார்? **விடை: பெரியார்**

164. பெரியார் நடத்தி வைத்த சுயமரியாதைத் திருமணத்தில் ராஜகோபாபலாச்சாரியார் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்? எப்போது? எங்கே? **விடை: 1930 குற்றாலம்**

165. ஈரோட்டின் நிருவாகத்தைக் கண்டு வியந்த ராஜகோபாலாச்சாரியார் பெரியாரிடம் கேட்ட உதவி யாது? **விடை:"உங்களுடைய சானிட்டரி இன்ஸ்பெக்டரை எங்களுக்குக் கொடுங்கள்"**

166. "நல்ல வேலையாக நீங்கள் சட்டப்படிப்புப் படித்து வழக்கறிஞராக வராமல்

போனீர்கள். வந்திருந்தால் வழக்கறிஞர்கள் பாடு திண்டாட்டமாய் இருந்திருக்கும்" என்று பெரியாரிடம் கூறியவர் யார்? **விடை: ராஜகோபாலாச்சாரியார்**

167. முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியாரும் தந்தை பெரியாரும் 1953ஆம் ஆண்டு சென்னையில் ஒரு சேரக் கலந்து கொண்ட விழா எது? **விடை: நபிகள் நாயகம் விழா**

168. ராஜகோபாலாச்சாரியாரின் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து, போராட்டம் நடத்தி பெரியார் வென்ற ஆண்டு? **விடை: 1954**

169. முதல்வர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தந்தை பெரியாரை இல்லத்தில் வந்து சந்தித்த நாள்? **விடை: 21.12.1953**

170. தந்தை பெரியார் - ராஜகோபாலாச்சாரியார் பாசப் பிணைப்பு கண்டு மணியம்மையார் கூறிய வசவுச் சொல் யாது? **விடை: நீங்கள் இருவரும் திருடர்கள்**

171. பெரியார் ஜாதகத்தை ஈ.வெ.கிருஷ்ணசாமி குறித்து வைத்திருந்தார். அதில் பெரியார் எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ்வார் என எழுதப்பட்டிருந்தது? **விடை: 60**

172. பெரியாரின் ஆயுள் காலம்? **விடை: 94 ஆண்டுகள் 3 மாதங்கள் 7 நாள்கள்**

173. பெரியார் வாழ்ந்த நாள்கள்? **விடை: 34,433**

174. பெரியார் சுற்றுப்பயணம் செய்த நாள்கள்? **விடை: 8600**

175. பெரியார் பயணம் செய்த தூரம்? **விடை: 13,12,000 கிலோ மீட்டர்**

176. பெரியார் பொதுக்கூட்டங்களில் பேசிய மொத்த நேரம்? **விடை: 21,400 மணி நேரம்**

177. தந்தை பெரியார் தம்முடைய 90ஆம் வயதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கூட்டங்களின் எண்ணிக்கை? **விடை: 180**

178. தந்தை பெரியார் தம்முடைய 91ஆம் வயதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கூட்டங்களின் எண்ணிக்கை? **விடை: 150**

179. தந்தை பெரியார் தம்முடைய 92ஆம் வயதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கூட்டங்களின் எண்ணிக்கை? **விடை: 244**

180. தந்தை பெரியார் தம்முடைய 93ஆம் வயதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கூட்டங்களின் எண்ணிக்கை? **விடை: 249**

181. தந்தை பெரியார் தம்முடைய 94ஆம் வயதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கூட்டங்களின் எண்ணிக்கை? **விடை: 229**

182. தந்தை பெரியார் தம்முடைய 95ஆம் வயதில் வாழ்ந்த 3 மூன்று மாதம் 7 நாட்களில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கூட்டங்களின் எண்ணிக்கை? **விடை: 42**

183. ஈரோட்டில் திராவிட நடிகர் கழகம் துவக்கியவர் யார்? **விடை: பெரியார்**

184. 'தம்மை நாடகம் முதலியவைகளுக்கு அழைக்க வேண்டாம்' என்பதற்குப் பெரியார் கூறிய காரணம்? **விடை: கண் விழிக்க இயலவில்லை**

185. பெரியார் திடலில் கட்டப்பட்ட மன்றத்திற்கு பெரியார் யாருடைய பெயரைச் சூட்டினார்? **விடை: எம்.ஆர்.ராதா**

186. பெரியார் பயன்படுத்துவதற்காக தம்முடைய டாட்ஜ் காரை தந்துதவிய சென்னை நேஷனல் பிக்சர்ஸ் அதிபர் பெயர்? **விடை: பி.ஏ. பெருமாள்**

187. தந்தை பெரியாரின் கடைசிப் பிறந்த நாள் 1973ஆம் ஆண்டு பெரியாரைச் சந்தித்து புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். வழங்கிய தொகை எவ்வளவு? **விடை: ஐயாயிரம்**

188. பெரியாரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக எடுக்கப்பட்டது. பெரியாராக நடித்த நடிகரின் பெயர்? **விடை: சத்யராஜ்**

189. பெரியார் திரைப்படத்திற்கு அரசு சார்பில் 95 லட்சம் நன்கொடை வழங்கிய முதலமைச்சர் யார்? விடை: **கலைஞர் கருணாநிதி**

190. தந்தை பெரியார் அவர்களின் கடைசிக் கூட்டம் சென்னை தியாகராயநகரில் கூட்டத்திற்குச் செல்லும்போது வாகனத்தில் பேசிக் கொண்டுச் சென்ற செய்தி?

**விடை: சோதனைக் குழாய் குழந்தை**

191. கும்பகோணத்தில் ‘மது ஆதரவாளர் மாநாடு’ நடத்தியவர் யார்? **விடை: பெரியார்**

192. பெரியார் அணிந்திருந்த மோதிரத்தில் பதிக்கப்பட்ட கல்லின் நிறம்? **விடை: பச்சைக்கல்**

193. பெரியாருக்கு எத்தனை மொழிகள் தெரியும்? **விடை: தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆங்கிலம்**

194. ‘ஒரு சிறு பஞ்சாயத்து எலக்‌ஷனுக்கு நான் நின்றேனென்றாலும் நான் வெற்றி பெற மாட்டேன்’ கூறியவர் யார்? **விடை: பெரியார்**

195. 1.9.1958 அன்று பெரியார் கோயிலுக்குச் சென்று சிற்ப வேலைப்பாடுகளைக் கண்ணுற்றார். எந்த ஊர் கோயில்? **விடை: ஆவுடையார் கோயில்**

196. மூன்று முதலமைச்சர்களிடம் ஒரே நபருக்காக பெரியார் பரிந்துரை செய்திருக்கிறார். அந்த நபரின் பெயர் என்ன? **விடை: நெ.து.சுந்தரவடிவேலு**

197. தமிழருக்குப் பாதிப்பு எனில் அறிமுகம் இல்லாமலே ஆதரவுக் கரம் நீட்டக் கூடியவர் பெரியார் என்பதற்கு திருச்சி கலெக்டருக்கு நேர்ந்த துயரமே சாட்சியாகும். திருச்சி கலெக்டர் பெயர் என்ன? **விடை: ஆர்.எஸ். மலையப்பன்**

198. “பெரியார் சுட்டுக் கொல்லப்பட்டார்” எனும் வதந்தி பரவிய ஆண்டு? **விடை: 1949**

199. ‘கண்டெம்டுமேன்’ (தள்ளப்பட்ட மனிதன்) என்று பெரியார் யாரைக் குறிப்பிட்டார்? **விடை: தன்னைத் தானே**

200. பெரியாரின் அடையாளம்? **விடை: தாடி - கைத்தடி - கருப்புச்சட்டை**

201. பெரியார் எந்த வயதிலிருந்து தாடி வளர்க்கத் தொடங்கினார்? **விடை: 50 வயது**

202. பெரியார் தாடி வளர்த்துக் கொள்ளக் காரணம்? **விடை: காலச் செலவையும் பொருட்செலவையும் குறைக்க**

203. சுற்றுப்பயணத்தின் போது பெரியார் தங்கும் இடம் எது? **விடை: பயணியர் விடுதி**

204. சிக்கனத்தின் சின்னம் தந்தை பெரியார் அவர்கள் புகை வண்டியில் மூன்றாம் வகுப்பில் பயணம் செய்வது குறித்து அன்பர் ஒருவர் கேட்டதற்கு அய்யாவின் பதில்? **விடை: நான்காம் வகுப்பு என்று ஒன்று இல்லை**

205. சிங்கம்பட்டி ஜமீன்தார் அவர்கள் ஈரோட்டிற்கு வந்தபோது அவரை வரவேற்று மரியாதை செய்யும் முகமாகப் பெரியார் அவருக்கு அளித்த உணவு என்ன? **விடை: சாதாரணக் கடைச் சாப்பாடு**

206. பெரியார் விரும்புவது? **விடை: ஜன்னல்கள் திறந்திருக்க வேண்டும்**

207. பெரியாருக்குப் பிடிக்காத ஒன்று? **விடை: குளிப்பது**

208. குற்றாலம் சென்ற பெரியார் இராம. சுப்பையாவிடம், ‘போர்டு எழுதணும்ப்பா’ என்றார். வாசகம் என்ன? **விடை: ‘குளிச்சிட்டேன்’**

209. இதில் பெரியாரின் பண்பு எது? **விடை: நெருங்கி வரும் பெண்களை ஜாடையாய் விலக்கி விடுபவர், துரோகிகளால் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டாலும் நிலை குலையாதவர், பெரிய ஹோட்டலைத் தவிர்த்துச் சாலை ஓரக்கடைகளில் வாங்கி உண்பதை விரும்புபவர்**

210. மேடு, பள்ளம், தோப்பு, துறவு என்றிருந்த பெரியார் திடலை சீர் செய்ய வந்த எந்த இயந்திரத்தைக் கண்டு பெரியார் வியந்தார்? **விடை: புல்டோசர்**

211. பெரியார் பயன்படுத்தாத இருக்கை எது? **விடை: சாய்வு நாற்காலி**

212. திராவிட சமுதாயத்தைத் திருத்தி மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் பணியை பெரியார் ஏன் மேற்கொண்டார்? **விடை: அந்த பணியை செய்ய யாரும் வராததினால்**

213. பார்ப்பனப் பெண்ணுக்கு தம்முடைய வேன் வழங்கி உதவினார் பெரியார்.

எப்போது?**விடை: கொட்டும் மழையில் பிரசவ வலியில் துடித்தபோது**

**உ. கல்வி**

214. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை முதன் முதலில் எந்த ஊரில் சந்தித்தார்? **விடை: மாயவரம்**

215. ஒரு குழந்தைக்கு ஆரம்ப ஆசிரியர் என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகின்றார்? **விடை: தாய்**

216. தங்கள் தங்கள் குழந்தைகளுக்கு நகை செய்து போடுவதற்குப் பதிலாக எதனை அளிக்குமாறு பெரியார் கூறுகிறார்? **விடை: கல்வி**

217. மாணவர்களின் உடை குறித்து பெரியார் கூறியது? **விடை: எளிய உடை உடுத்த வேண்டும்**

218. படிப்பறிவின்மையை முற்றிலும் நீக்கத் தந்தை பெரியார் சொன்ன வழி யாது? **விடை: 6 மாதத்திற்குள் கையெழுத்துக் கூடப் போடத் தெரியாதவர்களுக்கு 3 மாதச் சிறைத் தண்டனை கொடுக்க வேண்டும்.**

219. தொடக்கக் கல்வி ஆசிரியர் பணிக்குப் பெண்களையே நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்திய மாநாடு எது? **விடை: முதலாவது சுயமரியாதை மாகாண மாநாடு**

220. பெண் ஆசிரியைகள் குறித்து பெரியார் கூறியது?**விடை: ஆடம்பரம் கூடாது**

221. பரீட்சை முறை எப்படி இருக்கக் கூடாது என்கிறார் பெரியார்? **விடை: உருப்போட்டு ஒப்பித்தல்**

222. பள்ளிக்கூடத்தில் எது தேவையில்லை என்கிறார் பெரியார்? **விடை: ஒவ்வொரு வருடமும் பரீட்சை**

223. பள்ளிக்கூடம் எதைச் செய்யக் கூடாது என்கிறார் பெரியார்? **விடை: பரீட்சை மூலம் மாணவர்களைப் பள்ளியில் மேல் வகுப்புக்குச் செல்லவிடாமல் கழிக்கக் கூடாது - நிறுத்தக்கூடாது**

224. கல்வி முறை எப்படி இருக்கவேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: மாணவர்களைப் பார்த்து ஆசிரியர்கள் கேள்வி கேட்பதைவிட, ஆசிரியர்களைப் பார்த்து மாணவர்கள் கேள்வி கேட்க வேண்டும்**

225. ஒரு சமூகத்திற்குச் சுயமரியாதை வேண்டுமானால் ............. கல்விதான் மிக்க அவசியமானது என்கிறார் பெரியார். **விடை: தொழில்**

226. கல்வியின் நோக்கம் என்று பெரியார் குறிப்பிடுவது? **விடை: பகுத்தறிவு பெறுவது**

227. "பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு, உலகம் முழுவதும் வாழும் மக்கள் அனைவரும் ..................... என்று உணர்வை ஊட்ட வேண்டும்" என்கிறார் பெரியார் **விடை: சகோதரர்கள்**

228. அறிவுக்குத் தடையான எதையும் கல்வியில் கலத்தல் கூடாது என்று கூறும் பெரியார் அறிவு வேறு, .......................... வேறு என்று பிரித்து விட வேண்டும் என்கிறார்.**விடை: சமயம்**

229. கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க எந்தத் திட்டத்தைக் கூட தள்ளிப் போடலாம் என்கிறார் பெரியார்? **விடை: குடிநீர்த் திட்டம், சாக்கடைத் திட்டம்**

230. ஆசிரியர்கள் பகுத்தறிவாளர்களாக இருக்க வேண்டும் என்று பெரியார் வலியுறுத்தக் காரணம்? **விடை: மாணவர்களின் சுதந்திரச் சிந்தனைக்கு வழி செய்யும்**

231. பள்ளிக் கூடத்தை விட உயர்ந்தது என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: வாசக சாலை**

232. தேர் உற்சவம் நடத்துவதற்குப் பதில் என்ன பணி செய்யலாம் என்கிறார் பெரியார்? **விடை: கல்லூரி கட்டலாம்**

233. தந்தை பெரியார் அவர்களின் போராட்டத்தால் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட முதல்

திருத்தம் எதற்காக? **விடை: கல்வியில் இடஒதுக்கீடு**

234. ஒலி முழக்கம் எப்படி இருக்கக் கூடாது என்று இளைஞர்களுக்கு - மாணவர்களுக்குப் பெரியார் அறிவுறுத்துகின்றார்? **விடை: மற்றவர்கள் மன வருத்தம் அடையும்படியாகவோ, வெறுப்படையும்படியாகவோ, ஆத்திரப்படக் கூடியதாகவோ இருக்கக் கூடாது.**

235. ‘மாணவர்கள் கிளர்ச்சிகளில் பங்கு பெறக் கூடாது’ என்று கூறிய தலைவர்? **விடை: பெரியார்**

236. மாணவர்களுக்குப் பெரியார் சொன்ன அறிவுரை யாது? **விடை: அரசியல் தொடர்புடைய விவகாரங்களில் சேரக்கூடாது**

237. “நாங்கள் செய்யும் போராட்டங்களில் சம்பந்தப்படக் கூடாது” என்று பெரியார் யாருக்குக் கூறினார்? **விடை: மாணவர்களுக்கு**

238. தமிழ்ப் பேராசிரியருக்கு வழங்கப்பட்ட குறைவான சம்பளத்தை எதிர்த்துக் குரல் எழுப்பி சென்னைப் பல்கலைக் கழகத்தில் சம்பள பேதம் ஒழிய காரணமாக இருந்தவர் யார்? **விடை: பெரியார்**

239. தந்தை பெரியார் முதலில் தொடங்கிய கல்வி நிறுவனம் எது? **விடை: 1956இல் பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி**

240. தமிழக அரசு எந்தப் பல்கலைக்கழகத்தில் பெரியார்உயராய்வுஇருக்கைஅமைத்துள்ளது? **விடை: பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

241. எந்த ஊரில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்திற்குத் தமிழக அரசு பெரியார் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டியுள்ளது? **விடை: சேலம்**

242. தமிழ் சர்வகலாசாலை கமிட்டியில் யாரை நியமனம் செய்யவில்லை என பெரியார் கொதிக்கிறார்? **விடை: சுவாமி வேதாசலனார், ந.மு.வேங்கடசாமி நாட்டார்**

243. ராஜகோபாலாச்சாரியார் மதுவிலக்கு கொண்டு வந்த போது பெரியார் கூறியது? **விடை: கள் ஒழிப்பு என்பது கல்வி ஒழிப்பே**

### 3. பண்பு

244. இது பெரியாரின் பண்பு? **விடை: செய்த உதவிகளை வெளியில் சொல்லாதவர்**

245. பெரியார் கடைப்பிடித்த பண்பு? **விடை: உண்மை**

246. ராஜகோபாலாச்சாரியாரின் இறுதிச் சடங்கின்போது பெரியார் தன் சக்கர நாற்காலியை குடியரசுத் தலைவருக்கு அளித்து தரையில் அமர்ந்தார். அந்தக் குடியரசுத் தலைவர் பெயர் என்ன? **விடை: வி.வி.கிரி**

247. பெரியாரின் இயல்பு? **விடை: எதிர்ப்புக் கண்டு வீறு கொண்டெழுதல்**

248. பெரியார் கூற்றுப்படி எது அறம்? **விடை: மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல் இருப்பது**

249. பெரியாருக்குப் பிடிக்காத செயல்? **விடை: ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிகளை ரத்து செய்வது நிகழ்ச்சிகளுக்குத் தாமதமாய்ச் செல்வது**

250. பெரியாருக்குப் பிடிக்காத செயல்? **விடை: இலையில் மிச்சம் வைப்பது**

251. பெரியாருக்குப் பிடிக்காதது? **விடை: பிறரிடம் உதவியை எதிர்பார்ப்பது**

252. பெரியார் வெறுக்கும் தன்மை? **விடை: ஆடம்பரம்**

253. பெரியாரின் பழக்கங்களுள் ஒன்று. **விடை: டைரி எழுதுவது**

254. கருத்து வேறுபாடு இருந்தாலும் மனிதன் மனிதத் தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்றவர்? **விடை: பெரியார்**

255. கொள்கையில் மாறுபட்டவர்களிடமும் பெரியார் எப்படி நடந்து கொண்டார்? **விடை: நாகரிகமான நட்பைப் பேணினார்.**

256. கத்தி எடுத்து குத்த வந்தவனை பெரியார் என்ன செய்தார்? **விடை: பத்திரமாக வீட்டிற்கு அனுப்பி வைத்தார்**

257. ஒரு வழக்கிற்காக தந்தை பெரியார் திருச்சி மாவட்ட நீதிமன்றத்திற்குச் சென்றார். தோழர் ஒருவர் நீதிமன்றத்திற்குள் சென்று ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து ‘உட்காருங்கள் அய்யா’ என்றார். பெரியார்

கூறியது என்ன? **விடை: மரியாதை என்பது நாமாக எடுத்துக் கொள்வது அல்ல அவர்கள் கொடுப்பது**

258. "நான் மறைந்து நின்று சிலரைத் தூண்டிவிட்டு எந்தக் காரியத்தையும் செய்யச் சம்மதிக்க மாட்டேன்" கூறியவர் யார்? **விடை: பெரியார்**

259. "எந்த ஒரு காரியத்தையும் செய்ய வேண்டுமா? இல்லையா? என்றுதான் யோசித்துப் பாக்க வேண்டுமே தவிர, வெற்றியா? தோல்வியா? என்பது முக்கியமல்ல" யார் கூற்று? **விடை: பெரியார்**

260. பெரியார் ஒரு பொருளின் அழகைவிட அதன் ..................... குறித்தே கணக்கு போடும் பயனாளி **விடை: பலன்**

261. எம்.எல்.பிள்ளை என்று அழைக்கப்பட்ட கா.சுப்பிரமணியபிள்ளை தமிழறிஞர் சட்டவல்லுநர் அவர் இறுதிக்காலத்தில் நோயுற்று துன்புற்றபோது பெரியார் செய்த உதவி யாது? **விடை: மாதா மாதம் 50 ரூபாய் அனுப்பினார்**

262. பெரியார் தன்னைப் பற்றிக் கூறியது? **விடை: நான் ஓர் அழிவு வேலைக்காரன்**

263. தந்தை பெரியார் அவர்கள், பெரியார் திடலைச் சீரமைக்க 10 பேரை தம் வேனில் ஏற்றி வந்தது ஏன்? **விடை: ரயில் கட்டணத்தை மிச்சம் பிடிக்க**

264. "மற்ற பள்ளிகள் அவர்களுடைய கருத்துகளைப் பரப்புவது போல் நான் நடத்தும் கல்வி நிலையங்களில் எனது கொள்கைகளைப் பரப்புவது கிடையாது" என்று பெரியார் எந்த ஊரில் பேசினார்? **விடை: திருச்சி**

265. திராவிடன் பத்திரிகை, 'மன்னிப்பு கடிதம் அனுப்பியுள்ளார்' என்று ஒருவரைப் பற்றி எழுத, பெரியார் அதற்கு நிபந்தனையில்லாமல் மன்னிப்பு கேட்டுக் கொண்டார். ஒருவர் யார்? **விடை: மறைமலையடிகள்**

266. 29.12.1938 அன்று நடைபெற்ற தென்இந்திய நல உரிமைச் சங்க 14ஆம் மாநாட்டுத் தலைமையுரையில் பெரியார் தம்மை எப்படி அழைத்துக் கொண்டார்? **விடை: மிக மிக சாமான்யன்** (very very ordinary man)

267. "நான் செய்த அதிசயமான காரியம் எதுவுமில்லை. ஒன்றைத் தவிர" என்கிறார் பெரியார் அது எது? **விடை: கருத்துகளை துணிந்து சொன்னது**

268. கூட்டத்தில் பெரியாரிடம் கேள்வி கேட்க ஒருவர் எழுந்த போது தோழர்கள் "கேள்வி கேட்காதே, உட்கார்" என்று சப்தமிட பெரியார் தோழர்களிடம் கூறியது என்ன? **விடை: உங்களை நம்பி நான் இங்கு வரவில்லை. என்னை நம்பியே வந்துள்ளேன்.**

269. பெரியாரின் பேச்சு இப்படி இருக்கும் **விடை: வெட்டு ஒண்ணு; துண்டு இரண்டு**

270. பெரியார் இவரிடம் எச்சரிக்கையாக இருப்பார் - யாரிடம்? **விடை: தன்னைப் புகழ்பவரிடம்**

271. மற்றவர்கள் தம்மை இழிவாகப் பேசியதற்கு தாம் வருந்தியது இல்லை என்று கூறும் பெரியார் தெரிவிக்கும் காரணம் யாது? **விடை: பாராட்டும்போது மகிழ்வதில்லை**

272. நான் என் ஆயுள் உள்ளவரை யாரிடமும் ..................... கேட்க மாட்டேன் என்கிறார் பெரியார்? **விடை: ஓட்டு**

273. பெரியார் பொதுக் கூட்டங்களில் பேசி முடித்து வாகனத்தில் ஏறும் போது அவர் கேட்கும் முதல் கேள்வி? **விடை: இன்றைக்கு எவ்வளவு ரூபாய்க்குப் புத்தகங்கள் விற்றன?**

### 4. உணவு

274. பெரியார் விரும்பும் உணவு? **விடை: அசைவம்**

275. பெரியாருக்கு மிகவும் பிடித்த நொறுக்குத் தீனி எது? **விடை: எள்ளுருண்டை**

276. பெரியார் உணவருந்தும் பழக்கம்? **விடை: ஒரு நாளைக்கு இரண்டு காபி, இரண்டு மூன்று கறிவகைகள் கூடாது, ஏதாவது ஒன்றுதான்**

**இருக்க வேண்டும், உணவுக்குப் பிறகு கட்டித் தயிரில் சர்க்கரை போட்டுச் சாப்பிடுவார்.**

277. உணவு முறை பற்றி தந்தை பெரியாரின் பொதுக் கருத்து யாது? **விடை: சத்துள்ள எளிய உணவு வீணாக்காது உண்ண வேண்டும்**

278. ............ சாப்பிடுவதைக் கண்டிப்பாகத் தடை செய்தாக வேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: காபி**

279. ஜனங்கள் ஒவ்வொருவரும் தனி வீடு கட்டிக் கொள்வதும் வீட்டுக்கு வீடு சமையலறை இருப்பதும் ............................" என்கிறார் பெரியார்? **விடை: அனாவசியம்**

280. காஞ்சிபுரம் மகாநாட்டில் உங்கள் இடத்தில் நான் இருந்தால் இடஒதுக்கீடு அய்ம்பது சதவிகிதமல்ல; நூறு சதவிகிதமே கேட்டிருப்பேன் என்று பெரியாரிடம் கூறியவர் யார்? **விடை: காந்தியடிகள்**

281. சமைக்கும் முறை பற்றி தந்தை பெரியாரின் கருத்து யாது? **விடை: ஆணும் பெண்ணும் பகிர்ந்து கருவிகளைக் கொண்டு விரைவாகச் சமைக்க வேண்டும்.**

### 5. பாராட்டு

282. உலகின் முதல் தத்துவஞானி என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகின்றார்? **விடை: புத்தர்**

283. 'திராவிட லெனின்' என்று பெரியார் யாரைப் பாராட்டினார்? **விடை: டி.எம்.நாயர்**

284. 'வகுப்புரிமைச் சிற்பி' என்று தந்தை பெரியாரால் போற்றப்பட்டவர் யார்? **விடை: எஸ்.முத்தையா முதலியார்**

285. 'மனமார, வாயார, கையாரப் பாராட்டுகிறோம்! பாராட்டுகிறோம்! பாராட்டுகிறோம்!' என பெரியார் யாரைப் பாராட்டினார்? **விடை: பகத் சிங்கை**

286. பிரிட்டிஷ் அரசு லண்டனில் இந்திய – மந்திரி ஆலோசகராக நியமித்த அவரை பெரியார் மகிழ்ச்சியுடன் பாராட்டி வழியனுப்பினார். அவர் யார்? **விடை: சர். ஏ.டி.பன்னீர்செல்வம்**

287. "இவரது மறைவு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் சமுதாயத்திற்கு ஏற்பட்ட பெரும் நஷ்டமேயாகும்" யாருடைய மறைவு குறித்து 22.9.1945 'குடிஅரசு' இதழில் பெரியார் எழுதினார்? **விடை: இரட்டைமலை சீனிவாசன்**

288. "பெரியார் பேசும் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும் இந்த பாக்கியமே என் வாழ்க்கையில் சிறந்த பாக்கியமாகக் கருதுகிறேன்" என்று கூறியவர் யார்? **விடை: அம்பேத்கர்**

289. "துர்மரணத்திற்கு மட்டும் அவர் ஆளாகாமல் இருந்திருப் பாரானால் இதற்குள்ளாக இந்நாட்டின் எத்தனையோ புரட்சிகரமான காரியங்கள் அவர் செய்திருப்பார்" யாரைப் பற்றி பெரியார் கூறுகிறார்? **விடை: காந்தி**

290. இந்தியாவுக்கு 'காந்தி தேசம்' என்று பெயர் சூட்ட வேண்டும் என்றவர் யார்? **விடை: பெரியார்**

291. நாடகப் புரட்சி குறித்து உலக சரித்திரம் எழுதப்பட்டால் அட்டைப் படத்தில் யாருடைய படம் இடம் பெற வேண்டும் என்று பெரியார் கூறுகிறார்? **விடை: என்.எஸ்.கிருஷ்ணன்**

292. 'பச்சைத் தமிழர்' என பெரியார் யாரைப் பாராட்டினார்? **விடை: காமராசர்**

293. 10.8.1962 'விடுதலை' தலையங்கத் தலைப்பு "வரவேற்கிறேன்" என்பது. பெரியார் வரவேற்கிறேன் என்று யாரைக் குறிப்பிடுகின்றார்? **விடை: கி. வீரமணி**

294. நடிகர் திலகம் கணேசன் அவர்களுக்குப் பெரியார் அளித்த பட்டப் பெயர்? **விடை: சிவாஜி**

295. பெரியார் 1965ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 'விடுதலை' இதழ் முதல் பக்கத்தில் எம்.ஜி.ஆர். படத்தை வெளியிட்டு பெருமைப்படுத்தியது ஏன்? **விடை: புயலால்**

**பாதிக்கப்பட்ட தனுஷ்கோடிக்கு நிவாரண நிதியாக ஒரு லட்சம் ரூபாய் வழங்க எண்ணி இருப்பதாக எம்.ஜி.ஆர். அறிவித்தார்.**

296. இடையாற்றுமங்கலத்தில் நடைபெற்ற 90ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் படங்களைத் திறந்து வைத்துப் பெரியார் பேசும்போது, 'நமது நாட்டிலே பாராட்டத் தகுந்த பெரியோர்கள் என்றால் இவர்கள் இருவரைத் தவிர மூன்றாவது யாரைச் சொல்லுவது என்று தெரியவில்லை' என்றார். அந்த இருவர் யார்? **விடை: காமராசர், அண்ணா**

297. இந்த அறிவிப்பை 'அருள் வாக்காக'க் கருதுகிறேன் என்று பெரியார் எந்த அறிவிப்பைக் குறிப்பிட்டார்? **விடை: 'சுயமரியாதைத் திருமணச் சட்டம் செல்லும்'**

298. 'பலே பலே' என்று பெரியாரால் பாராட்டப்பட்ட அறநிலையத் துறை அமைச்சரின் பெயர் என்ன? **விடை: நெடுஞ்செழியன்**

299. 'கண்டறியாதன கண்டேன். எந்த ஆட்சியிலும் நடத்த முடியாத அதிசயம், அற்புதம்' என்று பெரியார் யாரைப் பாராட்டினார்? **விடை: கலைஞர்**

300. 'முதல்வரை முள் பீப்பாய்க்குள் போட்டு உருட்டுவதுபோல், அவருக்கு ஓயாத தொல்லை கொடுக்கிறார்கள்' என்று பெரியார் குறிப்பிடும் முதல்வர் யார்? **விடை: கலைஞர்**

301. 'உங்களைப் பாராட்ட எனக்குத் தமிழில் வார்த்தை இல்லை. எனக்குப் பழி நீங்கியது. உங்களுக்கு உலகப் புகழ் கிடைத்தது' என பெரியார் யாரைப் பாராட்டினார்? **விடை: 1971 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற கலைஞர்**

302. "இந்த 30 ஆண்டுகளில் பல காரியங்களுக்கு, தேவைக்கு உதவி செய்து வந்ததால் என் உடல் பாதுகாப்பு, வீட்டு நிருவாகம் ஆகியவற்றில் எனக்குத் தொல்லையில்லாமல் இருக்கும் வாய்ப்பை அடைந்தேன்" பெரியார் யாரைப் பாராட்டுகிறார்? **விடை: மணியம்மையாரை**

303. ஈ.வெ.ராமசாமிக்கு "பெரியார்" என்கிற பட்டம் எப்போது வழங்கப்பட்டது? **விடை: 13.11.1938 தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்**

304. தந்தை பெரியாருக்கு "வைக்கம் வீரர்" எனும் பட்டம் அளித்தவர் யார்? **விடை: திரு.வி.க.**

305. 'நவசக்தி' இதழ் வளர்ச்சிக்கு பெரியார் 1500 ரூபாய் அனுப்பி வைத்தார். அதன் ஆசிரியர், "நவசக்தியில் நாயக்கர் அனுப்பிய தொகையைக் குறிப்பிட்டேன். அதைப் பார்த்த நாயக்கர் தம்முடைய தொகை என்பதைத் தம் வாயிலாக வந்த தொகை என்று திருத்துமாறு கடிதம் விடுத்தனர். அவ்வாறே திருத்தஞ் செய்யப்பட்டது" என்று எழுதினார். ஆசிரியர் பெயர்? **விடை: திரு.வி.க.**

306. "பெரியாரின் பேச்சைக் கேட்டு அவரைச் சரியாகப் பின்பற்றுங்கள்" என்று சென்னை வந்தபோது நீதிக் கட்சித் தலைவர்களிடம் அறிவுறுத்திய தலைவர்? **விடை: அம்பேத்கர்**

307. நீதிக்கட்சியின் 14ஆவது மாகாண மாநாட்டில் 'என் தோளுக்குச் சூட்டிய மாலையைப் பெரியாரின் தாளுக்குச் சூட்டுகிறேன்' என்றவர்? **விடை: சர் ஏ.டி.பன்னீர்செல்வம்**

308. "மண்டைச் சுரப்பை உலகு தொழும்" என்று பெரியாரைப் பாடிய கவிஞர் பெயர்? **விடை: பாரதிதாசன்**

309. தந்தை பெரியாரை "பயிர் போன்றார் உழவருக்கு; பால் போன்றோர் குழந்தைகளுக்கு" எனப் பாடியவர் யார்? **விடை: புரட்சிக் கவிஞர்**

310. "பெரியார் அமர்ந்த பீடத்தை, தலைவர் பதவியை, நாற்காலியைக் காலியாகவே வைத்திருக்கிறோம்" என்று கூறியவர்? **விடை: அண்ணா**

311. மூல பலத்தைக் கண்டறிந்து தாக்குதல் நடத்துகின்ற போர் முறையை மேற்கொண்டவர் பெரியார் என்று பாராட்டுகின்றவர்? **விடை: அறிஞர் அண்ணா**

312. ‘தந்தை பெரியார் தனிமனிதரல்ல; ஒரு திருப்பம், ஒரு சகாப்தம், ஒரு காலக்கட்டம்’ என்று புகழ்ந்தவர்? **விடை: அறிஞர் அண்ணா**

313. பெரியாரின் பொதுக் கூட்டம் மாலை நேரக் கல்லூரி என்றும், பெரியார் தமிழகத்தின் முதல் பேராசிரியர் என்று பாராட்டுரை வழங்கியவர் யார்? **விடை: அண்ணா**

314. ‘இந்த அமைச்சரவையே பெரியாருக்குக் காணிக்கை’ என்று கூறிய முதலமைச்சர் பெயர் என்ன? **விடை: அண்ணா**

315. ‘அந்த வசந்தம்’ எனும் தலைப்பிலே அண்ணா எழுதிய கட்டுரை வெளிப்படுத்துவது யாது? **விடை: தந்தை பெரியார் மீது அண்ணா கொண்டிருந்த அன்பும் பாசமும்.**

316. ‘நான் அறிந்த வரையில் தம் வாழ்நாளில் இத்தனை மகத்தான வெற்றி வேறு எந்த சமூக சீர்திருத்தவாதிக்கும் கிடைத்த தில்லை’ என்று பெரியாரைப் பாராட்டியவர் யார்? **விடை: அண்ணா**

317. “பெரியார் ஒரு பிரிவினையாளர், கடவுள் மறுப்பாளர், ஜாதி, சமய ஒழிப்பாளர் எனக் கருதுவதைவிட, பெரியார் மக்களுடைய தன்மானத்தையும் வளர்க்கப் பாடுபட்ட ஓர் அறிவியக்கக்காரர் எனப் போற்றுவதே ஏற்புடையதாகும்” என்று கூறியவர் யார்? **விடை: அண்ணா**

318. ‘இந்திய விடுதலையின் 25 ஆண்டு நிறைவையொட்டி பிரதமர் இந்திரா காந்தி பெரியாருக்கு அனுப்பிய தாமிரப்பட்டய விருதினைப் பெரியாரிடம் அளித்தவர் யார்? **விடை: முதல்வர் கலைஞர்**

319. “திரு.வி.க. மறைந்தபோது மயானத்திற்கு வந்து, திருவாசகப் பாடல்கள் பாடி முடியும் வரை நின்று தன் இறுதி அஞ்சலியை செலுத்தி கண்ணீர் விட்ட பண்பாளர் பெரியார்” என்று எழுதியிருக்கும் தமிழறிஞர் யார்? **விடை: அ.ச.ஞானசம்பந்தம்**

320. “சிறை வாசத்தில்தான் அவன் செய்யப் போகிற யுத்தத்திற்குப் படையை எப்படி அணிவகுத்து நிறுத்துவதென்பதற்குப் பிளான் போடுவான்” என்று பெரியாரை மனதில் நிறுத்தி எழுதியவர் பெயர்? **விடை: மணவை ரெ.திருமலைசாமி**

321. “தோழர் ராமசாமி ஒரு பொல்லாத கிழவர்; மகா பிடிவாதக்காரர்; எதில் தலையிட்டாலும் பிறர் பின் தொடர முடியாத ஒரே ஓட்டம்தான்” என்று பெரியார் பற்றி எழுதியவர் யார்? **விடை: பேனா நர்த்தனம் மணவை ரெ.திருமலைசாமி**

322. “பெரியார் கண்ட முழுப் புரட்சியில் அடிதடியில்லை, கொலை, களவு இல்லை, பொருட்களை நாசமாக்கும் செயல்களுக்கு இடமில்லை, வன்முறை என்பதில் அவருக்கு அறவே நம்பிக்கையில்லை, தனி மனித வெறுப்பில்லை” எழுதியவர்? **விடை: பேராசிரியர் ந.இராமநாதன்**

323. ‘தாங்கள் நிகழ்த்தும் பொது நலத் தொண்டு பாராட்டுக்குரியது. தாங்களும் தங்களுடைய மனைவியும் வரவேண்டும் சந்திக்க விழைகிறேன்’ என பெரியாருக்கு ‘திருமுகம்’ அனுப்பிய மடாதிபதி? **விடை: சிருங்கேரி மடத்து சங்கராச்சாரி**

324. ‘பெரியார் எனது நாத்திக ஆசான்’ என்று கூறியவர்? **விடை: எம்.என்.ராய்**

325. ‘UNESCO’ நிறுவனம் பெரியாருக்கு விருது வழங்கிய நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர் யார்? **விடை: மத்திய கல்வியமைச்சர் திரிகுணசென்**

326. “தென்னாட்டுக் காரல் மார்க்ஸ்” என்று பெரியாரை வர்ணித்த பம்பாய் இதழின் பெயர்? **விடை: பிளிட்ஸ்**

327. சென்னை அருங்காட்சியகம் திறப்பு விழாவில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருத்தம் தெரிவித்த பிரதமர் யார்? **விடை: சரண்சிங்**

328.“மலாய் நாட்டில் வாழும் தமிழர்கள் பெரிதும் முன்னேறக் காரணம் பெரியார்தான்” என்று கூறிய சீனப் பேராசிரியர் யார்? **விடை: சி.எஸ்.லீ.**

329.இந்தியாவில் காலம் கடந்து வாழும் சிந்தனையாளர்களாகச் சிங்காரவேலரும் தந்தை பெரியாருமே விளங்குவர் என்று கூறிய வரலாற்றுப் பேராசிரியர், மூத்த நாடாளுமன்றவாதியின் பெயர்? **விடை: ஹிரேன் முகர்ஜி**

330.தந்தை பெரியாரின் வைக்கம் போராட்டம் அண்ணல் அம்பேத்கரின் மனதில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுவதை ‘அம்பேத்கர் வாழ்வும் தொண்டும்’ என்ற நூலில் எழுதிய அறிஞர்? **விடை: தனஞ்செய்கீர்**

331. “இந்தியாவில் இருந்த தலைவர்களில் முன்னுதாரணம் எதையும் பின்பற்றிடாமல் கருத்துச் சொன்ன சிந்தனையாளர் பெரியார்” - யார் கூற்று? **விடை: வால்டர் பேஸ்**

332.“அவர் தமிழர்களின் பொதுச் சொத்து, பொதுச் சொத்து நாதியற்றதாகிவிடும் என்று அவரை விட்டு விடாமல் எல்லோரும் தங்கள் சொந்த சொத்தைப்போல் கவனமாகக் காப்பாற்றியாக வேண்டும்” யார் யாரைப் பற்றிக் கூறியது? **விடை: பெரியாரைப் பற்றி அன்னை மணியம்மையார்**

333.“போதி மரத்தடியில் சிந்தித்ததால் புத்தன் கிடைத்தான், சமூக அக்கிரமத்தைக் கண்டு கொதித்ததால் பெரியார் கிடைத்தார்” - யாருடைய கூற்று? **விடை: கி.வீரமணி**

### 6. அறிவுரை

334.தந்தை பெரியார், அப்துல் கலாமிடம் கூறிய அறிவுரை? **விடை: படி**

335.‘தாங்களாகவோ, பிறர் அறிவித்த கருத்துக்கிசையவோ, முதலமைச்சர் பொறுப்பு நீங்குதல், தமிழர்கட்கும், தமிழ் நாட்டுக்கும், தங்களுக்கும் தற்கொலைக் கொப்பானதேயாகும்’ என்று பெரியார் யாருக்குத் தந்தி அனுப்பி எச்சரிக்கை விடுத்தார்? **விடை: காமராசர்**

336.காவல்துறையின் உளவுப் பிரிவு சுருக்கெழுத்தர்களை நியமித்தபின் தமிழ்நாட்டில் தந்தை பெரியாரின் பேச்சுதான் முதன் முதலில் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டது? பெரியார் பேசிய ஊர்? ஆண்டு? **விடை: கோவை மாவட்ட உத்தமபாளையம், 1924**

337.பெரியார் அடிக்கடி இவர்களை இடித்துரைப்பார்? **விடை: புலவர்களையும் வழக்குரைஞர்களையும்**

338.நகை பயித்தியம், துணி அலங்காரப் பயித்தியம் ஒழிய வேண்டும் என்று பெண்களுக்கு அறிவுரை புகட்டியவர்? **விடை: பெரியார்**

339.காது, மூக்கு, கழுத்து, கை, கால் என உறுப்புகளில் நகை அணியும் பெண்களை பெரியார் எவ்வாறு கண்டிக்கின்றார்? **விடை: பெண்கள் நகை மாட்டும் ஸ்டாண்டா?**

340.கணவனும் மனைவியும் தங்கள் முதல் லட்சியமாகக் கொள்ள வேண்டியது என்று பெரியார் கூறுவது? **விடை: வரவுக்கு மீறாமல் செலவு செய்வது**

341. ‘மணமக்கள் கூடுமான வரைக்கும் .................... ஆண்டுக்காவது பிள்ளை பெறாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்’ என்கிறார் பெரியார்? **விடை: 5**

342.“புராணக் கதைகளைக் கேட்பதைவிட்டு ஒதுங்கி நில்லுங்கள். புராணக் காட்சிகளைக் காண்பதில் வெறுப்புக் கொள்ளுங்கள்” என்று கூறிய பெரியார் எதனைப் பார்வையிடுமாறு கூறுகிறார்? **விடை: பொருட்காட்சி சாலைக்குச் செல்லுங்கள் - தொழிற் சாலைகளைக் காணுங்கள்**

343.காஃபி சாப்பிடும் பழக்கத்தை நிறுத்தச் சொன்ன பெரியார் எதனைக் குடிக்கக் கூறினார்? **விடை: பால், மோர்**

## 7. இலக்கியம்

344.மனித சமுதாய வளர்ச்சியை முன் வைத்து செய்யப்பட்ட இலக்கியம் என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: திருக்குறள்**

345."சமத்துவம், சகோதரத்துவம், பிறப்பில் உயர்வு தாழ்வின்மை, பெண் சுதந்திரம் முதலிய அரிய நீதிகளைப் போதிக்கும் சிறந்த பண்டைத்தமிழ் நூலாகிய... உரையுடன் 8 அணாவிற்குக் கொடுக்கின்றோம். தேவைக்கு உடனே எழுதுங்கள். தாமதித்தால் கிடைக்காது" என்று "குடிஅரசு" பதிப்பகம் 1929இல் கூவி விற்ற நூல்? **விடை: திருக்குறள்**

346.தந்தை பெரியார் திருவள்ளுவர் குறள் மாநாட்டை எப்போது? எங்கே நடத்தினார்? **விடை: 15.1.1949, 16.1.1949, சென்னையில்**

347.பெரியாருக்குப் பிடித்த குறள்? **விடை: குடி செய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும்**

348.பெரியார் கண்டித்த குறள்? **விடை: தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை**

349.திருக்குறள் எந்த நூலுக்கு நேர்மாறானது என்கிறார் பெரியார்? **விடை: மனுதர்மம்**

350.சிறந்த அறிவாளிகள் என்று பெரியார் பாராட்டும் இரண்டு புலவர்கள் யார்? **விடை: திருவள்ளுவர், அவ்வையார்**

351. பெரியார் தம் சொற்பொழிவுகளில் திருக்குறளை மேற்கோள்களாகக் கையாண்டதற்குக் காரணம்? **விடை: பெரியாருடைய கருத்துகள் திருக்குறளில் இருந்தமையால்**

352.திருக்குறளின் பெருமையைப் பெரியாருக்கு எடுத்துக் காட்டியவர் பெயர்? **விடை: பா.வே. மாணிக்க நாயக்கர்**

353.புத்தர் செய்த வேலையைத்தான் .................... செய்திருக்கிறது என்கிறார் பெரியார் **விடை: திருக்குறள்**

354.'என்ன மதத்தினர் என்று கேட்டால்', 'உங்கள் நெறி என்ன என்றால்' என்ன பதில் கூற வேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: வள்ளுவர் மதம், குறள் நெறி**

355."அவர் பகுத்தறிவுவாதியா" என்று கேட்டால் 'ஆம்' என்பதற்கும் என்னிடம் ஆதாரமுண்டு; 'இல்லை' என்பதற்கும் ஆதாரமுண்டு. ஆகவே, அவர் எந்தப் பாடலில் பகுத்தறிவுக் கருத்துகளைக் கூறியுள்ளாரோ அதற்காக நான் அவரைப் போற்றுவேன்; மடமைக் கருத்துக்காகத் தூற்றுவேன். இரண்டும் செய்வேன்" யாரைப் பற்றி பெரியார் இப்படி கருத்தெழுதினார்? **விடை: திருவள்ளுவர்**

356.பெரியாரின் சிந்தனைகளை கவிதையில் வடித்தவர் பெயர் என்ன? **விடை: பாரதிதாசன்**

357.எல்லாத் தொண்டையும் விட சிறந்த தொண்டு என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: கல்வித் தொண்டு**

358.புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை முதன் முதலில் சந்தித்த ஆண்டு எது? **விடை: 1928**

359.பெரியார் கவிஞர் பாரதிதாசனுக்குத் தங்கப்பதக்கம் வழங்கியது எப்போது? **விடை: 1934ஆம் ஆண்டு பாரதிதாசன் எழுதிய 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்னும் நாடகம் சென்னையில் அரங்கேறிய போது**

360.புரட்சிக் கவிஞருக்கு நிதி வழங்குமாறு திருச்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றிய பெரியார் வழங்கிய நிதி எவ்வளவு? **விடை: ரூபாய் 150**

361. 'பெரியார் காவியம்' பாடப் போவதாக அறிவித்து நிறைவேற்றாத கவிஞர் **விடை: கண்ணதாசன்**

362.ஈரோடு இல்லத்தில் பெரியாரின் உபசரிப்பைப் பெற்ற தமிழறிஞர்? **விடை: உ.வே.சாமிநாதய்யர்**

363.தந்தை பெரியார் அவர்களால் திறந்து வைக்கப்பெற்ற திருச்செங்கோடு கதர் அங்காடியில் பணியாற்றிய எழுத்தாளர்? **விடை: கல்கி**

364.சென்னை சட்டக்கல்லூரியில் 10.2.1960 அன்று பெரியார், தமிழும் தமிழ் இலக்கியங்களும் எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர்? **விடை: நீதிபதி ஏ.எஸ்.பி. அய்யர்**

365.தந்தை பெரியாரின் எழுத்து நடை...? **விடை: நீண்ட வாக்கியம்**

366.வாக்கிய அமைப்புக்கு முக்கியத்துவம் அளிக்காத பெரியார் எதற்கு முக்கியத்துவம் அளித்தார்? **விடை: கருத்துக்கு**

367.ஒரு மொழியின் சிறப்பையும் அதைப் பேசும் மக்களின் நாகரிகத்தையும் அறிவையும் எதைக் கொண்டு அறியலாம் என்கிறார் பெரியார்? **விடை: அந்த மொழியின் மூலம் அறியக் கிடக்கும் கருத்துகளைக் கொண்டு.**

368.நமக்குக் கேடு என்று பெரியார் கூறுவது....? **விடை: நமது இலக்கியங்களும், முன்னோர்களும், முன்னோர்கள் காட்டிய பாதை முதலியவைகளும்**

369.பழம் இலக்கியங்களை பெரியார் எதிர்க்கக் காரணம்? **விடை: அந்தக் காலத்து மனிதனுக்கு எவ்வளவு அறிவு இருந்து இருக்க வேண்டும்**

370.பெரியார் "மொழியியல்" அறிஞர் என்பதற்குச் சான்று? **விடை: எழுத்துச் சீர்திருத்தம்**

371.தந்தை பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அமல்படுத்த 1948ஆம் ஆண்டிலேயே குழு அமைத்த முதலமைச்சர் பெயர் **விடை: ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்**

372.தந்தை பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைச் சட்டப்படி அமல்படுத்திய தமிழக முதலமைச்சர் யார்? **விடை: எம்.ஜி.ராமச்சந்திரன்**

373.இரங்கல் இலக்கியம் என்று சொல்லத்தக்க கையறு நிலைக் கட்டுரையைப் பெரியார் எழுதியது இவர்களில் ஒருவர் இறந்தபோது - அவர் யார்? **விடை: சர். ஏ.டி.பன்னீர்செல்வம்**

374."பாழாய்போன உத்தியோகம் சர்க்கரை பூசின நஞ்சுருண்டை குத்திய தூண்டில் முள்ளாக இருந்து விட்டது' பெரியார் எழுதிய இரங்கல் இலக்கியம் இது. யார் இறந்தபோது இப்படி எழுதினார்? **விடை: சர். ஏ.டி. பன்னீர் செல்வம்**

375.'சர்க்கஸ்காரன் குதிரைகளை விட சுதந்திர கழுதைகள் மேல்' உவமை சொன்னவர்? **விடை: பெரியார்**

376.நாம் இன்றைய நிலைமையைவிட வேகமாக முன்னேற வேண்டுமானால் சிறந்த சாதனம் என்று எந்த மொழியைப் பெரியார் குறிப்பிடுகின்றார்? **விடை: ஆங்கிலம்**

### 8. வடஇந்தியா - அயல்நாடு

377.பெரியார் எத்தனை முறை வட இந்தியச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்? **விடை: 7 முறை**

378.ஏழு முறை வட இந்தியச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பெரியார், பயணம் மேற்கொண்ட ஆண்டுகள்? **விடை: 1940, 1941, 1944, 1950, 1954, 1959, 1968**

379.பெரியார், அம்பேத்கர், முகமது அலி ஜின்னா, எம்.ஆர்.ஜெயகர் சந்திப்பு எப்போது? எங்கு நடைபெற்றது? **விடை: 1940 ஜனவரி, பம்பாயில்**

380.1941ஆம் ஆண்டு லக்னோ பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் தலைமையில் பெரியார் எத்தலைப்பில் உரையாற்றினார்? **விடை: புதுக்கருத்துகள்**

381.பெரியார் புத்த கயாவைப் பார்வையிட்ட ஆண்டு எது? **விடை:1941**

382.26.10.1941 அன்று அரித்துவாரம் கன்கல் கலைஞான சங்கத்தில் பெரியார் ஆற்றிய உரையின் தலைப்பு? **விடை: மேல் நாடும் - கீழ்நாடும்**

383.1944ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற

மாநாட்டில் பெரியார் நிகழ்த்திய உரையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்? **விடை: எஸ்.முத்தையா முதலியார்**

384.1959இல் வடநாட்டில் ஜாதி ஒழிப்புப் பிரச்சாரம் செய்ய தந்தை பெரியாரை அழைத்த கட்சி எது? **விடை: அகில இந்திய ரிபப்ளிக்கன் கட்சி**

385.1959இல் தந்தை பெரியார் உரையாற்றிய வட இந்திய பல்கலைக் கழகம் எது? **விடை: லக்னோ பல்கலைக்கழகம்**

386.அமிர்தசரஸ் நகரில் பெரியார் பார்வையிட்ட இடம் எது? **விடை: பொற்கோயில்**

387.தந்தை பெரியார் மேற்கொண்ட முதல் வெளிநாட்டுப் பயணம்? **விடை: மலேசியா 1929**

388.1929ஆம் ஆண்டு பெரியார் மலேசியா சென்றபோது எந்த ஊரில் கப்பல் ஏறினார்? எந்த ஊரில் இறங்கினார்? **விடை: நாகப்பட்டினம் - பினாங்கு**

389.தந்தை பெரியார் மேலை நாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட காலம்? **விடை: 13.12.1931 முதல் 11.11.1932 வரை 335 நாள்கள்**

390.தந்தை பெரியார் அய்ரோப்பியப் பயணத்தின் போது கப்பலில் எந்த வகுப்பில் பயணம் செய்தார்? **விடை: நான்காம் வகுப்பில்**

391. தந்தை பெரியாரின் அய்ரோப்பியச் சுற்றுப்பயணத்தில் உடன் சென்றவர்கள் யார்? **விடை: எஸ்.இராமநாதன், ஈரோடு ராமு**

392.பெரியார் சோவியத் நாட்டில் பயணம் செய்த காலம் எது? **விடை: 19.4.1932-17.5.1932**

393.பெரியார் சோவியத் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது 1932 மே தினத்தன்று பெரியாருக்கு அறிமுகப்படுத்தப் பட்ட தலைவர் யார்? **விடை: ஸ்டாலின்**

394.‘இவர் இந்தியாவிலிருந்து வந்துள்ள நாத்திகத் தலைவர்’ என்று பெரியாரை சோவியத் தலைவரிடம் அறிமுகம் செய்து வைத்தனர். சோவியத் நாட்டின் தலைவர் பெயர்? **விடை: ஸ்டாலின்**

395.பெரியார் அதிக நாள் தங்கியிருந்த அயல் நாடு எது? **விடை: ரஷ்யா**

396.பெரியார் எந்த நாட்டு குடிமகனாக வேண்டி அரசாங்கத்திடம் விண்ணப்பித்துக் கொண்டார்? **விடை: சோவியத் யூனியன்**

397.தந்தை பெரியார் எந்த நாட்டிற்குச் சென்றிருந்தபோது அவ்வரசால் கவுரவக் குடியுரிமை அவருக்களிக்கப்பட்டது? **விடை: ரஷ்யா**

398.29.5.1932 அன்று ரஷ்யத் தலைவர் ஸ்டாலின் – பெரியார் பேட்டி நடைபெறுவதாக இருந்தது. ஆனால், 19ஆம் தேதியே பெரியார் குழுவினர் ரஷ்யாவை விட்டு வெளியேற உத்தரவு பிறப்பித்தது ஏன்? **விடை: உடன் சென்ற எஸ்.ராமநாதன் நடவடிக்கையில் ஏற்பட்ட சந்தேகம்**

399.பெரியார் இங்கிலாந்து நாட்டில் சந்தித்த தொழிலாளர்களின் தலைவர் பெயர் என்ன? **விடை: சக்லத்வாலா**

400.20.06.1932இல், மெக்ஸ்பரோலேக் பார்க்கில் லான்ஸ்பரி தலைமையில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டத்தில் பெரியார் பேசினார். கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை? **விடை: அய்ம்பதாயிரம்**

401. லண்டனில் ஹைட் பூங்காவில் தொழிலாளர் கூட்டத்தில் பெரியார் உரை நிகழ்த்தினார். தலைமை வகித்தவர் பெயர்? **விடை: சக்லத்வாலா**

402.தந்தை பெரியார் தனது இயக்கம் சரியான கொள்கை – லட்சியப் பாதையில் செல்கிறதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளக் கிடைத்த அனுபவம் என்று எதைக் குறிப்பிடுகின்றார்? **விடை: உலகச் சுற்றுப் பயணத்தை**

403.தந்தை பெரியார் மேலை நாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது சுயமரியாதை இயக்கத்தைத் தளர்ச்சியடையாமல் காத்த பெருமைக்குரிய இருவர்? **விடை: நாகம்மையார் - ஈ.வெ.கிருஷ்ணசாமி**

404. இலங்கையில் பெரியார் நிகழ்த்திய பேச்சு எத்தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது? **விடை: 'இலங்கை உபந்நியாசம்'**

405. 1931ஆம் ஆண்டு அய்ரோப்பிய நாடுகளுக்குப் பயணம் புறப்பட்ட பெரியார் இலங்கையில் 8 மணி நேரம் தங்கினார். இந்தியாவுக்குத் திரும்பும் போது பெரியார் இலங்கையில் தங்கிய நாள்கள்? கலந்துகொண்ட கூட்டங்கள் எத்தனை? **விடை: 17.10.1932 முதல் 6.11.1932 வரை, 21 நாள்கள் 18 நிகழ்ச்சிகள்**

406. இலங்கையில் எஸ்.டபுள்யூ. பண்டார நாயகா தலைமையில் பெரியார் உரை நிகழ்த்தியது எந்த ஆண்டில்? **விடை: 1932**

407. "நான் ருசியாவுக்குச் சென்றேன். அப்பொழுது லெனின் நூலகத்துக்குள் சென்றேன். 1931ஆம் வருடம் 'குடிஅரசு' பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட 'லெனினும் மதமும்' என்ற நூல் அங்கு இருந்தது" என்றவர்? **விடை: கே.டி.கே. தங்கமணி**

408. 1954ஆம் ஆண்டு நடைபெற்ற உலக புத்தர் மாநாட்டில் கலந்து கொள்ள பெரியார் எந்த நாட்டிற்குச் சென்றார்? **விடை: பர்மா**

409. 1954ஆம் ஆண்டு பர்மாவில் நடைபெற்ற புத்த மத மாநாட்டில் பெரியாருடன் கலந்து கொண்ட இந்தியத் தலைவர் யார்? **விடை: அம்பேத்கர்**

410. 1954ஆம் ஆண்டு பெரியார் பர்மா நாட்டில் யாருடைய கல்லறைக்குச் சென்று மலர் வளையம் வைத்தார்? **விடை: ஆங்சான்**

411. பெரியார் பர்மாவில் நடைபெற்ற பவுத்த மாநாட்டுக்குச் சென்ற கப்பலின் பெயர்? **விடை: எஸ்.எஸ்.ஜலகோபால்**

412. பெரியார் பர்மாவில் இஸ்லாமியர்களின் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட நிகழ்ச்சி? **விடை: நபிகள் நாயகம் விழா**

413. பெரியார் விமானப் பயணம் மேற்கொண்டது எந்த நாட்டில்? **விடை: பர்மாவில்**

414. பர்மாவில் ரங்கூனில் பெரியாரின் ஒரு பொருள் திருட்டு போனது. அப்பொருள்? **விடை: கடிகாரம்**

415. பர்மாவில் பெரியார் இந்திய மக்களைக் கண்டிக்கக் காரணம்? **விடை: பர்மிய மக்களோடு ஒட்டுறவு இல்லாமல் வாழும் முறைக்காக**

416. அயல்நாட்டில் வாழும் தமிழர்களுக்குப் பெரியார் கூறும் அறிவுரை யாது? **விடை: அந்த நாட்டையே தங்கள் தாய்நாடாகப் பாவிக்க வேண்டும்.**

417. பர்மாவில் நடைபெற்ற புத்த மத மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு பெரியார் சென்ற நாடு எது? **விடை: மலேசியா**

418. கோலாலம்பூரில் தந்தை பெரியார் தங்கச் சாவி கொண்டு திறந்து வைத்த சங்கம்? **விடை: மருத்துவச் சங்கம்**

419. பெரியாரின் மூன்றாவது இலங்கைப் பயணம் எப்போது நடைபெற்றது? **விடை: 8.6.1937 முதல் 15.6.1937 - 9 நாள்கள்**

420. 1937ஆம் ஆண்டு பெரியார் இலங்கைக்கு எங்கிருந்து புறப்பட்டார்? **விடை: தனுஷ்கோடியிலிருந்து**

421. பெரியார் நண்பர், சிங்கப்பூரில் "தமிழ் முரசு" பத்திரிகை நடத்தியவர், திருவாரூர்க்காரர். அவர் பெயர்? **விடை: கோ.சாரங்கபாணி**

422. அயல்நாட்டு அறிஞர்கள் எழுதிய நூல்களை பெரியார் பதிப்பித்தார். அவற்றில் இருவரின் பெயர்? **விடை: பெர்னாட்ஷா, இங்கர்சால்**

423. பெரியார் சோவியத் ரஷ்யாவுக்கு விசா இல்லாமல் ரகசியமாகச் சென்றார் என்பது உண்மையா? **விடை: முழுப்பொய்**

424. பெரியாரின் பாஸ்போர்ட் எண் என்ன? **விடை: 9116**

### 9. பத்திரிகை - நூல்கள்

425. பத்திரிகை தொடங்குவது என பெரியார் முடிவு செய்தது எந்த ஆண்டில்? **விடை: 1922**

426. ‘குடிஅரசு’ எனும் பெயர் அரசாங்கத்திடம் எப்போது பதிவு செய்யப்பட்டது? **விடை: 19.1.1923**

427. தந்தை பெரியாரின் “குடிஅரசு” முதல் இதழ் எப்போது வெளிவந்தது? **விடை: 2.5.1925**

428. “குடிஅரசு” முதல் இதழ் - கடைசி இதழ் வெளிவந்த நாள்? **விடை: 2.5.1925 - 5.11.1949**

429. ‘குடிஅரசு’ இதழை ஒழிக்க முயற்சி நடைபெற்றபோது 26.11.1933 அன்று பெரியார் தொடங்கிய இதழின் பெயர் என்ன? **விடை: புரட்சி**

430. தந்தை பெரியாரின் “புரட்சி” முதல் இதழ் எப்போது வெளிவந்தது? **விடை: 26.11.1933**

431. ‘புரட்சி’ ஏடு தடை செய்யப்பட்டபோது பெரியார் தொடங்கிய பத்திரிகையின் பெயர் என்ன? **விடை: ‘பகுத்தறிவு’**

432. அடக்குமுறைக்கு ஆளாகிப் புரட்சி ஏடு நிறுத்தப்பட்டதும் 26.8.1934இல் பெரியார் தொடங்கிய ஏடு? **விடை: பகுத்தறிவு**

433. தந்தை பெரியாரின் “பகுத்தறிவு” முதல் இதழ் எப்போது வெளிவந்தது? **விடை: 26.8.1934**

434. ‘நான் முதலில் படிக்கும் ஏடு விடுதலையே’ கூறியவர் யார்? **விடை: கலைஞர் கருணாநிதி**

435. “விடுதலை” முதல் இதழ் எப்போது வெளிவந்தது? **விடை: 1.6.1935**

436. 1935ஆம் ஆண்டு நீதிக்கட்சியினரால் தொடங்கப்பெற்ற ‘விடுதலை’ ஏடு பெரியாரிடம் ஒப்படைக்கப்பட்ட ஆண்டு? **விடை: 1937**

437. தந்தை பெரியார் கடைசியாகத் தொடங்கிய தமிழ் இதழின் பெயர் என்ன? எந்த ஊரில் எப்போது வெளியிட்டார்? **விடை: ‘உண்மை’, 14.1.1970, திருச்சியில்**

438. 1928இல் பெரியார் தொடங்கிய ஆங்கில வார ஏட்டின் பெயர்? **விடை: ரிவோல்ட்**

439. தந்தை பெரியாரின் “ரிவோல்ட்” முதல் இதழ் எப்போது வெளிவந்தது? **விடை: 7.11.1928**

440. 1945ஆம் ஆண்டு பெரியார் தொடங்கிய ஆங்கில இதழின் பெயர்? **விடை: ஜஸ்டிசைட்**

441. 1971ஆம் ஆண்டு பெரியார் தொடங்கிய ஆங்கில ஏடு எது? **விடை: The Modern Rationalist**

442. தந்தை பெரியாரின் “மாடர்ன் ரேஷனலிஸ்ட்” முதல் இதழ் எப்போது வெளிவந்தது? **விடை: 9.1.1971**

443. ‘குடிஅரசு’ இதழைப் பெரியார் துவக்கியது? **விடை: காங்கிரசில் இருந்தபோது**

444. ‘குடிஅரசு’ பத்திரிகாலயத்தைத் திறந்து வைத்தவர்? **விடை: திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள்**

445. பெரியார் 2.5.1925இல் தொடங்கிய ‘குடிஅரசு’ இதழின் குறிக்கோளாக அதன் முதல் இதழில் சொல்லப்படுவன. **விடை: ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும்.**

446. ‘ரிவோல்ட்’ பத்திரிகை முதல் இதழ் வெளிவந்த நாள் .......... தலைமையேற்றவர் .......... வெளியிட்டவர் ................ **விடை: 06.11.1928 கோவை ரத்தினசபாபதி, W.P.A.சவுந்திரபாண்டியன்**

447. “குடிஅரசு” இதழ் 1925ஆம் ஆண்டு தொடங்கப்பட்டபோது பெரியாருடன் கூட்டு ஆசிரியராக 10 மாத காலம் பணியாற்றியவர்? **விடை: வா.மு.தங்கப்பெருமாள்**

448. “குடிஅரசு” வார இதழ் ஆகும். எந்தக் கிழமையில் வெளி வந்தது? **விடை: ஞாயிறு**

449. “குடிஅரசு” இதழ் எந்த அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது? **விடை: ஈரோட்டில் உண்மை விளக்கப் பதிப்பகம்**

450. 1965ஆம் ஆண்டு ஜூன் மாதம் திருச்சியில் தந்தை பெரியார் அவர்களை ‘ஆனந்தவிகடன்’ துணையாசிரியர் இருவர் பேட்டி கண்டு கட்டுரை வெளியிட்டனர், இருவர் யார்? **விடை: சாவி, மணியன்**

451. முதல் “குடிஅரசு” இதழின் விலை என்ன? **விடை: 1 அணா**

452. தந்தை பெரியார் பாரத மாதா படத்தை முகப்பில் போட்டு வெளியிட்ட பத்திரிகை எது? **விடை: ‘குடிஅரசு’**

453. 18.4.1926 முதல் 25.12.1927 வரை “குடிஅரசு” இதழின் முதல் பக்கத் தலைப்பில் இடம் பெற்ற முழக்கம் எது? **விடை: மகாத்மா காந்தி வாழ்க!**

454. பெரியார் நடத்திய “குடிஅரசு” இதழின் தலைப்புப் பகுதியில் இடம் பெற்ற படம் எது? **விடை: ராட்டினம்**

455. “குடிஅரசு” இதழ் 2.5.1925 முதல் தலையங்கம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட ராட்டை எப்போது முதல் நீக்கப்பட்டது? **விடை: 16.2.1930**

456. “குடிஅரசு” அட்டையில் இடம் பெற்ற திருக்குறள்? **விடை: “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்...”**

457. 1925ஆம் ஆண்டு “குடிஅரசு” இதழில் இடம் பெற்ற பாரதியாரின் பாடல் வரிகள்? **விடை: “எல்லோருமோர் குலம் எல்லோருமோர் இனம்”**

458. 2.5.1925இல் “குடிஅரசு” தொடங்கப்பட்டதிலிருந்து ஆசிரியர் பெயர் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் என்று குறிக்கப்பட்டு வெளிவந்தது. எந்த இதழிலிருந்து ஜாதிப் பட்டம் நீக்கப்பட்டு ஆசிரியர் ஈ.வெ.ராமசாமி என்று குறிக்கப்பட்டது? **விடை: 25.12.1927**

459. “குடிஅரசு” இதழ் முதல் 2 ஆண்டு காலம் சிலருக்கு பாதி விலைக்கு வழங்கப்பட்டது. சிலர் யார்? **விடை: பெண்கள் - தாழ்த்தப்பட்டவர்கள்**

460. ‘குடிஅரசு’ இதழில் பக்க எண் தமிழ் எண் முறையில் குறிக்கப்பட்டு வந்தது. மாற்றம் பெற்றது எப்போது? **விடை: 1929**

461. காரல் மார்க்ஸ் - ஏங்கல்ஸ் ஆகியோர் கூட்டு முயற்சியில் உருவான கம்யூனிஸ்ட் கொள்கை பிரகடன அறிக்கையை தமிழில் மொழிபெயர்த்து முதன்முதலில் வெளியிட்டவர் யார்? எப்போது? **விடை: பெரியார், ‘குடிஅரசு’ 11.10.1931**

462. தந்தை பெரியார், ‘இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்’ என்னும் தலையங்கத்தை எப்பத்திரிகையில் எப்போது எழுதினார்? **விடை: ‘குடிஅரசு’, 29.10.1933**

463. “குடிஅரசு” இதழ் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை எப்போது முதல் கடைபிடித்தது? **விடை: 13.1.1935**

464. சோதனைக் குழாய் குழந்தை பற்றிய பெரியாரின் பேச்சு முதன் முதலில் “குடிஅரசு” இதழில் வெளிவந்த நாள்? **விடை: 31.1.1938**

465. நீடாமங்கலம் மாநாட்டில் பந்தியில் அமர்ந்து சாப்பிட்டதற்காக மொட்டையடிக்கப்பட்ட தோழர்களுக்காக வாதாடிய இதழ்கள் யாவை? **விடை: குடிஅரசு, விடுதலை**

466. 1941 மற்றும் 1942 இரண்டு ஆண்டுகள் “குடிஅரசு இதழ் வெளியிடப்படவில்லை. காரணம்? **விடை: உலகப் போர்**

467. ‘குடிஅரசு’ இதழில் வெளிவந்த கவிதைகளின் எண்ணிக்கை? **விடை: 400**

468. ‘குடிஅரசு’ ஏடு நிறுத்தப்பட்ட காலம்? **விடை: 29.12.1940 முதல் 16.10.1943 வரை**

469. புரட்சிகரமான சிந்தனைகளைத் தாங்கி வெளிவந்த ‘குடிஅரசு’ இதழ் அட்டையின் நிறம் என்ன? **விடை: பச்சை**

470. ‘குடிஅரசு’ இதழில் பணியாற்றியபோது தந்தை பெரியாரிடம் நான் பெற்ற சம்பளம் என்று கலைஞர் குறிப்பிடும் தொகை எவ்வளவு? **விடை: நாற்பது ரூபாய்**

471. ‘இது மக்களை நடத்திச் செல்லும் பத்திரிகையே ஒழிய, மக்கள் இஷ்டப்படி நடக்கும் பத்திரிகை அல்ல’ என்று பெரியார்

எப்பத்திரிகையினைக் குறிப்பிடுகின்றார்? **விடை: 'விடுதலை'**

472. 'இயக்க விஷயத்தில் நானே தலைவன், நானே தொண்டன், நானே பிரச்சாரக்காரன், நானே ரிப்போர்ட்டர், நானே ஆசிரியன் என்கிற தன்மையில் எவ்வளவோ துன்பங்களையும், வசவுகளையும், பழிகளையும், விஷமப் பிரச்சாரங்களையும், உள் கலகங்களையும் சகித்தும், சமாளித்தும் இயக்கத்தை இந்த நிலைக்குக் கொண்டு வர எனக்குத் தனி உதவியாய் இருந்தது' என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: விடுதலை**

473. 'விடுதலை' ஏடு நடத்திட பொருளாதார ரீதியாக உதவி செய்த பெருமகன் யார்? **விடை: ஆர்.கே.சண்முகம்**

474. அறிஞர் அண்ணா 'விடுதலை' ஏட்டின் பொறுப்பாசிரியராக பணியாற்றிய காலம்? **விடை: 1939 முதல் 21.12.1941 வரை**

475. 12.9.1943 முதல் 30.9.1945 வரை யுத்தப் பிரச்சாரத்துக்காகத் தரப்பட்ட ஏடு எது? **விடை: 'விடுதலை'**

476. 'விடுதலை' ஏடு தந்தை பெரியார் பிறந்த நாள் மலராக எந்த ஆண்டு முதல் வெளிவருகிறது? **விடை: 1962**

477. "இவர் பொறுப்பேற்காவிடில் தினசரி 'விடுதலை'யை வாரப் பத்திரிகையாக நடத்த முடிவு செய்திருந்தேன்' என்று பெரியார் குறிப்பிட்டது யாரை? **விடை: கி.வீரமணி**

478. 'திராவிட நாடு' பத்திரிகைக்கு பெரியார் அளித்த நன்கொடை எவ்வளவு? **விடை: ரூபாய் 100**

479. எந்தப் பத்திரிகையின் சந்தாதரர்களுக்கு ஏஜண்டுகள் 'குடிஅரசு' இதழை வலுக்கட்டாயமாப் போடக் கூடாது என்று பெரியார் உத்தரவிட்டார்? **விடை: திராவிடநாடு**

480. 'சுயமரியாதை இயக்கத்துக்கு இவ்விரண்டு பத்திரிகைகளும் இரட்டையர்கள் போல் ஆகிவிட்டன' என்று பெரியார் எந்த இரண்டு இதழ்களைக் குறிப்பிடுகிறார்? **விடை: குடிஅரசு, திராவிட நாடு**

481. 'குடிஅரசு' இதழ் இல்லாத குறையை எப்பத்திரிகை போக்குவதாக பெரியார் கூறினார்? **விடை: திராவிட நாடு**

482. "இனி வரும் உலகம்" கட்டுரை எப்போது வெளியானது? **விடை: 21.3.1943, 28.3.1943 திராவிட நாடு இதழில்**

483. ஒரு நாட்டை செப்பனிட வேண்டுமானால் அது யாரால் முடியும் என்று பெரியார் கூறுகிறார்? **விடை: பத்திரிகைக்காரனால்**

484. சேரன்மாதேவி குருகுலப் பிரச்சினையில் பெரியாரை ஆதரித்து எழுதிய இதழ்கள்? **விடை: குமரன், தமிழ்நாடு, நவசக்தி**

485. 'குடிஅரசு' முதல் இதழிலே நீதிக்கட்சித் தலைவரின் மறைவுச் செய்தியை வெளியிட்டு அவருடைய நற்பண்புகளைப் பட்டியலிட்டவர் பெரியார், நீதிக்கட்சித் தலைவரின் பெயர்? **விடை: சர். பிட்டி தியாகராயர்**

486. 2.5.1925 முதல் 'குடிஅரசு' இதழில் 'ஸ்ரீமான் பி.தியாகராய செட்டியாரின் மரணம்' என்னும் துணைத் தலையங்கத்தை எழுதியவர்? **விடை: வா.மு.தங்கப்பெருமாள் பிள்ளை**

487. பெரியாரின் புகழ்பெற்ற புனைப் பெயர் என்ன? **விடை: சித்திரபுத்திரன்**

488. நீதிக்கட்சியினரால் சரிவர நடத்த முடியாதிருந்த 'திராவிடன்' ஏட்டை நடத்தும் பொறுப்பு பெரியாருக்கு வந்தபோது பெரியார் விதித்த நிபந்தனை யாது? **விடை: குடிஅரசு கொள்கைப்படிதான் 'திராவிடனை'யும் நடத்த முடியும். 'தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தையோ, ஜஸ்டிஸ் கட்சியையோ, அதன் கொள்கைகளையோ அதில் சம்பந்தப்பட்ட தனி நபர்களையோ கண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் கண்டிக்கத் தகுந்த உரிமை இருக்க வேண்டும்.**

489. ‘திராவிடன்’ தினசரியில் பெரியார் சில காலம் ஆசிரியராக இருந்தார். எந்த ஆண்டு? **விடை: 1927**

490. ‘ரிவோல்ட்’ இதழின் ஆசிரியர் யார்? **விடை: தந்தை பெரியார், எஸ்.ராமநாதன்**

491. ‘தமிழன் வீடு என்பதற்கான அறிவிப்பு பலகை விடுதலை’ - யார் கூறியது? **விடை: குன்றக்குடி அடிகளார்**

492. எழுத்துச் சீர்திருத்தத்தை பெரியார் முதன் முதலில் எப்போது? எந்த பத்திரிகையில் அறிமுகப்படுத்தினார்? **விடை: 6.1.1935, பகுத்தறிவு**

493. தந்தை பெரியாரின் இறுதிப் பேருரை எந்தப் பெயரில் நூலாக வெளிவந்துள்ளது? **விடை: ‘மரண சாசனம்’**

494. விவாகரத்துச் சட்டத்தைக் கண்டித்து எழுதியதற்காக பெரியாரால் கண்டிக்கப்பட்ட பத்திரிகை எது? **விடை: ஜஸ்டிஸ்**

495. ‘பிரசண்ட விகடன்’ பத்திரிகையின் பொங்கல் மலருக்குப் பெரியார் எழுதித் தந்த கட்டுரையின் தலைப்பு? **விடை: தற்காலப் பிரச்சினை**

496. பச்சை அட்டை ‘குடிஅரசு’தான் “எனக்கு ஆசான்” என்று கூறிய நடிகர்? **விடை: என்.எஸ்.கிருஷ்ணன்**

497. சுதேசமித்திரன் பத்திரிகையை நோக்கி, “வாயை அடக்குங்கள்” என்றார் பெரியார், ஏன்? **விடை: பாபு ஜெகஜீவன்ராமை கண்டனம் செய்தமைக்கு**

498. 8.11.1953 அன்று ஈரோட்டில் ப.சண்முகவேலாயுதம் வெளியிடும் பத்திரிகையை பெரியார் தொடங்கி வைத்தார். பத்திரிகையின் பெயர் என்ன? **விடை: ஈரோட்டுப் பாதை**

499. ‘குடிஅரசு’ பதிப்பகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? **விடை: 1928**

500. பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் எந்த ஆண்டு தொடங்கப் பட்டது? **விடை: 1933**

501. “இனி வரும் உலகம்” புத்தகம் விரைவில் வெளிவரும் என்று பெரியார் எப்போது குறிப்பிட்டார்? **விடை: 21.10.1942 தஞ்சாவூரில் நடைபெற்ற அருணாசலம்-கருப்பாயி அம்மாள் திருமணத்தில்**

502. புத்தரின் 2501ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் பெரியார் பேசிய தலைமையுரை நூலாக வெளிவந்துள்ளது. நூலின் பெயர்? **விடை: புத்த நெறி**

503. பெண்ணுரிமை தொடர்பாக பெரியார் எழுதிய நூலின் பெயர்? **விடை: பெண் ஏன் அடிமையானாள்?**

504. சேலம் கல்லூரியில் பெரியார் நிகழ்த்திய உரை எத்தலைப்பில் புத்தகமாக வெளிவந்தது? **விடை: தத்துவ விளக்கம்**

505. ஜோதிடம் பற்றி பெரியார் எழுதிய ஆய்வு நூல்? **விடை: ‘ஜோதிட ஆராய்ச்சி’**

506. “இராமாயணப் பாத்திரங்கள்” என்னும் நூல் பெரியாரால் வெளியிடப்பட்ட ஆண்டு? **விடை: 1945**

507. பெரியார் எழுதிய, ‘இராமாயணப் பாத்திரங்கள்’, ‘இராமாயண குறிப்புகள்’ எந்த ஆண்டு வெளிவந்தது? **விடை: 1945, 1964**

508. கடவுள், மதம், ஆத்மா முதலிய தலைப்புகளை உள்ளடக்கிய பெரியாரின் தத்துவ விளக்க நூல் எது? **விடை: மெட்டீரியலிசம் அல்லது பிரகிருதிவாதம்**

509. ‘காமராசர் ஆட்சியின் சாதனைகள்’ என்னும் புத்தகத்தை வெளியிட்டவர்? **விடை: பெரியார்**

510. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பெரியார் வாசித்த அறிக்கை நூலாக வெளிவந்துள்ளது. அந்நூலின் பெயர்? **விடை: நீதி கெட்டது யாரால்?**

511. பெரியாரின் எந்த நூலினை அரசாங்கம் தடை செய்தது? **விடை: பெரியாரின் பொன் மொழிகள்**

512. பெரியார் பதிப்பித்த இங்கர்சாலின் நூல்கள்? **விடை: மதம் என்றால் என்ன? ஆண், பெண், சிசு - சுதந்திரம்**

### 10. அனுகுமுறை

513. போராட்ட வீரர்களை உற்சாகப்படுத்த பெரியார் மேற்கொள்ளும் உத்தி? **விடை: ரயில் மார்க்கமாகப் பயணம் மேற்கொண்டு நிலையங்களில் தோழர்களைச் சந்தித்தல்**

514. பெரியார் ஒருவனை எடை போடுவதில் மேற்கொள்ளும் அளவு கோல்? **விடை: சின்ன சின்ன விஷயங்களில் எப்படி நடந்து கொள்கிறான்**

515. தந்தை பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மணி நேரத்தில் நம்பிக்கையில்லை என்னும் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்? **விடை: வ.வே.சு. அய்யர்**

516. தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் ஆயுதத்தை எப்போது பயன்படுத்த வேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: கடைசிபட்சமாக**

517. பெரியார் தம்மை எப்படி பிரகடனப்படுத்திக் கொண்டார்? **விடை: 'அழிவு வேலைக்காரன்'**

518. "ரகசிய வேலை எதுவும் நம் முயற்சிக்குக் கேடுதான் விளைவிக்கும் பலாத்கார உணர்ச்சி நம்மை எப்போதும் தோல்வியடையத்தான் செய்யும்" யார் கூற்று? **விடை: பெரியார்**

519. 'நம் பின்னாலே மக்கள் வரவேண்டுமே தவிர, பாமர மக்கள் பின்னாலே ஓடுவது இல்லை' என்று அறிவித்தவர்? **விடை: பெரியார்**

520. சமுதாயத்தைப் பார்க்கப் பெரியார் அளவு கோல்? **விடை: பகுத்தறிவு, மனிதநேயம்**

### 11. போராட்டங்கள்

521. 'கள் இறக்க உதவும் மரங்களை வெட்டி விட வேண்டும்' என்ற காந்தியாரின் வேண்டுகோளை ஏற்று பெரியார் செய்த காரியம் யாது? **விடை: அவருக்கு சொந்தமான 500 தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார்.**

522. தந்தை பெரியார் ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் செய்து சிறை சென்ற ஆண்டு எது? **விடை: நவம்பர் 1921**

523. தந்தை பெரியாரின் முதல் சிறை வாசம் எதற்காக? **விடை: கள்ளுக்கடை மறியலுக்காக**

524. கள்ளுக்கடை மறியல் போரில் கைது செய்யப்பட்ட பெரியார் எந்த ஊர் சிறையில் அடைக்கப்பட்டார்? **விடை: கோவை**

525. ஈரோட்டில் கள்ளுக்கடை மறியல் போராட்டத்துக்குத் தலைமையேற்று கைதாகத் துணிந்த இரண்டு பெண்மணிகளின் பெயர்கள் யாவை? **விடை: ஈ.வெ.ரா.நாகம்மையார், பெரியாரின் தங்கை கண்ணம்மாள்**

526. "கள்ளுக்கடை மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும்" என்று சொன்னவர் யார்? **விடை: காந்தியடிகள்**

527. கள்ளுக்கடை மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை; அது ஈரோட்டிலுள்ள இரண்டு பெண்களிடம் இருக்கிறது. அவர்களைக் கேட்க வேண்டும் என்று காந்தியடிகள் கூறிய செய்தி எப்பத்திரிகையில் எந்த நாளில் பிரசுரமானது? **விடை: 19.1.1922, 'தி ஹிந்து'**

528. வைக்கம் போராட்டம் நடைபெற்ற ஆண்டு? **விடை: 1924-1925**

529. வைக்கம் போராட்டம் நடைபெறக் காரணம் **விடை: கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் தாழ்த்தப்பட்டோர் நடப்பதற்கு உரிமை மறுக்கப்பட்டமை**

530. வைக்கம் மகாதேவர் ஆலயத்திலிருந்து 100 கெஜ தூரத்தில் எழுதப்பட்டிருந்த வாசகம் என்ன? **விடை: தீண்டத்தகாதார் வரக்கூடாது.**

531. தந்தை பெரியார் வைக்கத்திற்கு வந்து, போராட்டத்திற்கு உயிர் கொடுக்க

வேண்டும் என்று சிறையிலிருந்து கடிதம் அனுப்பியவர்கள்? **விடை: பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப், கேசவ மேனன்**

532. தந்தை பெரியார் அறப்போர் நிகழ்த்திய வைக்கம் என்னும் ஊர் எந்த மாநிலத்தில் உள்ளது? **விடை: கேரளம்**

533. வைக்கம் போராட்டத்திற்குப் புறப்படும்போது தந்தை பெரியார் காங்கிரஸ் தலைவர் பதவியை யாரிடம் ஒப்படைத்தார்? **விடை: ராஜகோபாலாச்சாரியாரிடம்.**

534. வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள வந்த தந்தை பெரியாருக்கு அரசு மரியாதை கிடைக்கக் காரணம்? **விடை: திருவனந்தபுரம் அரசர் தந்தை பெரியார் வீட்டில் விருந்தினராகத் தங்கிச் சென்றதால்**

535. வைக்கம் போராட்டத்தின்போது பெரியார் எத்தனை முறை வைக்கம் சென்றார்? எத்தனை நாள்கள் வைக்கத்தில் இருந்தார்? **விடை: 7 முறை, 140 நாள்கள்**

536. வைக்கம் போராட்டத்தில் பெரியார் குதித்த நாள்? **விடை: 14.4.1924**

537. தந்தை பெரியார் வைக்கம் போராட்டச் சத்தியாக்கிரகத் தலைமையகத்திற்குத் தளபதியாக பொறுப்பேற்ற நாள்? **விடை: 17.4.1924**

538. வைக்கம் போராட்டத்தின்போது தந்தை பெரியார் எத்தனை முறை கைது செய்யப்பட்டார்? **விடை: இரண்டு முறை**

539. வைக்கம் போராட்டத்தின்போது பெரியார் எத்தனை நாள்கள் சிறையில் இருந்தார்? **விடை: 74 நாள்கள்**

540. வைக்கம் போராட்டத்தின்போது முதல் முறையாகக் கைது செய்யப்பட்ட பெரியாரை எவ்வூர் சிறையில் அடைத்தனர்? எப்போது? **விடை: அருவிக்குட்டி, 22.4.1924**

541. வைக்கம் போராட்டத்தில் அருவிக்குட்டிச் சிறையில் அடைக்கப்பட்ட பெரியார் எத்தனை நாள்கள் சிறையில் இருந்தார்? **விடை: ஒரு மாதம்**

542. வைக்கம் போராட்டத்தின்போது இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்ட பெரியார் எவ்வூர் சிறையில் அடைக்கப்பட்டார்? **விடை: திருவாங்கூர் மத்தியச் சிறை**

543. வைக்கம் போராட்டத்தின்போது இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்ட பெரியாருக்கு வழங்கப்பட்ட தண்டனை காலம் எவ்வளவு? எத்தனை நாள்கள் சிறையிலிருந்தார்? **விடை: தண்டனைக் காலம் 4 மாதங்கள்; சிறையிலிருந்த நாள்கள் 43.**

544. பெரியாரால் தீவிரம் பெற்ற வைக்கம் போராட்டத்தை ஒடுக்க அரசு பிறப்பித்த உத்தரவு யாது? **விடை: பெரியாருக்குத் திருவாங்கூரிலிருந்து நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.**

545. வைக்கம் போராட்டத்தில் பெரியார் கைது செய்யப்பட்டவுடன் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி எழுச்சியூட்டிய பெண்மணிகள் **விடை: நாகம்மையார் - கண்ணம்மாள்**

546. வைக்கம் போராட்டத்தின்போது, காந்தி-ராணி சந்திப்பின் போது, காந்தியிடம் ராணி கேட்ட உத்தரவாதம் யாது? **விடை: கோயில் நுழைவு கேட்க மாட்டோம் என்று பெரியார் உத்தர வாதம் தர வேண்டும்.**

547. வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாரின் கருத்தைக் கேட்பதற்குப் பெரியாரை காந்தி சந்தித்தது எங்கே? **விடை: கொட்டாரம்**

548. வைக்கம் போராட்டத்தின்போது காந்தி – நாராயணகுரு சந்திப்பின்போது பெரியார்

உடன் இருந்தார் என்பதை விளக்கும் ஆதாரம் எது? **விடை: காவல் ஆணையர் அறிக்கை**

549. வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் ஆர்வத்திற்குக் காரணம்? **விடை: தீண்டாமையை ஒழிக்க இதுதான் நல்ல வாய்ப்பு**

550. ஜெயில்களில் ............... இருக்கவேண்டும் **விடை: ஒரே வகுப்புதான்**

551. தந்தை பெரியார் கதர் பிரச்சாரம் செய்தபோது சென்னையில் பேசிய பேச்சுக்காக அரசு வெறுப்பு, வகுப்பு வெறுப்பு குற்றம் சாட்டப்பட்டுச் சென்னை சிறையில் அடைக்கப்பட்ட நாள் எது? **விடை: 11.9.1924**

552. 1924ஆம் ஆண்டு பெரியார் மீது ராஜ துவேஷ, வகுப்பு துவேஷ வழக்குத் தொடுக்கப்பட்டு கைது செய்யப்பட உண்மைக் காரணம்? **விடை: வைக்கம் போராட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் தடுக்கவே**

553. “கால்களில் விலங்குச் சங்கிலி; கழுத்திலே கைதி எண் குறிக்கப்பட்ட ஒரு மரப்பட்டை. இவற்றோடு ஈ.வெ. ராமசாமி கொலைகாரர்களோடும் கொள்ளைக்காரர்களோடும் வேலை செய்து கொண்டிருக்கிறார். தண்டனை அடைந்த ஒரு சாதாரணக் கைதி ஒரு நாளைக்கு எவ்வளவு வேலை செய்வானோ அதுபோல் இரு மடங்கு வேலை செய்கிறார்” என்று எழுதியவர். **விடை: கே.பி.கேசவ மேனன்**

554. “பெரியார் வைக்கம் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தியதைக் கூட்டத்திலிருந்து வேடிக்கை பார்த்த தொண்டன் நான்” - இது யார் கூற்று? **விடை: காமராசர்**

555. வைக்கம் போராட்டத்தில் வெற்றி பெற்ற பெரியாரைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றிய காங்கிரஸ் மாநாடு எது? **விடை: 1925 காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாடு**

556. தந்தை பெரியார் கலந்து கொண்ட வைக்கம் வெற்றி விழாக் கூட்டம் நடைபெற்ற நாள் எது? **விடை: 29.11.1925**

557. குருகுலப் போராட்டம் நடைபெற்ற ஆண்டு? **விடை: 1924-1925**

558. சேரன்மாதேவி குருகுலத்தை எதிர்த்து பெரியார் போராட்டம் நடத்தக் காரணம்? **விடை: ஜாதிப் பிரிவினை வளர்க்கப்பட்டதால்**

559. குருகுலத்தை ஒழிக்கப் பெரியார் கையாண்ட முறை? **விடை: தமிழ் மக்கள் செய்து வந்த பண உதவியை நிறுத்தச் செய்தார்**

560. சேரன்மாதேவி குருகுலத்தில் ஜாதிப் பிரிவு இருப்பதால் காங்கிரஸ் கட்சி பண உதவி செய்யாது என்று மறுத்தவர் யார்? **விடை: தந்தை பெரியார்**

561. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தத்திற்குக் காரணமாக இருந்தவர் யார்? **விடை: பெரியார்**

562. “சென்னை மாநிலத்தில் நடைபெற்ற கிளர்ச்சியின் காரணமாக முதல் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டியதாயிற்று” எனப் பெரியாரின் போராட்டத்தைக் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றியவர்? **விடை: ஜவஹர்லால் நேரு**

563. பெரியாரின் கோரிக்கையை ஏற்று இந்திய அரசமைப்புச் சட்டம் முதன் முதலாகத் திருத்தப்பட்ட நாள்? **விடை: 2.6.1951**

564. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம் பெரியார் நடத்திய போராட்டத்தின் காரணமாக நடைபெற்றது. சட்டத்தில் சேர்க்கப்பட்ட விதி? **விடை: 15(4)**

565. வகுப்புரிமைக்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் எனப் பெரியார் கிளர்ச்சி செய்யக் காரணமான சூழல் யாது? **விடை: தொழில் படிப்புக் கல்லூரிகளுக்கு இடஒதுக்கீடு ஏற்பாடு செல்லாது என உயர்நீதிமன்றமும் உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்ததால்.**

566. "ராஜகோபாலாச்சாரியார் முதல் மந்திரி பதவிக்கு வந்தது குறித்து உண்மையில் மனமகிழ்ச்சி அடைந்தவன் நான்" என்பதற்குப் பெரியார் கூறும் காரணம்? **விடை: நமக்கு நன்றாகக் கண்டித்து, எதிர்த்துப் போர் துவக்க வசதி இருக்கக் கூடிய ஓர் ஆட்சி**

567. 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் சிறையிலிருந்து நாள்கள்? **விடை: 167**

568. 'எவ்வளவு அதிக தண்டனை தர முடியுமோ அதையும், எவ்வளவு தாழ்ந்த வகுப்புத் தர முடியுமோ அதையும் கொடுத்து இந்த விசாரணை நாடகத்தை முடித்து விடுங்கள்' பெரியாரின் இவ்வறிக்கை எப்போது வெளியிடப்பட்டது? **விடை: 1938 இந்தி எதிர்ப்பில் கைது செய்யப்பட்டு வழக்கு நடந்த போது**

569. மொழிப் போரில் ஈடுபட்ட பெரியாரிடம் அபராதம் வசூலிக்க அவருடைய போர்டு கார் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்தில் விடப்பட்டது. ஏலத் தொகை எவ்வளவு? **விடை: ரூபாய் 181**

570. 1938 ஆம் ஆண்டு மொழிப் போராட்டத்தின்போது பெரியார் பெற்ற தண்டனை? **விடை: 2 ஆண்டுகள் சிறை, 2 ஆயிரம் ரூபாய் அபராதம்**

571. மொழிப் போராட்டத்தின்போது திருச்சியிலிருந்து சென்னை நோக்கி பிரச்சாரம் செய்து கொண்டே 100 பேர் கொண்ட அணி புறப்பட்டது. அந்த அணிக்குச் சூட்டிய பெயர் என்ன? **விடை: தமிழர் படை**

572. பெரியார் நடத்திய மொழிப் போரில் பங்கேற்று சிறையிலே உயிர் நீத்த இருவர்? **விடை: நடராசன், தாளமுத்து**

573. 1.8.1952 அன்று ரயில் நிலையப் பெயர் பலகையில் இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டம் நடைபெற்றபோது பெரியார் எந்த ஊரில் போராட்டத்தில் கலந்து கொண்டார்? **விடை: திருச்சி**

574. 1.8.1953 அன்று ரயில் நிலையப் பெயர் பலகையில் இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டம் நடைபெற்றபோது பெரியார் எந்த ஊரில் போராட்டத்தில் கலந்து கொண்டார்? **விடை: சேலம்**

575. 8.8.1954 அன்று ரயில் நிலையப் பெயர்ப் பலகையில் இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டம் நடைபெற்ற போது பெரியார் எந்த ஊரில் போராட்டத்தில் கலந்து கொண்டார்? **விடை: தஞ்சாவூர்**

576. 1.8.1955 அன்று பெரியார் நடத்துவதாக அறிவித்த போராட்டத்தால் விளைந்த பயன் என்ன? **விடை: ரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில் தமிழ் எழுத்துகள் முதலாவதாக பொறிக்கப்பட்டன**

577. "இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?" என்ற கட்டுரையை எழுதியதற்காக பெரியார் கைது செய்யப்பட்டார். அவருடன் கைது செய்யப்பட்ட 'குடிஅரசு' இதழின் வெளியீட்டாளர் யார்? **விடை: தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாள்**

578. 1934 ஆம் ஆண்டு பெரியார் மீது இ.பி.கோ.124 செக்ஷன்படி அரசாங்கம் வழக்குத் தொடுக்கக் காரணம்? **விடை: பொதுவுடைமைப் பிரச்சாரம் மற்றும் ராஜ நிந்தனை**

579. எல்லோரும் முழு நேரம் கல்வி பெற வேண்டும் என்னும் நோக்கத்துடன் பெரியார் எதிர்த்த கல்வித் திட்டம் எது? **விடை: குலக் கல்வித் திட்டம்**

580. 'அரை நேரப் படிப்பு, அரை நேரம் ஜாதித் தொழில் செய்வது' என்னும் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து பெரியார் உருவாக்கிய 'ஆச்சாரியார் புதிய கல்வித் திட்ட எதிர்ப்புப் படை' எந்த ஊரிலிருந்து எப்போது புறப்பட்டது? **விடை: நாகப்பட்டினம் 29.3.1954**

581. தஞ்சையிலிருந்து சென்னை நோக்கி நடந்தே பிரச்சாரம் செய்த ஜாதி ஒழிப்புப் பிரச்சாரப் படையின் கருஞ்சட்டை வீரர்களின்

எண்ணிக்கை? தலைவர் பெயர்? **விடை: 22 பேர், நீடாமங்கலம் ஆறுமுகம்**

582.ஜாதி ஒழிப்புப் பிரச்சாரப் படை புறப்பட்ட நாள் - ஊர் எது? **விடை: 20.6.1957 - தஞ்சாவூர்**

583.ஜாதி ஒழிப்புப் பிரச்சாரப் படை சேர்ந்த நாள் - ஊர் எது? **விடை: 30.7.1957, சென்னை**

584.திருவல்லிக்கேணி, பைக்ராஃப்ட்ஸ் சாலையிலுள்ள முரளி கஃபே உணவு விடுதி முன் எத்தனை நாள்கள் போராட்டம் நடைபெற்றது? **விடை: 210 நாள்கள்**

585.வேலை நிறுத்தம் குறித்து பெரியாரின் கருத்து? **விடை: சமூகத் துரோகமான காரியம்**

586.தடையை மீறி ரயில்வே நிருவாகத்தையும் அரசையும் கண்டித்துப் பேசியதற்காக 1928 ஆகஸ்ட் 5இல் எந்த ஊரில் பெரியார் கைது செய்யப்பட்டார்? **விடை: ஈரோடு**

587.அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்பதற்காகப் போராடிய தலைவர்? **விடை: பெரியார்**

588.தந்தை பெரியாரின் கொள்கையினை ஏற்று அவருடன் இணைந்து போராடிய நாம் தமிழர் இயக்கத்தின் நிறுவனர் பெயர்? **விடை: சி.பா.ஆதித்தனார்**

589.‘எங்கு இருந்தால் இன்பம் அடைவேன்’ என்றார் பெரியார்? **விடை: சிறையில்**

590.1938 டிசம்பரில் நீதிக்கட்சி மாகாண மாநாடு நடைபெற்ற போது மாநாட்டின் தலைவர் பெரியார் எங்கு இருந்தார்? **விடை: பெல்லாரிச் சிறையில்**

591. தந்தை பெரியார் எத்தனை முறை சிறை சென்றார்? **விடை: 19 முறை**

592.பெரியார் சிறையில் இருந்த நாள்கள்? **விடை: 30 மாதங்கள்**

593.தந்தை பெரியாரின் இறுதிப் பேருரை எந்தப் பெயரில் நூலாக வெளிவந்துள்ளது? **விடை: ‘மரண சாசனம்’**

594.தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சிச் செயலாளராக இருந்த ஆண்டு எது? **விடை: 1925**

595.தந்தை பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த ஆண்டு எது? **விடை: 1922 மற்றும் 1924**

596.பெரியார் நடத்திய போராட்டங்களின் எண்ணிக்கை? **விடை: 15**

597.பெரியார் நடத்திய போராட்டங்கள் எப்படிப்பட்டவை? **விடை: பொது மக்களுக்குத் தொல்லை இருக்காது, பொதுச் சொத்துக்கு சேதம் இருக்காது, வன்முறை இருக்காது**

598.பெரியார் சிறையில் அடைக்கப்பட்டபோது பக்கத்து அறையில் ராஜகோபாலாச்சாரியார் அடைக்கப்பட்டிருந்தார். எந்த ஊரில்? எப்போது? **விடை: கோயமுத்தூர், 1933**

599.பெரியார் சிறையில் அடைக்கப்பட்டபோது பக்கத்து அறையில் அண்ணா அடைக்கப் பட்டிருந்தார். எந்த ஊரில்? எப்போது? **விடை: திருச்சி, 1950**

## 12. கொள்கை

600.“என்னைப் பொறுத்தவரையில் நான் என்றும் கட்சிக்காரனாக இல்லவே இல்லை. எப்பொழுதும் நான் கொள்கைக்காரனாகவே இருந்தேன்” என்று சொன்னவர் யார்? **விடை: பெரியார்**

601. ‘தன் கொள்கையை விட்டு கொடுக்கும் மனப்பான்மை இவரிடம் எப்பொழுதும் இருந்ததில்லை. தன் கொள்கைக்குப் பிறர் இணங்கி வரவேண்டும்; பிறர் கொள்கைக்கு இவர் இணங்கவே மாட்டார். ஒரு சீர்திருத்தவாதிக்கு இருக்க வேண்டிய குணம் இதுவே” - பெரியார் குறித்து இப்படி எழுதியிருப்பவர் யார்? **விடை: சாமி சிதம்பரனார்**

602.பெரியார் கொள்கையின் மய்யம் எது? **விடை: மானுடப் பற்று**

603.மதப்பற்று, கடவுள் பற்று, புராணப்பற்று, நாட்டுப் பற்று, ஜாதிப் பற்று, இலக்கியப் பற்று

எனக்கு கிடையாது என்ற பெரியார் தமக்கு எந்தப் பற்று இருப்பதாக அறிவித்தார்? **விடை: மனிதப் பற்று**

604. தேசப்பற்று என்பதைவிட, தந்தை பெரியார் எதைப் பெரிதாகக் கருதினார்? **விடை: உலக அளவிலான மனிதநேயம்**

605. மனிதநேயர் தந்தை பெரியாரின் கொள்கையைத் தெளிவாக உணர்த்தும் உரை என்று பலரும் பாராட்டும் உரை எங்கு நடத்தப்பட்டது? **விடை: 5.1.1953 லட்சுமிபுரம் யுவர் சங்கத்தில்**

606. ‘இந்த உலகத்தில் உள்ள எல்லா அகராதிகளையும் கொண்டு வந்து போட்டு ஏடு ஏடாய் புரட்டிப் பார்த்தாலும் அழகும், பொருளும், சக்தியும் நிறைந்த வார்த்தை - அந்த வார்த்தைக்கு மேலானதாகவோ ஈடானதாகவோ உள்ள வேறு ஒரு வார்த்தையை யாராலும் கண்டுபிடிக்க முடியாது” என்று பெரியார் எந்த வார்த்தையைக் குறிப்பிடுகிறார்? **விடை: சுயமரியாதை**

607. மக்கள் தங்கள் உயிருக்கு நிகராக எதைக் கருத வேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: சுயமரியாதை**

608. இது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாகும் **விடை: எல்லா மக்களும் பிறவியில் சமம்**

609. இது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாகும் **விடை: பெண் மக்களுக்கு எல்லா வகையிலும், எல்லா நிலையிலும் சம உரிமை இருக்க வேண்டும்.**

610. எல்லா உணர்ச்சிகளையும் விட மேலானதும் மதிக்கத்தக்கது மானது என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: சுயமரியாதை உணர்ச்சியை**

611. இது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாகும்? **விடை: மனிதனுக்கு உயிரைவிட மானம் பெரிது.**

612. இது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாகும் **விடை: வகுப்புவாரி பிரதிநிதித்துவம்**

613. இது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கையாகும் **விடை: மூடப்பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் அடியோடு தொலைய வேண்டும்.**

614. மனிதருக்கு அழகு என்று எதனைப் பெரியார் குறிப்பிடுகிறார்? **விடை: பகுத்தறிவு**

615. கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்க பெரியார் அடிப்படையாகக் கொண்டது? **விடை: பகுத்தறிவு**

616. தந்தை பெரியார் ஜெர்மனியில் தங்கிய காலம் எது? **விடை: 18.05.1932 முதல் 14.06.1932 வரை**

617. “ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் ................. உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன்” **விடை: மானமும் அறிவும்**

618. 1961 மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது கழகத் தோழர்கள் தம்மை எவ்வாறு பதிவு செய்து கொள்ளும்படி பெரியார் கூறினார்? **விடை: நாத்திகர்**

619. பொருளாதாரக் கண்ணோட்டத்தைவிட முதல் லட்சியமாகப் பெரியார் கருதியது? **விடை: சமூக இழிவு ஒழிப்பு**

620. பெரியாரின் குறிக்கோள்? **விடை: வேற்றுமை இல்லாத மனித சமுதாயம்**

621. ‘ஜாதிப் பட்டங்களைத் துறக்க வேண்டும்’ என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மாநாடு எது? **விடை: செங்கல்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மாகாண மாநாட்டில்**

622. தாழ்த்தப்பட்டோரை ஒதுக்கி வைப்போர்

திராவிட இயக்கத்தின் எதிரிகள் என்று பெரியார் எந்த ஊரில் பேசினார்? **விடை: திருமங்கலத்தில்**

623.ஆதிதிராவிடர்களுக்கென்று தனிக் கிணறுகள் வெட்டுவது குறித்து பெரியாரின் கருத்து? **விடை: அக்கிரமம்**

624.1926 ‘குடிஅரசு’ இதழில் தாழ்த்தப்பட்டோர் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று பெரியார் எழுதினார். எந்த ஊர் கோயிலைக் குறிப்பிட்டுச் சொன்னார்? **விடை: சுசீந்திரம்**

625.தாழ்த்தப்பட்டோர் சுசீந்திரம் கோயிலில் நுழைய அனுமதிக்கப்பட வேண்டும் என "குடிஅரசு" தலையங்கம் எழுதிய ஆண்டு எது? **விடை: 1926**

626."எந்த வார்த்தை இனி சரித்திரத்தில் கூட இருக்க முடியாது. சித்திரத்தில்கூட இருக்க முடியாதே, அகராதியில் கூட இருக்க இடம் அளிக்க மாட்டோம்" என்கிறார் பெரியார்? **விடை: சூத்திரன்**

627. தந்தை பெரியாரின் கொள்கைத் தீவிரத்தைக் கண்டு, ‘உங்களை விட ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் நூறு மடங்கு மேல்’ என்று கூறியவர் யார்? **விடை: ராஜகோபாலாச்சாரியார்**

628."விடுதலையும் பெரியாரும் எனது அன்பார்ந்த எதிரிகள்" என்று எழுதியவர் யார்? **விடை: ராஜகோபாலாச்சாரியார்**

629. முதல் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்ற ஊர் எது? **விடை: சுக்கிலநத்தம்**

630.சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் யாருடைய திருமணம் குறித்து தீர்ப்பு வழங்கப்பட்டது? **விடை: 15.4.1934 அன்று திருச்சியில் தந்தை பெரியார் நடத்தி வைத்த ராம.அழ.சிதம்பரம் - ரெங்கம்மாள் திருமணம் குறித்து**

631. பெரியாரின் கோரிக்கையான சுயமரியாதைத் திருமணங்கள் செல்லும் என்ற சட்டத்தை அண்ணா முன் தேதியிட்டு நிறைவேற்றிய நாள் எது? **விடை: 27.11.1967**

632.பெரியார் வலியுறுத்திய சுயமரியாதைத் திருமணத்திற்குச் சட்ட வடிவம் தந்த முதலமைச்சர் பெயர் என்ன? **விடை: அண்ணா**

633.பெரியார், ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று முழக்கம் எழுப்பியது எப்போது? **விடை: 11.9.1938**

634.பெரியார், ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று முழக்கம் எழுப்பியது எப்போது? **விடை: 17.12.1939**

635.தமிழர் என்பது மொழிப் பெயர்; திராவிடம் என்பது? **விடை: இனப் பெயர்**

636.வகுப்புவாரி உரிமை ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட ஆண்டுகள்? **விடை: 1921, 1922, 1924**

637.வகுப்புவாரி உரிமை சட்டபூர்வமாக நடைமுறைக்கு வந்த நாள்? **விடை: 13.9.1928**

638.காங்கிரஸ் கட்சியிலிருந்து பெரியார் வெளியேறக் காரணம்? **விடை: காங்கிரஸ் வகுப்புவாரி உரிமைக் கொள்கையினை ஏற்க மறுத்தமை**

639.வகுப்புவாரி உரிமைக் கொள்கைக்காக காங்கிரஸ் கட்சியிலிருந்து பெரியார் வெளியேறக் காரணமாயிருந்த மாநாடு எங்கு நடைபெற்றது? **விடை: காஞ்சிபுரம்**

640.ஈரோடு வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்படும் முக்கிய அம்சங்களில் இரண்டு? **விடை: வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஏற்படுத்தல், தீண்டாமை, மூடநம்பிக்கையைச் சட்டத்தின் மூலம் ஒழித்தல்**

641. பக்தி இல்லையென்றால் நட்டமில்லை என்று கூறும் பெரியார், எது இல்லையென்றால் எல்லாமே பாழ் என்கிறார்? **விடை: ஒழுக்கம்**

642. காரைக்கால் பகுதியில் எருமைக்கடா பலியிடுவதைத் தடுத்தவர் யார்? **விடை: பெரியார்**

643. அறிவியல் மனப்பான்மை, மனித நேயம், ஆய்வு மனப்பான்மை, சீர்திருத்தம், சிந்தனை ஆகியவற்றை மேம்படுத்தல் என்னும் பெரியாரின் கோட்பாடுகளை இந்திய அரசியல் சட்டம் - அடிப்படைக் கடமைகள் என்னும் பகுதியில் வலியுறுத்துகிறது. எந்தப் பிரிவு? **விடை: 51A**

644. 1938ஆம் ஆண்டு காஞ்சிபுரம் அய்யங்கார் குளத்தில் பெரியார் நடத்திய மாநாட்டின் பெயர்? **விடை: ஆன்மா ஒழிப்பு மாநாடு**

645. குழந்தைக்கு இந்தப் பெயரைப் பெரியார் சூட்டியுள்ளார். அப்பெயர் எது? **விடை: திருவிடம்**

646. குழந்தைக்கு இந்தப் பெயரைப் பெரியார் சூட்டியுள்ளார். அப்பெயர் எது? விடை: **சித்தார்த்தன்**

647. குழந்தைக்கு இந்தப் பெயரைப் பெரியார் சூட்டியுள்ளார். அப்பெயர் எது? **விடை: ரஷ்யா**

648. "இவ்வாண்டில் பிறக்கும் குழந்தைகட்கெல்லாம் முத்தையா என்று பெயரிடுங்கள்" என்று 1928இல் பெரியார் கூறக் காரணம்? **விடை: முத்தையா [முதலியார்] என்னும் அமைச்சர் வகுப்புரிமை ஆணையைப் பிறப்பித்தமைக்காக.**

649. 1928ஆம் ஆண்டில் வகுப்புவாரி உரிமை நடைமுறைக்கு வர காரணமாயிருந்தவரின் பெயரைத் தமிழர் வீட்டுப் பிள்ளைகளுக்குச் சூட்டுங்கள் என்று பெரியார் வேண்டுகோள் விடுத்தார். பெரியார் சூட்டச் சொன்ன பெயர் என்ன? **விடை: முத்தையா**

650. 'பிறக்கின்ற குழந்தைகளுக்கெல்லாம் இந்தப் பெயரையே சூட்டுங்கள்" என்றார் பெரியார். பெரியார் சூட்டச் சொன்ன பெயர் யாது? **விடை: அண்ணா**

651. புதுமனை புகுதல் விழாவில் கலந்து கொண்டு பெரியார் சூட்டிய பெயர்? **விடை: தன்மான இல்லம்**

652. 'அந்தணர்ப் பேட்டை' என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரை வலியுறுத்துவது? **விடை: கூட்டுறவு முறை**

653. மொழிப்போர் தியாகிகள் என்.நடராசன், வெ.தாளமுத்து நினைவுச் சின்னம் எழுப்ப பெரியார் அடிக்கல் நாட்டிய நாள்? **விடை: 5.5.1940**

654. பெரியாரியல் என்பது...? **விடை: வாழ்வியல்**

655. உருவப்படத்தைத் திறந்து வைத்து உரையாற்ற ஒப்புக் கொள்வதற்குப் பெரியார் கூறும் காரணம் யாது? **விடை: பிரச்சாரம் செய்ய ஒரு சாதனம்**

656. 'தேர்தலும் பதவியும் வேண்டாம்' என்று அறுதியிட்டு உரைத்தவர்? **விடை: பெரியார்**

657. பலபேரை அயோக்கியர்களாக - நாணய மற்றவர்களாக ஆக்கி வருவது ........................ என்கிறார் பெரியார். **விடை: பதவி மோகம்**

658. 1942இல் அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கு வந்திருந்த திருவாங்கூர் மகாராணி சமஸ்கிருத வளர்ச்சிக்கு ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடை தந்தபோது தந்தை பெரியார் அதை எதிர்த்துப் போராடி - அந்தப் பணத்தை எதற்கு செலவிடக் காரணமாயிருந்தார்? **விடை: மாணவர் விடுதி வளர்ச்சிக்கு**

659. சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் சமதர்மக் கொள்கையும் முக்கியமான ஒன்று என்று முதன்முதலாக எப்போது அறிவிக்கப்பட்டது? **விடை: 1932 டிசம்பர் 17, 18 மதுரையில் நடைபெற்ற மாவட்ட சுயமரியாதை மாநாட்டில்**

660. 'மே நாள் கொண்டாட வேண்டும்' என்று பெரியார் அறிக்கை விடுத்த ஆண்டு? **விடை: 1931**

661. பொதுவுடைமைக் கொள்கைகளால்தான் உலகமே விடுதலையும், சாந்தியும்,

சமாதானமும் அடையக்கூடும்'' - யார் கூற்று? **விடை: பெரியார்**

662.1935ஆம் ஆண்டு பெரியார் சர்க்காருடன் சமாதானம் செய்து கொள்ள காரணம் யாது? **விடை: வீண் தொந்தரவும் மனக்கசப்பும் ஏற்படாமல் இருக்க**

663.இந்தியாவின் பொருளாதாரத் துறை சீர்பட முதலாவது ஒழிய வேண்டியது என பெரியார் குறிப்பிடுவது? **விடை: வருணாசிரம முறை**

664.''கிளர்ச்சி துவங்குவதும் துவங்காததும் உற்சாகத்தையோ, ஆர்வத்தையோ பொருத்ததாயிராது'' என்று கூறும் பெரியார் எதைப் பொருத்திருக்கும் என்கிறார்? **விடை: ஆட்சியின் போக்கை**

665.மக்கள் தங்கள் இழிவை உணர்ந்து வெட்கமும், துக்கமும் அடைந்திருக்கிறார்கள் என்பதைக் காட்ட எந்த நிறச் சட்டையை அணியுமாறு பெரியார் வேண்டுகோள் விடுத்தார்? **விடை: கருப்பு**

## 13. சிந்தனை

666.'இன்னும் என்னால் வெளியாக்கப்பட வேண்டிய விஷயம் அதிகம் இருக்கிறது' என்று பெரியார் சொன்னபோது அவருக்கு வயது என்ன? **விடை: 91**

667.பெரியாரின் அண்ணன் ஈ.வெ.கிருஷ்ணசாமியின் உடல் அடக்கம் செய்யப்பட்டபோது பெரியார் செய்தது என்ன? **விடை: அடக்கம் செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட உப்பு மூட்டைகளில் மீதமிருந்த மூன்று மூட்டைகளை வீட்டிற்குக் கொண்டு வரும்படி கூறினார்.**

668.பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குத் தேவையானவை என பெரியார் கூறுவது? **விடை: நாணயம், கட்டுப்பாடு, உறுதி, தியாகபுத்தி**

669.பொதுத் தொண்டில் ஈடுபடுவோர் தகுதியாகப் பெரியார் கூறுவது? **விடை: பொதுத் தொண்டின் மூலம் பிழைப்பு நடத்தக்கூடாது, பதவி எதிர்பார்க்கக் கூடாது**

670.'பொதுத் தொண்டுக்கு லாயக்கற்றவன்' என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகிறார்? **விடை: பொது ஜனங்களிடம் நல்ல பேர் எடுக்க முயற்சிப்பவன்**

671. லஞ்சம் எப்போது ஒழியும் என்கிறார் பெரியார்? **விடை: பொதுவுடைமை சமுதாயம் மலரும் போது**

672. இந்தியாவில் பொதுவுரிமைக்குத் தடையாக இருப்பது எது என்கிறார் பெரியார்? **விடை: ஜாதி அமைப்பு**

673. ஜன சமூகம் கவலையற்று வாழ, ஒழுங்கான முறை? **விடை: கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறை**

674. இனிவரும் உலகச் சிற்பிகளாகத் திகழத் தகுதி உடையோர் என பெரியார் யாரைக் குறிப்பிடுகின்றார்? **விடை: பாமரனின் ஞான சூனியம், சுயநலக்காரனின் எதிர்ப்பு என்னும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல் வேலை செய்வோர்களை**

675. 'இன்னாருக்குப்பின் இன்னார் என்று கூறவே முடியாது' என்று கூறிய பெரியார் இந்த சர்ச்சையில் இறங்குவதை எப்படி வர்ணிக்கிறார்? **விடை: பைத்தியக்காரத்தனம்**

676. மனிதனுக்கு ஜீவநாடி - உயிர் நாடி என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: பகுத்தறிவை**

677. பகுத்தறிவு என்பதற்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: அன்றன்றைய கருத்துக்கேற்ப - நடப்புக்கேற்ப நம்மை மாற்றிக் கொள்வதுதான்**

678. பகுத்தறிவு தடைபடுவதற்குக் காரணங்களாக அமைந்தவை என்று பெரியார் கூறுவன. **விடை: கடவுள், மதம், சாஸ்திரம்**

679. நாட்டுப்பற்று, மொழிப் பற்று என்பது பெரியார் சிந்தனையில் என்ன பொருள்? **விடை: பகுத்தறிவற்ற தன்மை**

680. மூடநம்பிக்கைக்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: ஆராயாமல் ஏற்றுக் கொள்வது**

681. பெரியார் கூறுகிறார் ''ஜனநாயகம் என்பது ... ..............................'' **விடை: ஏமாற்று வார்த்தை**

682. 'ஜனநாயகம் என்பது தலையை எண்ணுவதே தவிர, தலைக்குள் இருக்கும் சரக்கை எண்ணுவதல்ல என்று பகுத்தறிவுவாதிகள் கருதுவர்'. என்று சொன்னவர்? **விடை: பெரியார்**

683. பொய் சொல்லி ஏமாற்றிப் பிழைப்பதற்கான ஒரு தொழில் முறை என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: ஜோதிடம்**

684. உள்ளதைப் பங்கிட்டு உண்பது; உழைப்பைப் பங்கீடு செய்வது என்று நிலை ஏற்பட்டால் யாருக்கு வேலையோ அவசியமோ இருக்காது என்கிறார் பெரியார்? **விடை: கடவுளுக்கு**

685. மதக் கருத்துகள் என்றைக்கும் பொருந்தாது என தந்தை பெரியார் சொன்னது ஏன்? **விடை: காலத்திற்கேற்பக் கருத்துகள் மாறக் கூடியவை என்பதால்**

686. பிரார்த்தனை என்பதற்கு பெரியார் கூறும் மாற்றுப் பெயர்? **விடை: பேராசை**

687. ஜாதி ஒழிப்பு என்பது கூட கொஞ்சம் சுலபமாக முடிந்து விடலாம். ஆனால் அவ்வளவு சுலபமாக ஒழிக்க முடியாதது என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகிறார்? **விடை: பெண்ணடிமை ஒழிப்பு**

688. கணவன், மனைவியை அடிமையாய் நடத்த மாட்டான். எப்போது? **விடை: பெண்கள் சம்பாதிக்கும் அளவு தொழில் பெற்றிருந்தால்**

689. ''பெண்களுக்கு ஆண்கள் பெயர்களையே இட வேண்டும். உடைகளும் அவர்களைப் போல கட்டுவித்தல் வேண்டும்'' என்று கூறியவர் யார்? **விடை: பெரியார்**

690. கர்ப்பத் தடையை பெரியார் வலியுறுத்தக் காரணம்? **விடை: பெண்கள் விடுதலையடையவும் சுயேச்சை பெறவும்**

691. பெண்களை ஆசிரியர் வேலைக்கும் செவிலியர் வேலைக்கும் மட்டும் தேர்ந்தெடுக்காமல் காவல்துறைப் பணிகட்கும் இராணுவத் துறைக்கும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தீர்மானித்த மாநாடு எது? **விடை: விருதுநகர் மாநாடு**

692. கூந்தலைக் கத்தரித்துக் கொண்டு ஆண்களைப் போல கிராப்பு வைத்துக் கொள்ளும் பெண்களுக்குப் பெரியார் அளிப்பதாகச் சொன்ன பரிசுத் தொகை எவ்வளவு? **விடை: 500 ரூபாய்**

693. விதவை மணத்தை வலியுறுத்திய பெரியார் கூறும் திட்டம் யாது? **விடை: விதவைகளுக்கு ஆண்டுக்கு ஓர் அரை ரூபாயாவது வரி விதிக்கப்பட வேண்டும்**

694. 'ஓர் உயிரைப் பட்டினி போட்டுச் சாகடிப்பதைவிடக் கொடுமையானது' என்று பெரியார் குறிப்பிடுவது? **விடை: ஒரு பெண்ணை விதவையாக வைத்துச் சாகாமல் பாதுகாப்பது**

695. மறுமணம் புரியும் ஆண்களுக்கு பெரியார் கூறுவது? **விடை: விதவைகளை மணம் செய்யுங்கள்**

696. தாரம் இழந்தவன் கன்னிப் பெண்ணை மணந்தால் என்ன தண்டனை தரவேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: ஆயிரம் ரூபாய் அபராதம், ஆறு மாதம் சிறை**

697. 'மனிதனுக்கு மனிதன் பார்த்தவுடனே ஒரு வேற்றுமை உணர்ச்சி தோன்றாமலிருக்க உடையை ஒன்றுபடுத்த வேண்டும்' என்று வலியுறுத்தியவர்? **விடை: பெரியார்**

698. உலகம் எதற்கு அடிமை என்கிறார் பெரியார்? **விடை: பிரச்சாரத்திற்கு**

699. ''ஒரு கோடி ரூபாய் கொடு; கழுதையைக் கூட நான் விளம்பரத்தினால் 'மகாத்மா'வாக ஆக்கிக் காட்டுகிறேன்'' கூறியவர் யார்? **விடை: பெரியார்**

700. ‘அறிவுக்குப் பொருத்தமான விழா’ என்று பெரியார் குறிப்பிட்ட விழா எது? **விடை: பொங்கல்**

701. குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் ‘புரா’ (Providing Urban amenities in Rural Areas (PURA) திட்டத்தின் முன்னோடி எது? **விடை: பெரியாரின் கிராம - நகரம் வேற்றுமை கூடாது**

702. பீடிக்கு வரி விதிக்குமாறு அரசுக்கு ஆலோசனை கூறியவர்? **விடை: பெரியார்**

703. ‘குடிசைத் தொழிலால் சக்தியும் பொருளும் விரயம்’ என்றவர்? **விடை: பெரியார்**

704. எந்தப் பிரச்சார இயக்கமும் பலாத்கார வழிச் சென்றால் ஒரு போதும் வெற்றி பெற முடியாது என்று கூறும் பெரியார் வெற்றி பெற கூறும் வழி எது? **விடை: அன்பு வழி**

705. “பலாத்கார உணர்ச்சி நம்மை எப்போதும் தோல்வியடையத் தான் செய்யும்” - யார் கூற்று? **விடை: பெரியார்**

706. காந்தியடிகளைக் கொன்ற வகுப்பைச் சார்ந்தவர்களைத் தாக்குவது பற்றி பெரியார் கருத்து என்ன? **விடை: நாகரிக சமூகத்திற்கு ஒத்ததென்று கூற முடியாது**

707. ‘மனிதனுக்கு இருதயம் போல் தமிழ்நாட்டிற்கு ஒரு மய்ய ஸ்தானமாக அமைந்திருக்கும் இவ்வூர் தமிழ்நாட்டிற்குத் தலைமை நகரமாக இருக்கத் தகுதி உடையதாக இருக்கிறது’ என்று எந்த ஊரை பெரியார் குறிப்பிடுகின்றார்? **விடை: திருச்சி**

708. தாம் தங்குவதற்கு திருச்சியைத் தந்தை பெரியார் தேர்ந்தெடுத்தது ஏன்? **விடை: தமிழ்நாட்டின் மய்யமாக இருப்பதால்**

709. பெரியார் எதிர்த்த இரண்டு?**விடை: அதிகச் சம்பளம், அதிக விடுமுறை**

710. “அரசு ஊழியர்கள் அதிகமான சம்பளம் பெற்றுக் கொண்டிருப்பது மனிதத் தன்மையாகுமா?” என்ற வினாவினை பெரியார் எழுப்பும் கட்டுரையின் தலைப்பு? **விடை: சம்பளக் கொள்ளை**

711. “கூலி உயர்வுக்காகப் போராடுவது கேலிக்கூத்து; தொழிலாளர்களும் பங்குதாரர்களாக மாற வேண்டும்” என்று கூறியவர்? **விடை: பெரியார்**

712. வேலை நிறுத்தம் குறித்து பெரியாரின் கருத்து? **விடை: சமூகத் துரோகமான காரியம்**

713. பெரியார் கூற்றுப்படி நல்ல குடும்பம் எது? **விடை: வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யாமல் இருப்பது**

714. பெரியார், குடும்ப நலத் திட்டத்தைக் கொள்கையாக அறிவித்துப் பிரச்சாரம் தொடங்கிய ஆண்டு? **விடை: 1928**

715. கருத்தடையை (குடும்பக் கட்டுப்பாடு) ஆதரித்துக் ‘கர்ப்ப ஆட்சி’ எனும் தலைப்பில் பெரியார் குடிஅரசில் கட்டுரை எழுதிய ஆண்டு எது? **விடை: 1928**

716. எவ்வளவு பெரிய படிப்பாளியாய் அறிவாளியாய் இருந்தாலும் உலகத்திற்குப் பயன்படாதவனேயாவான் என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகிறார்? **விடை: விஞ்ஞான அறிவில்லாதவன்**

717. ‘இயந்திரங்கள் பேயின் அம்சம்’ என்று கூறி வந்த காலத்தில் அதனை எதிர்த்து 13.8.1933 குடிஅரசு இதழில் தந்தை பெரியார் எழுதிய தலையங்கத்தின் தலைப்பு? **விடை: இயந்திரத்தின் பெருமை**

718. இயந்திரம் கூடாது என்றால் அதற்கு என்ன பொருள் என்கிறார் தந்தை பெரியார்? **விடை: மனிதனுக்கு அறிவு விருத்தியாகக் கூடாது**

719. விவசாயம் எப்படி நடைபெறவேண்டும் என்று பெரியார் வலியுறுத்துகிறார்? **விடை: இயந்திரத் தொழில் முறையாக**

720. சோதனைக்குழாய் குழந்தை எதிர்காலத்தில் பிறக்கும் என்று பெரியார் எந்த ஆண்டில் தெரிவித்தார்? **விடை: 1938**

721. பெரியார் தொலைநோக்காளர் என்பதற்கு ஒரு சான்று? **விடை: கம்பியில்லா தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.**

722. பெரியாரின் தொலைநோக்குச் சிந்தனையை வெளிப்படுத்தும் புத்தகம்? **விடை: இனிவரும் உலகம்**

723. தேசமோ மக்களோ முன்னேறத் தேவையானது என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: அறிவும் விஞ்ஞான தத்துவமும் ஒழுக்கமும் முன்னேற வேண்டும்**

724. ரிக்ஷா இழுப்பவன், சுமை வண்டி இழுப்பவன், ராட்டினத்தில் நூற்பவன் ஆகிய மூவருக்கும் ஒரே விதமான தண்டனையை விதிக்க வேண்டும் என்று 1946ஆம் ஆண்டு பெரியார் கூறினார் பெரியார் இவ்வாறு கூறக் காரணம் யாது? **விடை: விஞ்ஞான வளர்ச்சியைத் தடுத்து மனித சமுதாயத்தைக் கேவலப்படுத்துகிறார்கள் என்கிற காரணத்திற்காக**

725. ஜி.டி.நாயுடுவின் கண்டுபிடிப்புகளை மாநில அரசு அலட்சியப்படுத்துவதால் அவற்றை உடைக்க வேண்டாம் என்று பேசிய தலைவர் யார்? **விடை: தந்தை பெரியார்**

726. ஜி.டி.நாயுடு கண்டுபிடித்த பொருள்களை சம்மட்டியால் அடித்து உடைப்பது குறித்து பெரியாரின் கருத்து? **விடை: முட்டாள்தனம்**

727. சீர்திருத்தம் - பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையுள்ளதை மட்டும் வைத்துக் கொள்ளுதல்**

728. ஒழுக்கம் என்பதற்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: பிறர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறோமோ - அதேபோல் நாம் பிறரிடம் நடந்து கொள்வது**

729. ஒழுக்கம் என்பதற்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: தனக்கும் அந்நியனுக்கும் துன்பம் தராமல் நடந்து கொள்ளுவது**

730. யாத்திரை ஸ்தலம் என்றால் பெரியார் கூறும் விளக்கம்? **விடை: நல்ல வியாபார ஸ்தலம்**

731. உலக ஜீவராசிக்குள்ளே அதிக அறிவு பெற்ற உயிரினம் என்று பெரியார் குறிப்பிடுவது? **விடை: மனிதன்**

732. உண்மையான ஒழுக்கம், நாணயம் வேண்டுமானால் பெரியார் கூறும் வழிமுறை? **விடை: தேவை குறைய வேண்டும்**

733. வியாபாரத்துக்கு சிறந்த கைம்முதல் என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: நாணயம்**

734. உண்மை அறிவு என்பதாக தந்தை பெரியார் எதைக் குறிக்கிறார்? **விடை: அனைத்து உயிர் ஒன்று என்று எண்ணுவதை**

735. எத்தனை டிகிரி முட்டாள் என்பதை அளக்கப் பயன்படும் அளவு கோல் என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: சகுனம் பார்ப்பது**

736. மனிதனின் கீழ்த்தன்மைக்குக் காரணம்? **விடை: மனப்பலக் குறைவுதான்**

737. மனித வாழ்வில் வெற்றி என்று பெரியார் எதனைக் கூறுகிறார்? **விடை: அவனவன் மனத் திருப்தியோடு வாழ்வது**

738. 'காதலுக்காகத் துன்பத்தை அடைவது முட்டாள்தனம்' என்று கூறியவர்? **விடை: பெரியார்**

739. மனிதனின் இயற்கைக் குணம் .......................... ஆகும் **விடை: சுயநலம்**

740. எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்க பெரியார் கூறும் வழி? **விடை: ஒருவனும் தன் தேவைக்கு மேல் எடுத்துக் கொள்ளக் கூடாது**

741. 'மூன்று மாதத்தில் கையொப்பம் போட கற்று கொள்ளாதவருக்கு ஆறுமாத சிறைத் தண்டனை என்றும் ஆறு மாதத்தில் படிக்கக் கற்றுக் கொள்ளாதவருக்கு ஒரு வருடக் கடுங்காவல் என்றும் சட்டம் இயற்ற வேண்டும்' என்று கூறியவர் யார்? **விடை: பெரியார்**

742. மனித வாழ்க்கையின் இலட்சியம் என்று பெரியார் எதனைக் கூறுகிறார்? **விடை: பிறர் நன்மை அடைந்தார்கள் என்பதுதான்**

743. ''ஒருவன் நமக்கு என்ன சொத்திருக்கிறது

என்று முட்டாள் கணக்குப் போடக்கூடாது என்று கூறும் பெரியார் எதனை நினைத்துப் பார்க்க தூண்டுகிறார்? **விடை: சமுதாயத்திற்கு நாம் என்ன செய்தோம் என்று ஒவ்வொரு ஆணும் பெண்ணும் நினைத்துப் பாக்க வேண்டும்''**

744. பெரியார் குறிப்பிடும் பொழுதுபோக்கு இடங்கள் யாவை? **விடை: கண்காட்சிகள், இயந்திரங்கள், அணைக்கட்டுகள், நெய்வேலி முதலிய இடங்கள்**

745. சிக்கனம் என்பதற்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: தேவைக்கு மட்டுமே செலவு செய்வது**

746. ஊதாரித்தனம் என்பதற்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: தேவைக்கு மேல் செலவு செய்வது**

747. கருமித்தனம் என்பதற்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: தேவைக்குச் செலவு செய்யாதது**

748. பிரபு என்று பெரியார் யாரைப் போற்றுகின்றார்? **விடை: எவன் ஒருவன் கடன் வாங்காமல் வரவுக்கேற்ற முறையில் செலவு செய்து வருகிறானோ அவன்தான் பிரபு**

749. பழந்தமிழன் வந்து போதிக்கத் தகுந்த நிலையில் இன்று நமது மனித சமூகம் இல்லை. பழந்தமிழன் கொள்கை எதுவும் இன்று எந்த மனித சமூகத்திற்கும் அவசியமும் இல்லை என்று கூறும் பெரியார் மனிதன் செல்ல வேண்டிய பாதை என்று எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: காலத்தோடு, மாறுதலோடு**

750. யாரால் வெற்றிகரமாய் வாழ முடியாது என்கிறார் பெரியார்? **விடை: காலத்துக்கு ஏற்ற மாறுதலுக்கு ஒத்து வராதவன்**

751. 'இரட்டை முட்டாள்' பெரியார் அகராதியில் யார்? **விடை: ஆத்திரப்படுபவன்**

752. யாருக்குக் கவலையில்லை என்கிறார் தந்தை பெரியார்? **விடை: எல்லாம் இயற்கை என்று அறிந்தவர்களுக்கு**

753. நன்றி காட்ட வேண்டியவர்கள் யார்? **விடை: பயனடைந்தவர்கள்**

754. சாவது இயற்கை என்று கூறும் பெரியார் இருப்பதை என்ன சொல்கின்றார்? **விடை: அதிசயம்**

755. 'ஒரு பெரியார் உரைத்துவிட்டார்' என நீங்கள் கருதி அப்படியே அவைகளைக் கேட்டு நம்பி விடுவீர்களானால் அப்பொழுது - நீங்கள் யாவரும் அடிமைகளே!'' - யார் கூறியது? **விடை: பெரியார்**

## 14. கருத்து

756. கருத்து சொல்லும் உரிமையைத் தடுப்பது குறித்து பெரியார் கூறியது? **விடை: அயோக்கியத்தனம்**

757. பகுத்தறிவிற்கும் தமிழுக்கும் .......... என்கிறார் பெரியார்? **விடை: வெகுதூரம்**

758. இரண்டு தமிழ்ப் புலவர்கள் சந்திக்க நேர்ந்தால் அங்கு ஏற்படும் சச்சரவைத் தீர்க்க என்ன தேவைப்படும் என்று பெரியார் கூறுகின்றார்? **விடை: காவல் நிலையம்**

759. வக்கீல் தொழில் குறித்து பெரியார் கருத்து? **விடை: பொய்யை மெய்யாக்குவதும் மெய்யை பொய்யாக்குவதும்**

760. நீதி, நேர்மை ஏற்பட வேண்டுமானால் எது ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: வக்கீல் முறை**

761. கொடுமையான தொழில் என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார்? **விடை: லேவாதேவி**

762. பெரியாரின் கருத்துப்படி பணக்காரத்தன்மை என்பது...? **விடை: மூடநம்பிக்கை**

763. பேய் பற்றி பெரியார் கருத்து? **விடை: பொய்ச் சங்கதி**

764. நரகம் பற்றி பெரியார் கருத்து? **விடை: வெறும் கற்பனைப் பூச்சாண்டி**

765. மேல் உலகம் பற்றி பெரியார் கருத்து? **விடை: மகாமகா பொய்**

766. நம் நாட்டு விழாக்கள் குறித்து பெரியார்

கருத்து? **விடை: அர்த்தமற்ற சடங்குகள்**

767. ஓய்வு, சலிப்பு என்பவற்றைப் பெரியார் எப்படிக் கருதுகிறார்? **விடை: தற்கொலை**

768. "சமதர்மக் கொள்கையைப் பரப்ப வேண்டுமானால் நாஸ்திகத்தினால்தான் முடியும்" யார் கூற்று? **விடை: பெரியார்**

769. சமூகச் சீர்திருத்தப் பணிக்குத் தகுதியற்றவர்கள் என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகின்றார்? **விடை: எதிர்ப்புப் பலமாய் விடுமே என்கின்ற பயம் உள்ளவர்களை**

770. பொது ஜனங்களிடம் நல்ல பேர் எடுக்க முயற்சிப்பவன் எதற்கு லாயக்கற்றவன் என்கிறார் பெரியார்? **விடை: பொதுத் தொண்டுக்கு**

771. நல்ல காரியங்கள் செய்ய எது தேவை என்கிறார் பெரியார்? **விடை: தைரியம்**

772. மனிதனின் உயர்ந்த தன்மைக்குக் காரணம்? **விடை: மனோபலம்தான்**

773. பக்குவம் அடையாத மனிதன் என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகிறார்? **விடை: அறிவுக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவராததைப் பயத்தால் நம்புகிறவன்.**

774. மனிதச் சுபாவம், வாழ்க்கையின் லட்சியம் என்று பெரியார் கூறுவது? **விடை: மற்றவர்களுக்குத் தொண்டாற்றுவது**

775. உண்மையான இன்பம் என்பதாக தந்தை பெரியார் எதைக் குறிப்பிடுகின்றார்? **விடை: பிறர்க்குத் தொண்டு செய்வது**

776. மனித வாழ்க்கையின் இலட்சியமாகப் பெரியார் எதனைக் கூறுகின்றார்? **விடை: நமது வாழ்க்கையால் பிறர்துன்பம் அடையாவண்ணம் நடந்து கொள்வதை**

777. ஒருவன் எப்படி வாழ்தல் வேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: அவனுடைய வாழ்க்கையால் பிறர் நன்மை அடைய வேண்டும்.**

778. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் செயல்படுத்தப்பட பிரச்சாரம் அவசியம். பிரச்சாரத்திற்கு யாரை நியமிக்க வேண்டும்? என்கிறார் பெரியார்? **விடை: பகுத்தறிவாளர்களை**

779. "வருணாசிரம தர்மத்தை ஒழிப்பதே இந்த மதத்தின் உட்கருத்து - முதல் கருத்து" என்று பெரியார் எந்த மதத்தைக் குறிப்பிடுகின்றார்? **விடை: புத்த மதம்**

780. 'நல்ல ஆட்கள் பதவிக்கு வரமுடியவில்லையென்றால்' பெரியார் கூறும் காரணம்? **விடை: ஓட்டர்களுக்குப் புத்தியில்லை**

781. "நான் பேச்சாளி அல்ல. படிப்பாளி அல்ல" என்று கூறிய பெரியார் தன்னை எவ்வாறு அழைத்துக் கொண்டார்? **விடை: கருத்தாளி**

782. பெரியார் பார்வையில் எவர்தான் மனிதன்? **விடை: நன்றி விசுவாசமுடையவன்**

783. ஒழுக்கம் என்பதற்கு பெரியார் அளிக்கும் விளக்கம்? **விடை: சொல்கின்றபடி நடப்பதும் - நடந்தபடி சொல்வதும்**

784. ............ அமர்வது பெரியாருக்கு பிடிக்கும்? **விடை: ஊஞ்சலில்**

785. "ஜில்லா முன்சீப் பதவி ஏற்றபின் பெரியாரைக் காணச் சென்றேன் 'அரசுப் பணியில் இருக்கும் நீங்கள் என்னைப் பார்க்க வருவதை நான் விரும்பவில்லை' என்று கூறி மணியம்மையார் கொண்டுவந்த காபியைக் கூட அருந்தவிடாமல் என்னை வெளியில் அனுப்பி வைத்தார் பெரியார்"யார் கூறியது? **விடை: நீதியரசர் பெ.வேணுகோபால்**

786. உலகம் எதற்கு அடிமை என்கிறார் பெரியார்? **விடை: பிரச்சாரத்திற்கு**

787. 1944ஆம் ஆண்டு கான்பூரில் நடைபெற்ற எல்லா இந்திய பிற்படுத்தப்பட்ட (பார்ப்பனரல்லாதார்) வகுப்பு லீக் மாநாட்டில் பெரியார் ஒரு மணி நேரம் .............. பேசினார்? **விடை: ஆங்கிலத்தில்**

788. மனிதன் இயற்கையாகவே எப்படிப்பட்டவன் என்கிறார் பெரியார்? **விடை: குற்றங்குறை நிறைந்தவன்**

789. மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் எதில் பேதம் கூடாது என்கிறார் பெரியார்? **விடை: சம்பளத்தில்**

790. அரசு அலுவலர்கள் சம்பளம் மாதம் 1000 ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது என்று எந்த மாநாட்டில் பெரியார் தீர்மானம் நிறைவேற்றினார்? **விடை: ஈரோட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க இரண்டாவது மாகாண மாநாடு**

791. பொருள் விரயம் செய்தால் என்ன தண்டனை வழங்க சட்டம் செய்வேன் என்றார் பெரியார்? **விடை: தூக்குத் தண்டனை**

792. விபத்தைத் தவிர்க்க பெரியார் கூறும் யோசனை? **விடை: ஓட்டுநருடைய லைசன்சை பறிமுதல் செய்ய வேண்டும்**

793. பெரியார் கருத்துப்படி பிச்சை கொடுப்பதும் பிச்சை எடுப்பதும்? **விடை: சட்ட விரோதமான காரியமாய்க் கருதப்பட வேண்டும்.**

794. மூடநம்பிக்கை அதிகமாக இருக்கின்ற ஊர் என்று எந்த ஊரைப் பெரியார் குறிப்பிடுகின்றார்? **விடை: சென்னை**

795. வாழ்க்கைத் துணை விஷயத்தில் எது முக்கியமானது என்கிறார் பெரியார்? **விடை: அறிவு, அன்பு, பொருத்தம், அனுபவம்**

### 15. இயக்கம், கட்சி, அரசியல்

796. தந்தை பெரியார் காங்கிரசில் சேர்ந்த ஆண்டு? **விடை: 1919**

797. தந்தை பெரியாரை காங்கிரஸ் கட்சிக்கு இழுத்திட ஆர்வம் காட்டிய இருவர் **விடை: ராஜகோபாலாச்சாரியார், வரதராஜுலு நாயுடு**

798. “ஜாலியன் வாலாபாக் சென்று நேரில் அந்த படுகொலைச் சம்பவங்களைப் பார்த்த பிறகு எனக்கு மிகுந்த ஆத்திரம் வந்தது. நான் தீவிர தேசியவாதியாகி விட்டேன்” என்றவர்? **விடை: தந்தை பெரியார்**

799. தந்தை பெரியார் காங்கிரசில் பணியாற்றிய காலம் **விடை: 1919-1925**

800. தந்தை பெரியாரின் தனித்தன்மை என்று எதனைச் சுட்டலாம்? **விடை: எதிரில் அவரைப் புகழ்ந்தால், ஏமாற்றப்பார்க்கிறார் என்று எச்சரிக்கை அடைபவர், கூட்டம் ஒத்திவைக்கப்பட்டால் எத்தனை ஆண்டுகளானாலும் மறவாது தேதி கொடுப்பார், எந்த இயக்கத்திலிருந்து தொண்டாற்றினாலும் அந்த ஸ்தாபனத்தையே தம்முடையதாக்கிக் கொள்வார் அவரே இயக்கமாக மாறிவிடுவார்.**

801. தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய நாள்? **விடை: 22.11.1925**

802. பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறக் காரணமான நிகழ்ச்சி எது? **விடை: வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தை காங்கிரஸ் ஏற்க மறுத்தது**

803. பெரியார் நீதிக்கட்சியில் சேராமல் காங்கிரசில் சேரக் காரணம்? **விடை: தீண்டாமை விலக்கும் ஜாதிபேத ஒழிப்பும், உத்தியோக விலகல், சட்டசபைக்கு போவதோ பதவியேற்பதோ கூடாது**

804. தந்தை பெரியார் காங்கிரசில் சேர்ந்தவுடன்... **விடை: தாம் வகித்துவந்த 29 கவுரவப் பதவிகளைத் துறந்தார்**

805. தந்தை பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராகப் பதவி வகித்த ஆண்டு? **விடை: 1922 மற்றும் 1924**

806. பெரியார் ஜெர்மனியில் ரயிலில் பயணிக்கிறார், பரிசோதகர் பெரியாரைப் பரிசோதிக்கவில்லை காரணம் என்ன? **விடை: செயின்ட் பீட்டர் போல உருவம்**

807. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட பெரியார் மீது சீனிவாசய்யங்கார் தூண்டுதலின் பேரில் வ.வே.சு. ஐயர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் விழுந்த வாக்குகள் எவ்வளவு? **விடை: நம்பிக்கையில்லை 12 - பெரியாரே தலைவர் 90**

808. ஒரு காலத்து முறைகளே எக்காலத்துக்கு மென்றால் மனிதனுக்கு ........................ என்பது

தான் பொருள் **விடை: அறிவு வளர்ச்சி இல்லை**

809. தந்தை பெரியார் காங்கிரசில் இருந்தபோது ஆலயப் பிரவேசம் தீர்மானத்தைக் கொண்டு வந்த மாநாடு ஆண்டு? **விடை: 1922, திருப்பூர் மாநாடு**

810. தந்தை பெரியார் தலைமை வகித்த திருவண்ணாமலை காங்கிரஸ் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது? **விடை: 1924**

811. "மாநாட்டில் தியாகராய செட்டியார் அவர்களையும், ஜஸ்டிஸ் கட்சியையும் மோசமாக, அளவுக்கு மீறித் தாக்கிப் பேசினார்கள். இது எனக்கு ஆத்திரத்தை மூட்டியது. அந்த மாநாட்டிலேயே எனக்கு மனக் கசப்பு ஏற்பட்டு விட்டது" என்று பெரியார் கூறுவது எந்த மாநாட்டை? **விடை: 1924 திருவண்ணாமலையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு**

812. மூன்று முறை காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி; இரண்டு முறை காங்கிரஸ் கமிட்டி தலைவர்; ஒரு முறை தமிழ் மாகாண மகாநாட்டுத் தலைவர்; மூன்று முறை சிறைவாசம் - யாரைப் பற்றி 'குடிஅரசு' 1926ஆம் ஆண்டு இதழ் கூறுகிறது? **விடை: பெரியார்**

813. பெரியார், மூட்டையாகக் கட்டித் தோளில் சுமந்து ஊர் ஊராகச் சென்று விற்பனை செய்த பொருள்? **விடை: கதர்**

814. தமிழ்நாட்டில் கதர் இயக்கத்தைப் பலமடையச் செய்தவர்? **விடை: பெரியார்**

815. கை வீங்க நூல் நூற்ற பெரியாருக்கு, 'இனி தக்களி, இராட்டினத்தைப் பயன்படுத்த வேண்டாம்' என்று விலக்களித்தவர் யார்? **விடை: காந்தியடிகள்**

816. ராஜகோபாலாச்சாரியார் நிருவாகம் நடத்தி வந்த திருச்செங்கோட்டுக் கதர் ஆசிரமத்தைத் திறந்து வைத்தவர் **விடை: தந்தை பெரியார்**

817. தந்தை பெரியார் காங்கிரசிடமிருந்து பெற்ற 1000 ரூபாய்க்கு முத்துரெங்க முதலியார் கணக்கு கேட்ட போது, யாருக்குப் பணம் வழங்கியதாக பெரியார் ஆதாரம் காட்டினார்? **விடை: கோவிந்தசாணார், கே.வி.கிருஷ்ணசாமி ஐயர்**

818. 1925ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் எத்தனை சதவிகித இடஒதுக்கீடு கேட்டு பெரியார் போராடினார்? **விடை: 50 சதவிகிதம்**

819. திருமண விழாவில் பெரியார் வலியுறுத்துவது? விடை: செலவு சுருக்கம்

820. பெரியார் 1925இல் காங்கிரசை விட்டு வெளியேறிய பின்பும் காந்தியாரை எந்த ஆண்டு வரை ஆதரித்து வந்தார்? **விடை: 1927**

821. பெரியார் - காந்தி இறுதியாக சந்தித்தது எங்கே? எப்போது? **விடை: பெங்களூரில், 1927**

822. தந்தை பெரியார் காங்கிரஸ் இயக்கத்தில் வகித்த பதவிகள் யாவை? **விடை: தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளர், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்.**

823. காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தின் நீதிமன்றப் புறக்கணிப்புக் கொள்கையின்படி தந்தை பெரியார் துறந்த தொகை எவ்வளவு? **விடை: ரூபாய் - 50,000**

824. தந்தை பெரியார் சொந்தச் செலவில் இந்தி கற்பிக்கும் பள்ளியினை நடத்தினார். எத்தனை ஆண்டுகள் நடத்தினார்? **விடை: இரண்டு ஆண்டுகள்**

825. ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராகத் தொடங்கப்பட்ட சென்னை மாகாணச் சங்கத்திற்குப் பெரியார் வழங்கிய தொகை எவ்வளவு? **விடை: ரூபாய் 1000**

826. காங்கிரஸ் கட்சியில் இருந்து கொண்டே நீதிக்கட்சி கொண்டு வந்த எந்தச் சட்டங்களைப் பெரியார் ஆதரித்தார்? **விடை: வகுப்புவாரி பிரதிநிதித்துவச் சட்டம், இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்**

827. கள்ளுக்கடை மறியல் போராட்டம்

நடத்துவது தொடர்பாகக் காந்தியாரும் காங்கிரஸ் தலைவரும் கூடி முடிவு செய்த இடம் **விடை: ஈரோட்டில் பெரியார் இல்லத்தில்.**

828.நீதிக் கட்சியின் செல்வாக்கைக் குறைக்க, தந்தை பெரியார் 1919ஆம் ஆண்டு ஈரோட்டில் நடத்திய மாநாடு? **விடை: சென்னை மாகாணச் சங்க மாநாடு**

829.மருத்துவ நடைமுறையில் பெரியாருக்கு பிடிக்காத இரண்டு? **விடை: ஊசிகுத்துவது, செயற்கை முறையில் உணவு ஏற்றப்படுவது**

830.சித்தரஞ்சன்தாஸ் தலைமையில் தொடங்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியை எதிர்த்தவர்கள் யார்? **விடை: காந்தி, பெரியார், ராஜகோபாலாச்சாரியார்**

831.1935ஆம் ஆண்டு ஈரோடு வந்து பெரியாரிடம் காங்கிரசில் சேரும்படி வலியுறுத்திய தலைவர் பெயர்? **விடை: ஜெயப்பிரகாஷ் நாராயணன்**

832.1922ஆம் ஆண்டு ஈரோடு தந்தை பெரியார் இல்லத்திற்கு வந்த காங்கிரஸ் தலைவர்கள் யார்? **விடை: மோதிலால் நேரு, விட்டல்பாய் பட்டேல், டாக்டர் அன்சாரி**

833.“தமிழ்நாட்டில் காங்கிரசுக்குத் தொண்டு செய்தவர் என்ற முறையில் எவருக்கேனும் பரிசு வழங்கப்படுவதாக இருந்தால் முதல் பரிசு நாயக்கருக்கே செல்வதாகும்” கூறியது யார்? **விடை: திரு.வி.க.**

834.பெரியார் மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கு திரும்பிட வேண்டும் என்று விரும்பிய தலைவர்கள் யார்? **விடை: காந்தியார், ஜெயப்பிரகாச நாராயணன்**

835.ஹோம்ரூல் இயக்கத்தை எதிர்த்துப் பெரியாரைத் துணைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்ட சங்கத்தின் பெயர் என்ன? **விடை: சென்னை மாகாணச் சங்கம்**

836.ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிராகப் பெரியாரைத் துணைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட சங்கத்தின் பெயர்? **விடை: சென்னை மாகாணச் சங்கம்**

837.அதிதீவிரவாதிகள் சங்கத்தில் பெரியார் வகித்த பதவி யாது? **விடை: துணைத் தலைவர்**

838.எதைச் சொன்னால் மக்கள் ஆதரிப்பார்கள் என்று பார்க்கக் கூடாது என்று சொன்ன பெரியார் தம் இயக்கத்தவருக்கு தெரிவித்த கருத்து யாது? **விடை: நம் பின்னாலே மக்கள் வரவேண்டும் என்பதற்கு உழைக்க வேண்டும்.**

839.சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தது ஏன்? பெரியார் கூறும் காரணம்? **விடை: மக்களுக்கு மான உணர்ச்சி ஏற்படவும், எல்லா மக்களையும் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் சமப்படுத்தி ஒன்று சேர்க்கவும்**

840.சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க நாள் எது? **விடை: பெரியார் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிய 22.11.1925 தான் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க நாள்.**

841.“இவ்வியக்கத்தை தேர்தலில் ஈடுபடுத்த மாட்டேன். வெறும் பிரச்சார இயக்கமாகவே நடத்தி, மக்களுக்கு மான உணர்ச்சி ஊட்டிச் செல்வதில்தான் நான் அதிகமாக கண்ணுங் கருத்துமாய் இருந்து வருகிறேன்” கூறியவர் யார்? **விடை: பெரியார்**

842.ஜாதி ஒழிப்பு, சமூக நீதி, பெண்ணுரிமை, பகுத்தறிவு, சுயமரியாதை இவ் அய்ந்தும் எவ்வியக்கத்தின் கொள்கைகள் ஆகும்? **விடை: சுயமரியாதை இயக்கம்**

843.சுயமரியாதை இயக்க முதல் மாகாண மாநாடு எப்போது? எங்கு நடைபெற்றது? **விடை: 1929 பிப்ரவரி 17 - 18, செங்கல்பட்டில்**

844.தியாகராயர் நகர், பானகல் அரசர் பந்தல், டி.எம்.நாயர் அரங்கத்தில் நடைபெற்ற

சுயமரியாதை மாநாடு எந்த ஊரில் நடைபெற்றது? **விடை: செங்கல்பட்டில்**

845.செங்கல்பட்டில் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாகாண மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் யார்? **விடை: ஊ.பு.அ. சவுந்தரபாண்டியன்**

846.முதலாவது சுயமரியாதை மாகாண மாநாட்டில் பங்கேற்ற முதலமைச்சர்? **விடை: டாக்டர் சுப்பராயன்**

847.1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மாகாண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை? **விடை: 34**

848.பெண்களுக்கு மணவிலக்கு உரிமை கோரிய மாநாடு எது? **விடை: 1929இல் செங்கல்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மாகாண மாநாடு**

849.'கல்வி சம்பந்தப்பட்ட வரையில் எந்த நிகழ்ச்சி ஆரம்பித்தாலும் கடவுள் வாழ்த்து சொல்லுவதை நிறுத்திவிட்டு ............ வாழ்த்துக் கூற வேண்டும்' என்றார் பெரியார் **விடை: காமராசருக்கு**

850.சுயமரியாதை இயக்க இரண்டாவது மாகாண மாநாடு எப்போது? எங்கு நடைபெற்றது? **விடை: 1930, ஈரோடு**

851. பெரியார் தாம் நடத்திய சுயமரியாதை மாநாட்டில், இளைஞர் மாநாடு, பெண்கள் மாநாடு, மதுவிலக்கு மாநாடு, சங்கீத மாநாடு என ஒரு சேர நடத்திய மாநாடு எந்த ஊரில் நடைபெற்றது? **விடை: ஈரோடு, 1930**

852.சுயமரியாதை இயக்க மூன்றாவது மாகாண மாநாடு எப்போது? எங்கு நடைபெற்றது? **விடை: 1931, விருதுநகர்**

853.'கதர் கைத்தொழில் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றவை அல்ல. இயந்திர சாதனங்களே தொழில் வளர்ச்சிக்கு உகந்தவை' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மாநாடு எது? **விடை: 1931இல் விருதுநகரில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க மூன்றாவது மாகாண மாநாடு**

854.பெண்களைக் காவல்துறைப் பணிக்கும் ராணுவத் துறைக்கும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று எந்த மாநாட்டில் பெரியார் தீர்மானம் நிறைவேற்றினார்? **விடை: 1931இல் விருதுநகரில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க மூன்றாவது மாகாண மாநாடு**

855.ஆரம்ப காலத்தில் சுயமரியாதை இயக்கத்தின் பாசறை என்று கருதப்பட்ட இடம்? விடை: முடி திருத்துவோர் நிலையம்

856.'கடைசி மூடநம்பிக்கைக்காரன் இந்த நாட்டில் இருக்கின்ற வரையில் எந்த இயக்கத்துக்கு வேலை இருக்கிறது' என்று பெரியார் கூறினார்? **விடை: சுயமரியாதை இயக்கம்**

857.சுயமரியாதை இயக்கத்தை உடல் என்று வர்ணித்த பெரியார் ஜஸ்டிஸ் கட்சியை எது என்று குறிப்பிடுகின்றார்? **விடை: போர்வை**

858.சுயமரியாதை இயக்கக் கொள்கைகளில் சமதர்மக் கொள்கையை இணைக்கும் புதிய திட்டம் பற்றிய கலந்துரையாடல் கூட்டம் எப்போது? எங்கு நடைபெற்றது? **விடை: ஈரோட்டில் 1932 டிசம்பர் 28-29**

859.1933ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் பெரியார் ஈரோட்டில் நடத்திய மாநாட்டின் பெயர்? **விடை: சுயமரியாதைச் சமதர்ம மாநாடு**

860.சுயமரியாதைச் சமதர்ம மாநாட்டில் திரு.வி.க. யாருடைய படத்தைத் திறந்து வைத்தார்? **விடை: லெனின், நாகம்மையார்**

861. சுயமரியாதை இயக்கம் - சட்ட வரம்புக்கு உட்பட்ட இயக்கம் என்பதையும், நாம் சட்ட வரம்பிற்கு உட்பட்டு பிரச்சாரம் செய்கிற வர்கள் என்பதையும் அழுத்தந்திருத்தமாக அறிவித்தவர்? **விடை: பெரியார்**

862. பெரியாருக்கு வந்த கடிதங்களும், பெரியாரிடமிருந்து அனுப்பப்பட்ட கடிதங்களும் ரகசிய காவல்துறை தனிப்பிரிவு கண்காணித்தது எப்போது? **விடை: 1934-1935**

863. மனித தர்மம் என்றும், சகோதரத் தன்மை கொண்டது என்றும், சமத்துவத் தன்மை கொண்டது என்றும், பகுத்தறிவுக்கு ஒத்தது என்றும் பெரியார் எதனைப் பாராட்டுகின்றார்? **விடை: பொதுவுடைமை சிந்தனையை**

864. 1931ஆம் ஆண்டு பெரியார், 'இயக்கத் தோழர்கள் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்ளும்போது பெயருக்கு முன்னால் எந்த வார்த்தையைச் சேர்க்க வேண்டும் என்றார்? **விடை: தோழர்**

865. தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சியில் இருந்த போதே இந்து அறநிலையச் சட்டம் கொண்டு வந்து தந்தை பெரியாரின் பாராட்டைப் பெற்ற நீதிக்கட்சி முதல்வர் யார்? **விடை: பானகல் அரசர் ராமராய நிங்காரு**

866. நீதிக்கட்சித் தலைவர் பானகல் அரசர் 1927ஆம் ஆண்டு பெரியாருக்கு அளிக்க முன்வந்த கட்சிப் பொறுப்பு யாது? **விடை: நீதிக்கட்சியின் மாநிலத் தலைமைக் காப்பாளர்**

867. 1927இல் நீதிக்கட்சியின் மாநிலத் தலைமைக் காப்பாளர் பொறுப்பை பெரியாருக்கு வழங்கிட கட்சியின் செயற்குழு (நிருவாகக் கமிட்டி) முன்வந்தது. பெரியார் அதனை ஏற்க ஒப்புதல் தராமல் தனது முடிவைப் பின்னர் கூறுவதாகத் தட்டிக் கழித்துவிட்டார். அப்போது நீதிக்கட்சித் தலைவராக இருந்தவர் யார்? **விடை: பானகல் அரசர்**

868. "யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது சேனாதிபதி இறந்து விட்டது போல" என்று யார் மறைவு குறித்துத் தந்தை பெரியார் எழுதினார்? **விடை: பானகல் அரசர்**

869. 1927இல் தஞ்சை மாவட்டத்தில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டின் பெயர் என்ன? **விடை: சுயமரியாதை மாநாடு**

870. சாரதா சட்டத்தை எதிர்த்தமைக்காக 1928ஆம் ஆண்டு தந்தை பெரியாரால் கடுமையாகக் கண்டனம் செய்யப்பட்ட நீதிக்கட்சி அமைச்சர் யார்? **விடை: ஏ.பி.பாத்ரோ**

871. 1928 நவம்பர் 26, 27 நாள்களில் சென்னை விக்டோரியா மண்டபத்தில் நடந்த தென் இந்திய சீர்திருத்தக்காரர்களின் மாநாட்டுத் தலைவராகப் பெரியார் பெயரை முன்மொழிந்தவர் யார்? **விடை: பானகல் அரசர்**

872. பெரியாரின் ஈரோடு வேலைத் திட்டத்தை ஏற்றுக் கொண்ட கட்சி எது? **விடை: நீதிக்கட்சி**

873. பெரியாரின் ஈரோடு வேலைத் திட்டத்தை நீதிக்கட்சி ஏற்றுக் கொண்டபோது அதன் தலைவராக இருந்தவர் யார்? **விடை: பொப்பிலி அரசர்**

874. 1935ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் தேதி நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி நிருவாகக் கமிட்டிக் கூட்டத்தில் பெரியாரின் வேலைத் திட்டம் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கூட்டம் நடைபெற்ற இடம்? **விடை: பொப்பிலி அரசர் மாளிகை**

875. பெரியார் - நீதிக்கட்சி உறவு வலுப்பெற்றது யாருடைய காலத்தில்? **விடை: பொப்பிலி அரசர்**

876. தந்தை பெரியார் எப்போது நீதிக்கட்சியின் தலைவரானார்? **விடை: நீதிக்கட்சியின் 14ஆவது மாநாடு சென்னையில் 1938 டிசம்பர் 29, 30, 31 ஆகிய தேதிகளில் நடைபெற்றபோது**

877. சுயமரியாதை இயக்கத்தின் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களை நீதிக்கட்சியில் தலைவராகத் தேர்ந்தெடுத்தபோது அவர் எங்கு இருந்தார்? **விடை: பெல்லாரி சிறையில்**

878. அண்ணா கூட்டுக் காரியதரிசியாக நியமிக்கப்பட்ட நீதிக் கட்சியின் 15ஆவது மாகாண மாநாடு எவ்வூரில் நடைபெற்றது? **விடை: திருவாரூர்**

879. ‘பெரியாருக்குப் பிறகு இயக்கம் நடைபெற அந்த இயக்கத்துக்கு ஒரு வாரிசு இருக்க வேண்டியது அவசியமாகும்’ பெரியார் எழுதிய தலையங்கம் எப்போது? **விடை: 13.9.1943 விடுதலை**

880. 16ஆவது தென்னிந்திய நல உரிமைச் சங்க மாகாண மாநாட்டை பெரியார் எப்போது? எந்த ஊரில் நடத்தினார்? **விடை: 27.8.1944, சேலம்**

881. தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் எனும் பெயரை சேலம் மாநாட்டில் திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றும் தீர்மானத்தைப் பெரியார் யாருடைய பெயரில் கொண்டு வந்தார்? **விடை: அண்ணாதுரை**

882. பெரியார் தன்னைப் பற்றி சொல்லும் வாசகம் எது? **விடை: நான் ஒரு எதிர் நீச்சல்காரன், நான் பழைமைப்பித்தை வெறுப்பவன், நான் வெகுபேர்களால் வெறுக்கப்படுபவன்**

883. 1945ஆம் ஆண்டு கருப்புச் சட்டைப் படையின் முதலாவது மாநாடு எந்த ஊரில் நடைபெற்றது? **விடை: மதுரை**

884. ‘விஞ்ஞான அறிவு - லட்சியம் இவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டும். அதோடு யாரும் சர்வ சாதாரணமாகத் தயாரித்து விடக்கூடிய மாதிரியிலும் இருக்க வேண்டும்’ பெரியார் எதனைக் குறித்து இப்படிக் குறிப்பிடுகின்றார்? **விடை: கொடி**

885. காந்தியடிகள் படத்தை பெரியார் எந்த மாநாட்டில் திறந்து வைத்தார்? **விடை: 1948 மே மாதம் 8, 9 நாள்களில் தூத்துக்குடியில் நடைபெற்ற 18ஆவது திராவிடர் கழக மாகாண மாநாட்டில்**

886. மாநாட்டில் படத்திறப்பின்போது படத்தை வைக்காமல் ‘கற்பனையாய்க் காணவேண்டும்’ என்று கூறி சிக்கனத்தை பெரியார் கடைபிடித்த மாநாடு? **விடை: ஈரோட்டில் நடைபெற்ற திராவிடர் கழகம் 19ஆவது மாகாண மாநாடு - 1948 ஆகஸ்ட் 23, 24**

887. இரு காளைகள் பூட்டிய ரதத்தில் அண்ணா பவனி வர பெரியார் ஊர்வலத்தின் முன் நடந்து வந்தார். எந்த மாநாட்டில்? **விடை: ஈரோட்டில் 1948இல் நடைபெற்ற திராவிடர் கழக 19ஆவது மாகாண (ஸ்பெசல்) மாநாட்டில்**

888. என்னுடைய பொறுப்பை ஓர் இளைஞரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நெடு நாளாகவே எனக்கு ஆசை. பெட்டிச் சாவியை யாரிடம் ஒப்படைக்கப் போவதாகப் பெரியார் குறிப்பிட்டார்? **விடை: அண்ணாவிடம்**

889. பெரியார் - அண்ணா சந்திப்பு எப்போது? எங்கே நடைபெற்றது? **விடை: 1934 திருப்பூரில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டில்**

890. திராவிட மாணவர் பயிற்சி முகாமை பெரியார் முதலில் எந்த ஊரில் நடத்தி வந்தார்? **விடை: ஈரோடு**

891. திராவிடர் மாணவர் பயிற்சி வகுப்பு 1949ஆம் ஆண்டு மாவூரில் யாருடைய பங்களாவில் நடைபெற்றது? **விடை: சர்மா**

892. விடயபுரம் பயிற்சி வகுப்பு நடைபெற்ற நாள்? **விடை: 24.5.1967**

893. நகரங்களில் மட்டுமே மாநாடு நடத்தி வந்த மரபினை மாற்றி பெரியார் எந்த கிராமத்தில் மாநாடு நடத்தினார்? **விடை: கச்சனம்**

894. 14.5.1949 அன்று பெரியார் - ராஜகோபாலாச்சாரியார் சந்திப்பு எங்கு நடைபெற்றது? **விடை: திருவண்ணாமலையில், ரயிலில்**

895. “தலைமையிடம் காலி” யார் இறந்தபோது பெரியார் இப்படி எழுதினார்? **விடை: பி. வரதராஜுலு நாயுடு**

896. “நீங்கள் இருக்க வேண்டிய (முதலமைச்சர்) இடத்தில் நான் இருக்கிறேன்” என்று பெரியாரிடம் கூறிய முதலமைச்சர் பெயர்? **விடை: ஓமந்தூர் ராமசாமி (ரெட்டியார்)**

897. அடுத்த முதலமைச்சரை முடிவு செய்ய வரதராஜுலு நாயுடு இல்லத்தில் காமராசர் - பெரியார் சந்திப்பு நடைபெற்றது. எந்த ஊர் நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டு பெரியார் சென்னைக்கு விரைந்தார்? **விடை: சிதம்பரம்**

898.1954ஆம் ஆண்டு ராஜகோபாலாச்சாரியார் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிய பிறகு அடுத்த முதல்வரை முடிவு செய்யும் கூட்டம் எங்கு நடைபெற்றது? கூட்டத்தில் பங்கேற்றவர்கள் யார்? **விடை: வரதராஜுலு நாயுடு வீட்டில். வரதராஜுலு நாயுடு, காமராசர், பெரியார்**

899.இந்தி திணிப்பை எதிர்த்து கிளர்ச்சி நடத்தப்போவதாக அறிவித்த பெரியார் யாருடைய உறுதிமொழியை ஏற்று 1955 போராட்டத்தை ஒத்தி வைத்தார்? **விடை: காமராசர்**

900.இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே நீடிக்கும் என்று நாடாளுமன்றத்தில் 7.8.1959 அன்று பிரதமர் நேரு அளித்த உறுதிமொழிக்கு முன்னோடி என்று வரலாற்றாசிரியர்கள் எதனைக் குறிப்பிடுகின்றனர்? **விடை: காமராசர் 30.7.1955இல் பெரியாரிடம் வழங்கிய உறுதிமொழியை**

901. ‘ஒரு பத்து ஆண்டுகளுக்காவது இவருடைய ஆட்சி நீடித்தால் திராவிடர் கழக இலட்சிய வேலை பெரும் அளவுக்குப் பூர்த்தியாகும்’ இவ்வாசகம் பெரியார் கூறியது. யாருடைய ஆட்சியைக் குறிப்பிடுகிறார்? **விடை: காமராசர்**

902.‘தமிழ்நாட்டின் இரட்சகர்’ என்று பெரியார் யாரைக் குறிப்பிட்டார்? **விடை: காமராசர்**

903.தமிழக அரசியலில் இவர்களை மும்மூர்த்திகள் என்று அழைப்பார்கள். அவர்கள் யார்? **விடை: நாயுடு [வரதராஜுலு] - நாயக்கர் [ஈ.வெ.ராமசாமி] - முதலியார் [திரு.வி.கல்யாணசுந்தரம்]**

904.பெரியாரின் விருப்பப்படி ராஜகோபாலாச் சாரியார் ஆட்சி நடத்த, ‘ஆள்வது ராஜாஜியா? ராமசாமிப் பெரியாரா?’ என்றுரைத்த கம்யூனிசத் தலைவர்கள் பெயர் என்ன? **விடை: ஜீவானந்தம், ராமமூர்த்தி**

905.இந்து மகாசபை உப தலைவர் டாக்டர் பி.எஸ்.மூஞ்சே, பெரியார் சந்திப்பு எப்போது? எங்கு நடைபெற்றது? **விடை: 29.9.1944, திருச்சியில்**

906.கம்யூனிஸ்ட் தலைவர் எஸ்.ஏ.டாங்கே - பெரியார் சந்திப்பு 30.10.1951 அன்று எந்த ஊரில் நடைபெற்றது? **விடை: திருச்சியில்**

907. பெரியார் - அகில இந்திய சோஷியலிஸ்ட் கட்சித் தலைவர் ராம் மனோகர் லோகியா சந்திப்பு 23.1.1958 அன்று எங்கு நடைபெற்றது? **விடை: சென்னை பொது மருத்துவமனையில்**

908.‘அவர் மாப்பிள்ளை போல் வந்தார்; நான் வெட்கப்பட்ட மணப் பெண் மாதிரி தலையைக் குனிந்து கொண்டிருந்தேன்’ என்று பெரியார் எப்போது கூறினார்? **விடை: தி.மு.க. தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு அண்ணா அவர்கள் பெரியாரைச் சந்திக்க திருச்சிக்கு வந்தபோது கூறியது**

909.கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு மூன்றில் பெரியார் மிக முக்கியமாக கருதுவது எது? **விடை: கட்டுப்பாடு**

910. 1971 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றபோது பெரியார் அவர்கள் கலைஞருக்கு அனுப்பிய தந்தி வாசகம்? **விடை: “எனக்கு இருந்த பழி நீங்கியது”**

911. காமராசர், அண்ணா, கலைஞரிடம் பெரியாரின் தூதராகச் சென்ற பெருமைக்குரியவர்? **விடை: கி.வீரமணி**

912. ‘கலையுலக ரத்தினங்களில் ஒருவர்’ என பெரியார் பாராட்டிய நடிகர்? **விடை: எம்.ஜி.ஆர்.**

913. தி.மு.க. உட்கட்சி பூசலின்போது “பெரியார் என்னைச் சந்திக்க வருவதா? கூடாது நானே அவரைச் சந்திக்கின்றேன்” என்று பெரியார் திடல் வந்து, பெரியாரைச் சந்தித்து, மனக்

குறையைத் தெரிவித்து, ஆலோசனை பெற்றுச் சென்றவர் யார்? **விடை: எம்.ஜி.ஆர்.**

914. பெரியார் - எம்.ஜி.ஆர். சந்திப்பு எப்போது? எங்கு நடைபெற்றது? **விடை: பெரியார் திடல், 13.10.1972**

915. அவரது கைகளைப் பிடித்து, "ஒரு தந்தை நிலையில் இருந்து சொல்லுகிறேன். நீங்கள் இருவரும் எனக்கு இரண்டு கண்கள் போன்றவர்கள். எனது பிள்ளைகள்" என்று பெரியார் யாரிடம் கூறினார்? **விடை: எம்.ஜி.ஆர்.**

916. தமிழ்நாடு அரசு சமூக நீதிக்கான விருது யார் பெயரில் வழங்குகிறது? **விடை: தந்தை பெரியார் பெயரில்**

917. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருதைத் தோற்றுவித்த தமிழ்நாடு முதலமைச்சர் யார்? **விடை: ஜெ.ஜெயலலிதா**

918. தமிழிசை இயக்கமாகத் தழைக்க துணை நின்றவர் யார்? **விடை: பெரியார்**

919. கடுகளவு அறிவுள்ளவன் கூட யாருடைய கவிதையைப் படித்தால் முழுப் பகுத்தறிவாதியாகி விடுவான் என்று பெரியார் குறிப்பிடுகின்றார்? **விடை: பாரதிதாசன்**

920. 10.2.1960 'விடுதலை'யில் 'தோழர்களுக்கு வணக்கமான விண்ணப்பம்' என்று தலைப்பிட்டு எழுதிய பெரியார் தம்முடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொள்ள கேட்ட தொகை எவ்வளவு? **விடை: ரூபாய் அய்ந்து**

921. சென்னையில் பெரியார் திடல் இடம் வாங்குவதற்கு காரணமாக இருந்தவர் என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகின்றார்? **விடை: ஜி.டி. நாயுடு**

922. பெரியார் திடல் இடம் வாங்கியதை தந்தை பெரியார் எக் கூட்டத்தில் அறிவித்தார்? **விடை: 21.7.1956 திருச்சியில் கூடிய நிருவாகக் குழுவில்**

923. திராவிடர் கழகம் தேர்தலில் போட்டியிடுமா? **விடை: போட்டியிடாது**

924. திராவிடர் கழகம் கட்சியா? இயக்கமா? சங்கமா? **விடை: இயக்கம்**

925. குறிப்பிட்ட நேரத்தில் புறப்படாமல் பெரியாருக்காக ஆறு மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனம்? **விடை: கப்பல்**

926. கொத்தவால்சாவடிப் பகுதியில், கழகத் தோழர்கள் போராட்டத்திற்கு நிதி வசூலில் ஈடுபட்ட போது போலிசார் கைது செய்து சிறையில் அடைத்தார்கள். கூறிய காரணம் யாது? **விடை: பிச்சையெடுத்தார்கள்**

927. பெரியார் தம் கட்சிகாரர்களுக்கு விடுத்த வேண்டுகோள் யாது? **விடை: நமது கொள்கைகள் அடங்கிய புத்தகங்களை உருப்போடுங்கள்**

928. எந்த மாநாட்டில் திரண்ட தொண்டர்களை 'இரண்டு லட்சம் ஈட்டிகள்' என்று பெரியார் வருணித்தார்? **விடை: 4.11.1957 தஞ்சையில் நடைபெற்ற ஜாதி ஒழிப்பு [ஸ்பெசல்] மாநாடு**

929. எப்போராட்டத்தில் ஈடுபட விரும்புவோர் இரத்தத்தில் கையொப்பமிட்டுத் தமக்கு அனுப்புமாறு பெரியார் கோரினார்? **விடை: ஜாதி ஒழிப்பு**

930. பெரியாரின் தொண்டர்களுக்குக் கிட்டிய சிறப்புப் பட்டம்? **விடை: சுயமரியாதைச் சுடரொளிகள்**

931. சில நேரங்களில் நாணயக் குறைவாக நடந்து, தமக்கு மாற்றாரை விட இவர்களே அதிகத் தொல்லை தருவதாக பெரியார் வருந்திக் கூறுவது, யாரைக் குறிப்பிட்டு? **விடை: கழகத் தோழர்களை**

932. "இலட்சியத்தில் மாறுதலில்லாமல் வேலை முறையில் அடிக்கடி மாறுதல் செய்ய வேண்டியதும் செய்து வருவதும் குற்றமாகாது" என்று கூறியவர்? **விடை: பெரியார்**

933. பெரியார் தாம் ஆற்றிய பணி எதற்கு ஒப்பானது என்கிறார்? **விடை: காட்டு வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடும் வேலை**

934. நாகம்மை குழந்தைகள் காப்பகத்தை பெரியார் எந்த ஆண்டில் தொடங்கினார்? **விடை: 1961**

935. நாகம்மையார் குழந்தைகள் காப்பகம் 1961இல் தொடங்கப்பட்ட போது எத்தனை குழந்தைகள் இடம் பெற்றனர்? **விடை: 39**

936. "உங்கள் ஒவ்வொருவரையும் நான் அளவு கடந்து நேசிக்கிறேன். தீங்கு விளைவிக்கும் எந்தக் கிருமியும் உங்களை அண்டிவிடக் கூடாது என்பதற்காகத்தான் உங்களை எந்நேரமும் கவனித்து வருகிறேன்" கூறியவர்? **விடை: பெரியார்**

937. ஒரு தலைவன் எப்படி இருக்க வேண்டும் என்று பெரியார் கூறுகிறார்? **விடை: நடத்துபவனாய் இருக்க வேண்டும்**

938. ஒரு தலைவன் எப்படி இருக்கக் கூடாது என்று பெரியார் கூறுகிறார்? **விடை: நடத்தப்படுபவனாய் இருக்கக் கூடாது**

939. "நான் சர்வாதிகாரம் செய்கிறேன் என்பதும் ஓர் அளவுக்கு உண்மைதான் ஒப்புக் கொள்கிறேன்" யார் கூறியது? **விடை: பெரியார்**

940. பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டது? **விடை: 1952**

941. 22.9.1952 அன்று பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் பதிவு செய்யப்பட்டது எந்த ஊரில்? **விடை: திருச்சி**

942. தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்ளாத விரும்பாத பெரியார் தாம் நிறுவிய அறக்கட்டளைக்கு 'பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்' எனப் பெயர் சூட்டியது ஏன்? **விடை: சுயமரியாதை என்னும் சொல்லை விருப்பம்போல் திசை திருப்பாமல் தடுக்க, பெரியார் இயக்கம்தான் - கொள்கைதான் நிறுவனம் என்பதை நிலைநிறுத்த**

943. தந்தை பெரியார் தென் பகுதி இரயில்வே தொழிலாளர் யூனியன் தொடங்கியது எந்த ஊரில்? **விடை: திருச்சி**

944. "அரசியல் கட்சிக்காரர்கள் பெரிதும் தொழிற்சங்க இயக்கங்களைக் கைப்பற்றிக் கொண்டு, தங்கள், தங்கள் கட்சி காரியங்களுக்கும் தேவைக்கும் ஏற்ற மாதிரியில் கிளர்ச்சிகளுக்கு தொழிலாளர்களைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்" பெரியார் எங்கு பேசினார்? **விடை: தென் பகுதி இரயில்வே மென் யூனியன் திறப்பு விழாவில்**

945. உழவர்கள் முன்னேற்றத்திற்கு 1952இல் தந்தை பெரியார் தொடங்கிய அமைப்பு யாது? **விடை: திராவிடர் விவசாய தொழிலாளர் கழகம்**

946. அரசு ஊழியர்களும், அதிகாரிகளும் பங்கேற்கும் வகையில் தந்தை பெரியார் அவர்கள் பகுத்தறிவாளர் கழகத்தை எப்போது தொடங்கினார்? **விடை: 06.09.1970**

947. லெனின் எழுதிய 'லெனினும் மதமும்' தந்தை பெரியார் வெளியிட்டார். தமிழில் முதன்முதலில் நூல் வடிவில் வெளிவந்த லெனின் புத்தகம் இதுவே குடியரசுப் பதிப்பகத்தின் வெளியீடாக ......... ஆண்டு வெளிவந்தது. **விடை: 1933**

948. "இந்த இயக்கத்தில் மத சம்பந்தமான உணர்ச்சியோ, சின்னமோ உள்ளவர்கள் சேரக் கூடாது. எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சேரலாம். ஆனால் கட்சிக் கொள்கையை இதில் வலியுறுத்தக்கூடாது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் யாவரும் சேரலாம். அரசியலுக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது" பெரியார் அறிவிப்பு எந்த அமைப்புக்கு? **விடை: பகுத்தறிவாளர் கழகம்**

949. உணவுப் பஞ்சம் தீர தந்தை பெரியார் கூறும்

வழி யாது? **விடை: ஆடு, மாடு, கோழி, பன்றி, மீன் வளர்ப்பில் கவனம் செலுத்த வேண்டும்.**

950. மன்னிக்கவோ, அலட்சியமாய்க் கருதவோ, 'நாளை பார்த்துக் கொள்ளலாம்' என்று காலந் தள்ளவோ முடியாதது என்று பெரியார் குறிப்பிடுவது? **விடை: தீண்டாமைக் கொடுமை**

951. தந்தை பெரியார் நிகழ்த்திய இரு பெரும் பணிகள்? **விடை: ஜாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு**

952. தந்தை பெரியார் வேலூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். 'சுற்றுப் பயணம் நிகழ்ச்சிகளைத் தள்ளி வைக்கலாமா? எனத் தோழர் வினவியபோது, மறைவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பு பெரியார் உரைத்தது யாது? **விடை: பேசப்போவது நீங்களா? நானா? நிகழ்ச்சிகளை ஒத்திப் போட வேண்டாம்.**

953. பெரியார் தம்மை எப்படி அழைத்துக் கொண்டார்? **விடை: நான் ஒரு தெரு மனிதன்**

954. தலைவர் பதவியைப் பெரியார் எப்படி கருதினார்? **விடை: தொல்லையான காரியம்**

955. தந்தை பெரியாரைத் தாக்குவதற்காகத் திருக்கை மீன் வால் ஆயுதமாகத் தயார் நிலையில் வைத்திருந்தனர் எதிரிகள், எந்த ஊரில்? **விடை: ராஜபாளையத்தில்**

956. "எனக்குத் தோன்றியதை, நான் சரியென்று கருதியதைச் சொல்லுகின்றேன்" என்று தெரிவித்த பெரியார், மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் யாது? **விடை: உங்களுக்குச் சரி என்று பட்டதை ஒப்புக் கொள்ளுங்கள். மற்றதை தள்ளிவிடுங்கள்**

957. பெரியார் தம்மை எப்படி அழைப்பதை விரும்பவில்லை? **விடை: மகாத்மா என்றோ, தெய்வத் தன்மை பொருந்தியவர் என்றோ, சித்தர் என்றோ, புத்தர் என்றோ, ஞானி என்றோ அழைப்பதை**

958. பெரியார் தம்மை எப்படி அழைப்பதை லாபம் என்று கருதினார்? **விடை: என்னை அயோக்கியன் என்றும், திருடன் என்றும், முட்டாள் என்றும், சுயநலக்காரன் என்றும், பணம் சம்பாதிப்பவன் என்றும் மற்றும் இழிவான வேலை செய்கின்றவன் என்றும் சொல்வதில் எனக்கு லாபம்.**

959. பெரியார் விடுக்கும் வேண்டுகோள்? **விடை: மனிதத் தன்மைக்கு மீறிய எந்தக் குணத்தையும் என் மீது சுமத்தி விடாதீர்கள்.**

960. அடிக்கடி கொள்கை மாற்றம் பற்றி கேட்ட கேள்விக்கு பெரியார் அளித்த பதில்? **விடை: எந்த மனிதனும் ஒரே நிலைமையில் இருக்க வேண்டும் என்று நீங்கள் ஏன் ஆசைப்படுகிறீர்கள்?**

961. மாறுதல் குறித்து பெரியாரின் கருத்து? **விடை: மாறுதல் முற்போக்குள்ளதா? பிற்போக்குள்ளதா? அதனால் மக்களுக்கு நன்மையா? தீமையா? என்பன போன்றவற்றைக் கவனிக்க வேண்டியது அறிவாளிகளின் கடமையாகும்.**

962. 'அணுகுமுறையிலே - திட்டங்களிலே மாறுதல் என்பது தவிர்க்க முடியாதது' என்பதை பெரியார் இப்படி விளக்குகிறார்? **விடை: நான் பல தடவை மாறி இருக்கலாம், பல குட்டிக் கரணமும் போட்டிருக்கலாம். பச்சோந்தியாய் இருக்கலாம்.**

963. நாளை நான் ...................................... என்பது எனக்கே தெரியாது. **விடை: எப்படி மாறப் போகிறேன்**

964. பெரியாரின் அணுகுமுறை? **விடை: என்னுடைய கொள்கையை ஏற்று செயல்படுகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஆதரித்து வேலை வாங்கிக் கொள்ளுவேன்.**

965. சுதேசியம் குறித்து பெரியாரின் கருத்து? **விடை: அர்த்தமற்றது - சுயநலம் நிரம்பியது - சூழ்ச்சியால் கற்பிக்கப்பட்டது.**

966. 'திருடன் மற்றவர்களிடம் பணம் அபகரிப்பதுபோல் வியாபாரியும் மற்ற ஜனங்களை வஞ்சித்து பணம்

சம்பாதிக்கின்றான்' பெரியார் எங்கு பேசினார்? **விடை: வர்த்தகர் சங்க ஆண்டு விழாவில்**

967. 'நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்துக் கொட்டியது போல்' இவ் உவமை பெரியார் எதற்குப் பயன்படுத்துகின்றார்? **விடை: திராவிடர்கள் தனித்தனியாய் பிரிந்து கிடப்பதற்கு**

968. பெரியார் 1934ஆம் ஆண்டிலேயே திருச்சி சுயமரியாதைச் சங்க உப தலைவராக ஒரு பெண்ணை நியமித்தார். அவர் பெயர்? **விடை: எஸ்.நீலாவதி**

969. மனுதருமத்தில் ஜாதிக்கு ஒரு நீதி இருந்ததைக் கண்டித்துப் பேசும்போது பெரியார் கூறிய வாக்கியம்? **விடை: தாடிக்கொரு சீயக்காய்; தலைக்கொரு சீயக்காய்**

970. மனிதனுக்கு அழகு என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகின்றார். **விடை: மானமும் அறிவும்**

971. 'பிச்சை எடுப்பதும், பிச்சை கொடுப்பதும்' பற்றி பெரியார் கூறியது என்ன? **விடை: சட்ட விரோதமான காரியமாய்க் கருதப்பட வேண்டும்.**

972. பெரியார் தம் பணி குறித்து இப்படியும் யோசித்தது உண்டு? **விடை: இமயமலை வெய்யிலில் காய்கிறது என்று குடைபிடிப்பது போல் இருக்கிறது.**

973. என் உடல் நிலைமை மிக மோசமாகிவிட்டது. நினைவு சரியாக இல்லை மறதி அதிகம், கண், காது, சரியாக இல்லை, கால்கள் நடக்கவே முடிவதில்லை. அசதி அதிகம் இப்படிப்பட்ட நிலையிலும் சற்று மகிழ்ச்சி உற்சாகம் கொள்ளுகிறேன் என்றால் இன்று நமக்கு வாய்த்திருக்கும்.......... **விடை: தி.மு.க ஆட்சிப் பணிகளால்தான்**

974. ஆராய்ச்சிக்கு ஆறு கேள்விகள் தேவை என்கிறார் பெரியார். அவை யாவை? **விடை: என்ன? ஏன்? எதற்காக? எப்படி? எங்கே? எப்போது?**

975. பெரியார் பார்வையில் உயர்ந்த மனிதன் யார்? **விடை: பிறருக்குத் தொண்டாற்றுபவன்**

976. பெரியார் பார்வையில் உண்மை தொண்டு யாது? **விடை: பொது மக்களிடம் நல்ல பெயரை வாங்க விரும்புவதைவிட, மக்களின் நன்மைக்கான காரியங்களைச் செய்வதே.**

977. மனிதனின் கவலை ஒழிய பெரியார் கூறும் வழி? **விடை: பேதநிலை ஒழிப்பு**

978. பெரியார் கண்வலி என்று எதனைக் குறிப்பிட்டார்கள்? **விடை: தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் மீது நடத்தப்படும் கொடுமையை.**

979. யாரை சிறையில் அடைக்க வேண்டும் என்கிறார் பெரியார்? **விடை: உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதிபதிகளை**

980. வேற்றுமை ஒழிந்து ஒரு சமூகமாக பெரியார் கூறும் அறிவுரை? **விடை: உடையை ஒன்றுபடுத்த வேண்டும்**

981. சுவரில் கையை ஓங்கி அறைந்து, "எல்லாம் போச்சு, எல்லாம் போச்சு" என்று பெரியார் கலங்கியது எப்போது? **விடை: அண்ணாவின் மறைவுச் செய்தி கேட்டு**

982. அண்ணாவின் ஆட்சியை அழிக்க நினைத்தால்.............................. எது போலாகும் என்கிறார் பெரியார்? **விடை: கொள்ளிக்கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்து கொள்வது போலாகும்.**

983. அய்தராபாத் நகரத்திற்கு 1903ஆம் ஆண்டு வாக்கில் பெரியார் முதன் முதலாகச் சென்றார். ஏன் சென்றார் என்பதற்குப் பெரியார் கூறும் காரணம் யாது? **விடை: பிச்சையெடுப்பதற்காக**

984. தந்தை பெரியாரைச் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. இப்படிக் குறிப்பிட்டிருகின்றார். **விடை: எனது தலைவர்**

985. கூட்டத்திற்குப் பெரியாரை

அழைத்துவிட்டுப், பயணச் செலவு தராமல், ஏமாற்றம் அடையும்படி செய்துவிடுகிற நண்பர்களின் எண்ணிக்கை? **விடை: 100க்கு 90 பேர்**

986.கல்வியின் குறிக்கோள் என்று பெரியார் குறிப்பிடுவது? **விடை: நமது இழிவையும் முட்டாள்தனத்தையும் மூடநம்பிக்கையையும் ஒழிக்க.**

987.பெரியார் அடிக்கடி புரட்டும் புத்தகம்? **விடை: அபிதான கோசம், அபிதான சிந்தாமணி**

988.திரையரங்க உரிமையாளர் உமாபதி, தாம் கட்டிய தியேட்டருக்கு வருகை புரிந்து படம் பார்க்க வேண்டும் என்று அன்போடு அழைக்க, பெரியார் சென்ற திரையரங்கம்? **விடை: ஆனந்த் தியேட்டர்**

989.பெரியார் எந்த நோயால் அவதிப்பட்டார்? **விடை: குடலிறக்க நோய்**

990.மதியை இழப்பான் என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகின்றார்? **விடை: விதியை நம்பினவன்**

991. பகுத்தறிவாளர் கழகம் என்றால் ........................ கழகம் என்று பெயர். **விடை: மனிதர்கள்**

992.பெரியார் ஆசை? **விடை: நான் பேசிக் கொண்டிருக்கும் போதே உயிர் விட வேண்டும்**

993.பெரியார் பயணம் புறப்படும்போது மனைவியிடமும் தாயாரிடமும் சொல்லும் வாசகம்? **விடை: தப்பிப் பிழைத்தால்தான் திரும்பி வர முடியும்.**

994.“ஒரு நாளைக்கு இல்லாவிட்டால் ஒரு நாளைக்கு இந்தி வரத்தானே போகுது?” கேள்விக்கு பெரியாரின் பதில்? **விடை: ஒரு நாளைக்கு இல்லாட்டி ஒரு நாளைக்குச் சாவு வரத்தானே போகுதுன்னு எவனாவது இப்பவே போய் கிணத்துலே விழுவானா?**

995.தற்கொலைக்குச் சமம் என்று பெரியார் எதனைக் குறிப்பிடுகிறார்? **விடை: சலிப்பு, ஓய்வு**

996.பெரியார் மறைந்த போது இரங்கல் தெரிவித்த உயர் பதவியினர்? **விடை: குடியரசுத் தலைவர், பிரதமர், ஆளுநர், தமிழக முதல்வர்**

997.ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டிய சமயம் என்று பெரியார் குறிப்பிடுவது? **விடை: நமது தொண்டு நாட்டுக்கு உதவாது என்றாவது, நமது தொண்டை நாட்டார் ஏற்பதில்லை என்றாவது தெரிந்தால்.**

998.பெரியாருக்குப் பிடிக்காதது? **விடை: காலில் விழுந்து வணங்குவது.**

999.அண்ணாவுக்கு கோட்டு வாங்க, பெரியார் காசி நகரில் சென்ற கடை? **விடை: இராணுவ வீரர்கள் பயன்படுத்திய கோட்டுகளை இரண்டாம் கட்ட விற்பனை செய்யும் கடை.**

1000. அறிஞர் அண்ணாவைவிட, என்னைவிட, தந்தை பெரியாரிடம் நீண்ட காலம் பழகும் வாய்ப்பு பெற்றவர் என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் யாரைக் குறிப்பிடுகிறார்? **விடை: கி.வீரமணி**

■

# இனிவரும் உலகம்?

**இனிவரும் உலகம்...**

ஏன் பிறக்கவேண்டும்? சகல சவுகரியங்களுமுள்ள இப்பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபடவேண்டும்? ஏன் சாகவேண்டும்? என்கின்ற பிரச்சினைகள் சிந்தனைக்கு மயக்கமளித்து வந்த சிக்கலான பிரச்சினைகளாக இருந்தவை, இன்று தெளிவாகப்பட்டுப் பரிகாரம் தேடப்பட்டு வருகிற காலம் நடக்கிறது. இந்தப் போக்கு, சீக்கிரத்தில் மக்களின் பொதுவாழ்விலேயே பெரியதொரு புரட்சியை உண்டாக்கும்படியான புதிய உலகத்தை உண்டாக்கித்தான் தீரும். அப்போதுதான் நான் முன் சொன்ன பணம், காசு என்ற உலோக நாணயமே இருக்காது. அரசு ஆட்சி இருக்காது; இழிவான வேலை என்பது இருக்காது; அடிமைத்தனம் இருக்காது; ஒருவரை யொருவர் நம்பிக் கொண்டு வாழவேண்டிய அவசியம் இருக்காது; பெண்களுக்குக் காவல் கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது.

**இனிவரும் உலகம்...**

உலக மக்கள் யாவரும் உயர்வாழ்வு வாழ வேண்டுமானாலும், அவ்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சவுகரியங்கள் ஏற்படவும், நிலைக்கவுமான காரியங்கள் ஏற்பட ஒரு மனிதனுக்கு ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு மணிநேரம் அல்லது இரண்டு மணிநேரத்துக்கு வேலை செய்யவேண்டிய அவசியமே இருக்காது. ஒரு மனிதன் தன் காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ வலி இருந்தாலும், அவன் “எனக்கு வலிக்கிறது” என்று சொல்லுவதுபோல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும், குறைபாடுகளையும், ஒவ்வொரு (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டது போல் நினைக்கும்படியும், அனுபவிப்பது போல் துடிக்கும்படியும், அவ்வளவு கூட்டு வாழ்க்கையும், ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

**இனிவரும் உலகம்...**

உலகில் எந்த பாகத்திலும் இன்றைய மாதிரியான போர் நடக்காது. மக்கள், மக்களால், யுத்தம், கொள்ளை, கொலை முதலியவற்றின் பேரால் மடியமாட்டார்கள். உணவுக்காக வேலை செய்யவேண்டிய வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. மக்கள், உடற்பயிற்சிக்காக வேலை செய்ய வேண்டுமே என்கின்ற கவலைகொண்டு உழைப்பு வேலைக்காக அலைவார்கள்.

**இனிவரும் உலகம்...**

வாழ்வுக்காக எப்படி எப்படி உழைப்பது என்கின்ற கவலையும், முயற்சியும் மிகச் சிறிய அளவுக்கு வந்துவிடும். சுகம் பெறுவதிலும், போக போக்கியமடைவதிலும், நீண்ட நாள் வாழ்வதிலும், ஆராய்ச்சியும், முயற்சியும் வளர்ந்துகொண்டே போகும். மக்களின் தேவைகள் எவ்வளவு வளர்ந்தாலும், அவற்றை உற்பத்தி செய்வதற்காக மனிதன் செலவழிக்க வேண்டிய நேரம், மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

**இனிவரும் உலகத்தில்...**

- “ஒழுக்கக்குறைவு” என்பதற்கு இடமே இருக்காது.
- ஆணும், பெண்ணும் மனப் பூர்வமாக சமவிருப்பமின்றிக்காதல் அனுபவிக்கமாட்டார்கள்.
- கல்வி விஷயத்தில் யாவருக்கும் தேர்ந்த அறிவும், கல்வியும் ஏற்படும்.
- உடல்நலம் பற்றிய அறிவும், கவலையும் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும். தன்மான உணர்ச்சியும் இருக்கும்.

**மற்ற சவுகரியங்கள்**

- போக்குவரவு எங்கும் ஆகாய விமானமும், அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

  கம்பியில்லாத் தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

  ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட்டிருக்கும்.

  உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக் கொள்ளத்தக்க சவுகரியம் ஏற்படும்.

- ஓர் இடத்தில் இருந்துகொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கச் சாத்தியப்படும்.

- உணவுகளுக்குப் பயன்படும் படியாக உணவு, சத்துப் பொருள்களாகச் சுருக்கப்பட்டு ஒரு வாரத்திற்கு ஒரு சிறு குப்பியில் அடங்கக்கூடிய உணவு ஏற்பட்டுவிடும்.

- மனிதனுடைய "ஆயுள்நூறு" வருஷமென்பது இரட்டிப்பு ஆனாலும் ஆகலாம். இன்னும் மேலே போனாலும் போகலாம்.

- பிள்ளைப்பேறுக்கு ஆண் - பெண் சேர்க்கை என்பதுகூட நீக்கப்படலாம்.

- பெட்ரோலுக்குப் பதில் மின்சார சக்தியே உபயோகப்படுத்தப் படலாம்

- தேவை அற்றுப்போன இடமே கடவுள் செத்துப் போன இடமாகும் என்பது அறிவின் எல்லையாகும். விஞ்ஞானப் பெருக்கம் ஏற்பட்ட இடத்தில் கடவுள் சிந்தனைக்கு இடம் இருக்காது.

- புத்திக் கோளாறு இருந்தால் ஒழிய, ஒருவனுக்கு ஒருவன் தீமை செய்யமாட்டான். ஒழுக்கக் கேட்டுக்கும் இடமிருக்காது.

- பாமரனின் ஞானசூன்யம், சுயநலக்காரரின் எதிர்ப்பு என்னும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல், வேலை செய்வோரே, இனிவரும் உலகச் சிற்பிகளாக முடியும்.

**தந்தை பெரியார் 1938 மற்றும் 1943**
**ஆண்டுகளில் கூறிய தொலைநோக்கு கருத்துகள்;**
**நூல்: 'இனிவரும் உலகம்'**

■

# மாதிரி வினாத்தாள்

## செப்.17 : தந்தை பெரியார் பிறந்தநாள் விழா

பெரியார் ஆயிரம் வினா-விடை எழுத்துப் போட்டி

**நேரம் : 40 நிமிடங்கள்** **மதிப்பெண் : 50 (45+5)**



குறிப்பு :
1. வினாத்தாளின் குறியீட்டை விடைத்தாளில் குறிப்பிடவும்
2. மிகவும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ள விடைத்தாளில் சரியான வட்டத்தை பென்சிலால் நிரப்பவும்
3. இறுதியாக கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு சில பத்திகள் எழுத்து விடையளிக்க வேண்டும்

**C2**

---

**கொள்குறிவகை (Objective - Type)** **45 X 1 = 45**

1) **தந்தை பெரியாரின் அன்னையின் பெயர் என்ன?**
A) சின்னத்தாயம்மாள் B) கண்ணம்மாள்
C) பொன்னுத்தாயம்மாள் D) நல்லம்மாள்

2) **பெரியார் அவர்கள் 10 வயதுச் சிறுவனாக இருந்தபோது இரண்டு கால்களிலும் விலங்குக் கட்டைகள் பூட்டப்பட்டதற்கான காரணம்**
A) மரங்களின் உச்சியிலும் வீட்டின் மாடியிலும் ஏறி விளையாடியமையால்
B) புழங்கக்கூடாத ஜாதியினருடன் புழங்கி, அவர்களின் வீட்டுத் தின்பண்டங்களைத் தின்று அவர்களோடு விளையாடியமையால்
C) ஊரைவிட்டு அடிக்கடி ஓடிப்போனமையால்
D) பெற்றோரையும் ஆசிரியர்களையும் மதிக்காமையால்

3) **“ஆணுக்குப் பெண் அடிமையில்லை” என்று சொன்ன பெரியார் தமது குடும்பத்தில் 1909 ஆம் ஆண்டிலேயே யாருக்கு விதவைத் திருமணம் நடத்தி வைத்தார்?**
A) சகோதரிக்கு B) தங்கையின் மகளுக்கு
C) மகளுக்கு D) அண்ணனின் மகளுக்கு

4) **8.1.1940 அன்று பம்பாயில் பெரியார், முகமது அலி ஜின்னா, அம்பேத்கர் ஆகிய மூவரும் கலந்து பேசிய உரை எது குறித்து?**
A) இந்து முஸ்லிம் ஒற்றுமைபற்றி
B) இன இழிவை ஒழிப்பதற்காக
C) நாட்டுப் பிரிவினை பற்றி D) கடவுளை ஒழிப்பது பற்றி

5) **பெரியாருக்குப்பின் பெரியார் இயக்கத்திற்குத் தலைமையேற்றவர் யார்?**
A) குத்தூசி குருசாமி B) அண்ணாதுரை
C) கி. வீரமணி D) மணியம்மையார்

6) **முதன் முதலாகப் பெரியார் அவர்களுக்கு எடைக்கு எடை வெள்ளி நாணயம் கொடுத்த ஊர் எது?**
A) திருச்சி B) சேலம் C) ஈரோடு D) தஞ்சை

7) **‘‘விடுதலையும் பெரியாரும் எனது அன்பார்ந்த எதிரிகள்” என எழுதியவர் யார்?**
A) கருணாநிதி B) காமராசர்
C) சங்கராச்சாரியார் D) இராசகோபாலாச்சாரியார்

8) **சிக்கனமாக வாழ்ந்த பெரியார் தம் சொத்துக்களைத் தம்உறவினர்களில் யாருக்கு எழுதி வைத்தார்?**
A) அவரது சகோதரர் கிருஷ்ணசாமிக்கு
B) அண்ணன் மகன் ஈ.வெ.கி சம்பத்துக்கு
C) மணியம்மையின் சகோதரருக்கு
D) அனைத்தும் தவறானவை

9) **‘விடுதலை’ ஏடு நடத்திட பொருளாதார ரீதியாக உதவி செய்த பெருமகன் யார்?**
A) அரசர் அண்ணாமலையார் B) ஆர். கே. சண்முகம்
C) பழையகோட்டை அர்ச்சுனன் D) அழகப்பர்

10) **ஜாதி அமைப்பின் அடித்தளம் என்ன?**
A) பிறப்பினால் உயர்வு - தாழ்வு
B) பணிச்சிறப்பால் உயர்வு - தாழ்வு
C) பொருட்சிறப்பால் உயர்வு - தாழ்வு
D) தோற்றப் பொலிவால் உயர்வு - தாழ்வு

11) **தலைமையில்லாமல் போராட்டம் நின்று விடும் நிலை ஏற்படவே பெரியர் ஈ.வெ.ரா வந்து போராட்டத்தை நடத்தவேண்டும் என்று கோரி அவருக்கு ஒரு கடிதத்தை இரு தலைவர்கள் கையெழுத்திட்டு அனுப்பினார்கள். அத்தலைவர்கள் யார்?**
A) பாரிஸ்டர் ஜார்ஜ்ஜோசப், கேசவமேனன்
B) டி.கே.மாதவன், வக்கீல் மாதவன்
C) ஏ. கே. பிள்ளை, வேலாயுதமேனன்
D) கேளப்பன், திருமதி டி.கே.மாதவன்

12) **பர்மாவில் 1954இல் தந்தை பெரியார் சந்தித்த பவுத்த அறிஞர்?**
A) நவயாணம் ஜெயவர்தனே B) தலாய்லாமா
C) மல்லலசேகரா D) மேற்கண்ட யாருமில்லை

13) **தமிழ் குருகுல வித்யாலயா நிலையத்தை நிறுவியவர் யார்?**
A) பாரதியார் B) சத்திய மூர்த்தி அய்யர்
C) மதுரை வைத்திய நாதய்யர் D) வ.வே.சு.அய்யர்

14) சேரன்மாதேவி குருகுலத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பிற்காலத்தில் விளங்கிய ஒருவரின் பிள்ளையும் மாணவராயிருந்தார். அந்த முதலமைச்சர் யார்?

A) பி.எஸ். குமாரசாமி ராஜா B) எம்.பக்தவத்சலம்
C) ஓ.பி.இராமசாமி ரெட்டியார் D) டாக்டர் பி.சுப்பராயன்

15) தஞ்சையில் 1921 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாகாண காங்கிரஸ் மாநாடு நடந்தபோது பார்ப்பனரல்லாதார் பிரதிநிதிகள் தங்கியுள்ள இடத்தில் ஒரு கூட்டம் நடைபெறும் எனப் பெரியார் ஈ.வெ.ரா. அறிவித்தார். எதற்காக இக்கூட்டம் அவரால் கூட்டப்பட்டது?

A) இந்திய விடுதலை குறித்து ஆராய
B) மொழிச்சிக்கல் குறித்து முடிவு எடுக்க
C) பார்ப்பனரல்லாதார் குறித்துப் பேச
D) தேர்தல் குறித்து ஆய்வு நடத்திட

16) காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தின் நீதிமன்றப் புறக்கணிப்புக் கொள்கையின்படி தந்தை பெரியார் துறந்த தொகை எவ்வளவு?

A) 12000 B) 16000 C) 19000 D) 50000

17) வைக்கம் போராட்டத்தில் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற பெரியார் எந்தச் சிறையில் அடைக்கப்பட்டார்?

A) அருவிக்குத்தி B) திருவாங்கூர் சென்ட்ரல் ஜெயில்
C) பெல்லாரி சிறை D) அந்தமான் சிறை

18) சேரன்மாதேவியில் வ.வே.சு. அய்யர் நடத்திய குருகுலம் மாணவர்களிடையே..........

A) தேசிய உணர்வை ஏற்படுத்தியது
B) ஜாதிபேதத்தை ஏற்படுத்தியது
C) பகுத்தறிவு உணர்வை ஊட்டியது
D) தீவிரவாத உணர்ச்சியை உண்டாக்கியது

19) தாழ்ந்துக் கிடைக்கும் மக்களை உயர்த்தும் என்று தந்தை பெரியார் கூறுவது எதை?

A) கல்வி B) சுயமரியாதை
C) பகுத்தறிவு D) மேற்கண்ட அனைத்தும்

20) “குடிஅரசு” ஏட்டின் பதிப்பாளர் யார்?

A) நாகம்மையார் B) ஈ.வெ. கிருட்டினசாமி
C) பெரியார் D) தங்கப்பெருமாள்

21) “இந்தி திராவிட நாட்டில் புகுத்தப்படுவதை அடியோடு எதிர்க்க முன்வரவேண்டும் என்று மானமுள்ள பார்ப்பனர் அல்லாதோர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்“ என்று தந்தை பெரியார் அறைகூவல் விடுத்தது எப்போது?

A) 1937இல் B) 1948இல் C) 1926இல் D) 1927இல்

22) இரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தக் குழுத்தலைவர் யார்?

A) பி. இராமமூர்த்தி B) ம. சிங்கார வேலர்
C) நாகை காளியப்பன் D) டி. கிருஷ்ணசாமி

23) கருத்தடையை (குடும்பக் கட்டுப்பாடு) ஆதரித்துக் ‘கர்ப்ப ஆட்சி’ எனும் தலைப்பில் பெரியார் எழுதிய ஆண்டு எது?

A) 1925 B) 1928 C) 1931 D) 1940

24) பெண்களின் திருமணவயது 16 ஆக இருக்கவேண்டும் (அன்றைய சட்டப்படி14) திருமண விலக்கு உரிமை, மறுமண உரிமை, ஆசிரியப் பணிக்கு பெண்கள் மட்டுமே நியமிக்கப்படவேண்டும் என்பன போன்ற பெண்ணுரிமைத் தீர்மானங்களை முதலில் நிறைவேற்றிய மாநாடு எது?

A) 1938 பெண்கள் மாநாடு B) 1929 சுயமரியாதை மாநாடு
C) 1931 சுயமரியாதை மாநாடு
D) 1935 லால்குடி சுயமரியாதை மாநாடு

25) “பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குச் சற்று அளவுக்கு மீறிய நாணயமும் கட்டுப்பாடும் உறுதியும் தியாகபுத்தியும் வேண்டும். உத்தியோகத்திலிருப் பவர்களுக்கு இவை வேண்டியது இல்லை என்பதோடு, இவை உள்ளவர்கள் உத்தியோகத்தில் வெற்றிபெறவும் முடியாது” என்று பொது வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவர் யார்?

A) காந்தியடிகள் B) பெரியார் C) டி.எம். நாயர்
D) சர். தியாகராயர்

26) “அவர்களுடைய குடும்பங்கள் மக்களின் சராசரி வாழ்க்கைத் தரத்துக்கு மேல் வாழக்கூடாது. வாழவே கூடாது” - இங்கு யாருடைய குடும்பங்களைப் பற்றிப் பெரியார் கூறுகிறார் ?

A) அலுவலர்கள் B) பொதுத் தொண்டர்கள்
C) அரசியல்வாதிகள் D) ஆசிரியர்கள்

27) ஒழுக்கம் எனப் பெரியார் குறிப்பது எதை ?

A) கடவுள் பக்தி அற்றவர்களாக இருக்க வேண்டும்
B) எந்த மதத்திலும் சாராதவர்களாக இருக்க வேண்டும்
C) மற்றவர் நம்மிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ, அதன்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்துகொள்ளவேண்டும்
D) பொய் பேசாமை, திருடாமை, நாணயம்

28) உண்மையான இன்பம் என்பதாகப் பெரியார் எதைச் சொல்கிறார்?

A) பிறர்க்குத் தொண்டு செய்வதால் ஏற்படும் இன்பம்
B) ஒருவனும் ஒருத்தியும் இல்லறம் நடத்தும் இன்பம்
C) உயர்ந்த இலக்கியங்களில் இருந்து பெறும் இன்பம்
D) தெளிந்த கொள்கையாளர்களின் கூட்டுறவு தரும் இன்பம்

29) மனிதருக்கு அழகு எது என்கிறார், பெரியார்?

A) எளிய உடை B) உடல் தூய்மை
C) மானமும் அறிவும் D)அடக்க ஒடுக்கம்

30) கர்ப்பத் தடைக்குப் பெரியார் கூறும் தலையாய காரணம் என்ன?

A) பெண்கள் விடுதலையும் சுயேச்சையும் பெறல்
B) பெண்களின் உடல்நலம்
C) நாட்டின் பொருளாதார உயர்வு
D) குடும்பச் சொத்துக் குலையாமல் இருக்க

31) மதக் கொள்கைகளைப் பற்றி மதவாதிகளால் வலியுறுத்தப்படுவன எவை எனப் பெரியார் கூறுகிறார்?

A) அவற்றை மாற்ற முடியாது, மாற்றக்கூடாது, எக்காலத்திற்கும் ஏற்றது

B) பழங்காலத்தில் பெரியோர்களால் மக்கள் நன்மையை முன்னிட்டுச் சொல்லப்பட்டவை.

C) கடவுள், அவருடைய அவதாரம், அவருடைய பிள்ளை, அவரால் அனுப்பப்பட்ட நபர்கள் ஆகியவர்களின் அறிவுரைகள்; அவற்றை நம்பித்தான் ஆகவேண்டும்

D) மேலே குறிப்பிட்டுள்ள எல்லாம்

32) பின் வரும் பெரியார் வாசகத்தில் உள்ள கோடிட்ட இடங்களுக்கான உரிய ஒரு சொல் யாது? "..... மற்றும் சுதந்திரம் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல; ...... அற்றவர்களுக்குச் சுதந்திரம் பலனளிக்காது''.

A) பொருளாதாரச் சமத்துவம் B) பகுத்தறிவு

C) சுயமரியாதை D) ஆங்கிலப் படிப்பு

33) கொடுக்கப்பட்டிருக்கும் பெரியார் கூற்றில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு வேண்டிய தகுந்த சொல் யாது? "உலகில் எதுவானாலும் அதைப் பற்றிய உண்மையை ஆராய்ந்து அறிந்து அதனை முழுமையாகத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். இது தான்........... . ."

A) கல்வி கற்றதன் பயன்

B) படிப்பாளிக்கு அடையாளம்

C) பகுத்தறிவின் வேலை D) நாத்திகத்தின் சிறப்பு

34) பெரியார் கருத்தில் அதிகாரிகளின் கடமை யாது?

A) மக்களுக்கு நாணயமாக, நடுநிலையாகத் தொண்டாற்றுவது.

B) தயவு, தாட்சண்யம், அனுதாபம் ஆகியவைகளுடன் மக்களிடம் நடந்து கொள்வது.

C) மேற்சொன்ன இரண்டும்

D) நேரம் பார்க்காமல் காலம் கருதாமல் கடமையாற்றுவது

35) சீர்திருத்தம் என்பதற்குப் பெரியார் அளிக்கும் ஒரு பொது விளக்கம் யாது?

A) தேவையற்றதை நீக்கிவிட்டுத் தேவையுள்ளதை மட்டும் வைத்துக் கொள்ளுதல்

B) மூடநம்பிக்கைகளை விட்டுவிடல்

C) வருணாசிரமத்தை ஒழித்தல்

D)கடவுளையும் மதத்தையும் மறுத்தல்

36) பொதுத் தொண்டில் உள்ளவர்களுக்குப் பெரியார் கருத்தில் உரைகல்லாகப் பயன்படுவது யாது?

A) சிறைத் தண்டனை பெறுவது

B) தொல்லையை ஏற்பது

C) பிறருடைய தூற்றுதலைச் சகிப்பது D) புகழ் பெறுவது

37) மநுதர்ம சாத்திரத்தின் கொடுமையை விளக்கத் தந்தை பெரியார் எழுதிய நூல்

A) மநுதர்மம் B) ஆரிய அநீதி

C) மநுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி D) மநு அநீதி

38) "நாத்திகக் கோட்பாட்டில் இங்கிலாந்தின் பெர்ட்ரண்டுரசல், மெக்சிகோவின் சிக்எய்ரோஸ் (Siqueiros in Mexico)" எனப் பெரியாரைப் புகழ்ந்து எழுதிய ஆங்கில வார ஏடு எது?

A) சங்கர்ஸ் வீக்லி B) இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி

C) பிளிட்ஸ் D) ஆன்லுக்கர்

39) "பெரியார் ஒரு முழுப் புரட்சியாளர்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) புலவர் மா.நன்னன் B) புலவர் ந.இராமநாதன்

C) பேராசிரியர் இறையன் D) புலவர் தங்கப் பிரகாசம்

40) "வான் தவழும் வெண் மேகத் தாடி ஆடும்; வளமான சிந்தனைக்கோர் ஆட்டம் இல்லை" எனப் பெரியாரைப் புகழ்ந்து பாடியுள்ள கவிஞர் யார்?

A) நாரா.நாச்சியப்பன் B) கவிஞர் முடியரசன்

C) கவிஞர் வாணிதாசன் D) கவிஞர் கண்ணதாசன்

41) பெரியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் முதல் ஆயுள் செயலாளர் யார்?

A) நாகம்மையார் B) மணியம்மையார்

C) கி.வீரமணி D) குத்தூசி குருசாமி

42) ஒரு பன்னாட்டு நூலகமாக வளர்ந்து வரும் பெரியார் பகுத்தறிவு நூலகம் - ஆய்வகம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

A) 1973 B) 1974 C) 1975 D) 1976

43) சுயமரியாதை இயக்கத்தையும் நீதிக்கட்சியையும் இணைத்துச் சேலத்தில் நடந்த மாநில மாநாட்டில் திராவிடர் கழகம் என்று 1944 ஆகஸ்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அது எந்த நாளில்?

A) 21 B) 23 C) 25 D) 27

44) "நீங்கள் இருக்க வேண்டிய முதலமைச்சர் பதவியில் நான் இருக்க நேரிட்டு விட்டது" என்று பெரியாரிடம் நேரில் கூறிய மாகாண முதலமைச்சர் யார்?

A) கருணாநிதி B) காமராசர் C) பக்தவத்சலம்

D) ஓமந்தூர் ராமசாமியார்

45) பெரியாருக்கு 'யுனெஸ்கோ' மன்றத்தின் சார்பாக வழங்கப்பட்ட பட்டயத்தை நேரில் வழங்கிய நிகழ்ச்சியின் தலைவர்

A) வெங்கட்ராமன் B) சி.சுப்ரமணியம்

C) டி.டி.கிருஷ்ணமாச்சாரி

D) இந்திய அமைச்சர் திரிகுணாசென்

**எழுத்துவினா** **1 X 5 = 5**

1) பெரியார் கொள்கைகளில் உங்களைக் கவர்ந்தது குறித்து சில வரிகளில் விடையளிக்கவும்?

■

## யுனெஸ்கோ (UNESCO) மன்றம் விருது

# பெரியார்



புதிய உலகின் தொலை நோக்காளர்;
தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்;
சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை;
அறியாமை, மூடநம்பிக்கை, பொருளற்ற பழக்கவழக்கங்கள்,
இழிவான நடவடிக்கைகள் ஆகியவற்றின் கடும் எதிரி.

**27.06.1970**

## தந்தை பெரியார் - ஓர் காலக் கணக்கீடு
## 17.09.1879 - 24.12.1973

### வாழ்நாள்

94 ஆண்டுகள், 3 மாதங்கள், 7 நாள்கள்

### சுற்றுப்பயணம்

மொத்த நாள்கள்: 8200 நாள்கள்
அதில் அயல்நாடுகளில் மட்டும்: 302 நாள்கள்
மொத்த தொலைவு: 13,19,662 கி.மீ.
ஒப்பீட்டளவில் இத்தொலைவு பூமியின் சுற்றளவைப் போல் 33 மடங்கு,
பூமிக்கும் நிலவுக்கும் இடையிலான தொலைவைப் போல் 3.43 மடங்கு

### கருத்துரையும் நிகழ்ச்சிகளும்

பங்கேற்ற பிரச்சாரக் களங்கள்: 10,700
கருத்துரை ஆற்றிய காலம் நாள்கணக்கில்: 891 நாள்கள்

### சிறப்பு

பெரியாரின் உரைகள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு
ஒலிபரப்பப்பட்டால் 2 ஆண்டுகள், 5 மாதங்கள் 11 நாள்கள்
தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருக்கும்.